
# தாளியின் கண்கள்

CHN
CHN451936
6221053
CHN451936



பூங்கொடி பதிப்பகம்

# காளியின் கண்கள்

லக்ஷ்மி

பூங்கொடி பதிப்பகம்

14, சித்திரைக்குளம் மேற்குத் தெரு
மயிலாப்பூர், சென்னை 600 004
தொலைபேசி 24643074

சென்னை - 600 002

# நூல் விவரப்பட்டியல்

நூல் தலைப்பு : காளியின் கண்கள்

ஆசிரியர் : லக்ஷ்மி

வெளியிடுவோர் : பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்குத் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600 004.

45936

நூல் உரிமை : டாக்டர் கே. மகேஸ்வரன்

வெளியீடு : முதற் பதிப்பு : நவம்பர், 1982
இரண்டாம் பதிப்பு, ஜூன், 1985
மூன்றாம் பதிப்பு, செப்டம்பர், 1989
நான்காம் பதிப்பு, ஜனவரி, 1995
ஐந்தாம் பதிப்பு, டிசம்பர், 2001
ஆறாம் பதிப்பு, டிசம்பர், 2007

6221053

031,3NT,K P7

நூல் அளவு : 1 x 8 கிரவுன்

பக்கங்கள் : 242

நூலின் பொருள் : நாவல்

மொழி : தமிழ்

எழுத்து : 10 புள்ளி

தாள் : 10.9 கி.கி. வெள்ளைத்தாள்

பைண்டிங் : சாதா அட்டை

அச்சிட்டோர் : அமர் ஆப்செட், சென்னை – 5

விலை ரூ. 75.00

# பதிப்புரை

இந்நூலிலுள்ள இரண்டு நாவல்களில் ஒன்றான ''காளியின் கண்கள்'' மலேசிய நாளிதழான 'தினமணியில்' தொடர்கதையாக வெளிவந்து வாசகர்களின் கருத்தையும் கவனத்தையும் கவர்ந்ததாகும்.

காளியின் கண்களைக் களவாட முயன்ற ஒரு கிராதகனுக்கும் அவனது காதலிக்கும் காளி எவ்வாறு பாடம் கற்பிக்கிறாள் என்பதே இந்நாவலின் கதை.

மற்றொரு நாவலான ''பாதையில் கிடந்த ஒரு பனிமலர்'' 'நவரத்தினம்' மாத இதழில் வெளி வந்துள்ளது.

இவ்விரு நாவல்களையும் இணைத்து வெளியிட்டுள்ளோம்.

வே. சுப்பையா
பூங்கொடி பதிப்பகம்

''லக்ஷ்மி''யின்

''பூங்கொடி'' வெளியீடுகளில் சில...

| | |
|---|---|
| ❖ அடுத்த வீடு ... | 145.00 |
| ❖ அரக்கு மாளிகை ... | 180.00 |
| ❖ அத்தை ... | 55.00 |
| ❖ அவளுக்கென்று ஒரு இடம் ... | 56.00 |
| ❖ இரண்டாவது மலர் ... | 130.00 |
| ❖ இரண்டாவது தேனிலவு ... | 45.00 |
| ❖ ஊன்றுகோல் ... | 60.00 |
| ❖ ஒரு காவிரியைப் போல (சாகித்ய அகடமி பரிசு பெற்றது) ... | 125.00 |
| ❖ ஒரு சிவப்பு பச்சையாகிறது ... | 90.00 |
| ❖ கதவு திறந்தால் ... | 95.00 |
| ❖ கதாசிரியையின் கதை (முதல் பாகம்) ... | 60.00 |
| ❖ கதாசிரியையின் கதை (இரண்டாம் பாகம்) ... | 70.00 |
| ❖ கைமாறியபோது ... | 85.00 |
| ❖ நதி மூலம் ... | 45.00 |
| ❖ நல்லதோர் வீணை ... | 75.00 |
| ❖ நிற்க நேரமில்லை ... | 80.00 |
| ❖ நியாயங்கள் மாறும்போது ... | 90.00 |
| ❖ பண்ணையார் மகள் ... | 115.00 |
| ❖ பவளமல்லி ... | 70.00 |
| ❖ பவானி ... | 50.00 |
| ❖ பெயர் சொல்ல மாட்டேன் ... | 50.00 |
| ❖ பெண் மனம் (தமிழ்நாடு அரசு பரிசு பெற்ற நூல்)... | 70.00 |
| ❖ மருமகள் ... | 50.00 |
| ❖ மறுபடியுமா? ... | 85.00 |
| ❖ மீண்டும் பிறந்தால் ... | 85.00 |
| ❖ மீண்டும் பெண்மனம் ... | 70.00 |
| ❖ மோகத்திரை ... | 75.00 |
| ❖ ராதாவின் திருமணம் ... | 75.00 |
| ❖ ராமராஜ்யம் ... | 20.00 |

## 1. வசந்தன் புன்னகைத்தான்

திருச்சியிலிருந்து சேலம் செல்லும் நெடுஞ்சாலை அது. வழவழப்பான தார் போட்ட சாலை மீது அந்தப் பயணிகள் பஸ் வந்து நின்றது.

கண்டக்டர் அவசரமாகத் தமது உரத்த குரலில், ''காளிராஜபுரம் இறங்குங்கோ'' என்று கத்தினார்.

பஸ்சின் இறங்குமிடத்தின் வழியே, உயரமான ஓர் இளைஞன், கூட்டத்தை நெருக்கித் தள்ளிக் கொண்டு எப்படியோ வெளியே வந்து கொண்டிருந்தான்.

''போப்பா... ரை... ரைட்ஸ்'' கண்டக்டர் மீண்டும் உரக்க குரல் கொடுத்துவிட்டு தமது விசிலை பலமாக ஊதினார். அலறிப் புடைத்துக் கொண்டு ஓடுவது போல பஸ் தனது டீஸல் புகையைக் கக்கியபடி புறப்பட்டுப் போய்விட்டது.

'காளிராஜபுரம் பஞ்சாயத்து எல்லை' என்ற பலகை சாலை ஓரத்தில் பளிச்சென்று தெரிந்தது. கண்களை மறைத்திருந்த கறுப்புக் கண்ணாடியைக் கழற்றிவிட்டு ஒருமுறை உற்றுப்பார்த்தான் அவன்.

''வருக... நல்வரவாகுக'' சற்றுத் தொலைவில் ஊர் எல்லைக்குள் வரவேற்கும் மற்றொரு பலகை இரும்புக் கால்களில் நிமிர்ந்து நின்று கொண்டிருந்தது.

வாலிபன் உரக்கச் சிரித்தான். 'காளிராஜபுரம் என்ன அப்படி ஒரு உலக அதிசயங்களில் ஒன்றா? உல்லாசப் பயணிகளைக் கவர்ந்து கொள்ளும் அளவிற்கு இங்கே என்ன இருக்கிறது என்று இப்படி ஒரு வரவேற்புப் பலகை? உம்?'

தனக்குள்ளே பேசியபடி சாலையைக் கடந்தவன் பசிய

வயல்களிடையே தொலை தூரத்தில் நீல வானத்தை நோக்கி நேராக நின்ற அந்தக் கோயிலின் கோபுரத்தை நிமிர்ந்து பார்த்தான்.

அதுதான் ஊர் எல்லைக் காளியம்மன் கோயிலாக இருக்க வேண்டும்... ஊகித்துக் கொண்டான். சட்டென்று தன் தோள் மீது தொங்க விட்டுக் கொண்டிருந்த பையிலிருந்த 'பைனாகுலரை' எடுத்துக் கண்களில் பொருத்திக் கொண்டு சுற்றிலும் பார்வையை அதன் மூலம் ஓடவிட்டான்.

பழமையான கலாசாரத்தின் கம்பீரத்துடன் ஓங்கி உயர்ந்து நின்ற கோபுரத்தில், கண்ணுக்கினிமையான சிற்ப வேலைப்பாடுகள் தெரிந்தன. சோழர் காலத்து சிற்பக்கலையாக இருக்க வேண்டும்... தனக்குள்ளே சொல்லிக் கொண்டு மீண்டும் பைனாகுலரை தோள் பையில் அடக்கி விட்டு எதிரில் தெரிந்த குறுகலான பாதையில் இறங்கி மெல்ல நடக்கலானான்.

மாலை நேரம், சூரியனின் கொடுமை சற்றுத் தணிந்திருந்தது. இருபுறமும் பசிய வயல்களின் குளுமை. நெற்பயிர்கள் கன கம்பீரமாக தலையை ஆட்டி அவனை வரவேற்பது போலக் காற்றுடன் புரண்டு விளையாடிக் கொண்டிருந்தன.

வயல் ஓர வரப்பின் அருகே கல்யாண முருங்கைச் செடிகளில் கொத்து கொத்தாகப் பூத்து நின்ற சிவந்த மலர்கள்... அவன் கண்களைக் கவர்ந்தன.

குல்மோஹர் போல்... இது என்ன மரம்... என்னவோ சொல்லுவாங்களே... மரத்தின் பெயரை நினைப்பில் இழுக்க முயன்றபடி மேலே... நடந்தான்.

கம்மென்று ரோஜாப் பூக்களின் மணம் முகத்தில் மோதவே திரும்பிப் பார்த்தான்... காளி கோவிலை நெருங்கி விட்டதின் அடையாளமாக... பெரிய பூந்தோட்டம் அவன் கண்முன் விரிந்து கிடந்தது.



ரோஜா மலர்கள் பளீரென்று சிரித்தபடி சிவப்பும் வெளுப்புமாக செடிகளில் குலுங்கிக் கொண்டிருந்தன. குண்டு குண்டான மல்லிகைகள். கண்களுக்கு இதமாக நந்தியா வட்டைப் பூக்கள். அரளி பூக்கள் அம்மனுக்குப் பிடித்தமானது என்று அவனும் கேள்விப்பட்டிருக்கிறான். அவற்றில் செவ்வரளி எத்தனை அழகாகக் கண்களைப் பறித்தது?

வியப்புடன் எதிர் திசையைப் பார்த்தான். கண்களில் துளிர் வெற்றிலைக் கொடிகள் — மாலைக் காற்றில் படபடத்தன. அழகிய கன்னியின் வனப்பை... அந்த கிராமம் அவனுக்கு நினைப்பூட்டியது.

காளிராஜபுரத்தின் செழிப்புக்குக் காரணமே தான்தான்... என்பது போல சற்றுத் தொலைவில் தெளிந்தோடிக் கொண்டிருந்த காவிரியின் கிளையான பெரிய வாய்க்காலை சற்று நின்று வேடிக்கை பார்த்தான்.

எதிர் பக்கம் சேலைத் தலைப்பை மார்பின் குறுக்கே இறுக்கிக் கட்டிக்கொண்டு... படிக்கல் மீது மஞ்சளை உரசி முகத்திலே பூசிக்கொண்டு... தண்ணீரில் இறங்கி ஆனந்தமாக ஓர் இளம் பெண் - குளித்துக் கொண்டிருந்த காட்சியை நின்று நிதானமாகப் பார்த்து ரசித்தான். உடம்பை கனத்த தன் உடைகளைக் களைந்து விட்டு... இடுப்பில் சிறு துண்டுடன் தானும் தண்ணீரில் நுழைந்து குளித்து எழ வேண்டும் போன்றதொரு ஈர்ப்பு அவனுக்கு ஏற்பட்டது...

தன்னைச் சுற்றிலும் பார்வையை ஓட்டியபடி... மண் சாலையில் தனது பூட்ஸ் கால்கள் அழுந்த அவன் மேலே நடந்தான்.

''ஐயா! யாருங்க? ஊருக்குப் புதுசா?...''

குரல் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான் அவன். கொம்பு மீசையும் கட்டுக் குடுமியுமாக வயதான மனிதர் எதிரே நின்று கொண்டிருந்தார். நெற்றி முழுவதும் திருநீறு; நடுவில் பெரிய குங்குமப் பொட்டு.

இடையிலேயிருந்த காவி வேட்டி முழங்காலுக்குச் சற்று கீழே இறங்கி இருந்தது... அந்த வயதிலும் முறுக்கேறி நின்ற அந்த உடல்கட்டை வியப்புடன் பார்த்தபடி நின்றான். ''நான்தான் இந்த ஊர் காளி கோயில் பூசாரி பூங்காவனம். ஐயாவை இதுக்கு முன்னே பார்த்ததே இல்லையேன்னு கேட்டேன்'' அவரது கூர்மையான கண்கள் வாலிபனை நோட்டம் விட்டன.

தொளதொளவென்ற கால்சராய் - மேலே பூப்போட்ட சட்டை. பேசாமல் வேட்டியாகவே கட்டிக்கிட்டு வந்திருக்கலாமே... காலோடு தலைவரை கண்களால் ஆராய்ந்தார் அந்த கிழவர். தொங்கு மீசை... கிருதா.... கோதுமை நிறம் என்று பையன் பார்க்க நன்றாக இருந்தான். காலில் தெரிந்த கனத்த பூட்ஸையும் தோளில் தொங்கிய பையையும் - கையில் பிடித்திருந்த கறுப்புக் கண்ணாடியையும் மாறிமாறிப் பார்த்தவர் புரிந்து கொண்டு விட்டார்.

பெரிய வேலையிலிருக்கிற பிள்ளைபோல தோணுதே? தமக்குள்ளே அதிசயப்பட்டுக் கொண்டார்.

''கோயிலுக்கு வந்தீங்களா?... ஐயா பேரு?...'' பூங்காவனம் மெல்லிய குரலில் கேட்டார்.

''என் பேரு வசந்தன். திருச்சியிலிருந்து வரேன். தேடப்போன மூலிகை காலிலே கெடச்சதுபோல நீங்களே எதிரே வந்துட்டீங்க'' வரிசைப் பற்கள் தெரிய அழகாகச் சிரித்தான் வசந்தன்.

''விளங்கலையே?''

''விளங்கும்படியா சொல்றேன். முதல்லே கொஞ்சம் குடிக்கத் தண்ணி கெடைக்குமா?'' பணிவுடன் கேட்டபடி அவன் முன்னே நடந்தான்.

''அதுக்கென்ன, தாராளமா?''

''நான் ஒரு பத்திரிகை நிருபன். ஏதாவது ஒரு ஊர்ல



பிரபலமா விளங்குகிற விஷயம் எதுவானாலும் நேராகப் போய் பார்த்து படம் புடிச்சு எங்க பத்திரிகையிலே போடுகிற வேலை செய்கிறவன்.''

''உங்க பத்திரிகையின் பேரு?''

''மகேசன் குரல்... அப்படின்னு கேள்விப் பட்டிருப்பீங்களே...''

''அதுதான் எங்க பத்திரிக்கை...''

பூங்காவனத்தின் புன்னகை, சிரிப்பாக மலர்ந்தது. அவர் தினமும் காலையில் முதல் வேலையாகப் படிக்கும் நாளேடு 'மகேசன் குரல்' ஆயிற்றே? அதனுடைய நிருபரா அந்த இளைஞன்?... அவனை சந்தித்தது பற்றி அவருக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

''இந்த ஊர்ல அப்படி என்னங்க இருக்குது?'' கேட்டபடி பூசாரி கோவிலின் பலிபீடத்துக்கு வந்து நின்றார்.

அதனருகில் உயரமாக ஓங்கி நின்ற துவஜஸ்தம்பம் கவனிப்பாரற்றது போல தூசி படிந்து இருந்தது.

''என்ன அப்படி சொல்லீட்டிங்க? இந்த ஊர் காளிகோயில் ரொம்ப பிரசித்தின்னு ஒருத்தர் சொன்னார். அந்தக் காலத்திலே கும்பப்ப நாய்க்கர்னு ஒரு ராஜா கட்டின கோயிலாமே... நிறைய கல்வெட்டு சாசனம் இருக்குன்னு சொன்னாரு. மேற்கொண்டு இந்த அம்மனோட கண்கள் ரொம்ப விசேஷமுன்னு வேற சொன்னாரு.

''ஆனால் அவருக்கு அழகா விவரமா சொல்ல தெரியலே... அதனாலே நானே நேரா புறப்பட்டு இங்கே வந்து கோயிலை சுத்திப் பார்த்து ஆராய்ச்சி செய்திட்டு பத்திரிகையிலே எழுதிடலாம்னு வந்தேன்'' படபடவென்று வசந்தன் பேசினான்.

பூங்காவனத்தின் கண்கள் வியப்பினால் விரிந்தன. பத்திரிகை உலகத்தையும் — சினிமா உலகத்தையும்

அறியாதவர் அல்ல அவர். வெறும் விளம்பரத்தால் மட்டுமே இந்த உலகம் பிழைக்கிறது என்ற உண்மை தெரிந்த அனுபவசாலி அவர். ஆண்டவனுக்கும் வெளிச்சம் போட்டு விளம்பரம் தேட வேண்டிய அவசியம் நேர்ந்து விட்ட கொடுமையை அவர் நன்றாகப் புரிந்து கொண்டு விட்டிருந்தார்.

காலத்துக்கு ஏத்தபடி அம்பாளே, தன்னைப்பத்தி உலகத்துக்கு எடுத்துச் சொல்ல, இப்படி ஒரு பிள்ளையை வரவழைத்திருப்பாளோ? மெய்சிலிர்த்துப் போனார் அவர்.

''தம்பி! இருங்கோ. இளநீர் சீவி எடுத்து வாரேன். தாகம் தணியட்டும். பூட்சை கழற்றி வச்சிட்டு கோயிலுக்குள்ளார வாங்கோ... விவரமா சொல்றேன்...'' மகிழ்ச்சியுடன் செயல்பட்டார்.

வசந்தன் பூசாரியின் உத்தரவுக்குப் பணிந்து பூட்ஸ்களை கழற்றி மரத்தடி ஒன்றில் வைத்தான். ''அதோ பாருங்க! எங்க அம்மாவே ஊர் எல்லை காக்கிற தெய்வம். அவளுக்குத் துணையா வாசல்லே நிக்கிறது மதுரை வீரன் சாமியாக்கும்.''

வாய்க்கால் கரை ஓரமாக கோவிலின் கோபுர வாயிலருகே பெரிய குதிரை மீது பயங்கரமாக கண்களை உருட்டி விழித்தபடி மீசை துடிக்க கத்தியை ஓங்கிப் பிடித்தபடி ஒரு மாவீரன் சிலை வடிவில் அமர்ந்திருந்தான். சில நிமிஷங்களில் பூசாரி அருகாமையிலிருந்த தென்னந்தோப்பிலிருந்து சீவிய இளநீர் குலைகளுடன் ஓடோடி வந்தார்.

''காலைக் கழுவிக்கிட்டு உள்ளே வாங்கோ...'' அன்போடு அழைத்தார். ஸாக்ஸைக் கழற்றி பூட்சிற்குள் திணித்துவிட்டு அவர் சொன்னபடியே செய்தான் வசந்தன்.

முன்புற வாயிலைக் கடந்து விஸ்த்தாரமாக வெறிச்சோடிக் கிடந்த சுற்றுப் பிரகாரத்தைப் பார்வையிட்டான். கல் பாவிய தரைகள், மதில் சுவர் ஓரமாக பன்னீர் வில்வமரங்கள். நான்கு மூலைகளிலும் விதம் விதமான சின்ன தேவதைகளின் கோயில்கள். சந்நிதியின் நேரே நின்ற மண்டபத்து தூண்களில்



விசித்திர வேலைப்பாட்டை வியப்புடன் பார்த்தபடி நின்றான்.

''சாப்பிடுங்க... நல்லா விளக்கின வெண்கல டம்ளர் தான்.'' சொல்லி கொண்டே டம்ளரில் நிறைத்த இளநீருடன் பூசாரி அருகே விரைந்து வந்தார்.

பூசாரி கொடுக்கிறார் கோயில் பிரகாரத்தில் நின்று கொண்டு கோயில் பாத்திரத்தைக் கவ்வி எச்சில் செய்து குடிப்பது தவறாச்சே... எண்ணியபடி மெல்ல டம்ளரை உயர்த்தி தன் சட்டைமீது இளநீர் தெரித்து விழாவண்ணம் தூக்கி மடமடவென்று குடித்து முடித்தான். அப்பா நாக்குக்கு எத்தனை சுவையாகத் தாகம் தீரும் அமிர்தமாக அல்லவா இருந்தது இளநீர்!

''இந்த கோயிலுக்கு புராண வரலாறு இருக்குது தெரியுமா? அம்மா ரொம்ப உக்கிரமானவங்க் தம்பி!'' பூசாரி உற்சாகத்தோடு ஆரம்பித்தார்.

புருவங்களை அதிசயத்துடன் நெரித்தபடி உட்பக்கம் அவரைத் தொடர்ந்தான் வசந்தன்.

''சிவனுக்கும் பார்வதிக்கும் நடனப் போட்டி நடந்ததாம். அதிலே சிவன் பார்வதியை ஏமாத்தி ஜெயிச்சிட்ட கதை எல்லாருக்கும் தெரியுமே. அப்ப, அம்மாளுக்குத் தாங்க மாட்டாத கோபம் வந்துட்டதாம். நம்ப புருசனே நம்மை ஏமாத்திட்டாரே... சே! அப்படின்னுட்டு, பூலோகத்துக்கு 'சர்'னு இறங்கி வந்திட்டாங்க. வந்தவங்க நேரா இந்தக் காவேரிக் கரைக்கு வந்தாங்க.''

''அப்படியே சிலையாகிட்டாங்களா?'' வசந்தன் கிண்டினான்.

''அதானே கதை. அம்மா உக்கிரமா வந்தா இல்லியா. அதனாலே இந்த கிராமத்து ஜனங்கள் எல்லாம் அவதிப்பட ஆரம்பிச்சாங்க. பசி, பட்டினி, கொள்ளை நோயினு ரொம்ப கஷ்டம் வந்திடுச்சு. ஊர்ல ஒரு பெரிய சக்தி உபாசகர் இருந்தார்.

அவர் கனவிலே அம்மா தோன்றினாளாம். என் கண்களில் இருக்கிற கோபப் பொறியாலதான் இந்த ஊர் மக்கள் அவதிப்படறாங்க... அதுக்கு நீங்கதான் வகை செய்யணும் அப்படின்னு சொன்னாளாம். உபாசகர் பலநாள் யோசிச்சாராம். கடைசிலே இந்த ஊரை ஆண்ட ராஜாகிட்ட முறையிட்டாராம். அம்மாளின் கோபத்தைத் தணிக்க ஒரு 'கண்ணடக்கம்' செய்து வச்சார் ராஜா.''

''கண்ணடக்கமா...?

''ஆமாங்க தம்பி... நல்லா சிவப்பு ரத்தின கற்களை அப்ப அரைச்ச சந்தனத்திலே புதைச்சு... அம்மாவோட உக்கிரமான கண்களில் அப்பி வச்சுட்டா அவ மனசு குளிர்ந்து கருணையோட மக்களைப் பார்த்து ரட்சிப்பான்னு முடிவு செஞ்சாங்க. அப்படியே செய்தாங்க.''

''இப்பக்கூட அந்த 'கண்ணடக்கம்' இருக்கா?'' ஆவலோடு கேட்டான் அவன்.

அம்பாளை தீபாராதனை வெளிச்சத்தில் ஏற்றி இறக்கி காட்டியபடி அவர் தொடர்ந்தார்.

''அந்த காலத்திலே தினசரி கண்ணடக்கம் செஞ்சாங்க... இப்பக் காலம் கெட்டுக் கிடக்குதே? அதனாலே பங்குனி மாசம் இங்கே பெரிய உற்சவம் — தேர் திருவிழா நடக்கும். அப்ப மட்டுந்தான் 'கண்ணடக்கம்' செய்கிற வழக்கம் தம்பி!''

''அதுவரை அந்த ரத்ன கற்களை கோயில் இரும்புப் பெட்டியிலே வச்சிருப்பீங்களாக்கும்?''

''கோயிலுக்குள்ளே பூந்து சிலைகளைக் கடத்திக்கிட்டு போகிற திருட்டு பசங்க அதிகரிச்சு போயிட்ட காலமா இருக்கே. அதனாலே அந்த கற்களை இங்கே நாங்க வைக்கிறதேயில்லை. ஒவ்வொரு கல்லும் எத்தனையோ ல்ட்சம் ரூபா பெறுமாம். நமக்கேன் இந்த தொல்லையினு இந்த பொறுப்பை நான் தர்மகர்த்தா கிட்டேயே ஒப்படைச்சிருக்கேன். தர்மகர்த்தா



சிவலிங்க ஐயாதான் அதுகளை பத்திரமா தங்கள் வீட்டு இரும்பு பெட்டியிலே வைச்சு காப்பாத்திகிட்டு வரார். தம்பி நீங்க இந்த ஊர்லே கொஞ்சம் இருந்து விவரமா எல்லாத்தையும் எழுதுங்க...''

அவரது மனக் கண்ணில் பிரசித்தமான காளிராஜபுரம் தோன்றியது. அவரும் கையில் தங்கக் காப்பும் கழுத்தில் தங்கப் பூண்போட்ட ருத்திராட்ச மாலை சகிதம் - இடுப்பில் சிவப்பு பட்டு வேட்டியுமாக நிற்பது போன்ற பூரிப்பில் சிரித்துக் கொண்டார்.

''கட்டாயம் எழுதறேன்! காளியோட கண்கள்! ரொம்ப பிரபலமாகப் போகுது.... பார்த்துகிட்டே இருங்க'' என்றபடி தாராளமாக இரண்டு ரூபாய் தாள் ஒன்றை, தீபாராதனை தட்டில் வைத்தான் வசந்தன்.

அரைகுறை இருட்டில் அகலமும், உயரமுமாக, தொங்கிய நாக்கும் உருட்டி விழிக்கும் கண்களுமாக சிவந்த சேலையில் அரளிப் பூமாலையுடன் காளி அம்மன் வசந்தனை உறுத்துப் பார்ப்பது போல் இருந்தது. ஒரு வினாடி ஏற்பட்ட அச்சத்தை உதறிவிட்டு மீண்டும் உட்பக்கம் நோட்டம் விட்டான் அவன்.

''தம்பி! நம்ப வீட்டிலேயே தங்கலாம்'' பூசாரி உபசரித்தார். தலையை ஆட்டினான் அவன்.

''அவசரப்படாம நிதானமாக எல்லாத்தையும் கவனிச்சு எழுதுங்கோ தம்பி'' பூசாரி பல்லைக் காட்டினார்.

''நிதானமாக செய்து முடிக்கத்தான் வந்திருக்கேன்....'' வசந்தன் மர்மமாகப் புன்னகைத்தான்...

## 2. ஆசை மகள் உமா

அன்று காலை முதலே அலமேலு, சமையலறையில் இடிபோல் முழங்கிக் கொண்டிருந்தாள்.

பழைய காலத்து வீடானதால், சமையலறையின் முன்புறக் கதவு கரையான் அரித்துப் பாதியாகி விட்டிருந்தது.

அடுப்பங்கரையின் புகை போக்கி, மிகச் சிதிலமான நிலையில், எப்போது கரிப்பொடி விழுமோ, அல்லது சுவர்க் காரை பெயர்ந்து விழுமோ என்ற நிலை. எப்போதோ போட்ட சிமெண்ட் தரை, பள்ளமும், மேடுமாக சாப்பிட்ட பிறகு, மெழுகித் துடைக்கவோ, அல்லது தண்ணீர் விட்டுக் கழுவவோ இயலாமல், கையெல்லாம் புண்ணாகிவிட்ட கோபம் வேறு சேர்ந்து கொண்டுவிட்டது.

''உசிரு போய் வருது. இந்த லட்சணத்தில் குடிக்க ஒரு சொட்டு தண்ணி இருக்கா? என்னோட அதிர்ஷ்டம் நம்ம வீட்டுக் கிணத்துல ஒரே உப்புக் கட்டை. ஷ¬ம்! நான் பொண்ணா பிறந்து புகுந்த வீட்ல வாழறது போலத் தானே இருக்கும்.''

கதவருகில் அமர்ந்தபடி, பிஞ்சுப் புடலங்காயை அரிந்து கொண்டிருந்த உமா, சின்னம்மா அலமேலுவை உற்றுப் பார்த்தாள்.

'எதுக்காக சின்னம்மா அலுத்துக் கொள்றீங்க? தண்ணீர் வேணுமானா, கொல்லைப் பக்கம் ஓடுகிற காவிரி வாய்க்கால் நீரில், மொண்டு வருகிறேனே' என்று சொல்ல வேண்டும்போல் தோன்றியது. ஆனால், அலமேலு ஏற்கெனவே புகையும் எரிமலை போன்றவள். ஏதாவது



தூண்டினால், படாரென வெடித்துச் சீறி விடுவாள்.

உமா மௌனம் சாதித்தாள். சின்னம்மாவைப் பார்க்கும் போது அவளுக்கு ஒரு புறம் அனுதாபமும், மறுபுறம் சிறிது கோபமும் ஏற்படுவதுண்டு. அவளது தகப்பனார், ஊர்ப்பெரிய பணக்காரராக வாழ்ந்தவர்தான். கொஞ்சம் நிலமும், இப்போது வசிக்கும் பழைய காலத்து வீடும் அவரது ஆஸ்தி. உமா பிறந்தபோது மிக வசதியாகவே அவர்கள் வாழ்ந்தார்கள். ஊரில் பெரிய புள்ளி, நாணயஸ்தர் என்ற நிலையில், காளியம்மன் கோவில் தர்மகர்த்தா பதவி அவரை வலுவிலே தேடி வந்தது.

உமாவிற்கு, அப்பா சிவலிங்கத்தின் மீது மட்டற்ற மதிப்பும் பாசமும் இருந்ததற்குக் காரணங்கள் இருந்தன.

அப்பா, கடவுள் பக்தி உடையவர் மட்டுமல்ல. பெண்களை மிக மதிப்பவர். பெண் கல்வி, பெண்கள் முன்னேற்றம் என்ற பல முற்போக்கான கருத்துகள் கொண்டவர். இல்லாவிட்டால், கிராமத்துப் பள்ளிப் படிப்பு, தமது மகளுக்குப் போதாது என்று அருகிலிருந்த திருச்சிக்கு அனுப்பி ஹாஸ்டலில் தங்கிப் படிக்கவைப்பாரா?

அவளது அம்மா சிந்தாமணிக்கு இருதயநோய் வந்தபோது அன்பும் கருத்துமாக, பணத்தை தண்ணீராக செலவழித்துப் பாடுபட்டிருப்பாரா? அம்மா இறக்கும்போது உமா, சிறு குழந்தைதான்.

மனைவியை இழந்த துயரம், அவளது உயிருக்கு உலை வைத்த நோய்க்காக விரயமான பொருள், குழந்தை உமா.... சிவலிங்கம் வெறுப்பின் எல்லைக்கே போய் விட்டிருந்தார்.

''சிவா ஊர் உலகத்தில் இதெல்லாம் சகஜம்தான். உமாவை வளர்த்து, உன்னையும் கவனிச்சு ஒரு வாய் கஞ்சி ஊத்த ஒருத்தி வீட்ல வேணும். பேசாம இரண்டாம் கல்யாணம் கட்டிக்க'' ஊரில் சில பெரியவர்கள் வற்புறுத்தினார்கள்.

அடுத்த கிராமத்தைச் சேர்ந்த அலமேலு, ஒரு வகையில் அவருக்கு தூரத்து உறவு முறைதான். விவசாயக் குடும்பம்.

கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற குடும்பத்தில் பெண் எடுத்தால், நம்மையும் சரிவரக் கவனிப்பாளே என்ற சபலத்தில், சிவலிங்கம் ஒரு பெரிய தவறைச் செய்து விட்டார். அப்பா அடிக்கடி அப்படி அலுத்துக் கொள்வதை, உமாவே கேட்டிருக்கிறாள்.

சின்னம்மா, குறையே உருவாக வளர்ந்தவள் என்பது, கொஞ்சம் கொஞ்சமாக விளங்க ஆரம்பித்தது.

ஊர்க் கோயில் தர்மகர்த்தா, வீடு இருக்கிறது என்ற ஆசையில் வந்தவளுக்கு, ஏமாற்றமாகப் போயிருக்க வேண்டும்.

மூத்தாள் விட்டுச் சென்ற ஓரிரு நகைகளும், அவளது பெண் உமாவிற்கு என்று தெரிந்ததுமே, மனம் விட்டுப் போயிருக்கலாம். பிறகு உமாவைப் படிக்க வைக்க என்று கணவன் பாடுபட்டு செலவு செய்வதைப் பார்த்து உள்ளூர வெகுண்டு கொண்டிருந்தாள்.,

அவளுக்குப் பிறந்த குழந்தைகள் சியாமளாவும், மகன் பிரகாசமும், படிப்பில் உமாவைப் போலத் துடிப்பாக இல்லாத குறை அவளை உறுத்திக் கொண்டிருந்தது.

'இரண்டாம் தாரமாக வாழ்க்கைப் பட்டோம். இந்த மனுஷனோட வாழ்ந்து என்ன சுகம் கண்டோம்' என்ற அலுப்பு அவளை சதா எரிந்து விழச் செய்தது.

வறுமையிலேயே உழன்று விட்டு, வந்த இடத்திலாவது வாழ்வோம் என்று இருந்தவளுக்கு புகுந்த இடத்திலும் வசதிக் குறைவு என்றதும் ஏமாற்றமும் எரிச்சலும் ஏற்படுவது இயல்புதானே? அதற்கு வடிகாலாக உமாதான் அடிக்கடி சின்னம்மாவிடம் மாட்டிக் கொள்வாள்.

''அவளையே படிக்க வச்சிக்கிட்டிருங்க. நான் பெத்த புள்ளைங்களும், நானும் நடுத்தெருவில் நிக்கிறோம். வயசானவரைக் கட்டிக்கிட்டா என்ன, பணமும், காசும் இருக்குன்னு என்னைப் பலி குடுத்திட்டாங்க இங்கே...''



உரக்கப் புலம்புவாள் அலமேலு.

''நானும் இப்பத்தான் யோசிக்கிறேன். பேசாம வைராக்கியமாகவே இருந்திட்டு, காளியம்மா சந்நிதியிலே காலத்தைக் கழிச்சிட்டிருப்பேன். என் விதி.... யாரை விட்டுச்சு'' அப்பா நொந்து கொள்வார்.

அப்பா, அம்மாவின் சண்டைகளில் ஊறிப்போய் வளர்ந்துவிட்ட அனுபவ முதிர்ச்சி, சியாமளாவிடம் காணப்பட்டது. 'வேற வேலை என்ன? சதா வீட்ல நிம்மதி இல்லாம செய்துகிட்டு' என்று சொல்லும் அளவிற்கு அவளது மனப்பாங்கு மாறிவிட்டிருந்தது.

சியாமளா உள்ளூர்ப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்த மாணவி.

படிப்பைத் தவிர, இதர ஊர் உலகத்து அக்கப் போரை யெல்லாம், நன்கு தெரிந்து வைத்துக் கொண்டிருந்த ஒரு இரண்டும் கெட்டான் வயதுப் பெண்.

உமா பார்ப்பதற்கு கம்பீரமான பெண். சியாமளா கவர்ச்சியே உருவாக வளரும் பெண். ஊரிலிருக்கும் சினிமா புத்தகங்களையும், கதைப் புத்தகங்களையும் ஓயாது படித்து அடிக்கடி தனக்குத் தானே 'களுக்' கென்றுச் சிரித்துக் கொள்ளும் இளசு. உலகமெல்லாம் அவளது இளமைக் கனவிற்குள்ளே என நினைத்துக் கற்பனையில் வாழும் இளம்பெண். ஏதாவது அதட்டினால், 'ஆமாம் போ! உனக்கு வேற வேலையில்லே' என்று முகத்தைக் குலுக்கிக் கொண்டு வெளியே ஓடி விடும் அறியாத சிறுமி.

'கமல் காப்பி குடிப்பாரா, டீ குடிப்பாரா? ரஜினி ராத்திரியிலே சாப்பிடுவது சப்பாத்தியா சாப்பாடா, புன்னகை அரசி எந்த டூத் பேஸ்ட்டால் பல் துலக்குவார்' என்பது போன்ற பலவிதமான சந்தேகங்கள் சியாமளாவுக்கு எழும். பரீட்சை சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்பாளோ இல்லையோ இதற்கு விளக்கம் கேட்க, தோழிகளைத் தேடி ஓடி விடுவாள்.

வெளிப்புறத் திண்ணையில் ஈஸிசேரில் அப்பா சிவலிங்கம் சோர்வுடன் சாய்ந்து கொண்டிருந்தார். கடந்த சில நாட்களாகவே, அவருக்கு உடல் நிலையும், மனநிலையும் சரிஇல்லாமல் இருந்தது.

திருச்சியில் டாக்டரிடம் சென்று காட்டியதில் அவருக்கு சிறிது ரத்த அழுத்தம் இருப்பதாகத் தெரிவித்துவிட்டிருந்தார். வயது ஆகிக்கொண்டே வருகிறதற்கு அடையாளமாக முன்னைப் போல் வேகமாக அவரால் நடக்க முடிவதில்லை. முட்டிகளில் வலியும், கால் கை குடைச்சலும் வர ஆரம்பித்து விட்டன.

பங்குனி உத்திரம் திருவிழா துவங்க இருந்த சமயம். காளியம்மன் கோவிலில் காப்புக் கட்டியாக வேண்டும். ஊர் முழுவதும் கடைகளும், கண்ணிகளுமாக, அமர்க்களமாக இருக்கும். கோவில் தர்மகர்த்தா என்ற முறையில் அவரது பொறுப்பு மிகப் பெரியதாயிற்றே!

தேர் முட்டிக்குள் பூட்டி வைத்திருக்கும் தேரை, சரிவர இருக்கிறதா என்று செப்பனிடப் பணிக்க வேண்டும். பூசாரி ஐயா மட்டும் போதாது. சிவன் கோவில் குருக்கள் ஐயாவையும், பூஜை ஆராதனைக்காக வரவழைக்க வேண்டும்.

திருவிழாவின் போது நடக்க வேண்டிய வாணவேடிக்கை, பாட்டுக் கச்சேரி, இத்யாதிகளுக்கு ஏற்பாடு செய்தாக வேண்டும். 'என்ன செய்வது? எப்படி செய்வது?' என்ற கவலையுடன் கூரை முகட்டைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார்.

''கோவில்ல, வருஷத்துக்கு ஒருவாட்டி தர்மகர்த்தா சம்சாரம்னு, மரியாதை செய்வாங்களே அது ஒண்ணுதான் நான் கண்டது...'' அலுத்தபடி ''ம்! இந்தா... ஒண்ணரை மணிநேரமா காலை அரிஞ்சுகிட்டே உட்கார்ந்திருக்கே. போய், இந்தக் காப்பித் தண்ணியை உங்கப்பாரு கிட்ட குடு...'' அலமேலு கடுகடுத்தாள்.



உமா சேலையை உதறியபடி எழுந்து நின்றாள். ''குடுங்க சின்னம்மா! காப்பி குடுத்திட்டு, நானே போய் தண்ணி, ரெண்டு குடம் சமைய்லுக்கு எடுத்திட்டு வரேன்.''

''பி.ஏ. படிச்சவ. குடத்தை இடுப்பிலே வைக்கலாமா? வேண்டாம் தாயே. உன்னை வாத்திச்சி வேலைக்குப் படிக்க வச்சு உசத்தியா வேலைக்கு அனுப்பப்போறாராம் உங்கப்பா. உனக்கெதுக்கு, நானே போறேன்'' குத்தலாகக் கூறியபடி காப்பி தம்ளரை அவளிடம் நீட்டினாள்.

அடுப்பங்கரையில், அலுமினியக் கிண்ணத்தில் ஆறிக் கிடந்த இட்டலிகளில் இரண்டை எடுத்து ஒரு சிறு தட்டில் வைத்தாள் உமா. ஒரு ஸ்பூன் சட்டினியை வைத்து விட்டு, காப்பித் தம்ளரையும் எடுத்துக் கொண்டு வெளியேறினாள்.

'அப்பான்னா அப்படி உசிருன்னு காண்பிச்சுக் கொள்றாளாக்கும்' தனக்குள் பற்களைக் கடித்தபடி அவளை உறுத்துப் பார்த்தாள் அலமேலு.

''அம்மா! எனக்குப் பலகாரம் இல்லியா?'' சோம்பலே உருவாக, உட்புறம் வந்த சியாமளாவை அலமேலு கடுமையாகப் பார்த்தாள்.

''எங்க தொலைஞ்சு போனே? பலகாரத்தைச் சாப்பிடு. உன் தம்பி தடிப்பயலைக் கூப்பிடு. நான் போய் தண்ணி எடுத்திட்டு வரேன்'' உறுமினாள்.

''தண்ணியா! நான் போய்க் கொண்டு வர்ரேனே'' அவசரமாகக் கூறிய மகளை அதிசயமாகப் பார்த்தாள் தாய்.

''என்னாடி இது. மழைதான் வரப் போவுது. உடம்பு வணங்கி ஒரு வேலையும் செய்யாதவ... சரி! சரி! பலகாரம் சாப்பிட்டுப்பிட்டுப் போ. பசிக்கப் போவுது'' குரலில் சிறிது கடுமை குறைந்து கனிவு தொனித்தது.

''சாப்பிடுங்க அப்பா! நீங்க நல்லா ஓய்வு எடுத்துகிட்டா, உடம்பு நல்லாயிடும்னு டாக்டர் சொல்லி இருக்காரே. எதுக்குக்

கவலைப் படதீங்க'' பாசத்தோடு தந்தையிடம் பலகாரத் தட்டை நீட்டினாள் உமா.

''என்னவோம்மா. இந்த வாட்டி, பங்குனித் திருவிழாவிலே, 'கண்ணடக்கம்' செஞ்சு முடிச்சிட்டா, நான் நிம்மதியாக இருப்பேன். என்னவோ தெரியலே, கொஞ்ச நாளாக, மனசிலே ஒரு பயம். நம்மால் எதுவுமே முடியாமப் போயிடுமோன்னு.''

''பேசாம இந்த பலகாரத்தைத் தின்னுட்டு காப்பியைக் குடிங்க. எல்லாம் நல்லபடியா நடக்கும். காளியம்மா கருணையான அன்னையாச்சுதே!'' உமா புன்னகைத்தாள்.

''உங்கம்மாவைப் போல நீ ரொம்பப் பொறுமையான பொண்ணும்மா. ஆனா, அவளைவிட ஆயுசு நிறைய இருந்து நல்லா படிச்சு முன்னுக்கு வரணும் நீ. அதுதான் என் ஆசை. உங்க சின்னம்மா உன்னைக் கட்டிக் குடுக்காம வீட்ல வச்சிருக்கேன்னு சதா குறை சொல்றதை நீ காதிலேயே போட்டுக்காதே'' என்றவர், உள்ளிருந்து குடத்துடன் வெளிப்பட்ட சின்ன மகளைக் கண்டு வியப்புடன், ''சியாமளா குட்டி கூட வேலை செய்யுதே!'' என்றார் உற்சாகமாக.

''உக்கும்! இப்பல்லாம் நாந்தான் கொல்லைப்புறத்தில வாய்க்கால் தண்ணி எடுத்து வரப்போறேன். அக்காகிட்ட, கவலைப்பட வேணாம். நானே தண்ணி எடுத்து வரப்போறேன்னு சொல்லிவிட்டுப் போக வந்தேன்'' சியாமளா சிணுங்கினாள்.

ஆமாம்! இந்தத் தண்ணீர் கொண்டு வரும் வேலையில் இவளுக்குத் திடீரென்று ஏன் இப்படி ஒரு ஈடுபாடு? எங்கேயோ என்னவோ சரியில்லை என்று உமாவின் மூளையில் ஒரு சிறு மின்னல்... சட்டென எழுந்தவள், தங்கையின் பின்னால் அவளையும் அறியாமல் தொடரத் தீர்மானித்தாள்.



## 3. உமா செயலற்று நின்றாள்

சல, சலவென்று இரு கரையும் பெருகி ஓடிக்கொண்டிருந்த பெரிய வாய்க்காலின் படித்துறையில் மனித நடமாட்டம் இல்லாத வேளை அநேகமாக, தர்மகர்த்தா வீட்டுக் கொல்லைப்புறப் படிக்கட்டு என்பதால் கிராமத்து மக்களுக்கு, அந்தத் துறையில் நீராடவோ, தண்ணீர் பிடிக்கவோ பயமாக இருக்கலாம். சாதாரணமாகவே அங்கு எதிர்ப் பக்கத் துறையில் கூட்டம் இராது. அதிலும் அதிகாலையிலேயே தங்களது, குளியலை முடித்துக் கொண்டு யாவரும் போய்விடுவார்கள். ஆகையால், நீரின் சலசலப்பின் ஓசை மட்டுமே அங்கே கேட்டுக் கொண்டிருந்தது.

படித் துறையில், குடத்து நீரை நிரப்பி வைத்துவிட்டு எதிர்த் துறைப் பக்கம் தெரிந்த தென்னந் தோப்பையே உற்றுப் பார்த்த சியாமளா 'களுக்'கென்று சிரித்தாள்.

அவள் அருகில் நின்றுக் கொண்டிருந்த வசந்தனுக்கு சங்கடமாக இருந்தது. சிறுமி என்றும் தாண்டமுடியாத உருவம். வளர்ந்து விட்டவள் என்று மதிப்பிட முடியாத இரண்டும் கெட்டான் அறிவு. விழிகளில் கருத்துடன் தீட்டப்பட்ட மைக் கீற்றுகள். நெற்றியில் மின்னிய வண்ணச் சாந்து, இரு புறமும் கவனமாக வாரி இரட்டைப் பின்னலிட்ட கூந்தலில், பளிச்சிட்ட ரிப்பன்கள்.

முகத்தில், ஸ்னோ பூசி பவுடர் போட்டிருக்க வேண்டும். வியர்வை துளிகளுடன் அங்கங்கே திட்டுத் திட்டாக ஒட்டிக்கொண்டிருந்த பவுடர் பூச்சைக் கண்டதும் அவனுக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. இருப்பினும் சிரமத்துடன் அடக்கிக் கொண்டு அவளைப் பார்த்தான் வியப்புடன்.

''எதுக்கு சிரிச்சே?''

குழந்தைத்தனமான சிரிப்போடு, ''அந்த சினிமாவிலே ''தென்னங்கீற்று சோலையிலே... ஒரு சிட்டுக் குருவி பாடுது... ன்னு ஒரு பாட்டு வருதே... அந்த நினைப்பு வந்திட்டுது'' என்றாள் சியாமளா.

''ஏன் நீயே ஒரு சிட்டுக் குருவியாட்டமாத்தானே இருக்கே... இப்ப...'' என்று புகழ்ந்தபடி அவளை உல்லாசமாகப் பார்த்தான் வசந்தன். உள்ளூர எரிச்சல்...!

''நீங்க பெரிய ஆளு...'' என்றபடி வெட்கத்துடன் முகத்தைக் குலுக்கியவளாய் அவள் மீண்டும் எதிர்ப் பக்கம் பார்த்தாள்.

வசந்தன் தன்னை சமாளித்துக் கொண்டான். ''கோவில்லே உற்சவம் ஆரம்பிக்கப் போகுதாமே'' பேச்சை மாற்றினான்.

''ஏன் பூசாரி ஐயா சொல்லலே? நீங்க அவர் வீட்லதானே இருக்கீங்க?'' சியாமளா வெடுக்கெனக் கேட்டாள்.

''ம்! சொன்னாரு. ஆனா அவருக்கு, உன்னைப்போல அழகா சொல்லத் தெரியலே... இந்த காலத்துப் பொண்ணு நீ, படிச்சவ... புத்திசாலி... அவர் அப்படியா? பாவம் பட்டிக்காடு...!''

''நீங்க ரொம்பப் பொல்லாதவர்!'' மீண்டும் 'களுக்' கென்று சிரித்துவிட்டு, அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்தாள் சியாமளா.

வசந்தன் அவளையே பார்த்தபடி நின்றான். சில நாட்களுக்கு முன், கோவில் வாயிலருகில் உள்ளே சென்று கொண்டிருந்த சியாமளாவை அவன் பார்த்தபோது, முதலில் அவனிடம் ஏற்பட்ட உணர்வு ஒருவிதமான சீண்டுவது போன்ற மனப்பான்மை.

'அதா போகுதே. அந்தப் பொண்ணுதான் நம்ம கோயில் தர்மகர்த்தா மகள் சியாமளா. அவரோட இரண்டாவது



சம்சாரத்துப் பொண்ணு. பள்ளிக்கூடத்துல படிக்குது' பூசாரி, ஆதியோடந்தமாக சொல்லி முடிக்கு முன், வசந்தன், தனது கூர்மையான பார்வையால் அந்தப் பெண்ணை நோட்டம் விட்டான். அவனது கண்கள் ஒரே விநாடியில், சியாமளாவைக் கணித்துவிட்டன.

காளிராஜபுரத்தின் பிரபலத்திற்காக, பூசாரி வசந்தனை கெட்டியாகப் பிடித்து வைத்திருந்தார். அவரே வலிய வந்து, வசந்தனை, தமது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார்.

''இந்த ஊர்ல ஒட்டல் எதுவும் சரியா இல்லே. அதுனாலே, நம்ம வீட்டிலேயே தங்கிகிட்டு, பங்குனித் திருவிழாவையும் பாத்திட்டு, விவரமா எழுதி எடுத்துக்கிட்டுப் போகலாம்'' பூசாரி பற்களைக் காட்டி உபசரித்தார்.

''உங்க வீட்ல...''

''பேசப்படாது தம்பி! எங்க வீட்ல, நானும் என் சம்சாரமும்தான். வேற யாரும் கிடையாது'' வற்புறுத்தினார்.

வந்த காரியத்திற்காக, சொந்த சுகங்களைச் சிறிதளவாவது தியாகம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் வசந்தனுக்கு ஏற்பட்டு விட்டிருந்தது.

தலை வாழை இலையில், பூசாரியின் மனைவி கனகம், சோறும், பருப்பும், கறியும் படைத்து உபசரித்தாலும், அவனால் அவற்றை ஜீரணிக்க முடியாமல் போயிற்று.

''தம்பிக்கு நம்ப சாப்பாடு பிடிக்கலியா? இலையில் படைச்ச பொரியல் அப்படியே இருக்குதே'' கனகம் அங்கலாய்த்தாள்.

''அதெல்லாம் இல்லே. சங்கோஜப்படுது. பழகினா சரியாகிடும்'' என்று ஒத்துப் பாடினார் பூசாரி.

வீட்டில், ஒரு முனையில் எப்போதோ போடப்பட்டிருந்த, கால் ஒடிந்த பெஞ்சியைத் தூசி தட்டி கொண்டு வந்து போட்டார் பூசாரி.

''தம்பிக்கு கயித்துக் கட்டில்ல படுக்க முடியுமோ என்னவோ? கட்டில் மாதிரி இந்த பெஞ்சியில் படுத்துக்கலாம்.''

அவரைப் பொறுத்தவரை அது 'சப்.: மஞ்சக் கட்டில்.' வேறு வழியின்றி அவரது அறுவைகளை ரசிப்பது போல் பொறுத்துக் கொண்டு நாட்களை ஓட்டி விட்டிருந்தான் வசந்தன்.

கிராமத்தவர்கள் கோவிலுக்கு வரும்போதெல்லாம் பூசாரி விளக்கம் கொடுத்து வந்தார்.

சியாமளாவைப் பார்த்ததும் திடீரென வசந்தன் மூளையில் ஒரு பொறி தட்டிற்று.

அவனது செயல்களுக்கு முன்னோடியாக உதவக் கூடியவள் இந்தப் பெண். வாசனைக்காக சமையலில் சேர்த்து விட்டு, பிறகு தூக்கி எறிந்து விடக்கூடிய கொத்து மல்லிக் கட்டு கறிவேப்பிலைக் கொத்து!

வேகமாக அவனது அறிவு செயல்பட்டது. அசட்டையாக இருப்பவனைப் போல, பூசாரி கூறியதைக் காதில் வாங்கியபடி, அதே சமயம் நிதானமாகக் குறிதவறாமல், சியாமளாவின் அருகே நடந்து சென்றான்.

சியாமளாவிற்கு ஒரே வியப்பு. யார் இந்த அழகிய உயரமான வாலிபன். சிகப்பு ரோஜாக்களிலே வரும் கமலைப் போல உடுத்திக்கிட்டு நிற்கிறார்?

சியாமளாவின் உடல்தான் வளர்ந்திருந்ததே தவிர அறிவு சூன்யம்தான். அதிலும் பயம் என்பதே அறியாத இளமை. அசட்டுத் தனமான போக்குத் தந்த துணிச்சல். எனவே, ''ஸார்! நீங்க ஊருக்குப் புதுசா?'' என்று கேட்டு விட்டு சிரித்தாள் கல கலவென.

''ஆமா. என் பேரு வசந்தன்'' அவன் ஆரம்பிக்கு முன் பூசாரி பூங்காவனம் பாய்ந்தோடி பின்னாலேயே வந்து விட்டார்.



''ஐயா...'' அவர் பெரிய புகழ்ப் புராணமே பாடி முடித்ததும் சியாமளா திறந்த வாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''நம்ம ஊர் காளி கோவில் திருவிழாவைப் பார்த்து, எழுதறத்துக்காக வந்திருக்கார். போட்டோ கூட பிடிக்கப் போறாராம்.''

''அப்படியா? போட்டான்னா, கலர் போட்டாவோ?'' ஆவலுடன் கண்களைக் கொட்டியபடி கேட்டாள் சியாமளா.

''ம்! கலர் போட்டோ மட்டும் இல்லே. சினிமா கூட எடுக்கற காமிரா எங்கிட்ட இருக்கு...'' வசந்தன் அலட்சியமாகச் சொன்னான்.

சியாமளாவின் விழிகள் வியப்பினால் மேலும் பெரியதாயின. அதற்குப் பிறகு இவள் கண்கள் வசந்தனை ஒரு விநாடி கூட விட்டு வைக்காமல் சதா துரத்தத் துவங்கின.

ஒரு நாள் காலை வசந்தனை பெரிய வாய்க்கால் படித்துறையில் தற்செயலாகக் கண்டு விட்ட சியாமளா பிறகு நாள் தவறாமல் குடமும் கையுமாக அங்கே காட்சியளிக்கத் துவங்கினாள்.

''காற்றுள்ள போதே தூற்றிக் கொண்டு விடும் உன்னை இப்படியே பாத்தா... அசல் சினிமா நட்சத்திரம் போல... அத்தனை...''.

''போங்க நீங்க ரொம்பத்தான் புகழறீங்க...'' செல்லமாக சிணுங்கியபடி, சியாமளா குடத்தைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டாள்.

''அதுக்குள்ள புறப்பட்டுட்டியா?'' குழைவான குரலில் கேட்டான் வசந்தன்.

''நான் வீட்ல எந்த வேலையும் செய்ய மாட்டேன். இப்ப இவ எதுக்காக தண்ணி கொண்டு வரப்போறா... ஏன் இத்தனை நேரமாக்கிட்டு இருக்காள்ன்னு சந்தேகப்படுவாங்க.

வரட்டுமா?''

''ம்!'' பெருமூச்சு விட்டபடி ''எப்பத்தான் நாம பயப்படாம சந்தோஷமா சாவகாசமா பேசுவோமோ தெரியலே'' என்றான் அலுப்புடன்.

''கோவில் திருவிழா ஆரம்பிக்க இன்னும் இரண்டு நாள்தானே. அங்கே, வானப்பட்டரை மைதானத்திலே, ஒரு குடை ராட்டினம் வைப்பாங்க. அது பக்கத்திலே முனியாண்டி கோயில் ஆலமரம் இருக்குது. அந்தப்பக்கம் ஆறு மணிக்கு மேல யாரும் வரமாட்டாங்க. முனி அடிச்சுப்பிடும்னு பயம்!''

''ஏன்? உனக்குப் பயமா இல்லியா?'' வசந்தன் கேலியாகக் கேட்டான்.

''நீங்க பக்கத்திலே இருக்கும்போது எனக்கு என்ன பயம்?'' கனிவுடன் அவனைப் பார்த்த சியாமளா, ''அங்கே பேசுவோம். இனி மேல இங்க நின்னா...!'' முடிப்பதற்குள் அருகிலிருந்த செடிகளுக்கிடையில் சலசலப்புக் கேட்டது.

வசந்தன் ஒரே துள்ளலில், படிகளைக் கடந்து வேறு பக்கமாக வேகமாக நடந்தான். குடத்துடன், அவசரமாகப் படிகளில் ஏறிய சியாமளா, திகிலுடன் மெல்ல செடிகளின் அருகாக வந்தாள்.

உமா அக்கா!

''நீ எதுக்காக என்னைத் தேடிக்கிட்டு வந்தே? எனக்குத் தண்ணி எடுத்துகிட்டு வரத் தெரியாதுன்னு நினைப்போ?'' எரிந்து விழுந்தாள் சியாமளா.

உமா சந்தேகத்துடன் தலையை நிமிர்த்திப் பார்த்தாள். சியாமளா எதையோ அவளிடம் மறைக்க முயல்கிறாள்! நிமிர்ந்தவள் கண்களில் சற்றுத் தொலைவில் அவசர அவசரமாக, நடந்து சென்று கொண்டிருந்த, உயரமான இளைஞனின் உருவம் தெரிந்தது.

அவன் யார்? எதற்காக இந்த படித் துறைக்கு வர



வேண்டும்? சியாமளாவுடன் அவனுக்கு எப்படிப் பழக்கம்?

ஏதோ வரவிருக்கும் அபாயத்தை அவள் உள் மனம் உணர்த்தியது. மனம் மிகவும் கோபத்தால் கொதித்தது.

நீ முதல்ல வீட்டுக்கு வா... அப்பாகிட்ட சொல்லி... என்று அவள் அதட்டு முன் 'ஓ' வென்றலறிபடி, குடத்துடன், சென்ற சியாமளா, அவளது அன்னையை நோக்கி புகார் சொல்ல விரைந்தாள்.

உமா, மேற்கொண்டு செயலற்றுப் போய் நின்றாள்.

## 4. சியாமளா ஒட்டுக் கேட்கிறாள்!

காலை வெய்யிலின் கடுமை அதிகரித்துக் கொண்டிருந்தது. அலமேலு வழக்கம் போல் உரக்கக் கத்தியபடி, வெண்கலக் கடையில் புகுந்த யானையாக அட்டகாசம் செய்து கொண்டிருந்தாள்.

உமா, வாயிற்புறத் திண்ணைமீது ஏறி நின்று தெருமுனையை எட்டிப் பார்த்தாள். கவலையுடன் பங்குனி உத்திரத் திருவிழா ஆரம்பத்திற்காக, அப்பா அலையாக அலைவது அவளுக்குத் தெரியும். ஆனால் அதே சமயம், அப்பாவின் உடல் நிலையின் இயலாமையும் அவளுக்குப் புரிந்திருந்தது.

'எங்கே போய் அலைஞ்சு கொண்டிருக்கிறாரோ? உடம்புக்கு ரொம்ப முடியாமல் போயிட்டுதுன்னா, பிறகு அவரை யாரு கவனிப்பாங்க? ஏற்கெனவே சின்னம்மா ஆத்திரக்காரி' தனக்குள்ளே எண்ணியபடி தெருவை நோட்டம் விட்டாள்.

பங்குனித் திருவிழாவின் கோலாகலத்தின் களை, ஊர்

முழுவதும் கட்டியிருந்தது. கிடைத்த இடங்கள் எல்லாம் கடைகள். வீட்டின் தெருத் திண்ணைகளையும் விட்டுவைக்க வில்லை வியாபாரிகள். தர்மகர்த்தா வீடு என்பதால் அவர்கள் வீட்டு திண்ணை மட்டும் தப்பியது!

வளையல் கடைகள், தெய்வத் திருஉருவப் படங்களின் கடை, சினிமா நட்சத்திரங்களின் புகைப் படங்கள் கொண்ட கடை என்று பல ரகங்கள். நெற்றியில் இடும் குங்குமங்களில் எத்தனை நிறமாற்றங்கள் செய்ய முடியுமோ அப்படி வண்ணக் களஞ்சியக் குவியலாக ஒரு கடை...

சியாமளாவின் பாடு கொண்டாட்டமாகப் போயிற்று. வருடா், வருடம் திருவிழா தண்டல் பணமாக, அப்பாவிடமிருந்து ஐந்து ரூபாய் வாங்கி விடுவாள். ரிப்பன் கடைகள், வளையல் கடை என்று புகுந்து புறப்பட்டு விரயம் செய்து முடித்த பிறகுதான் அவளுக்குத் தூக்கமே வரும்!

தம்பி பிரகாசத்தின் வழியே தனி. கடைத் தெருவில் வரிசையாக நிறுவப்பட்டிருக்கும் பலகாரக் கடைகள், மிட்டாய்க் கடைகளின் வாயிலில் பழியாகக் கிடப்பான்.

திருநெல்வேலி அல்வாவை வாங்கி வயிறு முட்டத் தின்றுவிட்டு, ஒரு வாரத்திற்கு வைத்திய செலவிற்கு வழி வகுத்து விடுவான்.

''பாவிப்பயலே! சந்தோஷமா இருக்கட்டும்னு பணத்தைக் குடுத்து அனுப்பினா, இப்படியா வயித்து வலியை விலை குடுத்து வாங்கிட்டு வருவான்...'' பற்களைக் கடிப்பாள் அலமேலு.

பயாஸ்கோப், 'பார் பார் பட்டணம் பார்' போன்ற காட்சிகளையும் ஒட்டு மொத்தமாக குத்தகை எடுத்து விட்டவர்களைப் போல, தங்கையும், தம்பியும் திரிவதைக் கண்டு உமா, மனம் புழுங்குவாள். அவள் வெளியூர் ஹாஸ்டலில் படித்து வந்தது, அவளது சகோதரர்களுக்கு மேலும் குளிர்விட்டுப் போனதுபோல ஆகி விட்டிருந்தது.



உமா, வீட்டிற்குப் பெரியவள் என்ற நினைப்பில் அதட்டிப் பேசினால், அழுது ரகளை செய்து குற்றச்சாட்டை, அவள் மீதே திருப்பிவிடும் சாமர்த்தியசாலி சியாமளா.

அன்றும் அப்படித்தானே நிகழ்ந்தது? வாய்க்கால் கரையிலிருந்து குடத்துடன் வந்த மகளைக் கண்டதும் அலமேலு பதறிப்போய், 'என்னடி ஆச்சு? ஏன்?' என்றாள்.

''அக்கா என்கிட்ட கோவிச்சுது. திட்டிக்கிட்டே வந்தது. தண்ணி கொண்டுவர இத்தனை நேரமா... வா... அப்பாகிட்ட சொல்லிக் குடுக்கறேன்னு மிரட்டிச்சு'' மேலும் 'ஓ' வென்று அலறியபடி, தண்ணீர் குடத்தை நறுக்கென்று தரையில் வைத்தாள்.

அவ்வளவுதான்! அலமேலு தாடகை, சூர்ப்பணகை யாவரும் வெட்கித் தலைகுனியும் வகையில் வசைமாரி பாடி இறக்கி விட்டாள்.

''உமா! நீ எதுக்கும்மா அதுகிட்ட பேச்சுக் குடுக்கறே'' அப்பா அலுத்துக் கொண்ட போது, அவள் தொண்டைக்குள் அந்த சந்தேகம் உறைந்து போய் நின்று விட்டிருந்தது.

உண்மையைச் சொன்னாலும், எடுத்துக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தில் அவர்கள் இருக்கவில்லை. ஆனால் எப்படியும் அப்பாவிடம், இதுபற்றி ஒரு கோடி காட்டிவிட வேண்டும் என்று தீர்மானித்து விட்டிருந்தபடி மௌனமானாள் உமா.

தெருமுனையில் அப்பாவின் சோர்ந்த முகம் தெரிந்தது. வெயிலுக்காகத் தலையின் மீது துண்டைப் போட்டபடி, மெல்ல நடந்து வந்து கொண்டிருந்தார். கூடவே பணிவுடன் இரண்டு பேர்... கோவில் சேவகன், தேருக்கு முட்டுக்கட்டை போடும் செவந்தி பின் தொடர, ஏதோ பேசியபடி வந்து கொண்டிருந்தார்.

உள் பக்கம் ஓடோடிச் சென்ற உமா, ''சின்னம்மா! அப்பா வந்துகிட்டிருக்காரு. காப்பி பலகாரம் ரெடியா? எடுத்துட்டு

போகவா?'' கேட்டாள் மெல்ல.

''உங்கப்பாவுக்கு மட்டும் போதுமா? கூடவே ரெண்டு, மூணுன்னு இழுத்துக்கிட்டு வருவாரே, அதிலயும் கோவில் தர்மகர்த்தா. திருவிழா சமயம்... காண வருவாரும் கைகட்டி நிப்பாரும்னு உங்கப்பாரு பின்னால, ஒரு பட்டாளமே... சப்ளைக்கு வருவாங்களே...'' முகத்தைக் குலுக்கியபடி குரோதமாக வார்த்தைகளைக் கொட்டினாள் அலமேலு.

உமாவின் முகம் சிவந்தது.

அப்பா பெரிய பணம் படைத்தவரல்லதான். ஆனால் தாராள மனம் படைத்தவர். தம்மால் இயன்ற அளவிற்காவது, வந்தவர்களை உபசரிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர். அவருக்குப் போய் இப்படி ஒரு மனைவி...?

''நின்னுக்கிட்டே இருக்காதே. மசமசன்னு உடனடியா என்ன செய்வியோ செஞ்சுகொள்ளு.'' நறுக்கென்று பலகாரத் தட்டுகளைத் தூக்கி அவளருகில் வைத்தாள்.

சின்னம்மாவின் ஆத்திரத்தால் பலமுறை நசுக்கப்பட்டு, உருமாறிப் போய் பரிதாபமாகக் காட்சியளித்த தட்டுகளை, மெல்ல எடுத்தாள் உமா.

சிறிது நேரத்தில் தட்டுகளில் சிறிது உப்புமாவும், தம்ளர்களில் காப்பியுமாக திண்ணைப் பக்கம் விரைந்தாள்.

திண்ணையில் களைப்புடன் அமர்ந்திருந்த சிவலிங்கம், உமாவைப் பார்த்ததும் புன்னகைத்தார். ''அடேடே! கூடவே இவங்களும் வராங்கன்னு தெரிஞ்சே காப்பி பலகாரம் கொணாந்தியாம்மா'' கனிவுடன் கேட்டார்.

''நம்ம குழந்தை ரொம்ப புத்திசாலியாச்சுதே! இல்லாமலா பெரிய படிப்பெல்லாம் படிச்சுது'' செவந்தி தன் காவியேறிய பற்களைக் காட்டி உரக்கச் சிரித்தான்...

''ஏம்ப்பா இப்படி உடம்பைப் போட்டுத் தேச்சுக்கிறீங்க. இங்கே இருந்துகிட்டே நீங்க சொன்னா போதாது?''



உரிமையுடன் மகள் கடிந்து கொண்டாள்.

''இன்னைக்கி வெள்ளிக்கிழமை. அம்மனுக்கு கண்ணடக்கம் செய்யணும். சனிக்கிழமை விட்டா, ஞாயிற்றுக்கிழமை காலை, சாத்துபடி செஞ்சு கதவடைச்சால்தான் நாலு நாள்லே, சந்நிதியைத் திறக்க முடியும். அப்புறம் வாண வேடிக்கை, தேரு எல்லாம் இருக்குதே... எவ்வளவு வேலை இருக்கும்மா...'' பரபரத்தார் அவர்.

''அத்தனை மராமத்து வேலையும், ஐயாவே பக்கத்தில நின்னு பார்வை இடணும்கிறாரு. இன்னைக்கிக் காலையில் கூட...'' செவந்தி முடிக்குமுன்,

''பேசாம இருக்கமாட்டே... ம்! பலகாரத்தைச் சாப்பிடு'' மிரட்டினார் சிவலிங்கம்.

உமா அப்பாவை செல்லமாகக் கோபித்தபடி, அருகிலிருந்த செவந்தியிடம், ''அப்பாவுக்கு என்ன செவந்தி'' தூண்டினாள்.

''கொஞ்சம் மயக்கமா இருந்திச்சுன்னு அப்படியே கோவில் ஆபீஸ் வாசல்லயே உட்கார்ந்திட்டாரு. அப்புறம், நம்ம கருப்பையா ஓடிப்போய் கடைத் தெருவில் இருந்து ஒரு 'கோலி' சோடா வாங்கி வந்து குடுத்தான்.''

''ஒண்ணுமில்லேம்மா. வெறும் வயித்தோட காலையிலேயே எழுந்திரிச்சுப் போனேன் இல்லியா? அதான் மயக்கமா, தலை சுத்தறாப்போல வந்திட்டுது. இப்ப நல்லாயிட்டுது'' சமாளித்தார் சிவலிங்கம்.

''டாக்டர் சொன்னபடி நீங்க கொஞ்சம் ஓய்வா இருக்கணும்பா. இப்படி உடம்பை அலட்டிக்கிட்டா...''

''எல்லாம் அம்மன் பாத்துப்பாம்மா. அவளுக்கு 'கண்ணடக்கம்' செஞ்சுட்டா, என் பெரிய பொறுப்பு தீர்ந்து விடும்மா'' என்றார் உணர்ச்சி பொங்க.

காளியம்மனின் கருணையில் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவர் அவர். உப்புமாவை அள்ளிவாயில் போட்டு சுவைத்தபடி இருந்த தந்தையைக் கண்டு, பாகாய் கரைந்து போனாள் உமா.

கோவில் தர்மகர்த்தா என்ற முறையில் அவர் எந்த அதிகாரத்தையும், துஷ்பிரயோகம் செய்ய நினைத்ததே இல்லை.

கோவில் சம்பந்தப்பட்ட எந்த விவகாரமானாலும் அவரே முன் நின்று பயபக்தியுடன் செய்து முடிப்பார். தனது அதிகாரத்திற்கு உட்பட்ட கோவில்தானே என்று கூட்டத்தினரையும் பக்த கோடிகளையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு, தமது குடும்பத்தாருடன் காளி சந்நிதியில் தனிப்பட தரிசனம் செய்ய முனையமாட்டார்.

அந்தத் திருவிழா சமயத்தில், தர்மகர்த்தா குடும்பத்தினருக்கு அளிக்கப்படும், முதல் மரியாதையைக் கூட, அவர் தமது மனைவியுடன் மட்டுமே சென்று ஏற்றுக் கொள்வார்.

''ஏன்யா சிவலிங்கம்! வருஷத்துக்கு ஒருவாட்டி நடக்கிற மரியாதை. நல்லா ''ஜம்''முனு குடும்பத்தோட வந்து, அம்மா சந்நிதியில வாங்கிக்கறது'' என்று கிராமக் கணக்கப் பிள்ளை ஒரு முறை கேலி செய்தார்.

''அம்மனுக்கு செய்ய வேண்டிய கைங்கரியம். இதுக்கு, எனக்கு என்ன மரியாதை வேண்டிக்கிடக்குது'' வணக்கமாகப் பதில் கூறிவிடுவார் சிவலிங்கம்.

''கோவில் திருவிழா வேலைகளை நீங்களே பார்த்துக்கணும்னு கட்டாயமா அப்பா... கொஞ்சம் இருந்த இடத்துலயே இருந்துகிட்டு மத்தவங்க கிட்ட சொன்னா, செய்யறாங்க.'' உமா வற்புறுத்தலாகக் கூறினாள்.



உப்புமாவை முடித்துக் காப்பியைப் பருகினவர் களைப்பு நீங்கியவராய் மகளை உற்றுப் பார்த்தார்.

செவந்தியும், சேவகனும் விடை பெற்றுக் கொண்டனர். 'அப்ப நாங்க கொஞ்சம், நேரத்திலேயே புறப்பட்டுக் கோவிலண்டை வந்திடறோம். பஞ்சாயத்து பிரசிடெண்ட் ஐயா உள்பட எல்லோருமே அம்மன் சந்நிதிக்கு வாரதா சொல்லிட்டாங்க. புறப்படறோங்க.''

சிவலிங்கம் மகளை அன்புடன் நோக்கினார். ''எதுக்கம்மா கோவிக்கறே. இன்னைக்கி 'கண்ணடக்கம்' செய்யணும்னா நான்தான் அதுக்கு பொறுப்பா செய்யக் கூடியவன்.''

''அந்தப் பொறுப்பையும் யார் கிட்டயாவது விடக்கூடாதா அப்பா'' மகளின் குரலில் ஆற்றாமை.

சிவலிங்கம் சுற்றும் முற்றும் பார்த்தவர், சட்டெனக் குரலைத் தாழ்த்தி, ''பச்சைப் பிள்ளையாட்டம் பேசாதே. காளியம்மாளின் கண்களிலே வைக்கப் போகிற சிகப்புக் கற்களின் விலை எத்தனையோ விலை பெறுமாம். அதனாலதான், இந்த சமயத்துல மட்டும் சர்வ ஜாக்கிரதையா அதை சாத்திட்டு மறுபடியும் அதை எடுத்துப் பாதுகாப்பாக வக்கிறப் பொறுப்பு என்னுடையதாச்சேம்மா...''

உமா எதுவும் பேசாமல் சில விநாடிகள் அப்படியே நின்றாள். பிறகு சற்று யோசித்தவளாக, 'அப்பா! அதை ரகசியமான இடத்துல வச்சுக்காப்பாத்த வேண்டிய பங்கு உங்களுடையதாச்சே'' என்றாள் கவலையுடன்.

''ஆமாம்மா! வரவர உடம்புக்கும் முடியலே. அதனால நானே ஒரு முடிவுக்கு வந்திட்டேன்.''

''என்ன அப்பா!''

''உங்கிட்ட அது வச்சிருக்கற எடத்தைப் பத்தின ரகசியத்தை சொல்லிடலாம்னு.''

''அப்பா!'' தூக்கி வாரிப் போட்டவளாய், உமா

நிமிர்ந்தாள்.

''கேட்டுக்கம்மா வேற ஒருத்தருக்கும் நம்ம குடும்பத்துல தெரிஞ்சு இருக்கறது நல்லது இல்லியா?''

அடிக்குரலில் அவர் மெல்லக் கூறியதை பிரமிப்புடன் கேட்ட உமாவின் கண்கள் பயத்துடன் இங்குமங்கும் அலை பாய்ந்தன. சட்டென, வீட்டின் வாயிற் கதவருகில் நீலநிறப் பாவாடையும் தாவணியும் தெரிந்தது! யாரோ ஒட்டுக் கேட்கிறார்கள். பரக்கப் பரக்க அங்கு ஓடியவள், ''யாரது?'' அதட்டினாள். பயத்துடன் விழித்தபடி நின்றாள் சியாமளா!

## 5. சியாமளா சிலிர்த்துப் போனாள்!

பூசாரி பூங்காவனம் தமது பெரிய மீசையைப் பலமாகத் தடவி விட்டுக் கொண்டார். அருகில் நின்று கொண்டிருந்த வசந்தன், மிகப் பொறுமையாகக் கவனத்துடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஊரெங்கும் விழாக்கோலம். விதவிதமான மக்கள். பக்கத்துக் கிராமங்களிலிருந்து, வண்டிகளிலும் பஸ்சிலுமாக மக்கள் ஈக்களைப் போல மொய்க்க ஆரம்பித்து விட்டனர். பச்சை, ரோஜா வண்ணம் என்று ஆழ்ந்த நிறங்களில் உடைகள். தலையை வழுவழுவென வாரி முடிந்து, தலைநிறையக் கதம்பமும், கை நிறைய வளையலும், காது ஜிமிக்கியுமாக கருத்தைக் கவர்ந்த கன்னிப் பெண்கள்.

முரட்டுச் செருப்பும், சேலம் குண்டஞ்சி வேஷ்டியும் தலை முண்டாசுமாக, உழைத்து உரமேறிய உடலில் சட்டை அணிந்த வியாபாரிகள். பட்டுச் சேலையும், நகையும் பளபளக்க, திரு விழாக் கடைக்கும்பலில் திருடர்களுக்கு வாய்ப்பளிக்க வந்த



நங்கையர்கள்.

கண்ணுக்கு இனிமையாக வளைய வரும் கன்னியரை, கண்களுக்கு விருந்தாக எண்ணி பின்னாலேயே தொடரும் இளவட்டங்கள்.

குடை ராட்டினம், வாண வேடிக்கை என்று எத்தனை வகையான கேளிக்கை ஆர்ப்பாட்டங்கள்? வசந்தன் மிக்க வியப்புடன் அந்த விசித்தரமான மக்கள் கும்பலைப் பார்த்தபடி இருந்தான்.

பூங்காவனம், காளி கோவில் திருவிழா பற்றி விவரித்தபடி, கோவிலருகில் வந்து விட்டார்.

அங்கே, வெளிப்புறம் அகன்ற பெரிய பள்ளம் ஒன்று இருந்தது. மறுபுறம் காளியம்மன் புறப்பாட்டிற்கான, தேர் அலங்காரம் வெகு மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

''வேலப்பா! எல்லாம் சரியா இருக்குதா?'' பூசாரி உரக்கக் குரல் கொடுத்தார்.

''ஆயிட்டுதண்ணே! நம்ம தர்மகர்த்தா ஐயா, உடம்புக்கு முடியாம இருந்தும் கூட, ஜரூரா, வந்து கெடுபிடி செய்திட்டிருக்காரே'' பதிலுக்கு உரக்கக் கூவினான் வேலப்ப ஆசாரி.

''ஒரு காலத்தில் தம்பி! அதோ தெரியுதே பள்ளம், அதுல, காளியம்மனுக்கு எருமைக்கடா, ஆட்டுக்கடா எல்லாம் பலி குடுத்து தூக்கிப் போடுவாங்க. அதுவும், பங்குனித் திருவிழான்னா கேக்கவே வேண்டாம். ஒவ்வொருத்தர் காணிக்கையா, பலிபோட கொண்டு வந்து விட்டுடுவாங்க.''

''பிறகு?''

''அப்படி ஒரே நாளில் நூறு பலிகூட போடுவாங்க. இந்தப் பள்ளத்திலே ரத்தம் தேங்கி நிக்கும்...? நாள் கணக்கில் எலும்பா கிடைக்கும்.''

வசந்தன் உடல் நடுங்கியது. ''இப்பக் கூடவா?''

''அ! பேசப்படாது. இப்ப இருக்கற தர்மகர்த்தா ரொம்ப லட்சியவாதி. உயிர் வதை ரொம்பப் பாவம்னு, ஊர் பஞ்சாயத்துல தீர்மானம் எடுக்க வச்சு, அதை அடியோட நிறுத்திட்டாரு.''

''ஊர்ல எதிர்ப்பே இல்லையா?'' வசந்தன் கேட்டான்.

''எல்லாரும், வெளியூர் போய் படிக்க ஆரம்பிச்சிட்டாங்க. தெய்வபக்தி வேண்டியது தான். ஆனா, மூடபக்தி கூடாதுன்னும் புரிஞ்சு கொண்டாங்க. இப்ப, என்னையே எடுத்துக்கிட்டால், இந்தப் பலி போடறவனே நான்தான். நானே மாறிட்டேனே'' பூசாரி இடக்காக சிரித்தார்.

''இப்ப கண்ணடக்கம் செய்வீங்க இல்லையா?'' பேச்சை மாற்றினான் வசந்தன்.

''ஆமாம். அப்படி செய்து பூசை போடுவோம், முன்னே செய்த விசேஷ பூசை போலவா? இப்ப எல்லாம் மாறிட்டது. ஆத்தாளும் அதை ஏத்துக்கிட்டா.''

''எப்படி?'' தூண்டினான் அவன்.

''அம்மா சந்நிதியிலே, பெரிய நெய்விளக்கு, அணையா விளக்கா, பெரிய திரி போட்டு ஏத்தி வைப்போம். பிறகு, பெரிய தவலை நிறையச் சோறு பொங்கி சந்நிதியிலே படைச்சிட்டு கதவை இழுத்து மூடிடுவோம்.''

''எதுக்கு? அம்மன் சாப்பிடறதை யாரும் பார்க்கக் கூடாதுன்னா?'' குறும்பாகப் பேசினான் அவன்.

''அப்படி இல்லை தம்பீ. தேவகணங்கள் வந்து சாப்பிட்டுப் போட்டு இந்தக் கிராமத்தை வாழ்த்திட்டுப் போறதாக ஒரு சாங்கியம். கேளுங்க! அப்பல்லாம் அன்னைக்கிக் காப்புக்கட்டி ஒருவாரம் கழிச்சு சந்நிதியைத் திறப்போம். கதவைத் திறக்கற சமயம் ஒரு கொழுத்த ஆடை முன்னால் நிறுத்துவோம்.''



''பலியா?''

''ஊஹூம்! உள்ளேயிருந்து வருதே கொதிச்ச ஆவி அதிலே அந்த ஆடு பொட்டுனு மயங்கி விழுந்து செத்துப் போகும். விளக்கும் அணையாம ஆடும் பலியாச்சுன்னா, அம்மா கோவிக்கலே ஊர்ல வியாதி வராது. சனங்கள் வசதியா இருப்பாங்கன்னு மகிழ்ந்து போயி தேரை அலங்காரம் பண்ணி அம்மனை நீராட்டி எல்லா பூசையும் செய்து ஊர்வலமா எடுத்துப் போவோம். வாண வேடிக்கை பாட்டுக் கச்சேரி எல்லாம் அமர்க்களப்படும்.''

''இப்பவும் எல்லாம் நடக்கும் போலிருக்கே?''

''ஆமா! ஆனா ஒரு சின்ன மாறுதல்'' பூசாரி புன்னகைத்தார்.

''இதுலயுமா?''

''ஆமா. சந்நிதிக் கதவைத் திறக்கும் போது ஆட்டுக்கடா பலி கூடாதுன்னு...''

''தர்மகர்த்தா ஐயா நிறுத்திட்டாராக்கும்.''

''ஆமா. ஆனா ரொம்பப் பொறுப்பான மனுஷர். நீங்களே பாத்தா சொல்வீங்க. ரொம்பத் தங்கமான குணம் அவருக்கு. அவர் பேரைக் கேட்டாலே கிராமத்து ஜனங்க கையெடுத்துக் கும்பிடுவாங்க.'' பூசாரி பேசியபடி முன்புறமுள்ள பிரகாரத்துப் படிக்கட்டைத் தாண்டினார்.

சுறுசுறுப்புடன் பணியாட்கள் நாலாபுறமும் ஓடியாடி துப்புரவு செய்து கொண்டிருந்தனர்.

முன் வாயிலில் காவல் தெய்வம் மதுரை வீரசாமி குதிரை மீது ஆரோகணித்தபடி கண்களை உருட்டி விழித்துக் கொண்டிருந்தார். வசந்தனுக்கு ஒரு கணம் 'திக்' கென்றது. மறுகணம் சமாளித்தபடி பூசாரியைப் பின் தொடர்ந்து உள்ளே சென்றான்.

சதா அவனது தோளில் உறவாடிக் கொண்டிருக்கும்

பையிலிருந்து ஒரு குறிப்புப் புத்தகத்தை உருவினான். பேனாவைத் திறந்து வைத்துக் கொண்டபடி எழுதுவது போல் பாவனை செய்தான்.

பூசாரி அகமகிழ்ந்து போனார். ''நம்ம கோவில் ஆபீசிலேயே உக்காந்து மேஜைமேல் வச்சிகிட்டு எழுதுங்க தம்பி! இந்தக் காளிபுரத்தைப் பத்தி பெரிசா எழுதிப் போடுங்க. நெறைய போட்டோ படம் புடிச்சு பத்திரிகையிலே குடுங்க'' என்றார் பெருமையாக.

''அதுக்குத்தானே நான் புறப்பட்டு வந்திருக்கேன்'' கூறியபடி வசந்தன் பைக்குள்ளிலிருந்த 'பைனாகுலரை' எடுத்துக் கண்களில் பொருத்தினான்.

''நீங்க பாத்துகிட்டு இருங்க, நான் போய் பூசையை முடிச்சிட்டு வந்திடறேன்.'' கோவில் அர்ச்சனைக்காக மக்கள் வர ஆரம்பித்து விட்டதால் உள்ளே மறைந்தார் பூசாரி.

கிராமத்தில், வெள்ளையும், சள்ளையுமாக உடையணிந்த வாலிபன் ஒருத்தன் வந்த செய்தி காட்டுத் தீயாகப் பரவி விட்டிருந்தது. அதிலும், காளிபுரத்துக் கோவிலைப் பற்றி பிரமாதமாக ஏதோ எழுதப் போவதாகப் பூசாரி சொன்னதில், அவனது மதிப்புப் பல மடங்கு கூடி விட்டிருந்தது.

கடைத்தெருவில் அவனுக்குப் பலமான உபசாரம். அவசரமாகக் ''கலர்'' பானம் ஒன்றை ஊற்றிக் கொடுத்த சோடாக்கடை சிங்காரம், தனது கடையை போட்டோ பிடித்து பத்திரிகையில் போட வேண்டும் என்று வெகுவாகக் கேட்டுக் கொண்டான்.

பன்னீர், வெற்றிலை, சீவல் பாலசுந்தரம் மட்டும் சளைத்தவனா என்ன? பாய்ந்து போய் வசந்தன் அருகில் நின்று ஒரு போட்டோ பிடிக்கச் செய்து, கடை முகப்பிலேயே பெரிய அளவில் மாட்டி வைத்திருந்தான்!

ஊர் முழுதும், தன் பெயர் பிரசித்தமாவதை வசந்தன்



விரும்பவில்லை.

''தம்பி! தர்மகர்த்தா ஐயா வீட்டுக்குக் கூட்டிப் போறேன்'' என்று பூசாரி ஆவலுடன் கேட்டபோது நாசூக்காக மறுத்து விட்டான் அவன்.

''கோவில் திருவிழா முடியட்டும். பிறகு அவர் வீட்டுக்குப் போகலாம். இப்ப அவர் ரொம்ப வேலையா இருப்பார். தொல்லை குடுக்கலாமா?''

''புதுத்தம்பி'' என்று செல்லமாக அவன் அழைக்கப் பட்டான். இப்போதெல்லாம் அவனால் முன்பு போல, சௌகரியமாக, ஊரைச் சுற்றி வர முடிவதில்லை.

இதனால், அதிகமாகப் பாதிக்கப்பட்டவள் சியாமளா தான். கோவில் திருவிழாவின் பொருட்டு, பள்ளிக்கூடம் மூடப்பட்டிருந்தது. பொழுது போகாமல், நல்ல நாளிலேயே ஊரைச்சுற்றி வரும் அவளுக்கு இப்போது வசந்தனோடு அரட்டை அடிப்பதிலும், சிணுங்குவதிலும், பொழுது போதாமல் போய் விட்டிருந்தது.

''எத்தனை நேரம் காத்துக் கிட்டிருக்கிறது!'' என்று முகத்தைக் குலுக்குவாள்.

''போங்க? போட்டோ எடுத்துத் தரேன்னு ஏமாத்திக்கிட்டே இருக்கீங்க. நீங்க ரொம்ப மோசம்'' என்று குழந்தை போல சீறுவாள்.

அவ்வப்போது வசந்தன் சமாதானப் படுத்தி அவளை ''தாஜா'' செய்து வைத்திருந்தான்.

காளி கோவில் கோபுரத்தைப் பார்ப்பது போல் அபிநயித்தபடி, பைனாகுலரை, எதிர்புறமாகத் திருப்பினான் வசந்தன். வெகு தொலைவில் சியாமளா நடந்து வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

சட்டென 'பைனாகுலரை'யும், இதர சாமான்களையும் தோள் பைக்குள் போட்டவன், வேகமாக நடந்தான்.

மகிழ மரத்தடியில் சுற்றுமுற்றும் பார்த்தபடி நின்ற சியாமளா அவன் மூச்சிறைக்க ஓடி வருவதைப் பார்த்ததும் மகிழ்ச்சியால் பூரித்துப் போனாள்.

''உங்களுக்கு ஒரு ரகசியம் சொல்லத்தான் ஓடி வந்தேன்.''

''என்ன சியாமளா?'' கேட்டபடி அவள் அருகில் நெருங்கி வந்தவன், அவளை ஆசையுடன் பார்த்தான்.

சியாமளா கிறங்கிப் போனாள். ''கண்ணடக்கம் செய்யறதுக்கு, அந்த சிகப்புக் கல்லை எங்கே வச்சிருக்குன்னு தெரிஞ்சு கொண்டேனே'' ஆர்ப்பரித்தாள்.

வசந்தன் மிக்க ஆர்வத்துடன் குழைவாக, சியாமளாவின் கரத்தைப் பற்றி, ''என் கண்ணல்ல... எங்கிட்ட கூடவா... ப்ளீஸ்!'' என்றான். அவள் மெய் சிலிர்த்துப் போனாள்.

'பட்சி வலையில் விழுந்தாகி விட்டது. இனி நமக்கு வேட்டைதான்' என்று மெல்ல திட்டம் தீட்டினான் வசந்தன்.

## 6. கண் மலர் எங்கே?

அலமேலு, மிக அவசரமாகக் கோவிலுக்குப் புறப்பட்டு விட்டிருந்தாள். மஞ்சள் பூசிக்குளித்த முகத்தில், வெள்ளை நிறப் பவுடரை வாரி அப்பிக் கொண்டு, நெற்றி நிறைய பழைய காலணா அகலக் குங்குமத்தை இட்டுக் கொண்டாள்.

சேலை விஷயத்தில் அவளுக்கு வழக்கம் போலக் குறைதான். எப்போதோ வாங்கின முப்பாகச் சேலை. பச்சையும், சிவப்பும், மஞ்சளுமான பட்டுச்சேலை, அதற்கு ஜோடியாக வாங்கிய பச்சை நிற ரவிக்கை, இப்போது அலமேலுவின் கை கொள்ளாத அளவிற்கு சிறியதாகி, அதாவது, அவளது கணக்கின்படி, துணி சுருங்கிப்போய்



விட்டிருந்தது!

''நீ பருத்துப் போய் விட்டே. துணியைக் குத்தம் சொல்லாதே'' என்று சிவலிங்கம் பரிகசிப்பார்.

''ஆமாம்! வருஷத்துக்கு ஒருவாட்டி பட்டும் பனாரஸுமா வாங்கிக் குவிக்கிறீங்களே அதுக்கு நான் சொன்னது தவறாயிட்டுதாக்கும்'' வெடுக்கென்று பதிலிறுப்பாள்.

பஞ்சாயத்து பிரசிடெண்ட் மனைவி மங்களம், மாதம் தவறாமல் ஒரு புதுச்சேலை கட்டுவதைக் கண்டு அவள் மனம் வெம்புவாள். ஏன்? கணக்குப்பிள்ளை மனைவி மட்டும் விட்டவளா? தீபாவளி, பொங்கல் பண்டிகைகளில், பக்கத்து டவுனிலிருந்து, பட்டுச்சேலை வாங்காமல் இருக்கமாட்டாள்.

கோவில் உற்சவத்தில் கட்டாயம் புதுரகச் சேலையை உடுத்திக் கொண்டு வருவாள்.

''இதுவா? போனவாட்டி டவுனுக்குப் போனாரு, பொங்கலுக்கு நீ இதைத்தான் கட்ட வேணும்னு பிடிவாதமா, இதை வாங்கிட்டு வந்தாரு'' என்று நொடிப்பாள்.

அலமேலுவிற்கும் அடிக்கடி பல விதமான சேலைகளை உடுத்த ஆவல்தான். ஆனால் அதிர்ஷ்டம்...?

மனதிற்குள் பொருமியபடி, பெட்டியைக் குடைந்தாள். அவள் கடந்த மூன்று வருடங்களாகவே மாற்றி மாற்றி உடுத்தி வரும் மிளகாய் பழநிற சேலையையும், முப்பாகத்தையும் ஒதுக்கி வைத்தாள்.

மூத்தாள் உடுத்தியது என்ற வகையில் இரண்டு பனராஸ் சேலைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

''உமாவுக்காக, அவங்கம்மாவுதுன்னு இருக்கட்டும்'' என்று சிவலிங்கம் உத்தர விட்டிருந்தார்.

இளம் பச்சை நிறத்தில் ரோஜாப் பூக்களாக சரிகை மின்னிய அந்த சேலையை மெதுவாக வெளியே எடுத்தாள்.

''எல்லாம் உமாவுக்குன்னா, எனக்கு எதுவுமே வேணாமோ?'' முணுமுணுத்தபடி, எழுந்தாள். வேகமாகக் கொடியில் கிடந்த வெள்ளை ரவிக்கை ஒன்றுடன், உள்ளே சென்று மறைந்தாள்.

வாயிலில் வில் வண்டி வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய சிவலிங்கம், மெதுவாக படியேறி நடைவழியில் நின்றார்.

''உமா! இன்னம் 'ரெடியா'கலையாம்மா. எல்லாரும் கோவிலுக்கு வந்திருப்பாங்களே.'' கூறியபடி உள்பக்கம் பார்த்தார்.

மஞ்சள் நிற வாயில் சேலையில், வந்து நின்ற மகளைப் பார்த்தவர் ஒரு கணம் அதிர்ந்து போனார். அப்படியே அவள் அம்மாவை உரித்துக் கொண்டு... அதே அமைதி தவழும் முகம்... புன்னகை பொலியும் கண்கள்...

''என்ன அப்பா? சியாமளாவும், பிரகாசமும், உங்க வண்டிக்குக் காத்திருக்காம கோயிலுக்குப் புறப்பட்டுப் போயிட்டாங்க.''

''சின்னம்மாவும் நானும்தான்'' என்றாள் முகமலர்ச்சியுடன்.

பின்னாலேயே வந்து கொண்டிருந்த அலமேலுவைப் பார்த்தவர் முகம் சட்டென சுருங்கியது. ''உமாவோட சேலையை...''

''நாதாப்பா கட்டிக்க சொன்னேன். சின்னம்மா முதல்லே சம்மதிக்கல்லே'' என்று சட்டென சமாளித்தாள் உமா.

அலமேலுவிற்கு எரிச்சல் பொங்கியது. முகத்தைக் கோணியபடி, படியிறங்கி வில் வண்டிக்குள் ஏறிக்கொண்டாள்.

பர பரவென வீட்டுக் கதவுகளை உமா மூடி புறப்பட ஆயத்தமானாள்.

''நீ வாசக்கதவு பூட்டும் சாவியும் எடுத்துக்க. பாங்க் லாக்கர்ல இருந்து இன்னைக்கிக் காலையில் எடுத்து வந்த 'கண்மலர்'களை எடுத்திட்டு வந்திடறேன்'' ரகசியமாக அடிக்குரலில் கூறியவராய் தமது அறைக்குள் சென்றார்.



மறுவிநாடி இரும்பு பீரோவைத் திறந்து, அதில் மஞ்சள் துணியால் மூடி வைத்திருந்த சிறு தந்தப்பெட்டியை எடுத்தார், பயபக்தியுடன்.

''இதைவேற பொறுப்பானவங்கக்கிட்ட ஒப்படைக்க கூடாதா? உடம்புக்கு முடியாத சமயத்தில கூட நீங்களே டவுனுக்குப் போய் லாக்கரைத் திறந்து எடுத்திட்டு வரணுமா அப்பா?'' மகள் கடிந்து கொண்டாள்.

''என் மனசுக்குத் திருப்தியானவங்க, பொறுப்பானவங்கன்னு இன்னும் யாருமே கெடைக்கலையேம்மா'' சிரித்தபடி ''ம்! கதவைப்பூட்டு. அப்புறம் உங்க சின்னம்மாவுக்கு ஆவேசம் வந்துடப் போவுது'' என்றார் தொடர்ந்து.

அப்போதுதான் உமாவிற்கு, தந்தையிடம் அந்த வசந்தனைப் பற்றிக்கூற வேண்டும் என்ற நினைப்பு வந்தது. வண்டியில் ஏறினால் சின்னம்மா இருப்பாள். கோவிலில் பேசவே முடியாது.

எனவே அவள் முன்னதாகவே தீர்மானித்து விட்டிருந்தாள்.

''அப்பா உங்ககிட்ட ரொம்ப முக்கியமான விஷயம் பேசணும். நம்ம சியாமளாவைப் பத்தி...'' என்று மெல்ல ஆரம்பித்து சுருக்கமாக தனது சந்தேகத்தைக் குறிப்பிட்டுக் காட்டிவிட்டாள்.

பதிலுக்கு அசட்டையாக சிரித்தார் சிவலிங்கம். ''அது ரொம்ப குழந்தைம்மா. உலகம் தெரியாத பொண்ணு... விளையாட்டு புத்தியிலே பேசிக்கிட்டிருந்திருக்கும்.''

''அப்பா! அதனாலதான் கவலைப்படறேன். யார்கிட்ட

ஏமாந்து போறோம்னு தெரியாத வயசு... நான் கண்டிச்சா என்கிட்ட காரமா பேசறா, சின்னம்மாகிட்ட எதுவும் சொல்லமுடியலே... நீங்களாவது கூப்பிட்டு புத்தி சொல்லுங்க... எனக்கு என்னவோ ஒரே பயம்மாவே இருக்குப்பா...'' என்றாள் மனக்கிலேசம் மிக்கவளாக...

''அப்பாவுக்கும், பெண்ணுக்கும் ரகசியம் பேசிமுடிக்க முடியலையா? நான் முதல்ல கோயிலுக்குப் போகவா?'' அலமேலு அதட்டினாள்.

அதற்கு மேல் பேச முடியாதவராய், கையில் கவனமாகப் பிடித்த பெட்டியை மகளிடம் நீட்டி, ''கவனமாய் பிடிச்சுக் கொள்ளு'' என்றார்.

வண்டியினுள் ஏறிய பிறகு, மேலே ஏதும் பேசவில்லை அவர்.

உமா, இனம்புரியாத குழப்பத்துடனும் கவலையுடனும், வேகமாகச் செல்லும் வண்டி மாடுகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

தண்ணீர்த் துறையில், கோவிலருகில் இன்னும் பல தனி இடங்களில் அவள் வசந்தனையும், சியாமளியையும் பார்த்து விட்டிருக்கிறாள். பலமுறை, தங்கையைக் கண்டிக்க முற்பட்ட போதெல்லாம் அழுது ஆர்பாட்டம் செய்து தப்பிவிடும் சாகசம், சியாமளாவிடம் இருந்தது. நேருக்கு நேர் அந்த வசந்தனையே கூப்பிட்டுக் கண்டித்து விடலாமே என்ற நினைப்பு மேலோங்கும். ஆனால், நாலு பேருக்குத் தெரிந்து விட்டால், கிராமமே கொல்லென்று செய்தி பரவி... சே!சே! அப்பாவிற்கு எவ்வளவு தலைகுனிவு... ஏற்கனவே நோயினால் வாதைப்பட்டுக் கொண்டிருப்பவர்.

தாரையும் தப்பட்டைகளும் முழங்கின. கீழத்தெரு கட்டையன் தன் பலம் கொண்ட மட்டும் டண் டணக்கு டணக்கித் தான் என்று தப்பட்டையை அடித்துக் கொண்டிருந்தான்.



சட்டென நினைவு திரும்பியவளாய் உமா எட்டிப் பார்த்தாள். காளி கோவில் கோபுரம் கன கம்பீரமாகத் தெரிந்தது.

தர்மகர்த்தா வீட்டு மனிதர்க்கு என்ற மரியாதை... கோவில் சேவகன் பூசாரி என்று வரவேற்புக் கும்பல்...

''ஐயா! முன்னாலேயே வந்துட்டீங்க -'' பூங்காவனம் பற்களைக் காட்டி வரவேற்றார்.

அலமேலு அடக்கமாக சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்தியபடி கணவரைப் பின் தொடர்ந்து இறங்கினாள்.

அப்பாவின் கையைப் பற்றியபடி மெல்ல நடந்த உமா மற்றொரு கையில் பெட்டியுடன் கவனமாக நடந்தாள்.

கோவில் பிரகாரத்தில் நின்ற சியாமளாவும் பிரகாசமும் ஓடிச் சென்று அவர்களுடன் சேர்ந்து கொண்டனர்.

நாதஸ்வர ஒலியின் இசை வெள்ளம் ஒருபுறம் பெருக் கெடுத்தோட ஒலி பெருக்கியில் பிரபலமான பாடகரின் இசைத்தட்டு ஒலிக்க மக்களின் ஓசையுடன் கோவில் முழுதும் தலைகளாகத் தெரிந்தன.

''வழிவிடுங்க. விலகுங்க'' போலீஸ் காவலர்கள் வழி விலக்க தர்மகர்த்தா சிவலிங்கம் குடும்பசகிதம் முன்னே சென்றார்.

பூசாரி பூங்காவனமும் சிவன் கோவில் அர்ச்சகருமாக கர்ப்ப கிரஹத்திற்குள் நுழைந்தனர். சிறிது நேரத்தில் ஊர்ப் பிரமுகர்கள் குடும்பங்களும் வந்து சேரத்துவங்கினர்.

அலங்கரித்துக் கொண்டு அட்டகாசமாக காட்சி தந்த காளியம்மனை கடைக்கண்ணால் கூடப் பார்க்கவில்லை! மாறாக கணக்குப்பிள்ளையின் மனைவியின் பட்டுச் சேலையின் கனத்தை ஓரக்கண்ணால் ஆராய்ந்து கொண்டிருந்தாள். பிரசிடெண்ட் மனைவி மங்களத்தின் காஞ்சிபுரச் சேலையின் சரிகைக்கரை எத்தனை அகலம் இருக்கும் என்றும் கணக்கிட்டுக் கொண்டிருந்தாள்.

''பூசை ஆரம்பிக்கலாமுங்களா?'' பூங்காவனம் பணிவாகக் கேட்டார்.

''ம்!'' சிவலிங்கம் கம்பீரமாகக் கூறியபடி சுற்றுமுற்றும் பார்த்தார்.

சியாமளாவின் கண்கள் பரபரப்புடன் வசந்தனைத் தேடின.

உமா கையில் இறுகப் பிடித்த பெட்டியுடன் மெல்ல நோட்டம் விட்டாள்.

எதிரே வசந்தன்? கண்களில் தெரிந்த விஷமம்... ஏனோ அவளுக்குப் பிடிக்கவே இல்லை. முகத்தைத் திருப்பி அம்பாளைப் பார்த்தாள். அருளே வடிவாக அதே சமயம் பயங்கரம் கலந்த கண்களோடு கடைவாய்ப் பற்களும் தொங்கிய நாக்குமாக காளியம்மன் காட்சி தந்தாள். பூவாடை போர்த்தி இருந்த நாயகியாம் அன்னையைப் பார்த்ததும் ஒரு கணம் மெய்சிலிர்த்துப் பரவசத்தால் புளகித்துப் போனாள் உமா.

கோவில் பண்டாரம் அரைத்து வைத்த சந்தனத்தை உருட்டி எடுத்து பளபளப்பான செப்புத் தாம்பளத்தில் ஏந்தியபடி சிவலிங்கத்தின் அருகில் வந்தார்.

''உமா! பெட்டியைத் திறந்து அந்தக் காகிதப் பொட்டலத்தை எடும்மா'' சிவலிங்கம் மகளிடம் கிசுகிசுத்தார்.

மூடியிருந்த மஞ்சள் துணியை நீக்கி மெல்ல அந்தப் பெட்டியைத் திறந்த உமாவின் முகம் வெளிறிப் போயிற்று.

''அப்பா! கண்மலர்களைக் காணோம்!'' என்றாள் ரகசியமான குரலில். உடல் முழுதும் ''குப்'' பென்று வியர்த்துப் போயிற்று அவளுக்கு.



## 7. காதல் கிளிகள் பறந்தன!

காலை பக்கத்து டவுன் டாக்டர் வந்து போனதிலிருந்து உமா மிகவும் சிந்தை கலங்கிப் போய் விட்டிருந்தாள். தாழ்வாரத்தை ஒட்டினாற் போலிருந்த அறையில் கட்டிலின் மீது மயங்கிக்கிடந்த தந்தையின் நிலை அவளை மிக்க கவலைக்குள்ளாக்கி இருந்தது.

''ஏற்கெனவே இரத்த அழுத்தம் அதிகமுள்ளவர். மிக்க அதிர்ச்சியான சம்பவத்தால் பாதிக்கப் பட்டிருக்கிறார். எதுவும் சொல்லமுடியாது'' அறைக்கு வெளியே அவளை அழைத்துச் சென்ற டாக்டர் அடிக்குரலில் ரகசியமாகக் கூறிவிட்டார்.

உமாவிற்கு அழுகை பொங்கியது. ஏற்கனவே, நிலை கலங்கிப் போய் விட்டிருந்த நிலையில், இப்படி ஒரு பேரிடியா?

உள்ளே சமையலறையில் வழக்கம் போல அலமேலு வெடித்துக் கொண்டிருந்தாள். திருவிழா கண்ணடக்கத்தின் போதே ஆரம்பித்த கோபம், இன்னமும் ஆறாமல் ஆற்றாமையாகி பெருக்கெடுத்து ஓடும் அளவிற்கு சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நடந்தேறி விட்டனவே?

உமா பெருமூச்சுடன் டாக்டரை வழியனுப்பி விட்டு உள்ளே திரும்பினாள். சுவரின் மீது மாட்டியிருந்த கோட் ஸ்டாண்டில் அப்பாவின் மல்ஜிப்பா காற்றில் ஆடியது.

பாவம் அப்பா! அன்று அவசரமாக அவளிடம் பூஜை நடந்துகிட்டே இருக்கட்டும். இப்ப நொடியில் வந்திடறேன் என்றவர் சட்டென வெளியேறி விட்டார்.

அருகில் நின்ற அலமேலுவிடம் மங்களம் அடிக்குரலில் கிசுகிசுப்பாகக் கேட்டாள் ''என்ன அக்கா! கண் மலரை ஊட்ல

விட்டுபிட்டு வந்திட்டாரா? சகுனமே சரியா இல்லே போல இருக்கு'' முணுமுணுத்தாள்.

அலமேலுவின் முகம் ஜிவ்வென்று சிவந்தது. பஞ்சாயத்து பிரசிடெண்ட் மனைவி கணவனிடம் கிசுகிசுக்க அரைநொடியில் சந்நிதி முழுதும் திடும்மென ஒரு அசாதாரண மௌனம் பரவியது.

தொண்டையைக் கனைத்துக் கொண்ட, கணக்குப்பிள்ளை ''பூசாரி ஐயா! நீங்க பூசையை அமர்த்தலா நடத்துங்க... ம்!'' என்று உத்திரவிட்டவர் குனிந்து அருகிலிருந்த மற்றொருவரிடம் ரகசியம் பேசினார்.

கையிலிருந்த மணியை ஆட்டியபடி ''ஓம் காளி! ஹரீம் ஹூம் ஹரிம்!'' என்ற மந்திர உச்சாடனங்களை ஓங்கி ஓங்கி சொல்லிக் கொண்டே உள்ளே போகத் திரும்பிய பூங்காவனம் உள்ளூர பதை பதைத்துப் போனார்.

பத்திரிகையிலே பிரபலமாக நம்ம ஊர் கண்ணடக்கத்தைப் பத்தி எல்லாரும் தெரிஞ்சு கொள்ளட்டும்னு பெருமையா எழுதச் சொல்லுன்னு, இந்தப் பிள்ளையாண்டானை வேற... அழைச்சிட்டு வந்திட்டோமே அம்மா, ஆதி பராசக்தி! சண்டி... சாமுண்டி! ஊர் உலகத்துல, மக்களை நல்லபடியா வாழ விடும்மா. கிராமத்துல கேடு வராம காப்பாத்தும்மா...'' மனதினுள் அச்சம் பெருக்கெடுக்க காளிசிலையையே ஊடுருவிப் பார்த்தார்.

உமாவின் உடல் அச்சத்தால் நடுங்கியது. ஏதோ ஒரு விபரீதம் நிகழப்போகிறதற்கு அறிகுறியாக இருக்குமோ? கண்மலர்கள் காணாமல் போனால் கிராமத்து மக்கள் அப்பாவை விட்டு வைப்பார்களா? பொறுப்பு வாய்ந்த ஒரு தர்மகர்த்தா இப்படி நடக்கலாகுமா என்று கேட்டு ரகளையே செய்து விடுவார்களே? . கலங்கியபடி கண்களை மெல்ல நிமிர்த்தினாள். எதிர் வரிசையில் நின்றிருந்த அந்த வாலிபன்... எங்கே போயிருப்பான்...?



திடீரென நினைவு வந்தவள் போல தங்கள் வரிசையில் உடன் நின்றிருந்த சியாமளாவைத் தேடினாள். ஊஹூம்! உமா கோபத்தால் முகம் சிவக்க 'இந்த சமயம் பார்த்து... திருகி கர கரன்னு இழுத்திட்டு வரணும்...' என்று எண்ணியவளாய் வெளியே செல்ல முயன்றாள்.

''அதோ அப்பா வந்திட்டாரு'' அலமேலு உமாவின் தோளைப்பற்றி அழுத்தினாள்.

வியர்க்க விறுவிறுக்க உள்ளே நுழைந்த சிவலிங்கத்தின் ஜிப்பா முழுவதும் தொப்பலாக நனைந்திருந்தது.

கையில் மிகக் கவனமாகக் கொண்டு வந்திருந்த பொட்டலத்தைப் பிரித்தார். அந்த விலை உயர்ந்த சிவப்புக் கற்களைப் பயபக்தியுடன் எடுத்தார்.

''ம்! கண்ணடக்கம் வச்சிடுங்க'' சந்தனக் குழைவுக்குள், மேலே இரு கற்களையும் பதித்து, பூசாரி கையில் தட்டுடன் அளித்தார்.

மாறாத பக்தியும், மறையாத நம்பிக்கையுமாக, பூங்காவனம் உரக்க காளியின் மகிமையைக் கூறியபடி, சிலையின் கண்களை சந்தனத்தால் அப்பி, கற்களைப் பதித்தார்.

''தாயே! ஊர் மக்களை உன் கண்ணால குளுமையா பாரம்மா. நோய் நொடியில்லாம, பசி பட்டினி இல்லாம சனங்களெல்லாம் சந்தோஷமா வாழ வகை செய்யம்மா... ஓம்!... ஹ்ரீம்!''

பூசாரி உரத்துக் கூறுவதற்கு எதிரொலி போல உருமி மேளம் முழங்கியது. மக்கள் குலவையிட்டனர். தாரையும் தப்பட்டையுமாக சடங்குகளை முடித்துச் சந்நிதியை மூடிவைத்தனர். ஆனால் உமா...? பதட்டமான நிலையில் இருந்தாள். அவளுக்கு ஏனோ எதிலுமே இருப்புக் கொள்ளவில்லை.

வீடு திரும்பும் வரை எப்படியோ சிரமத்துடன் தன்னைக்

கட்டுப்படுத்தியவள், வீட்டின் தாழ்வாரத்தை அடைந்ததும் கேட்ட முதல் கேள்வி.

''அப்பா! எப்படி அந்த சிகப்புக் கல்லுங்க பெட்டியை விட்டு வெளியே போச்சு?''

''சொல்றேன் அம்மா! முதல்ல, நான் ரொம்பக்களைப்பா இருக்கேன். கொஞ்சம் படுத்துக்கட்டுமா?'' என்றவர் தள்ளாடியபடி உள்ளே சென்றார்.

அலமேலுவும், உமாவும் அவரை அந்த அறையில் கட்டிலில் படுக்க வைத்து உபசரித்த பிறகு ''அலமு! குடிக்க ஏதாச்சும் கொண்டு வறியா?'' என்றார் அவர்.

அலமேலு கடுகடுப்புடன் வெளியேறினாள். மெல்ல ''உமா! இப்படி பக்கத்துல உக்காரு. உங்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்'' என்றார்.

கட்டிலின் விளிம்பில் உட்கார்ந்தபடி, ''சொல்லுங்கப்பா!'' என்றாள் அவள் ஆவலுடன்.

''அந்தக் கற்கள், காணாமல் போனது நிசம்தான்.''

''அப்பா!'' திகிலுடன் அவரது கைகளைப் பிடித்துக் கொண்டாள். ''என்ன சொல்றிங்க?''

''உண்மையைத்தான் சொல்றேன். பெட்டிக்குள்ள இருந்த கற்கள் காணாமல் போயிட்டது.''

''அப்பா... நீங்க திருப்பிக் கொண்டு வந்தது...?''

''அதே போல, இன்னொரு 'டூப்ளிகேட்' ஜதை'' லேசாக சிரித்தார் அவர்.

''என்னப்பா சொன்னிங்க... 'டூப்ளிகேட்டா?' அப்படின்னா...?'' உமா குழப்பத்தோடு வினவினாள்.

''உமா! அசல் மாணிக்கக் கற்களை, கண்ணடக்கத்துக்கு நாங்க பயன்படுத்தறதே இல்லை. அதை நிறுத்தி ரொம்ப வருஷமாச்சு.''



''அப்பா!'' அதிர்ந்து போனாள் அவள். ''ஆமாம். காலம் கெட்டுக் கிடக்குது. அசலை உபயோகிச்சா ஆபத்து வரும்னு, நகலை உபயோகிக்கனும்னு நாங்க கமிட்டி மீட்டிங்ல ரகசியத் தீர்மானம் செய்தோம். அசல் கற்கள் பாங்க் லாக்கர்ல பத்திரமாவே இருக்குது.''

உமா வியப்புடன் தந்தையைப் பார்த்தாள்.

''ஒன்னுக்கு ரெண்டா இருக்கட்டும்னு, ரெண்டு ஜதை கற்களை தயாரா வச்சிருந்தேன். அதனாலதான் ஒரு ஜதை போனாலும், இன்னொண்ணை என்னால எடுத்து வரமுடிஞ்சது. இல்லாட்டி, ஊர்ல கண்டபடி பேசுவாங்களே.'' என்றார் சோர்வுடன்.

தகப்பனாரின் முன் யோசனையை மனதிற்குள்ளே வியந்தவளாய், அவரையே பெருமையாகப் பார்த்தாள் உமா. அப்போதுதான் சட்டென அவளுக்கு நினைப்பு வந்தது.

''அப்பா சியாமளா எங்கே காணோம்?'' என்றாள் உமா.

''எங்கேயாச்சும் கடை பக்கம் நின்னுக்கிட்டிருக்கும்'' அசட்டையாகக் கூறினார் அவர்.

''இல்லேப்பா. அவளைப்பத்தி உங்கக்கிட்டே சொல்லி கொஞ்சம் கண்டிக்க வைக்கச் சொல்லணும்னு நானும் கொஞ்ச நாளாய் பாக்கறேன்.'' மெல்ல ஆரம்பித்தாள்.

''சிவப்புக் கல்லை உந்தங்கச்சிதான் திருடிப்பிட்டான்னு வத்திவக்கப் போறியாக்கும்'' கையில் காப்பி தம்ளருடன் அறைக்கதவருகில் ஆவேசமாக நின்றாள் அலமேலு.

உமா திடுக்கிட்டுப் போனாள். பிறகு சமாளித்தபடி ''சின்னம்மா! சியாமளா என்கூடப் பிறக்கலைன்னாலும் அவள் என் தங்கை. அவளுக்கு ஒரு கெடுதல் ஏற்பட்டுச்சன்னா வாயை மூடிக்கிட்டு இருக்கச் சொல்றீங்களா!'' என்றாள் திடமாக.

''இப்ப என்ன கெடுதல் வந்திட்டுது. ஏதோ விளையாட்டுப் பொண்ணு...'' உள்ளே வந்த அலமேலு

451936
6221053
தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

காப்பித் தம்ளரைக் கணவரிடம் கொடுத்தாள்.

''ஊர்ல புதுசா வந்திருக்கானே ஒரு ஆளு. அவன் கூட அவளை அடிக்கடி...?''

''அடிபாவி? சின்னஞ்சிறு குழந்தை எம்மக, சூதுவாது தெரியாதவ. அவளைப் போயி... இப்பிடி...'' அலமேலு ஒப்பாரி வைத்தாள்.

''ஸ்! பேசாம இரேன் அலமு! ஏற்கெனவே ஒரு ஜதை கற்கள் வீட்ல களவு போயிட்டுதுண்ணு மனசு அலண்டு போயிருக்கேன். நீ வேற...'' சிவலிங்கம் அதட்டினார்.

''சொல்லுங்க... எப்பவும் நானும் என் குழந்தைகளும்'' அலமேலு முடிக்குமுன் குட்டித்தம்பி பிரகாசம் மூச்சிறைக்க ஓடி வந்தான்.

''அப்பா! அப்பா! நம்ப சியாமளா அக்காவும் அந்த வசந்தன் மாமாவும் டவுன் பஸ்ல ஏறிப்போறாங்க. நான் அக்கா அக்கான்னு கத்திக்கிட்டே ஓடினேன். பஸ் புறப்பட்டுப் போயிட்டுது'' அழுகையும் ஏமாற்றமுமாகக் கூறினான்.

அடிவயிற்றில் பீதி சுருட்டி இழுக்க ''என்னடா உளர்றே?'' அதட்டினார் சிவலிங்கம்.

''சத்தியமா அப்பா! அக்கா கையிலே ஒரு பெட்டி கூட இருந்திச்சு. அப்ப ரோட்ல யாருமே இல்லே. எல்லோரும் கோவில்ல இருந்தாங்க... நான் பலூன் வாங்கி வர மெயின்ரோடு பக்கம் போனேன். சத்யமாப்பா'' அவன் குரலில் படபடப்பு.

அலமேலு பெரிதாக அழுதாள். சிவலிங்கம் உணர்ச்சி வசப்பட்டவராய் விருட்டென்று படுக்கையை விட்டு எழுந்தவர் கீழே சுருண்டு விழுந்தார். காப்பி தம்ளர் கீழே விழுந்து காப்பி சிதறியது.

''அப்பா!'' அலறியபடி தகப்பனாரைத் தூக்க உதவிய உமா துணுக்குற்றாள்.



துணிபோல் துவண்டு மயங்கிப் போயிருந்தார் அவர். மிகுந்த சிரமத்துடன் மீண்டும் கட்டிலில் தூக்கிப்போட்டாள். டாக்டரை பக்கத்து டவுனிலிருந்து வரவழைத்தாள். ஆனால் பயன்...

''அந்தப்பாவிப் பொண்ணு இப்படி ஒரு கல்லைத் தூக்கிப் போட்டுப்பிட்டு எவன் பின்னாலயோ ஓடிட்டா... இவர் என் தலையிலே என்னத்தைப் போடப் போறாரே...'' அலமேலு உரக்கப் பொருமியபடி வேலை செய்து கொண்டிருந்தாள்.

உமா பெருமூச்செறிந்தாள். அவளைப் பொறுத்தவரை எதிர்காலம் பயங்கரமான இருள் செறிந்ததாகத் தோன்றியது.

அப்பாரின் உடல்நிலை தேறாத ஒன்று. சின்னம்மாவும் தம்பியும் அவளது பாதுகாப்பில் வாழவேண்டியவர்கள்.

''சியாமளா! பேதைப் பெண்ணே! நீ எங்கே இருக்கிறாய்? என்ன கஷ்டப்படுகிறாய்?'' உமாவின் கண்களில் நீர் பெருகியது.

## 8. இளங்கன்று பயமறியாது!

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் தயாராக நின்றிருந்த பம்பாய் மெயிலில் அமர்ந்திருந்த சியாமளாவிற்கு எதுவுமே விளங்கவில்லை.

''நாம ஏன் பம்பாய் போகணும்? இங்கேயே மெட்ராசிலே தானே உங்க ஆபிஸ்னு சொன்னீங்க?'' என்று பலமுறை வசந்தனை கேள்விகளால் துளைத்து விட்டாள்.

''ம்! வாயை மூடிக்கிட்டு என் பின்னால வா'' அதட்டினான் அவன்.

காளிராச புரத்தில் கண்களில் இனிமையை தேக்கிக் கொண்டு கவர்ச்சியே உருவாக நின்ற வசந்தன் எங்கே? கலகலப்பாகப் பேசி, அவளை மயக்கி, அழைத்து வந்த வசந்தனுக்கு என்ன நேர்ந்தது? மனம் கலங்கிப் போனாள் அவள்.

கோவில் திருவிழாக் காரியங்களை அப்பா கவனிக்கப் போன நேரத்தில் தான், அவள் மெல்ல, யாருக்கும் தெரியாமல் அந்தக் கற்களை எடுத்து விட்டிருந்தாள்.

வசந்தன் அவளை ஆசைகாட்டி வைத்திருந்தான். ''விலை உயர்ந்த அந்தக் கற்களைக் கொண்டு விற்றுப்பணம் செய்து விடலாம். பிறகு பெரிய பங்களா, கார், தோட்டம் என்று சினிமாவில் காட்டுவதைப் போல் வாழலாம். தினம் சினிமா, பீச், நாடகம் என்று குஷியாக சுற்றி வரலாம். விதம் விதமாகக் கடைக்குப் போய் மனதிற்குப் பிடித்தவற்றை வாங்கிக் குவிக்கலாம்.''

''எனக்கு ரொம்பப் பயம்மா இருக்குது. சாமி விஷயம் தப்பாயிடும்'' சியாமளா மறுத்தாள் முதலில்.

''அப்ப என்னை மறந்திட வேண்டியதுதான்.''

குழந்தைத்தனமான அசட்டுத் துணிவு பிறந்தது அவளிடம்.

''நீ கவலைப் படாதே. நாம ஓகோன்னு பணம் சம்பாதிச்சதும் இதே ஊருக்கு வந்து, அதேபோலக் கண்ணடக்கம் செஞ்சிட்டா போகுது. காளியாத்தா ரொம்பக் கருணை உள்ளம் படைச்சவ. நம்மை மன்னிச்சுடுவா'' தூண்டினான் அவன்.

சியாமளா, வீட்டில் உள்ளவர்களைக் கண்காணித்தாள். அம்மாவிற்குத் தெரியாமல், ஒரு சிறு தகரப்பெட்டியில், தனது உடைகளை தயார் செய்தாள். அவ்வப்போது, அப்பாவிடம் போராடி சேர்த்து வைத்த தொகை ஐம்பது ரூபாய்களை ஒரு சிறு பர்சிற்குள் போட்டு இடுப்பில் செருகி வைத்துக் கொண்டாள்.



சந்தனப் பெட்டிக்குள் இருந்த பொட்டலம். அந்த அலமாரி... யாவற்றையும் துப்புரவாகக் கணித்துக் கொண்டவள், மெல்ல அதைத் திறந்து பொட்டலத்தை மட்டும் எடுத்துக் கொண்டாள். நல்ல காலம்! அக்கா, வெளியே போயிருந்தாள். அப்பா இல்லாத சமயம். அம்மா கொல்லைப் புறத்தில் வேலையாக இருந்தாள்.

கைகள் நடுங்க, பெட்டியை மூடி பழையபடியே வைத்தாள். அலமாரியைப் பூட்டி, சாவியை எடுத்த இடத்தில் வைப்பதற்குள் தேகமெல்லாம் வெடவெடத்தது.

''மன்னிச்சுக்கோ காளியாத்தா'' முணுமுணுத்தபடி கற்கள் பொட்டலத்தை, இடுப்பிலிருந்த மணிபர்சை உருவி அதனுள் பதுக்கினாள்.

யாரோ வரும் காலடி ஓசையைக் கேட்டவள், துள்ளியபடி வெளியேறி விட்டாள்.

வழக்கம் போல, கோவில் மரத்தடியில் சந்தித்தபோது, சியாமளாவின் மனதில் பீதி குறையவில்லை.

''எனக்கு ரொம்பப் பயம்மா இருக்குது'' புலம்பினாள் மீண்டும்.

''இந்த பல்லவியை விடு. இனிமே, இந்தப் பரந்து கிடக்கும் உலகத்தில், சிறகடித்துப் பறக்கப்போகிற வானம்பாடிகள் நாம்'' உல்லாசமாக சீழ்க்கை ஒலி எழுப்பினான் வசந்தன்.

''ஏய்! சியாமளா! சியாம்! இதபாரு... நான் இருக்கும் போது ஏன் பயப்படறே'' பலவிதமாக அவளை உற்சாகப் படுத்தினான்.

''கல்லைக் காணோம்னு தேடுவாங்க... பிறகு, விஷயம் தெரிஞ்சிட்டா...'' பதைபதைத்துப் போனாள் சியாமளா. குற்ற உணர்வில் தவித்தபடி அவனையே ஏக்கத்துடன் பார்த்தாள்.

''அதுக்கெல்லாம், ஐயா, பெரிய ஐடியா வச்சிருக்கேன்

கவலைப் படாதே. கோவில்ல கண்ணடக்கம் செய்யற அன்னைக்கி, நாம் ரயில்லே இருப்போம்'' உரக்கச் சிரித்தான் அவன்.

சியாமளா பயத்தால் உறைந்து போனாள்.

''யாருக்கும் தெரியாமல் ஊரைவிட்டு ஓடுவதா! ஐயய்யோ! அப்பா எப்படித் தவித்துப் போவார்! அம்மா கத்திக் கூச்சலிடுவாளே? ஊர் எல்லாம் கூடி, அவர்களை மட்டமாகப் பேசுமே.''

''வேண்டாம். கல்லைக் குடுத்திடுங்க, கொண்டு போய் யாருக்கும் தெரியாம எடுத்த எடத்திலியே வச்சிடறேன்'' கெஞ்சினாள்.

''பைத்தியமா உனக்கு? பேசாம இரு. தைரியமா எங்கூட புறப்படு. இல்லே'' மிரட்டலாகக் கூறினான் வசந்தன்.

அதன்பிறகு, அன்றைய விசேஷநாளில் தெய்வ சந்நிதியில் நின்ற வசந்தனின் முன்னேற்பாட்டின்படி, சியாமளா மெல்ல நழுவி வெளியேறி, வீட்டின் கொல்லைப் புறமாக மறைத்து வைத்திருந்த தகரப்பெட்டியுடன், நெடுஞ்சாலையில் வந்து நின்று விட்டாள். திகிலில் துடிக்கும் இதயத்துடன், ஊர்க்காரர்கள் பார்த்துவிடப் போகிறார்களே என்ற பயத்துடன் நின்றவளிடம், வசந்தன் வந்து கலந்து கொண்டான்.

அடுத்து திருச்சி செல்லும் பஸ் வந்து நின்றதும், கையைக் காட்டி நிறுத்தினான் வசந்தன். தொலைதூரத்தில் ''அக்கா அக்கா!'' என்ற கீச்சுக்குரலில் ஓடிவரும் பிரகாசத்தைப் பாராதவளைப் போல சியாமளா, படுவேகமாகப் பஸ்சிற்குள் ஏறித்தன்னை மறைத்துக் கொண்டாள்.

அன்றிரவு, ஓட்டல் ஒன்றில் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, சென்னை செல்லும் வண்டிக்குப் பயணப்பட்டு விட்டார்கள் இருவரும்.

சென்னையில், அவளை, வில்லிவாக்கத்தில் உள்ள தங்கள்



உறவினர் என்று சொல்லிக்கொண்டு ஒரு சிறு வீட்டிற்கு அழைத்துப் போனான் அவன்.

கிராமத்து வீடுகளைப் போன்ற ஒரு ஓட்டுவில்லை வீடு. வீட்டின் முகப்பில் நின்றிருந்த வயதான மனிதன், பீடியைப் புகைத்தபடி அவளை ஏற இறங்கப் பார்த்தான்.

''யாரிது? புதுசா?'' கிண்டலாகக் கேட்ட அந்தக் குரலை அவளால் ரசிக்க முடியவில்லை.

கண்களால் சாடை செய்தபடி, அவளருகில் வந்த வசந்தன், ''பெரியம்மா இருக்காங்களா?'' என்றான்.

''ம்! ம்! கடைத்தெருவுக்குப் போனா... என்னா கொணாந்தே?'' அலட்சியமாக, பீடி முனையை பற்களுக்கிடையில் கடித்தபடி பேசின அவனைக் கண்டு, கிலி பிடித்தவளாய் வெளியிலேயே நின்றாள் சியாமளா.

''எங்க பெரியப்பா கொஞ்சம் அதட்டலாத்தான் பேசுவாரு. நீ உள்ளே போய் குளிச்சுட்டு, உடை மாத்திக்க. பிறகு சாப்பிடலாம்.''

சியாமளா, தட்டுத்தடுமாறி கொல்லைப்புற கிணற்றிலிருந்து நீரை சுமந்து வந்து ஒரு ஒதுக்குப் புறமாக இருந்த குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

உடை மாற்றிக் கொண்டு உள்ளே புகுந்த சமயம் ''சொன்ன வேலையை விட்டுட்டுகூட ஒரு சுமையை இழுத்திட்டு வந்திருக்கியே. இதுக்கு என்ன அர்த்தம்?'' கட்டைக்குரலில் பெரியப்பா உறுமியது கேட்டது.

''நான் முதல்ல டவுன் வரைக்கும் போயிட்டு நம்ம ராசப்பனைப் பாத்திட்டு வரேன். நீ வராதே. ஆபத்து'' என்றபடி வசந்தனிடம் அந்த பொட்டலத்தை வாங்கிய பெரியப்பா வெளியே கிளம்பத் தயாரானார்.

காய்கறி பையுடன் உள்ளே வந்த பெரியம்மா ''வசந்தனா? எப்ப வந்தே?'' விசாரித்தபடி சட்டென நிமிர்ந்து

சியாமளாவைப் பார்த்தாள்.

மெல்லிய தோற்றம் கொண்ட அந்த சிறு பெண் யாராக இருக்கும்? ''யாருப்பா இந்த குட்டி?'' வியப்புடன் கேட்டாள்.

''அது பெரிய கதை பெரியம்மா. முதல்ல ஏதாச்சும் சாப்பாட்டுக்கு வழிபாரு. சியாமளாவுக்கு ரயில்ல வந்த களைப்பு. பிறகு பேசுவோமே.'' பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்தான் அவன்.

சிறிது நேரத்தில் சியாமளாவிடமிருந்தே விஷயத்தை விளங்கிக் கொண்டுவிட்ட பெரியம்மா மழுப்பலாக சிரித்து ''எல்லாம் நல்லபடியா முடிஞ்சா உனக்கும் வசந்தனுக்கும் ஒரு கல்யாணத்தை முடிச்சிடுவோம். பட்டணத்திலேயே ஒரு பங்களாவை வாங்கிப் பிடுவோம்!'' என்றாள். அவள் நாணத்தால் முகம் சிவந்தாள்.

சாப்பாட்டிற்குப் பிறகு அறையின் ஒரு மூலையில் படுத்த சியாமளா தன்னை மீறிய அலுப்பினால் உறங்கிப் போனாள்.

திடீரென உறக்கம் கலைந்து எழுந்தவள் வாயிற்புற அறையொன்றில் கோபமான பேச்சுக்குரல் கேட்டுத் திடுக்கிட்டுப் போனாள்.

''எட்டணா மதிப்புப் பெறாத கல்லைக் கொணாந்து ஏமாத்தப் பாக்கறியான்னு முகத்திலே விசிறி அடிச்சிட்டான் அந்த ராசப்பன். இனிமே என்ன செய்யறது'' உரத்துக் கத்தினான் பெரியப்பா.

வசந்தன் ஏமாற்றமும் சினமும் தாளமாட்டாதவனாய் பதிலுக்கு வாதாடினான். சிறிது நேரத்தில் பெரியம்மா ஏதோ சொல்ல இருவரும் சமாதானமாகப் போனார்கள்.

''எனக்கு நஷ்டஈடு செய்யலே... உன்னை சும்மா விடமாட்டேன். ஆமாம்'' பெரியப்பாவின் சீறல்.

''சரி! சரி! இன்னைக்கு ராத்திரியே பம்பாய் போறேன். பிறகு பணத்தோட வரேன்.'' சவாலாகப் பதிலிறுத்தான் வசந்தன்.



மாலை நாலுமணி சுமாருக்கு, ''உம்! பம்பாய்ல, வேலை இருக்கு. புறப்படு'' சிடுசிடுத்தான் வசந்தன்.

சியாமளாவிற்கு எதுவுமே விளங்கவில்லை. எத்தனையோ சந்தேகங்கள் கேள்விகள். எதற்குமே அவன் சரிவரப் பதில் கூறவில்லை. திடீரென அவனது கலகலப்பான சுபாவமே மாறிப் போனவன் போல, அரக்கத்தனம் குடி கொண்டவனைப் போல, புதுமனிதனாக உருவெடுத்தவன் போல அவளது கண்களில் தோன்றலானான்.

பம்பாய் மெயில் புறப்படப் போகும் அறிவிப்பு உரக்க ஒலித்தது. சியாமளாவின் தேகமெல்லாம் நடுங்க, சிட்டுக் குருவி போல, சீட்டின் மீது சாய்ந்தபடி இருந்தாள்.

உலகம் விளங்காத சிறுமி என்றோ, காதல் வயப்பட்ட கன்னி என்றோ தீர்மானிக்க முடியாத இரண்டும் கெட்டான் பருவம். நல்லது கெட்டது அறிய முடியாத இளங்கன்று. எளிதில் கவரப்படும் வயது. சியாமளாவிற்கு அழுகையாக வந்தது.

இப்போது பம்பாயில் என்ன வேலை இருக்கும். எதற்காகப் போக வேண்டும்? வசந்தனின் முகத்தில் தெரிந்த கடுமையைக் கண்டு, கேள்விகளை அப்படியே விழுங்கி கொண்டாள் சியாமளா.

அருகில் வந்தமர்ந்த வசந்தன் ''அதுக்குள்ள தூக்கமா?'' என்று அதட்டினான்.

வண்டி ஓலமிட்டபடி நகர ஆரம்பித்தது. ஊர் விட்டு ஊர். உடன் நம்பி வந்த மனிதனும் இப்போது அந்நியனாக ஆத்திரக்காரனாக மாறிவிட்டிருந்தான். சியாமளா சிறுகுழந்தை போல் மிரள விழித்தாள். கண்களில் நீர் தளும்பியது.

## 9. பார்த்த கண்கள் நான்கு!
## சந்தித்த இதயம் இரண்டு!

அன்று காலையிலிருந்தே உமாவிற்கு எரிச்சலாக வந்தது. புரசைவாக்கம் செல்ல அவர்களது தெருவின் முனை வீட்டிலிருந்து எத்தனை வேகமாகப் புறப்பட்டாலும் முதல் பஸ் போய்விடும். பிறகு பஸ் பிடித்து அலுவலகத்தை அடைவதற்குள் மணி ஒன்பது தாண்டிவிடும்.

அன்று அவளது பகுதி மேற்பார்வையாளராக புதிய ஆபீஸர் வரப்போகிறார். உமாவை எக்காரணம் கொண்டும் தாமதியாமல் முன்னதாகவே வந்துவிட வேண்டும் என்று தலைமை குமாஸ்தா தயாநிதி எச்சரித்து விட்டிருந்தார்.

சின்னம்மா அலமேலு காளிராஜபுரத்தைவிட்டு சென்னை மாநகரில் குடியேறியும் அவளது சிடுசிடுப்பும் அவளுடனேயே குடியேறிவிட்டது.

வீட்டின் நிலைமை அவளது வாழ்வின் அவலம் எல்லாமாக அவளை அரைப்பைத்தியமாக்கி விட்டதால் உமா சின்னம்மாவை வெளிப்படையாகக் கடிந்து கொள்வதில்லை.

வாழ்வின் ஏமாற்றங்களாலும் எதிர்பார்ப்பின் இழப்புகளாலும் பாதிக்கப்பட்டவள் என்ற காரணத்திற்காக தனது கோபத்தை அடக்கிக் கொண்டு விடுவாள்.

அன்று வெள்ளிக்கிழமை. அவளது தகப்பனார் சிவலிங்கம் மறைந்து சில மாதங்கள் ஓடிவிட்டன. காலை எழுந்ததுமே அப்பாவைப் பற்றிய நினைப்புகளுடன் எழுந்தவளின் காதுகளில் சின்னம்மாவின் முணுமுணுப்புத் தெளிவாகக் கேட்டது.



'என் தலையெழுத்து அந்தப்பாவி ஒரு கல்லைத்தூக்கிப் போட்டுப் பிட்டு போயிட்டா. இந்த மனுஷன் இப்படித் தெருவில நிக்காத குறையா... என்னை நிறுத்திப்பிட்டு...'

தம்பி பிரகாசம் அவசரமாகப் பள்ளிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தவன் அம்மாவின் முணுமுணுப்பினால் இன்னும் அவசரமாக ஓடிக் கொண்டிருந்தான்.

சென்னைக் குடிநீர் வாரியத்தின் பற்றாக்குறை காரணமாக வீட்டில் தண்ணீர் பஞ்சம். பக்கத்திலுள்ள தெருக்குழாயிலிருந்து போராடி இரண்டு குடம் தண்ணீர் எடுத்து வந்த அலமேலுவிற்கு மூச்சுத் திணறியது.

கொல்லைப்புரத்திலேயே காவிரி நீரைக் கண்டு பழகியவளுக்கு இவையெல்லாம் பயங்கர போராட்டங்களல்லவா?

அலுவலகத்திலிருந்து திரும்பும் வழியிலேயே உமா வீட்டிற்குத் தேவையான காய்கறிகளை வாங்கி ஒரு துணிப்பையில் சுமந்து கொண்டு வந்துவிடுவாள்.

பக்கத்து வீட்டுக்காரி காஸ் அடுப்பில் சமைப்பதைக் கண்டு சதா புலம்பும் அலமேலுவிற்கு இன்று தண்ணீர் பிரச்னை வேறு தூபம் இட்டு விட்டது.

பிரகாசம் சோற்றை அள்ளி ஒரே வாயாகப் போட்டுக் கொண்டான். பிறகு அவனாகவே அலுமினிய டிபன் டப்பாவைத் திறந்து மோரும் சோறுமாகப் போட்டு உடன் கொஞ்சம் ஊறுகாயை வைத்து மூடினான். அடுத்த கணம் சிட்டாகப் பறந்து விட்டான் புத்தகப் பையோடு.

பிரகாசத்தின் பள்ளி அருகில்தான் இருந்தது. ஆனால் உமாவின் அலுவலகம் மவுண்ட் ரோட்டிலுள்ள தனியார் நிறுவனம். அலுவலக நேரம் ஒன்பதரை மணிக்கு ஆரம்பம் என்றாலும் சற்று முன்னதாகவே போய் விடுவதை அவள் வழக்கமாகக் கொண்டிருந்தாள்.

ஸ்டவ் அடுப்பில் திரி சரியில்லை என்று சின்னம்மா அலுத்துக் கொள்ளுமுன் உமாவே ஓடிச் சென்று அதை சீராக்கினாள். அன்றைய சமையலுக்கு உதவி விட்டுத்தான் குளியலறைக்குள் புகுந்தாள்.

இருப்பினும் சட்டியில் போட்ட கடுகாக ஏன் இப்படி சதா வெடித்துக் கொண்டே இருக்கிறாள்?

கஞ்சியில் முடமுடத்த இந்த மஞ்சள் நிற வாயில் சேலையை சரி செய்தபடி, கண்ணாடி முன் நின்றாள் உமா. தலையை சீவி, அழகாகக் கொண்டையிட்டு முகத்தை மிதமாக ஒப்பனை செய்து கொண்டு நெற்றியில் வட்டமாக குங்குமத்தை வைத்தாள்.

''அலங்காரம் ஆயிட்டுதில்ல. சாப்பிட உக்காரு'' சின்னம்மாவின் அதட்டல்.

'என் தயவிலே உக்காந்து சாப்பிட்டுகிட்டு என்னையே அதட்டறீங்களா?' எரிச்சல் மீறியது உமாவுக்கு. ஆனால் வழக்கம்போல் சட்டென வார்த்தைகளை விழுங்கியபடி சாப்பிட அமர்ந்தாள்.

''கஞ்சி போட்ட இஸ்த்திரி மடிப்பு கலைஞ்சிடப் போவுது. இந்தா இப்படி ஸ்டூல் மேல் தட்டை வைக்கிறேன். அந்த மோடாவை இழுத்துப் போட்டுக்கிட்டு சாப்பிட உக்காரு'' கடுமையுடன் உபசரித்தாள் அலமேலு.

உமாவிற்கு அனுதாபம் ஒருபுறம். கோபம் ஒருபுறமுமாக சாப்பிட அமர்ந்தாள்.

சின்னம்மாவைப் பார்த்த உடனேயே, அவளது எரிச்சல் மறைந்து அனுதாபம் மேலோங்கியது.

காளிகோவிலில் திருவிழா முடிவதற்குள், சிவலிங்கத்தின் உடல் மிகவும் மோசமாகப் போய் விட்டிருந்தது.

எப்போதேனும் மயக்கம் தெளிந்த நிலையில் தீர்க்கமாக அவளைப் பார்ப்பார். ரத்தக் கொதிப்பின் கடுமையினால்,



ஒருபக்கம் கையும் காலும் செயலற்றுப் போன நிலையில் வார்த்தைகள் பேசும்போது குளறிக்குளறி வெளிப்பட்டன.

உமா பைத்தியம் பிடித்தவள் போல் பலப்பல எண்ணிக் குமைந்து போனாள். எதிர்காலம் என்பது அவளைப் பொறுத்தவரை ஒரே சூன்யமாகப் போய் விட்டிருந்தது.

சியாமளாவின் செய்கை கிராம முழுவதும் பரவி விட்டிருந்தது.

வெளியே தலைகாட்ட முடியாதபடி மகள் செய்துவிட்டுப் போனாளே என்று அலமேலு உருகிப் போனாள்.

''காளி ஆத்தா ரொம்பக் கோவக்காரியாச்சே. அவளை ஏமாத்தப் பாத்தாரே. அதான்...'' கிராமத்தில் பரவலாகப் பேசிக்கொண்டனர்.

பூசாரி பூங்காவனம், மெத்த அதிர்ச்சிக்கு உள்ளாகி விட்டிருந்தார்.

''பாம்பிற்குப் பாலை வார்த்ததுபோல...? இந்த வசந்தன் ஒரு நாடகம் ஆடி ஏமாற்றிவிட்டு, தர்மகர்த்தா பெண்ணுடன் ஓடி விட்டான்! சே! என்ன அவமானம்...'' கொதித்துப் போனார்.

''காளியாத்தா! நீ கண்கண்ட தெய்வமாச்சே... இந்தப் பாவிப் பயலுக்கு தண்டனை குடும்மா... ஓம் காளி!'' சபித்தார்.

சிவலிங்கத்தின் நிலையைப் பார்த்த பிறகு, அவர் மனம் பாகாய் கரைந்தது. ''எப்படி மானமா வாழ்ந்த குடும்பம் எப்படிப் போயிட்டுது?'' அங்கலாய்த்தார் மனைவியிடம்.

''படுபாவி! கோடாரிக் காம்பு போல, எங்கிருந்தோ வந்து முளைச்சானே... அவன் உருப்படுவானா?'' வசந்தனை வாய் ஓயாமல் வசை பாடினார்.

அலமேலு, மகள் காணாமல் போன அன்று விசும்பி அழுதாள். பிறகு சதா வெறுப்பும் கசப்புமான ஓலங்கள் தான் அவளிடமிருந்து புறப்பட்டன.

அன்று வெள்ளிக்கிழமை. காலை குளியலை முடித்து உடுத்திக் கொண்டு, தகப்பனாருக்கு ஆகாரம் கொடுக்கச் சென்ற உமா திடுக்கிட்டுப் போனாள்.

சீராகப் படுக்கையில் இல்லாமல், தலை தொங்கிப் போயிருந்தது. முகத்தில் எதையோ சொல்ல விரும்புவதைப் போல ஒரு... கோணல்...

''அப்பா!'' அடிவயிற்றிலிருந்து பீறிட்ட குரலைக் கேட்டு அலமேலு ஓடிவந்தாள்.

''என்னடி? என்ன ஆச்சுது?'' பதைத்துப் போனாள். அதற்கு மேல் உமாவால் பேசமுடியவில்லை. ஓவென்று அலறியபடி தந்தையின் சடலத்தின் மீது விழுந்து அழுதாள்.

சிறிது நேரத்தில் ஊர் மக்கள் கூட்டம் கூடி விட்டது. நகரத்து டாக்டரை யாரோ ஓடிச்சென்று அழைத்து வந்தனர்.

கடைசியில், எவரிடமும், ஏன், அவரது மனதிற்குகந்த மகள் உமாவிடம் கூடச் சொல்லிக் கொள்ள இயலாமல், அப்பா போய் சேர்ந்து விட்டார்.

கண்களில் வழிந்த நீர் ஆறாக பெருகி மார்பை நனைக்க, ''அப்பா!...'' என்று உமா அழுதுகொண்டே இருந்தாள்.

காரியங்கள் முடிந்த சில நாட்களில் ஊர் பெரிய மனிதர்கள் சேர்ந்து உமாவிற்கு உதவ முன் வந்தனர்.

பஞ்சாயத்து பிரசிடெண்ட், ஊருக்குப் பெரியவர் என்ற தோரணையில், மெல்ல உமாவின் அருகில் வந்து நின்று கொண்டார். தொண்டையை செருமியவர், ''இத பாரும்மா. நடந்தது நடந்திட்டுது. நீ படிச்ச பொண்ணு. இனி இந்த குடும்பத்தை வழிநடத்திக்கிட்டுப் போறது உன் பொறுப்பு. அதனால, நல்லா யோசிச்சு ஒரு முடிவு செய்யணும்'' என்றார்.

''இப்படி நடுத்தெருவிலே நிறுத்திட்டு, அனாதையாக்கிப்பிட்டு போய்ட்டாரே'' அலமேலு வெடித்தாள்.



''தங்கச்சி! தைரியமா இருக்கணும்மா. பட்டணக்கரையில, என் சிநேகிதன் ஒருத்தன் இருக்கான். அவனுக்கு எழுதறேன். உமாவோட படிப்புக்கு ஏதாச்சும் வேலை போட்டுத் தருவான். இனிமே நீங்க இந்த ஊர்ல, நீங்க தங்கறது...'' என்று முடிக்காமல் நிறுத்திவிட்டார்.

உமாவிற்கு விளங்கியது. சியாமளாவால், அவர்கள் குடும்பத்திற்கு ஏற்பட்ட பழிச்சொல், அப்பாவின் மறைவால் குடும்பத்தின் ஆதரவற்ற நிலை, இருக்கிற பழைய வீட்டின் மீது ஏறியிருந்த கடன் சுமை...

எல்லாமாகச் சேர்ந்து, காளிராஜபுரத்திற்கே, விடை கொடுத்தாக வேண்டிய நிலை...

மேலும் சில நாட்களில் உமாவின் குடும்பம் சென்னைக்குக் குடி பெயர்ந்ததும், பிரசிடெண்ட் ஐயாவின் முயற்சியால், அந்தத் தனியார் நிறுவனத்தில் வேலை கிடைத்ததும் வேறு கதை.

சென்னை வந்த புதிதில், சின்னம்மா சிறிது அடங்கிப் போயிருந்தாள். புதிய சூழ்நிலை, உமாவின் மாத வருமானம் ஓரளவிற்கு, அவர்கள் மூவரும் மானமாக வாழ உதவியது. அவ்வப்போது, ஆற்றாமையால் வெடிக்கும் ஒரு சில நேரங்களைத் தவிர மற்றபடி, அவள் மௌனமாக இருந்தாள்.

பிரகாசம், புதிய தோழர்களுடன், பள்ளி செல்லப் பழகிக்கொண்டு விட்டிருந்தான்.

அலுவலகத்திற்குப் புறப்பட்டுப் போய்விட்டு, களைப்பும், அலுப்புமாக வீடு திரும்பிய உமாவின் மனதிலும் சோர்வு நிரம்பி இருக்கத்தான் செய்தது.

இருப்பினும், அப்பா விட்டுச் சென்ற குடும்பப் பொறுப்பின் சுமையைத் தான் சுமந்தே ஆகவேணும் என்ற தீவிரமான உணர்வு அவளை ஊக்கியது.

சின்னம்மாளின் கோபதாபங்களை ஒரே விநாடியில்

ஒதுக்கியபடி சாப்பாட்டை முடித்துவிட்டு எழுந்து கையைக் கழுவித் துடைத்தாள்.

''இன்னைக்கி ஒரு சமயம் நான் வீடு திரும்ப நேரமாகும். எங்க ஆபீஸ்ல புதுசா ஒரு அதிகாரி வராரு'' டிபன் டப்பாவை கையில் எடுத்தபடி விடைபெற்றாள் உமா.

அலமேலு பதில் பேசவில்லை. 'யார் என்ன சொன்னாலும் நம்பத்தானே வேணும்' என்ற பாவம் அவள் முகத்தில் குடி கொண்டிருந்தது.

தெருமுனைக்கு வந்தவள், வேகமாக ஆட்டோ ஒன்றை பிடித்து, அலுவலகத்தை அடைந்தபோது மணி ஒன்பதை தாண்டி விட்டிருந்தது.

அவளுடைய நிலைக்கு மீறிய செயல் ஆட்டோ செலவு என்றாலும் வேலை விஷயமாயிற்றே.

அவளது பகுதி ஆசனத்தில் பரபரப்புடன் அமர்ந்தவள் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள்.

''மேடம்! இவர்தான் புதுசா வந்திருக்கிற நம்ம செக்ஷன் ஸுபர்வைசர் மிஸ்டர் பார்த்திபன்'' தலைமைக் குமாஸ்தா அறிமுகப்படுத்தினார்.

கரங்களைக் குவித்தவள் மாநிறமாக, உயரமும் கம்பீரமுமாக நின்ற பார்த்திபனைப் பார்த்தாள்.

''உங்களை எங்கேயோ நான் பார்த்திருக்கேனே...'' பார்த்திபன் அவளையே உற்றுப்பார்த்து விட்டு முறுவலித்தபோது, வியப்புடனும் திகைப்புடனும் அவனையே பார்த்தபடி நின்றாள் அவள்.



## 10. கிளி ஒன்று விலை பேசப்படுகிறது!

வசந்தன் வாயில் புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டை அரைகுறையாக, வெறுப்புடன் வெளியே விசிறினான். இரண்டு நாட்களுக்கு முன்னர் அவனது தொழில் கூட்டாளி ஒருத்தன், வெளிநாட்டிலிருந்து கொணர்ந்து தந்திருந்த உயர்ரக சிகரெட் அது.

சாதாரண நாட்களாக இருந்திருந்தால், அவன் அதை மனம் உவந்து ரசித்துப் புகைத்திருப்பான். வெளிநாட்டு சரக்குகளில் அவனுக்கு மோகம் அதிகம். ஆனால் இப்போதைய சூழ்நிலையில் அவனுக்கு ரசனையே மரத்து விட்டிருந்தது.

அவனது தொழில் முறையில் மாபெரும் தோல்வி, காளிராஜபுரத்தில் தான் கிட்டிற்று. இதுவரை, அவன் போட்ட திட்டங்களில் எதுவுமே சோடை போனதில்லை. எத்தனையோ முறை போலீசின் கண்காணிப்பிற்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு பம்பாய், டில்லி, கல்கத்தா என்று தலைமறைவாகி இருக்கிறான்.

நாட்கள், மாதங்கள் ஏன் பல வருடங்களுக்குப் பிறகு மீண்டும் தமிழ்நாட்டுப் பக்கம் திரும்பி இருக்கிறான்.

பெரிய கொள்ளைகளில் இதுவரை மாட்டிக் கொள்ளாத தந்திரசாலி. கேவலம், இந்த காளிகோவில் விவகாரத்தில்...?

''சே? அசல் என்று நம்பி நகலைக் கொண்டு வந்து விட்டோமே'' ஏமாற்றம் அவன் மனதைக் குடைந்தது.

சென்னைக்கு வந்ததுமே ''அப்பாடா! இன்னும் கொஞ்ச நாட்கள் நிம்மதியாக பணத்தை வாரி இறைத்துக் கொண்டு, ஐந்து நட்சத்திர ஓட்டல்களிளெல்லாம் தங்கி, ஆனந்தமாக

இருக்கலாம். இந்த விலை உயர்ந்த கற்களை இந்த சென்னை மாநகரில் வாங்க எவனிடமும் பணம் இல்லையென்றால்... வடக்கே போக வேண்டியது. முதலில் மதிப்பைத் தெரிந்து கொண்டு போக வேணும். அப்படியே சியாமளாவையும் உதறிவிட்டுக் கிளம்பவேணும்'' திட்டம் தீட்டியிருந்தான்.

வசந்தன் இளைஞன். வாலிபன். உல்லாசமாக வாழ ஆசைப்படுபவன். ஆனால் பெண்கள் விஷயத்தில் மட்டும் அவனுக்கு ஏனோ ஈடுபாடு ஏற்பட்டதே இல்லை. பணத்தை விட்டெறிந்தால் ஆயிரம் பெண்கள் என்ற விசித்திரமான நோக்கு அவனுடையது.

தனது தொழிற் கொள்ளையில், வழி முறைகளைக் கையாள அங்கங்கே ஏமாளியாகப் பெண்கள் கிடைத்தால் அவர்களைக் கொண்டே காரியத்தை செயலாற்றும் திறமைசாலி அவன்.

அவனைப் பொறுத்தவரை சியாமளா ஒரு உதவியாள். மற்றபடி அவன் போகும் வழியில், ஒரு இடரும் கல். எனவே, சென்னை வந்ததும், பெரியப்பாவாக நடித்தவனிடமே சொல்லி மீண்டும் திருச்சி செல்லும் ரயிலில் அவளை ஏற்றி விடுவது என்று தீர்மானித்து விட்டிருந்தான்.

மாணிக்கக் கற்கள் வெறும் கண்ணாடிக் கற்களான பிறகு, நிலைமையே மாறிப் போனது. அவனது ஆத்திரம் கொழுந்து விட்டெரியத் துவங்கியது.

யார் ஏமாற்றி இருப்பார்கள்? ஒரு வேளை அவன் கேட்டறிந்தது போல் அப்படி ஒரு விலை உயர்ந்த சிவப்புக் கற்கள் கண்ணடக்கத்திற்குப் பயன்படுத்தப் படவில்லையோ? இல்லாவிட்டால் சிவலிங்கமே அதை விற்றுச்சாப்பிட்டு விட்டு ஊரை ஏய்க்க நாடகமாடி இருப்பாரோ? ஒரு வேளை காளிஅம்மன் கடும் கோபம் கொண்டு விடுவாள் என்று சியாமளாவே செய்திருப்பாளோ?...

சியாமளாவின் கழுத்தை அப்படியே அமுக்கிக் கொன்று



விடலாமா என்ற சினம் பொங்கியது. காளிராஜபுரம் முழுதும் அவனும் சியாமளாவும் ஓடிவிட்ட விவரம் பரவி இருக்கும். கோவில் திருவிழா சமயம். இப்போது சியாமளா திரும்பினாலும் அவளை உயிரோடு விடமாட்டார்கள். அத்துடன் அவனைக் காட்டித் தரச்சொல்லி...? அச்சம் அவனை உலுக்கியது. கோபத்துடன் பற்களைக் கடித்தான். ''சரியான கற்களைத் தானே எடுத்துவந்தே'' அடிக்குரலில் உறுமினான் சியாமளாவிடம்.

அச்சத்தால் சுருண்டு போனவளாய் ''சத்தியமாய் காளி ஆத்தா மேல ஆணையாக...'' என்று தடுமாறினாள் அழுகையுடன்.

அதற்குமேல் வசந்தனுக்கு யோசிக்க நேரம் இருக்க வில்லை. ஒரு இழப்பிலிருந்து மற்றொரு ஆதாயத்தைத் தேடியாக வேண்டும் என்பது அவனது குறிக்கோள்.

மறுவிநாடி அவனது மூளையில் அந்த நினைப்புப் பளிச்சிட்டது. கற்கள் போன நஷ்டத்தை கன்னியைக் கொண்டு ஈடு செய்ய வேண்டியதுதான்!

பம்பாய் வந்து சேர்ந்ததும் முதல் வேளையாக அவனது கூட்டாளி பாபுவைச் சந்தித்தான். பம்பாய் மூலை முடுக்குகள் சந்து பொந்துகள் யாவும் பாபுவிற்கு அத்துப்படியான விஷயம். ஃப்ரஸ்ரோடு சிவப்பு விளக்குப் பகுதி முதல் சோர் பஜார் வியாபாரம் வரை அவனிடம் தான் இவனுக்குப் பாடம் ஆகியிருந்தது.

அம்மைத் தழும்பேறிய முகம். குள்ளமாக விகாரமாக சிரித்தபடி வரவேற்ற அந்தக் கறுப்பு மனிதனைப் பார்த்த சியாமளா கிலியுடன் வசந்தனருகில் ஒட்டிக் கொண்டாள்.

பம்பாய் நகரத்து குடிசை வாழ்மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளைக் கண்டு சியாமளா மேலும் அரண்டு போயிருந்தாள்.

வசந்தன் எதைக் கேட்டாலும் அழ ஆரம்பித்தாள். மேலே தகரம் வேய்ந்த கூரையில் கதிரவனின் கடுமை கோடை நாட்களின் வெம்மை இவற்றுடன் புதிய இடம், மனிதர்கள், மொழியாவுமாக சியாமளாவைக் கதி கலங்க அடித்து விட்டன.

''அந்த ஆளு யாரு? அவரை எதுக்கு சும்மா கூப்புடுறீங்க?'' என்றாள் மிரட்சியுடன்.

வசந்தன் ஆத்திரமாகச் சிரித்தான். ''அவர்தான் எங்க முதலாளி. சோறு போடுகிறவர்.''

''என்னது? முதலாளியா? அப்ப... நீங்க வேலை பாக்கறது?''

''சும்மா வாயை மூடிக்கிட்டு இருந்தே... பிழைச்சே... எனக்கு வர்ற கோபத்தில...'' கண்களை உருட்டி அவளை உறுத்துப் பார்த்தான் வசந்தன்.

சியாமளா பயத்தில் வெலவெலத்துப் போனாள். காளியாத்தாவின் கண்களைப் பிடிங்கிட்டு வந்தேனே? இந்த மனுஷனை நம்பி அசட்டுத்தனமா எவ்வளவு பெரிய தப்பை செஞ்சிட்டு ஓடி வந்திட்டேனே என அவள் உள் மனம் அழுதது.

பாபு, வசந்தனுக்கு இருக்க இடம் கொடுத்து உதவினான். 'இப்ப சத்தியா இந்த குடிசையை ஐந்து நட்சத்திர ஓட்டலா நினைச்சுக் கொள்ளு ராஜா. நம்ம டீல் முடியட்டும். பிறகு பாரு' என்று உற்சாகப் படுத்தியவனாய் அவனிடம் ''வெளிநாட்டு சரக்கு நம்ம தோஸ்த்து ஹாங்காங்கிலிருந்து கொணாந்தான். பிடிச்சுக்கோ'' சிகரெட் பெட்டியை அளித்து விட்டுப் போய்விட்டான்.

வசந்தனைப் பொறுத்த வரையில் ஐந்து நட்சத்திர ஓட்டலும் அந்த தகர குடிசையும் ஒன்றுதான். ஆனால் கையிருப்பு கரைந்து சியாமளாவை அதட்டி உருட்டி அவளிடமிருந்து பிடுங்கியதும் மறைந்து போக ஆரம்பித்து விட்டது. பிறகு என்ன செய்வது?



சிகரெட்டை தூக்கி எறிந்ததும் பிரச்சனை தீராதது போல் தோன்றியது அவனுக்கு. வேளாவேளைக்கு அருகிலிருந்த ஒரு ரெஸ்டாரண்டிற்குப் போய் சாப்பிட்டாக வேண்டும். இருவர் செலவு... எத்தனை நாள் இப்படி... பம்பாயில் சுற்றிக் கொண்டிருப்பது?

சியாமளா அழுதபடியே ஒரு மூலையில் சுருண்டு கொண்டிருந்தாள். வெய்யிலின் கொடூரம் அவனது மனதைப் போலவே தீயாகச் சுட்டெரித்துக் கொண்டிருந்தது.

கோபம் தாளாமல் வெகுண்டபடி முன்னும் பின்னுமாக சிறிது நேரம் உலவினான் வசந்தன். என்ன செய்வது என்று பொறுமையிழந்தபடி வாயிற்பக்கம் வந்தவன் கண்களில் பாபு வருவது தெரிந்தது.

பாபு வரும்போதே உற்சாகமாகக் கைகளை ஆட்டியபடி வந்தான். வசந்தன் சிறிது கவலை நீங்கியவனாக ஓடிச் சென்று அருகில் நின்றான்.

''அச்சா பேடா! ஜீதேரஹோ'' வேடிக்கையுடன் ஹிந்தியில் வாழ்த்தியபடி அருகில் நெருங்கியவனிடம் கண்களைச் சிமிட்டினான் குறும்பாக.

''வேடிக்கை இருக்கட்டும் விஷயத்துக்கு வா...''

''பாபு போனால் விஷயம் இல்லாம வருவேனா? கார்வாலியைப் பாத்திட்டு நேரா வரேன்.''

''உள்ளே போய் பேசலாமா?'' வசந்தன் அவசரப்பட்டான்.

''அரே! ஐஸா மால் உள்ளே இருக்குது. அதுங்காதுல விழறாப் போல பேசணுமா? விவரம் தெரிஞ்சா பட்சி பறந்திடும். கபர்தார்!'' அடிக்குரலில் அதட்டினான் பாபு.

''கார்வாலி என்ன சொன்னான்?'' வசந்தன் விடாப் பிடியாகக் கேட்டான்.

''கையிலே காசு வாயிலே தோசை. கேட்டதில்லையா?

நேரா நாளைக்குக் காலையில் அங்கே போறோம். ஆளைப் பார்த்து கையிலே பணம்...''

சியாமளா திடுக்கிட்டு எழுந்தாள். குடிசை வாசலில் அடிக்குரலில் வசந்தன் யாருடனோ பேசுவது அவளுக்கு விளங்கியது. மனம் கலவரமடைந்தவளாய் மெல்ல சுவரோடு ஒதுங்கியபடி கதவருகில் காதை வைத்துக் கொண்டு வெகு சிரமத்துடன் ஒட்டுக் கேட்டாள்.

''நாளைக்குக் காலையிலே முடியாதுப்பா. ஊர்ல இருந்து வந்தது முதலே கையில காக இல்லே. கொஞ்சம் நல்ல துணிமணி எடுக்கணும். நல்ல ஆகாரமும் குடுத்தாத்தான் கொஞ்சம் பாக்க ஆள் தல்லா இருக்கும். இல்லாட்டி.... கார்வாலி எப்படிப்பட்டவன்னு நான் சொல்லித்தான் தெரிஞ்சுக் கொள்ள வேணுமா?'' வசந்தன் ஆட்சேபித்தான்.

பாபு உரக்க சிரித்துவிட்டு ''நீ படா கில்லாடி. இந்தா அட்வான்ஸ் புடிச்சுக்கோ. வர்ற சனிக்கிழமை அங்கே ஸ்பெஷல் பூஜை நடக்கும். மறக்காம நல்லா டிரஸ் செய்து கூட்டிக்கிட்டு வந்திடு'' என்றான்.

வசந்தன் கைகளில் கத்தையாக நோட்டுக்கள். தன்னையறியாமல் அதை ஆவலாக எட்டிப் பார்த்த சியாமளா சரேலென உள்ளுக்குள் ஓடி மூலையில் சுருண்டு கொண்டாள். உடல் முழுவதும் பயத்தால் குலுங்கியது.

## 11. புது உறவு மலர்கிறது

வாராந்திர விடுமுறையாதலால் உமா அன்று சற்று நிதானமாகவே வேலைகளைச் செய்தாள். மழைக்காலம் துவங்கி விட்டதால் வாயில் சேலைகளைத் துவைத்துக் கஞ்சி போடும் வேலை எதுவும் வைத்துக் கொள்ளவில்லை.



மறுநாள் காலை அலுவலகத்திற்குக் கிளம்புவதற்காக முன் கூட்டியே தயாராக உடுத்த வேண்டிய சேலை முதல் எடுத்துச் செல்ல வேண்டிய கைப்பை ஈராக தயாராக வைத்து விடுவது அவளது வழக்கம்.

கூடுமானவரை நைலக்ஸ் டெர்ரீன் சேலைகளையே மாற்றி மாற்றி உடுத்தி வந்ததால் மழையில் நனைந்தாலும் சட்டென அவை உலர்ந்துவிட வசதியாக இருந்தது.

அவர்கள் வீட்டு மரபீரோவில் இருந்த சேலைகளை அடுக்கி வைக்கும் பொருட்டு உள்ளே திரும்பியவள் வாயிற் புறம் பேச்சுக்குரல் கேட்டு மெல்ல எட்டிப்பார்த்தாள்.

மழைத்தூறல் விட்டு சிறிது வானம் தெளிந்திருந்தது. ஒருசிறு தூறலுக்கும் அவர்கள் தெருவில் பிரளயம் போல மழைநீர் பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்துவிடும்.

''இருக்கற கடுதாசியெல்லாம் கிழிச்சி பச்சப்புள்ளையாட்டம் இது என்னடா விளையாட்டு? மரியாதையா உள்ளே வா...''

திடும்மென ஸ்கூட்டர் ஒலிகேட்டு இருவரும் ஓய்ந்தனர். வீட்டு வாசலில் ஸ்கூட்டரை நிறுத்தி விட்டு இறங்கிய வாலிபன் சிறிது தயக்கத்துடன் ''இதுதானே... மிஸ் உமாவோட வீடு'' என்று கேட்டான்.

இடுப்பில் கைவைத்தபடி நின்றிருந்த அலமேலு ''நீங்கள் யார்?'' என்று கேட்டாள்.

அவன் வரிசைப் பற்கள் தெரிய சிரித்தான். ''பயப்படாதீங்க. என் பெயர் பார்த்திபன். உமாவோட ஆபீஸ்ல வேலை பார்க்கறவன். அவங்க நேத்து முக்கியமான ஃபைல் ஒண்ணை வச்சிட்டுப் போயிட்டாங்க. அதப்பத்திக் கேட்டுட்டுப் போகலாம்னு வந்தேன்.''

''எங்க வீட்டு விலாசம் எப்படித் தெரியும்?'' உறுத்துப் பார்த்தாள் அலமேலு.

''ஆபீஸ்ல என்னோட பகுதியில வேலை செய்யறவங்க விலாசம் முழுசும் எனக்குத் தெரியுமே! கொஞ்சம் நான் உள்ளே வரலாமா?'' பொறுமை இழந்தவனாய்க் கேட்டான் பார்த்திபன்.

உமா வெளியே அவசரமாக வந்தவள் ''மிஸ்டர் பார்த்திபன் வாங்க வாங்க'' உபசரித்தாள்.

''இதுபோல வீட்டிலே நானும் வாழ்ந்து வளர்ந்தவன் தான். அதனால் சிரமமில்லாம கண்டு பிடிச்சிட்டேன்'' சிரித்தான் அவன்.

''உங்கம்மாவுக்கு ஆம்பிளைங்க வந்தாலே பிடிக்காதோ'' தொடர்ந்து கிண்டலாக அவன் கேட்டபோது அவள் முகம் சிறிது கலக்கமடைந்தது.

''அவங்க என்னோட அம்மா இல்லே. சின்னம்மா.''

''ஐ ஆம் ஸாரி!''

''பரவாயில்லே அவங்க மனசு ரொம்ப அதிர்ந்து போயிருக்கு. அதப்பத்தி சமயம் வரும்போது சொல்றேன். இப்ப காப்பி சாப்பிடறீங்களா?'' உமா பேச்சை மாற்றினாள்.

''வேண்டாம். இப்பத்தான் காப்பி பலகாரம் எல்லாம் சாப்பிட்டுப்பிட்டு வந்தேன். அந்த சுரேந்தர் கம்பெனி ஃபைலை எங்கே வச்சிங்கன்னு கேட்க வந்தேன். நாளைக் காலை ஆபீஸ் திறந்ததும் திறக்காததுமாக நட்சத்திரேயன் போல அந்தக் கம்பெனி ஆசாமி வந்துடுவார்!''

''அதுக்காகவா இவ்வளவு தூரம் வந்தீங்க?'' உமாவின் கண்களில் குறும்பு மின்னியது.

''அதுக்காகவும் வந்தேன். இல்லாட்டி உங்க சின்னம்மா கழுத்தைப் பிடிச்சிக் கல்தா குடுத்திட்டிருப்பாங்களே'' அடிக்குரலில் மெல்லக் கூறினான்.

இருவரும் சிரிப்பதைக் கண்டு கொண்டே காப்பி தம்ளருடன் அங்கே வந்த அலமேலு ''ம்! காப்பி குடிக்கச்



சொல்லு'' என்றாள் விரைப்பாக.

''காப்பி வேணாம்மா! நீங்களும் உக்காருங்களேன். உங்களைப் பாத்தா காலம் சென்ற எங்கம்மா போல இருக்கு'' பார்த்திபன் கூறிய முகஸ்துதியில் அலமேலுவின் இறுகிய முகம் சிறிது தளர்ந்தது.

''அம்மா இல்லையா தம்பிக்கு? பாவமே!'' என்றாள்.

''அப்பாவும் சின்ன வயசிலே இறந்துட்டார்.''

''அம்மாதான் என்னைப் படிக்க வச்சி ஆளாக்கினாங்க. அவங்களும் இப்ப இல்லே.''

''கூடப்பிறந்தவங்க...?''

''யாருமில்லே.'' உமாவிற்கு சிரிப்பு வந்துவிட்டது.

''எங்க சின்னம்மாவையே சமாளிச்சுட்டீங்களே. நீங்க ரொம்ப...''

''பொல்லாதவன்னு எப்பவோ சர்டிபிகேட் குடுத்திட்டியே இனிமேயா குடுக்கணும்'' என்றான் அவன் கேலியாக.

அன்று முதல் முதலாக அலுவலகத்தில் அவனைப் பார்த்துவிட்டு அவள் திகைத்துப் போயிருந்தது உண்மைதான். ''உங்களை எங்கேயோ பார்த்திருக்கிறேன்'' என்று அவன் சொன்னதும் மனம் குழம்பிப் போனாள் அவள்.

வீடு திரும்பியும் பலமுறை யோசித்தும் கூட அவள் நினைவில் அத்தகைய சந்திப்பு எப்படி எப்போது எங்கே ஏற்பட்டது என்ற சுவடே தெரியாமல் போயிற்று.

அன்று சனிக்கிழமை. அரைநாள் தான் அவர்களது அலுவலகம் வேலை செய்யும். பிற்பகல் பஸ்சிற்காக பஸ் நிலையத்திற்கு வந்தபோதுதான் அவளுக்கு நினைப்பு வந்தது.

எதிரே தெரிந்த துணிக்கடையில் பரபரப்பான வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இது போன்று அவள் கல்லூரி ஹாஸ்டலில் தங்கிப்படித்த காலத்தில் ஒருமுறை

தோழிகளுடன் கடைக்குச் சென்றது ஞாபகத்தில் பளிரிட்டது.

சனி, ஞாயிறுகளில்தான் மாணவிகள் கடை, சினிமா என்று உத்தரவு பெற்றுக்கொண்டு வெளியே சென்று விட்டு வருவது வழக்கம்.

அந்த சனிக்கிழமை பிற்பகல் அவளது ஹாஸ்டல் தோழி நிர்மலாவுடன் துணிக்கடைக்குள் நுழைந்தாள் உமா.

சினிமா, நாடகங்களுக்குப் போவதை அவள் அவ்வளவாக விரும்பியதில்லை. நிர்மலா தனக்கு சில ரவிக்கை துணிகள் வாங்க வேண்டும் என்று அவளைக் கூட வரும்படி வற்புறுத்தியதன் விளைவாக உமாவும் உடன் சென்று விட்டிருந்தாள்.

அவர்கள் துணிவாங்கிய பகுதியில் வேறு ஒரு இளைஞர் குழாமும் புகுந்திருந்தது. இளவயதுக்குரிய கிண்டல் கேலிகள் எல்லாம் மறைமுகமாகவே நடந்தன.

தோழியர் இருவரும் கவனியாதவர் போல அசட்டையாக தங்கள் வேலையை முடித்தபடி பில்போடும் பகுதிக்குச் சென்றபோது, ''ஏண்டா? துணி நல்லா இருக்கா? ஷர்ட்டா, ஸ்லாக்கா?'' என்று ஒருத்தன் கேட்டதும், ''துணியைவிட அதை எடுத்தவங்க நல்லாவே இருக்காங்க'' என்று ஒருத்தன் பதிலிறுத்ததும் கொல்லென்ற சிரிப்பும் உமாவின் காதில் விழுந்தன.

உமா முகமெல்லாம் கோபத்தால் சிவக்க வெடுக்கென்று திரும்பிப்பார்த்தாள். வரிசைப் பற்கள் பளீரிட உயரமாக மாநிறமாக நின்ற அந்த வாலிபன் ''ஸாரி மேடம் உங்களை இல்லை'' என்றான் குறும்பாக.

''இவங்ககிட்ட என்ன பேச்சு'' நிர்மலா கோபத்துடன் தோழியைப் பிடித்து இழுத்தபடி பில்லைக் கொடுத்து விட்டு துணிப் பொட்டலத்துடன் வெளியேறினாள்.

பஸ் நிலையம்வரை தோழிகள் இருவரும் கோபத்தில்



அவர்களை சபித்தபடி நடந்து கொண்டிருந்தபோது 'மேடம்! மேடம்!' என்று யாரோ கத்தியபடி பின்னால் ஓடி வருவது கேட்டது.

சட்டெனத் திரும்பிய உமா திகைத்துப் போனாள். சிரிப்பழகன் இவர்கள் பின்னால் இரைக்க இரைக்க ஓடி வந்து கொண்டிருந்தான்!

அருகில் வந்தவனை எரித்துவிடுவது போல் பார்த்தாள் உமா. ''என்ன மிஸ்டர்! உங்க ரௌடித்தனத்தை இத்தோட நிறுத்தப் போறீங்களா... இல்லே இங்கே தெருவில போறவங்களைக் கூப்பிட்டு...''

''மேடம்! பிளீஸ்! தயவு செஞ்சு நான் சொல்றதை முழுசா கேளுங்க. அவசரப்படாதீங்க... கலாட்டா செய்தது நான் இல்லே... என் பின்னால நின்னவன். என்னோட பார்சல் மாறிப் போயிட்டுது. உங்க கையிலே எடுத்திட்டு வந்திட்டீங்க. பில் நம்பரைப் பாத்தீங்கன்னா தெரியும்.'' மூச்சு வாங்கியது அவனுக்கு.

''ரவிக்கைத் துணிக்கும், ஷர்ட் துணிக்கும் வித்தியாசம் தெரியாத உங்களுக்குத்தான்...''

''மேடம்! பிளீஸ்! கவுண்டர்ல அவங்க தப்பா குடுத்திட்டாங்களாம். பில் பணம் குடுத்துட்டு நீங்க பார்சலை வாங்கிட்டுப் போற வேகத்தில் பக்கத்திலே இருந்த என்னோட பார்சலை... தயவு செய்து'' அவலக்குரல் கெஞ்சியது.

நிர்மலா தயங்கினாள். உமாவிற்கு ஏனோ அவன் மீது பரிதாபம் ஏற்பட்டது.

''நீங்க மன்னிப்பு கேட்டுக்கிட்டதாலே இந்த பார்சலை உங்ககிட்ட குடுக்கறேன். இல்லாட்டி நாங்களே ஷர்ட் தச்சு போட்டுக்கிட்டிருப்போம். நீங்க ரவிக்கை தைச்சுப் போட்டுக்க வேண்டிய நிலை வந்திருக்கும்'' பார்சல்கள் கைமாறின.

அவன் பளீரெனச் சிரித்தான். ''தாங்க்யூ மேடம். என்

பெயர் பார்த்திபன். இங்கே சி.ஏ. படிக்க வந்திருக்கேன்.''

''தாங்ஸ். எங்களைப்பத்தி தெரிஞ்சுக்கொள்ற அளவுக்கு நாங்க பெரியவங்க இல்லே. வணக்கம்.'' கோபம் மாறாமல் தோழிகள் ஹாஸ்டல் விடுதிக்குத் திரும்பி விட்டனர். அதே பார்த்திபனைத் தான் இப்போது அவளது மேற்பார்வையாளராக அவள் சந்திக்கிறாள்!

உலகம் நிச்சயமாக உருண்டையானதுதான். இல்லையேல் சந்தித்தவர்களையே இப்படி சந்திக்க முடியுமா?

மறுநாள் காலை. அலுவலகத்தில் பார்த்திபனை அவள் சந்தித்த போது ''மிஸ் உமா நாம் ஏற்கெனவே எங்கே பார்த்திருக்கோம்னு எனக்கு விளங்கிட்டது'' என்றவன் துணிக்கடை சம்பவத்தை விவரித்தான்.

பல வருடங்களுக்குப் பிறகும் அவன் அந்த சம்பவத்தை மறக்காமல் இருந்தது அவளுக்கே வியப்பை அளித்தது. அவளையும் அறியாமல் அவள் சிரித்தாள். ''நீங்க பொல்லாதவர் ஸார்!'' என்றாள் வியப்புடன்.

அதன் பிறகு அவர்கள் இருவருக்கும் இடையே இருந்த இடைவெளி குறையலாயிற்று. நீங்கள் போய் நீ என்று அழைக்கும் அளவிற்கு பழக்கம் நெருங்கியது.

ஆயினும் அவள் தன் குடும்ப நிலையைப் பற்றி ஒருநாள் கூட அவனிடம் கூறியதில்லை. பஸ் நிலையத்தில் கொட்டும் மழையில் பலமுறை அவள் நின்றபோது அவன் பின்னால் ஸ்கூட்டரில் ஏறி சவாரி செய்யும் அளவிற்கு அவளுக்கு தைரியம் ஏற்பட்டதில்லை.

சியாமளாவின் செய்கையால் குடும்பத்திற்கு ஏற்பட்ட அவமானம் ஒன்றே போதுமே!

''என்ன திடீர்னு மௌனம்? சின்னம்மா கோபிப்பாங்கன்னு பயமா?''

''அவங்க கோபம் நியாயமானது தானே. வாழ்க்கையிலே



ரொம்ப கஷ்டப்பட்டவங்க. போகட்டும். ஃபைலைப் பத்தி கேட்டீங்க...''

''பேச்சை மாத்தாதே. உன் குடும்ப விஷயத்திலே அக்கறை இல்லாதவன்கிற அவ நம்பிக்கை உனக்கு இருக்கா? அல்லது என்னை இன்னமும் பொல்லாதவன்னு நீ நினைச்சுகிட்டிருக்கியா?''

''அ! அப்படி ஒன்னுமில்லே - கட்டாயம் சமயம் வரும்போது சொல்லித்தானே ஆகவேணும்'' என்றபடி சாமர்த்தியமாக எழுந்தாள் அவள். திடீரென உள்புறமிருந்து அலமேலு விசித்து அழும் குரல் கேட்டது.

திடுக்கிட்டவளாய் உள்ளே சென்று எட்டிப்பார்த்தாள் உமா.

அலமாரி திறந்திருந்தது. அதிலிருந்து கீழே சரிந்து விழுந்து கிடந்த நீலநிறத் தாவணி ஒன்றை அலமேலு கையிலெடுத்து மார்போடணைத்தபடி ''பாவி எங்கடி போனே. எங்கடி போனே?'' என்றரற்றிக் கொண்டிருந்தாள்.

பின்னாலேயே ஓசைப்படாமல் எட்டிப்பார்த்த பார்த்திபன், உமாவைப் பார்த்து சைகையால் வினவினான்.

''நேரம் வரும்போது...'' உதட்டில் விரலை வைத்து சாடை செய்தாள் உமா.

## 12. சியாமளா சிறைப்பட்டாள்

சியாமளாவிற்குக் கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல ஒரே குழப்பமாக இருந்தது. எதற்காக பாபுவும் வசந்தனும் அடிக்குரலில் பேசிக்கொள்கிறார்கள்! பெரிய மனுசிபோல, அவளுக்கு சேலையும், சில கில்ட் நகைகளும்

வாங்கித் தந்து அலங்கரித்துக் கொள்ளச் சொல்கிறான் வசந்தன்? ஒன்றுமே விளங்கவில்லை.

ஊரிலிருந்து அவனை நம்பி வெளியேறிய பிறகு உலகம் என்பது என்ன என்று அவளது சிறிய புத்திக்கும் சற்று எட்ட ஆரம்பித்து விட்டிருந்தது.

காலை எழுந்ததுமே வசந்தன் அவளிடம் சிறிது அமைதியுடன் கூறினான். ''சீக்கிரம் டிரஸ் செய்துகிட்டு கிளம்பணும். உன்னை ஒரு இடத்துக்கு அழைச்சிட்டு போகப் போகிறோம்.''

''எங்கே, எதற்காக'', என்று கேட்டால் அவன் தன்னை கொன்று போடவும் அஞ்சமாட்டான் என்ற கிலி அவளைப் பிடித்துக் கொண்டது.

அருகிலிருந்த ரெஸ்ட்டாரண்டிலிருந்து வரவழைத்த பரோட்டா குருமாவை வெகு சிரமத்துடன் சாப்பிட்டு முடித்தாள். பயத்தினால் எதுவுமே செய்யத் தோன்றாமல் குடிசையின் மூலையில் சுருண்டு கொண்டாள். கண்களை இறுக மூடியபடி படுத்தவள் மனதில் காரணமற்ற கலக்கம் குடிகொள்ள ஆரம்பித்தது.

பிற்பகல், சொன்னபடியே இருவரும் அவளை ஒரு டாக்சியில் எங்கேயோ அழைத்துச் சென்றனர். பல சந்து பொந்துகளைக் கடந்து வளைவான படிகளில் ஏறி, ஒரு மாடிக்கட்டிடத்தின் மூன்றாம் பகுதிக்கு சென்றனர்.

சியாமளாவிற்கு மூச்சு திணறியது. அங்கே ஒரு அறையில் திண்டுகளின் மீது ஒரு தடித்த பெண்மணி அமர்ந்திருந்தாள்.

ரத்தச் சிவப்பான ஜிகினாச் சேலை, நெற்றியில் பெரிய வட்டமான சிந்தூரப் பொட்டு. மூக்கிலும், கழுத்திலும், ஆபரணங்கள். உதட்டில் செக்கச் சிவந்த பூச்சு.

''இவளா?'' என்பதுபோல் தனது மைதீட்டிய விழிகளால் அவளை உறுத்துப் பார்த்தாள். அவளது உருண்டையான



விழிகளைக் கண்டு அச்சத்தினால் மெய் பதறிப்போன சியாமளா, திரும்பி ஓட முயற்சித்தாள். உடல் முழுவதும் வியர்த்துப் போயிற்று. நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டு விட்டது.

''ம்! எங்கே ஓடறே'' அவளது தடித்த கரம் நீண்டு வந்து, சியாமளாவைப் பலமாகப் பற்றிக்கொண்டு உலுக்கியது.

''அம்மா! அம்மா!'' ஓவென்றலறியபடி கதறி அழுதாள். ''என்னை விட்டுடு... விட்டுடு.''

''ஏய்! என்ன இது தூக்கம். எந்திரி ம்!'' வசந்தன் அவளை அதட்டுவது கேட்டது.

கண்களை மெல்லத் திறந்து பார்த்தபோதுதான், தான் சற்று முன் கண்டது கனவு என்பது அவளுக்குத் தெளிவாகியது.

'காளியம்மா! தெரியாம நான் தப்பு செஞ்சிட்டேன். என்னைக் காப்பாத்தும்மா. இந்தக் கனவுலேயே நான் கலங்கிப் போயிட்டேன். நிசம்மா இப்படி நடந்தா நான் என்ன செய்வேன்?' மனதிற்குள் புலம்பியபடியே எழுந்து சரேலென அமர்ந்தாள்.

''முதல்ல தூங்கு மூஞ்சி முகத்தைக் கழுவி சீர் செய்துகிட்டு புறப்படு'' அதட்டினான் அவன்.

மீண்டும் மீண்டும் மனதினுள் அந்த தடித்த பெண்மணியின் உருவமே முன்னுக்கு வந்து அவளை அச்சுறுத்தியது.

தயக்கத்துடன் எழுந்தவள் மெதுவாக ஆயத்தப்படலானாள். பாபு சொல்லி வைத்தாற்போல தயாராக வந்து விட்டிருந்தான்.

எலக்ட்ரிக் வண்டியில் பயணம். பிறகு, மீண்டும் டாக்சி என்று கடைசியில் அவளை அழைத்துச் சென்ற இடத்தைப் பார்த்ததும் மனதில் திகில் பரவியது.

கனவில் கண்டதுபோல ஒரு பழைய கட்டிடம் அடுக்குகளாக அமையப் பெற்றிருந்தது. தெரு ஓரங்களிலும்

அக்கம் பக்கமும் அவளை ஒரு மாதிரியாகப் பார்த்து நின்ற ஒரு மாதிரியான பெண்கள் கும்பல்.

டாக்சிக்காரன் இந்தியில் என்னவோ சொல்லிச் சிரித்தான். சியாமளா முகத்தைச் சுளித்தாள்.

வீதியருகில் இருந்த பீடாக் கடைக்காரன், முகமலர்ச்சியுடன் பாபுவிற்கு சலாம் வைத்தான். ''நயா மால் ஹைக்யா?'' என்றான்.

பாபு கிண்டலாக பதிலிறுத்தபடி, மாடிப் படிகளை அவசரமாகக் கடந்தான். வசந்தன் முன்னால் செல்ல சியாமளா திரும்பித் திரும்பிப் பார்த்தபடி மேலே ஏறிச் சென்றாள்.

பலவிதமான அறைகளைக் கொண்ட கட்டிடம் அது. சில அறைகள் திறந்திருந்தன. அவற்றில், கண்ணைப் பறிக்கும் உடையில், அலங்காரத்தில் கட்டில் மீது அமர்ந்திருந்த சில பெண்கள் அவளைப் பார்த்து விட்டுக் கண்ணைச் சிமிட்டினார்கள்.

சில அறைகளில் அலங்கோலமாக படுக்கையில் விழுந்து கிடக்கும் பெண்களையும் அவள் கண்டாள். ''பயங்கரமான ஓநாய் குகைக்குள் அழைத்துச் செல்லப்படுகிறோம்'' என்று மட்டும் அவளுக்கு உள்ளுணர்வு உணர்த்திக் கொண்டே இருந்தது.

அவர்கள் கடைசியாக நுழைந்தது மூன்றாம் மாடிப்பகுதியில் உள்ள ஒரு அறை.

வரவேற்பறை போலக் காட்சியளித்த அந்த இடத்தை வியப்புடன் பார்த்தாள் சியாமளா. கனத்த சோபாக்கள் கனமான திரைச்சீலைகள். சுவர் முழுவதும் பிரபலமான சினிமா நட்சத்திரங்களின் படங்கள்.

''கார்வாலி இல்லையா?'' அங்கே அமர்ந்திருந்த பெண்ணிடம் பாபு கேட்டான்.

மெலிந்த தோற்றமுடைய அந்தப்பெண் சியாமளாவை ஏற



இறங்கப் பார்த்தாள். ''ஐயோ பாவம்'' என்பது போன்ற பார்வை.

''ம்! ஜல்தி'' வசந்தன் அதட்டலாகக் கூறியதும். ''உட்காருங்கள்'' என்று கூறிவிட்டு உள்ளே மறைந்து விட்டாள் அவள்.

பயத்துடன் சோபாவில் அமர்ந்த சியாமளா திருதிருவென விழித்தபடி சுற்றுமுற்றும் பார்த்தாள்.

சற்று நேரத்தில், ''அச்சா! ஆவ்ஜி. ஆவோ'' உரக்கக்கூறிச் சிரித்தபடி உள் பக்கமிருந்து வந்த பெண்மணியைப் பார்த்த சியாமளா திகிலால் உறைந்து போனாள்.

கனவில் கண்டது போலவே தடித்த பெண்மணி நகைகளை அள்ளிப் பூட்டியபடி, உதட்டுப் பூச்சுடன் மைக்கண்களை உருட்டியபடி, தீட்டிய புருவங்களை நெரித்து அவளை உற்றுப் பார்த்தபடி வந்தமர்ந்தாள்.

சியாமளாவின் அடிவயிற்றில் பீதி பரவி மேலே எழும்பி தொண்டைக்குள் வந்து அடைத்துக் கொண்டது.

''தமிழ் தெரியும்'' பாபு சுருக்கமாக முன்னெச்சரிக்கையாக விளக்கினான்.

''அச்சா!'' அவள் மேற்கொண்டு பேசிய ஹிந்தி அவளுக்குப் புரியவில்லை. இதற்குள் மெலிந்த தோற்றமுடைய பெண் கையில் ஒரு மாத்தட்டில் குளிர்பானங்களடங்கிய தம்ளர்களுடன் அங்கே தோன்றினாள்.

''இவங்கதான் கார்வாலி. அம்மான்னு இங்க எல்லாருங் கூப்பிடுவாங்க. இவங்ககிட்ட மரியாதையா நடந்துகிட்டு அவங்க சொன்னபடி கேட்டா உனக்கு எல்லாம் குடுப்பாங்க.'' மெதுவாக குளிர்பான தம்ளரை அவளிடம் நீட்டியபடி பாபு கூறினான் ரகசியக்குரலில்.

தன்னைப் பற்றிக் கூறுவதை ரசித்தபடி வெற்றிலைக்காவி ஏறிய பற்களைக் காட்டி உரக்க சிரித்தாள் அந்தப் பெண்மணி.

சியாமளா மெய் பதறிப்போனாள். ''எதுக்காக என்னை இங்கே கூட்டிக்கிட்டு வந்தீங்க? எனக்கு ஒன்னும் வேண்டாம். போகலாம்'' என்றாள் குழறியபடி.

''பேசாம இரு. ஒருவாட்டி இங்க வந்துட்டா வெளியே தப்பிச்சுப் போக முடியாது. கவனம் இருக்கட்டும்.'' கடுமையாகக் கூறிவிட்டு அவளை உறுத்துப் பார்த்தான் வசந்தன்.

சியாமளாவிற்கு அழுகை பொங்கியது. ''காளியாத்தா என்னை எப்படி வேண்டுமானாலும் தண்டிச்சுக் கொள்ளு. ஆனால் இதோ எதிரே உக்காந்திருக்கற பிரம்ம ராட்சசிகிட்ட மட்டும் விட்டுடாதே. பாத்தாலே குலை நடுங்குதே'' உள்ளத்தில் எண்ணங்கள் புரட்சி செய்தன.

கண்களில் நீர் மல்க அவள் வெளியே செல்லும் படிக்கட்டுகளைப் பார்த்தாள்.

''நமஸ்தே சொல்லு'' வசந்தன் அதட்டினான் மறுபடியும்.

சியாமளா கரங்கள் நடுங்க கை குவித்தாள். மெலிந்த பெண் அவளைப் பார்த்தபடி நின்றாள். 'கார்வாலி' பட படவென ஹிந்தியில் பேச பாபு பேச சிறிது நேரம் ஏதோ வாக்குவாதம் நடைபெறுவது போல சியாமளாவிற்குத் தோன்றியது.

மிகப் பலமான வாதப் பிரதிவாதங்களுக்கிடையில் அந்தப் பெண்மணி கையை ஆட்டி உருட்டி விழித்து சியாமளாவைப் பார்த்துப் பேசினாள்.

''நீ ரொம்பச் சின்னப்பொண்ணு. வயசுக்கு வராதவ மாதிரி இருக்கே. உனக்கு பணம் குடுத்தா என்ன பிரயோஜனம்'' கத்தினாள்.

சியாமளா அதிர்ந்து போனாள். தமிழே தெரியாது என்று நினைத்துக் கொண்டிருந்த அந்த அம்மாள்... தமிழ் பேசுகிறாளே!

வியப்பும் பயமுமாக அவளையே பார்த்தாள். ''உனக்கு



அஞ்சாயிர ரூபாய் தரமுடியாது.''

பாபு மீண்டும் அவளிடம் ஹிந்தியில் பேசினான். அவள் பலமாகத் தலையை ஆட்டி மறுப்பு தெரிவித்தாள்.

''போலீஸ் தொந்தரவு சகிக்க முடியறதில்லே. அடிக்கடி வந்திடறாங்கோ. இத்தினி சோடா... ரொம்ப சின்னப் பொண்.''

வசந்தனும் பாபுவுடன் சேர்ந்து கொண்டான். ''கார்வாலி'' எழுந்து உள்ளே சென்று பணத்துடன் வந்தாள்.

கத்தை கத்தையான நோட்டுக்கள்! சியாமளாவிற்கு உண்மை தெரிந்து போயிற்று. கதைகளிலும் சினிமாப் படங்களிலும் அவள் படித்த, பார்த்த சம்பவம் உண்மையிலேயே நடக்கிறது. அவளை ஈனமான தொழிலில் ஈடுபடுத்த வசந்தனும், பாபுவும் இந்தப் பகுதிக்கு அவளை அழைத்து வந்து... இல்லையில்லை கடத்தி வந்து விட்டிருக்கிறார்கள். ஒன்றுமறியாத அவளைப் பணத்திற்காக விற்றிருக்கிறார்கள்.

அவள் உள்மனதில் ஏதோ ஒன்று ''அபாயம் ஓடு. ஓடு... நிற்காதே... நிற்காதே'' என்று உந்தியது. கை, கால்கள் பதறின. எழுந்து நின்றாள். கால்கள் பலமில்லாதது போல் பஞ்சாகிப் போயின.

''ஆவ் பேபி ஆவ்'' அவள் கரத்தை நீட்டியபடி சியாமளாவை நோக்கி வந்தாள்.

''மாட்டேன் மாட்டேன். என்னை விடு, விடு'' வீறிட்டு அலறியபடி திறந்திருந்த கதவு வழியே பாய்ந்து ஓடினாள் சியாமளா.

''அவளைப்பிடி பிடி!'' என்ற கூக்குரலுடன் வசந்தன் பின்னால் ஓடி வந்தான். ''பகடோ! பகடோ!'' குரல்கள் அவளைத் துரத்தின.

தனது உடல் பலத்தையெல்லாம் திரட்டிக் கொண்டு

குறுகலான படிகளில் இறங்கி ஓடினாள். தட, தடவென்று பின்புறம் ஆட்கள் துரத்தியபடி ஓடி வருவது அவளுக்குத் தெரிந்தது.

மார்பு படபடக்க நெஞ்சு துடிக்க ஓடினாள். தெருவில் கூட்டத்தைத் தாண்டி, வளைந்து, நெளிந்து ஓடிக்கொண்டே இருந்தாள்.

கால்கள் தள்ளாடித் துவண்டு சோர்ந்து போய் விழுந்து விடுவது போலக் கெஞ்சின. சியாமளா இரைக்க இரைக்க பஸ்கள் செல்லும் நெடுஞ்சாலையருகில் வந்தவள் சற்றுநின்றாள்.

பின்னாலேயே வேகமாக ஓடி வந்த வசந்தனைக் கண்டதும் அங்கே அருகே தென்பட்ட பெரிய கட்டிடத்தின் பின்பக்கம் மறைந்து கொண்டாள்.

பெரிய, பெரிய கட்டிடங்கள் - அண்ணாந்து பார்த்தால் வானத்தை முட்டுவதைப் போல நிமிர்ந்து நின்று அவளுக்கு பிரமிப்பும், பயமும் ஊட்டின.

சாலையில் வழிந்த மனிதக் கும்பல்கள் அவளை திக்குமுக்காடச் செய்தன. வேகமாக ஓடிக் கொண்டிருந்த மக்கள் எவரும் அவளது பதைபதைப்பைக் கூர்ந்து கவனிக்க நேரமில்லாமல் சென்று கொண்டிருந்தனர்.

சியாமளா மெல்ல வெளியே வந்து வேகமாக நடந்தாள். இரண்டடுக்கு பஸ்கள், ஒற்றை பஸ்கள், லாரிகள், கார்கள் என்று உறுமியபடி சென்று கொண்டிருந்த வாகனங்களின் பின்னால் அவள் ஒன்றியபடி நடந்தாள். சாலையைக் கடக்கும்போது ''ஆடோமெடிக் சிக்னல்'' விளக்கைப் பார்த்தபடி இறங்கி நடந்த மக்கள் கும்பல்களில் ஒருத்தியாக அவளும் ஓடினாள்.

நெடுந்தூரம் ஓடிக் களைத்த மானைப் போல சியாமளா ஒரு நாற்சந்திற்கு வந்து நின்று கொண்டாள்.



இனி என்ன செய்வது? எங்கே ஓடுவது? கையிலே ஒற்றைப் பைசா கூட இல்லாமல் அவள் என்ன செய்யமுடியும்? பொங்கி வரும் அழுகையை அடக்கியபடி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அவளுக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும்.

திடீரென ஒரு பலமான கை அவளது தோள் மீது விழுந்தது.

''ஏய்! எங்கே ஓடப் பாக்கறே. அப்படி விட்டுடுவோமா?'' அடிக்குரலில் அவள் காதருகில் வசந்தன் குரல்...

ஆடிப்போனாள் அவள். ''வாயைத்திறந்து கூச்சல் போட்டே... கொலையே விழும். நட'' அவளை நெருங்கி அருகில் டாக்சிக்குள் தள்ளினார்கள்.

## 13. ஸ்கூட்டர் சவாரி

உமாவிற்கு தோள்பட்டைகள் இரண்டும் கழன்று விழுந்து விடுவதுபோல் வலித்தன. காலை முதல் ஓயாது ஃபைல் அடுக்குகளில் புகுந்து போராடியதின் விளைவு.

புதிதாக வந்துள்ள கிளைக் கம்பெனி மேனேஜர் திடீரென அத்தனை கணக்குகளையும் சரிசெய்து கொண்டு வரவேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார்.

தலைமைக் குமாஸ்தா உள்பட யாவரும் அலுவலக நேரம் முடிந்ததும் எழுந்திருக்க இயலாமல் அவரவர் இடத்திலேயே வேரோடிப் போயிருந்தனர்.

மணி ஐந்தடித்ததும் அவசரமாக எழுந்து ஓடும் டெலிபோன் ஆப்ரேட்டர் எல். சி. கூட அன்று சற்று நிதானமாக செயல்பட்டாள்.

'ஒரு கப் 'டீ' சாப்பிட்டுட்டு வேலையை மேற்கொண்டு கவனிக்கலாமா?' பார்த்திபன் தலைமை குமாஸ்தாவிடம் கேட்டபோது யாவரும் உற்சாகமாகத் தலையை ஆட்டினர்.

உமா இலேசாக முறுவலித்தாள். அலுவலகத்தினுள் தங்களது நெருக்கத்தைக் காட்டிக் கொள்வதில்லை என்று இருவரும் தீர்மானித்து விட்டிருந்தனர்.

''ஆபிஸ்ல எல்லார் முன்னாலயும் நான் என்னோட தகுதிக்கு ஏத்தபடி நடந்துப்பேன். அதை நீ தப்பா எடுத்துக் கொள்ளக் கூடாது உமா! ப்ளீஸ்!'' பார்த்திபன் ஒருமுறை அவளிடம் கூறி இருந்தான்.

உண்மைதான். ஆபீஸ் ஆபீஸ்தான். அங்கே உழைப்புக்கும் திறமைக்கும் தான் முதல் இடம் தரப்படவேண்டும். உள்ளத்திற்கும் உணர்ச்சிக்கும் அல்ல. இதை அவள் நன்கு உணர்ந்திருந்தாள்.

மீண்டும் பையில் ஆழ்ந்தவளின் மனதில் அன்றைய சம்பவம் லேசாக நினைவில் வந்தது.

சின்னம்மா புலம்பலை அடுத்து அவளை அடிக்கடி சந்தேகக் கண்களுடன் உறுத்துப் பார்க்க ஆரம்பித்தாள்.

''ஒருத்தி சொல்லாம ஓடினா. நீ சொல்லிப்பிட்டே ஓடுவே. அவளைவிட மெத்தப் படிச்சவ. வேலைக்குப் போறவ.'' பொருமியபடி வீட்டு வேலைகளில் ஈடுபட்டாள்.

சாதாரணமாக இருந்தால் உமா பதிலே பேசாது மௌனம் சாதித்து விடுவது வழக்கம். 'ஏமாற்றங்களின் பாதிப்பினால் சின்னம்மா உளறுகிறாள் என்றோ, புலம்புகிறாள் என்றோ' இருந்து விடுவது உண்டு.

ஆனால் பார்த்திபன் எதிரே சின்னம்மாவின் செயல் வேண்டும் என்றே ஆடிய நாடகம் போலத் தோன்றியது.

சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்றுகிற மகளும் போய்விட்டால் என்ன செய்வது என்ற பயம் அவளைப்



பிடித்திருக்க வேண்டும்.

பார்த்திபனைப் போன்ற வசதியான படித்த வாலிபனைக் கல்யாணம் செய்து கொண்டு உமா போய்விடுவாளோ என்ற கலக்கத்தில் ஆடிப் போயிருக்கலாம்.

தான் பெற்ற மகள் தாறுமாறாகப் போய்விட்டாளே. இவளுக்கு இப்படி ஒரு அதிர்ஷ்டமா? என்ற பொறாமையாகக்கூட இருக்கலாம்.

''சே! சே! பாவம் சின்னம்மா'' வழக்கம்போல மனதை சமாதானப்படுத்த முயன்றாள். அன்று முழுவதும் அவளுடன் பேசாமல் இருந்து விட்டாள்.

இரண்டு நாட்கள் சென்ற பிறகு, மீண்டும் ஒருநாள் திடீரென மழை பிடித்துக்கொண்டது. ஆபீசிலிருந்து வீடு திரும்ப அவசரமும், ஓட்டமுமாக பஸ் நிலையத்திற்கு ஒரே பாய்ச்சலாக வந்த உமா தொப்பலாக நனைந்து விட்டிருந்தாள்.

கைப் பையில் மழைக்காலத்திற்கு என்று வாங்கி வைத்திருந்த மடக்குக் குடையை தம்பி பிரகாசம் எடுத்துச் சென்று விட்டிருந்தான்.

''மழையில நனைஞ்சா அவனுக்கு சளி பிடிச்சுக்கும். ஏற்கனவே பூஞ்சை உடம்பு. இந்த மாசம் இன்னொரு குடை வாங்கணும்னா கட்டுப்படியாகுமா?'' சின்னம்மா உத்தரவிட்டாகி விட்டது.

மறுபேச்சுப் பேசாமல் உமா குடையைக் கொடுத்திருந்தாள். ''ஆபீஸ் போய்வரும் பெண் எனக்குத்தானே குடை முக்கியம்.'' என்று அவள் கேட்கவில்லை. ''அருகில்தானே தம்பியின் பள்ளிக்கூடம். ஓடிப் போய் வரலாமே அவனுக்கு'' என்று அவள் கேட்கவில்லை.

இப்போது...? தயை தாட்சண்யம் காட்டிவிட்டு ஈரமான சேலை நுனி காலை நடக்கவொட்டாமல் தடை செய்ய பஸ்

நிலையத்தில் நின்றபடி தவித்துக் கொண்டிருந்தாள்.

தெருவில் தேங்கி நின்ற மழைத் தண்ணீரை வாரி இறைத்தபடி கார்களும், ஸ்கூட்டர்களும், ஆட்டோக்களும் ஓடுவதைப் பார்த்தபடி தனது இயலாமையைக் குறித்து மனதிற்குள் பொருமியபடி நின்றுகொண்டே இருந்தாள்.

பஸ்காரர்களுக்குக் கூட இதுபோன்ற இக்கட்டான நேரங்களைப்பற்றி நன்கு தெரிந்திருக்கவேண்டும்! ஏனெனில் சோதனை போல அவள் போகவேண்டிய பஸ் வரவில்லை.

வேகமாக வட்டமடித்துக் கொண்டு ஒரு ஆட்டோ அவளருகில் வந்து நின்றது. உள்ளே இருந்து பார்த்திபன் எட்டிப் பார்த்தான். ''என் ஸ்கூட்டர் ரிப்பேர். ஆட்டோவில போறேன். உங்களுக்கும்... வரலாமே, நான் வீட்டுல இறக்கி விட்டுட்டுப் போறேன்.'' மழை சத்தத்தையும் மீறி சற்று உரத்தே பேசினான்.

ஒரு விநாடி தயங்கினாள் அவள். பஸ் நிலையத்தில் பலரது கண்கள் அவள் மீது பதிவதையும் உணர்ந்துதான் இருந்தாள். அதே சமயம் அங்கு நின்றவர்களில் எவரேனும் அவளுக்காக உதவ இப்படி முன் வந்திருப்பார்களா?

மேலும், ஆட்டோவில்தானே போகிறாள்? ஸ்கூட்டரல்லவே... அருகில் உட்கார்ந்து போய்விட்டால்... ஒரு வேலை செய்யும் சுதந்திரமான பெண் எதற்காகக் கவலைப்பட வேண்டும்?

மறுபேச்சின்றி ஆட்டோவிற்குள் தாவி அமர்ந்து கொண்டாள். ''தாங்க்யூ வெரி மச்'' முறுவலுடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''காத்திருக்கேன்... உங்களுக்கு உதவி செய்வதிலே எனக்கு ரொம்ப உற்சாகம் ஏற்படுகிறதே!'' குறும்பாகக் கூறியவனது கண்களில் தென்பட்ட அந்த மிருதுவான, இதமான பார்வை அவளை என்னமோ செய்தது.



காது மடல்கள் சூடேறிப் போனது போல்... முகமெல்லாம் சிவந்து கன்னங்களில் செம்மையேற ஒருவிநாடி அவள் நிலைதடுமாறிப் போனாள்.

ஆட்டோ ஒரு குலுக்கலுடன் புறப்பட்டதும் திடுமென தன்னை சமாளித்தவளாய் ''வீட்டு வாசல்வரை கொண்டு விடணும்னு இல்லே. தெரு முனையிலேயே இறக்கிவிட்டா போதும்!'' என்று முனகினாள்.

''ஏன்? சின்னம்மாகிட்ட பயமா?''

''இல்லே இல்லே... உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்'' அவசரமாக மறுத்த அவளைப் பார்த்து தன் வரிசைப் பற்கள் தெரியச் சிரித்தான் அவன்.

அவளது வற்புறுத்தலுக்கு இணங்கி, தெருமுனையில் ஆட்டோவை நிறுத்திவிட்டு இறக்கிவிட்டவன், ''இப்படி பிடிவாதமா மழையில நனைஞ்சுகிட்டுப் போனால்சளி, ஜுரம் வரும்'' என்றான் கிண்டலாக.

''வரட்டுமே!''

''நாளைக்கு ஆபீஸ்ல பாக்க முடியாதே!'' குறும்புடன் சிரித்தபடி 'டாடா' காட்டினான். வெட்கத்துடன் பதிலுக்கு கையை அசைத்தபடி அந்த கொட்டும் மழையில், ஏதோ ஒரு சினிமாக் கதாநாயகிபோல உல்லாசமாக அவள் நடந்து வீடு வந்து சேர்ந்ததுதான் தெரியும் அவளுக்கு.

''எருமை மாடு கணக்கா மழையில இப்படியா சொட்டச் சொட்ட நனைஞ்சு கொண்டு வருவாங்க?''

சின்னம்மா, அதட்டியபடி வரவேற்ற போதுதான், சுய உணர்வு பெற்றாள் அவள்.

''குடை இல்லே சின்னம்மா. அதனாலே...'' குளறியபடி, கூடத்துக் கொடியில் கிடந்த துண்டை எடுத்துத் தலையைத் துவட்டத் தொடங்கினாள்.

''பிரகாசம் பிடுங்கிட்டுப் போயிட்டான். அதனால

மழையில நனைஞ்சேன்னு சொல்ல வறியா. சரி! சேலையை மாத்திகிட்டு வா... காப்பி, பலகாரம் தரேன்'' கடுகடுத்தபடி உள்ளே மறைந்தாள்.

அத்தனை துன்பங்களும் கூட அவளுக்கு அப்போது இலேசாகி விட்டதைப் போலிருந்தது எதனால்?

''என்ன டீ ஆறிப்போய் கிடக்கு! சாப்பிடலே?'' பார்த்திபன் குரல் கேட்டதும், திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

''ஃபைல்ஸ் பாக்கற மும்முரமா? ஆயிட்டுது. இன்னும் ஒரு அரைமணிதான்'' என்றவன், தாழ்ந்த குரலில் ''ஸ்கூட்டர் ரிப்பேராகி விட்டது. நானே கொண்டுவிடறேன். கவலைப்படாதே'' என்றான்.

நீங்கள் என்பதிலிருந்து நீ என்று அவன் அழைக்கும் வரை நெருக்கம் வளர்ந்துவிட்ட போதிலும், இன்னமும் அவனிடம் தனது குடும்ப வரலாற்றைப் பற்றி எடுத்துக் கூறும் துணிவு அவளிடம் இருக்கவில்லை.

ஒருவேளை அவளையே அவன் தவறாக நினைத்துக் கொண்டுவிட்டால்...? அவளையும் சியாமளா போன்றவள் என்று அலட்சியமாக நடத்தத் துவங்கினால்...? ஆண்கள் மத்தியில் பழகும்போது ஒரு பெண் எவ்வளவுக்கு எவ்வளவு கௌரவமும், மதிப்பும் பெறும்படி நடந்து கொள்கிறாளோ அவ்வளவுக்கு ஆண்களால் உயர்வாக மதிக்கப்படுவாள் என்ற உண்மையை அவளும் புரிந்து கொண்டிருந்தாள்.

பரஸ்பரம் நம்பிக்கை ஏற்படும் அளவிற்கு அவனிடம் அவளது மனம் முழுதுமாக ஈடுபடவில்லை என்றுதான் அவள் எண்ணி வந்திருந்தாள்.

''முதல்ல டீ... பிறகு வேலை'' வற்புறுத்தலாகக் கூறியபடி அடுத்த மேஜையருகில் சென்றான் அவன்.

ஒரே விழுங்கில் டீயைக் குடித்து முடித்தவள் முழு மூச்சுடன் செயல்படத் துவங்கினாள். எல்லாவற்றையும்



முடித்துவிட்டுத் தலை நிமிர்ந்தபோது மணி ஏழு அடித்து விட்டிருந்தது. புற்றிலிருந்து கிளம்பிய ஈசல்கள் போல் ஆபீஸ் கும்பல் கலைந்து போயிருந்தது. வெளியே வந்த உமா, அவசரமாக பஸ் நிலையத்தை அடைந்தபோது, மழை இருட்டு நன்கு கவியத் துவங்கியிருந்தது.

தெருவிளக்கின் வெளிச்சத்தில் பஸ் நிலையத்தில் அதிக கும்பல் இல்லாததைக் கவனித்தாள். நின்றவர்களில் ஒரு சில முகங்கள்...! பார்க்கவே சந்தேகத்திற்குரிய விதமாக பத்திரிகைகளில் பரவலாக விளக்கப்படுகிற ஜேப்படி, பெண் திருடி, மோசக்கார முகங்கள் போல் தோன்றியதும் அவள் பயத்தால் வெலவெலத்துப் போனாள்.

இருப்பினும் வெளிக்குப் பொய்யான துணிச்சலை வரவழைத்துக் கொண்டு நிலையத்தில் நின்றவளை ஓரக்கண்ணால் பார்த்த ஒரு தாடிக்காரன் லேசாக சீட்டியடித்தான்.

இரட்டை அர்த்தமுள்ள சினிமா பாட்டு. பயத்தால் உமாவின் கைகால்கள் உதறின. சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்தியபடி 'பார்த்திபன் சொன்னதைக் கேட்காமல் கௌரவப் பிரச்னையாக நினைத்துக்கொண்டு ஓடி வந்தது பிசகுதான்' என உள்ளூர நினைத்து தவித்துப் போனாள்.

தாடிக்காரன் அருகில் நின்றிருந்த மற்றொரு தொங்கு மீசையிடம் ''ஏண்டா! துணையோடல்லாது தனி வழி போகேல்னு நீ கேட்டதில்லியா?'' கிண்டினான்.

மீசை உரக்கச் சிரித்தது. ''நான் வேணா வரவா?''

''ரெண்டு பேருமே போவோமே'' பஸ் நிலையத்தில் வேறு எவரும் அருகில் இல்லை என்ற தைரியம்! உமாவின் நெஞ்சு படபடத்தது. கிலியில் நாக்கு உலர்ந்து போயிற்று.

ஓடிவிடலாமா...?

'சர்' ரென்று ஸ்கூட்டர் சப்தம் ஒலிக்க அங்கு வந்து நிறுத்தினான் பார்த்திபன்.

''அப்படி ஒரு அவசரமா. நான் தான் சொன்னேன் இல்லியா? ம்! ஏறு...'' உரிமையுடன் அதட்டியபடி அவளைப் பார்த்தான்.

மீசையும் தாடியும் ஏக்கப் பெருமூச்சு விட அவள் ஸ்கூட்டரின் பின்புறம் தொத்திக் கொண்டாள்.

வீட்டு வாயிலில் மிகத் தைரியமாக ஸ்கூட்டரில் வந்திறங்கிய உமாவைக் கண்டதும் அதிர்ந்து போனாள் அலமேலு.

''மிஸ்டர் பார்த்திபனுக்கு கொஞ்சம் காப்பி குடுங்க சின்னம்மா'' என்று உத்தரவிட்ட உமாவை கோபமும் வியப்பும் ஒருங்கே எழ உற்று நோக்கினாள் அவள்.

''நீங்க உக்காருங்க பார்த்திபன். இதோ வந்திட்டேன்.'' உபசரித்தபடி உள்ளே சென்றவளை எரித்து விடுவதுபோல பார்த்துவிட்டு சமையலறைக்குள் நுழைந்தாள் அலமேலு.

## 14. சிறை மீண்டாள் சியாமளா

சியாமளா அப்போதுதான் கண் விழித்து எழுந்தாள். செம்பூரில் உள்ள அந்த மகளிர் பாதுகாப்பு இல்லத்திற்கு அவள் அழைத்துவரப்பட்டு ஒரு சில தினங்களே ஆகிவிட்டிருந்தன.

காலை எழுந்ததும் பிரார்த்தனைக் கூடத்திற்குக் கூடச்செல்ல முடியாதபடி அவள் முகச் சோர்வுற்றிருந்தாள்.

''இந்தப் பெண் மனமும் உடலும் மிக்க சோர்வடைந்து போயிருக்கிறாள். அவளை சற்று ஓய்வாக இருக்க விடுங்கள்.'' இல்லத்தின் தலைவி உத்தரவிட்டதன் பேரில் அவள் அங்கு அந்த அறையில் தனியாகவே இருந்தாள்.

எத்தனை நாட்கள் இப்படி இருக்க முடியும்? அவளது வருங்காலம் என்ன ஆகும்?



சியாமளா முதன் முதலாக வாழ்வைப் பற்றி சிந்திக்கத் துவங்கி இருந்தாள். மைனர் பெண்ணாக ஊரை விட்டு ஓடி வந்த பேதை சியாமளா இப்போது மாறிப் போனாள்.

அவள் பார்த்த உலகம் அவளது வெகுளித்தனத்தை பயன்படுத்தி அவளையே சாக்கடையில் தள்ளப் பார்த்த நரகம். ஒரு முறை அந்த நரகத்தில் வீழ்த்தப்பட்டவரை மீண்டும் கரையேற்றுவது என்பது....? அப்பப்பா.... நினைக்கும்போதே சியாமளாவிற்கு மேனி நடுங்கியது.

அன்று பலவந்தமாக டாக்சிக்குள் அவளைக் கடத்திக் கொண்டு போன பாபுவும், வசந்தனும்... இப்போது எண்ணினாலும் சியாமளாவின் தொண்டை பயத்தால் வரண்டு போகிறது.

''விடு! விடு.... என்னை விடு...'' திமிறினாள். முரண்டு பிடித்தாள். அவளது இருகைகளையும் பின் புறமாக முறுக்கிப் பிடித்த வசந்தன் பற்களைக் கடித்தான்.

''சத்தம் போட்டே... ஆட்டம் க்ளோஸ்.'' தன் இடுப்பிலிருந்து கத்தியை உருவி ''பாவ்லா'' காட்டினான் பாபு.

''பாவிகளா! இந்த டாக்சிக்காரனும் இதற்கு உடந்தையா? ஐயோ... கருமமே கண்ணாக இத்தனை கும்பல் சாலைகளில் போகிறதே? ஒருத்தர் கண்ணில் கூடவா என் நிலை... அவஸ்தை படவில்லை?''

சியாமளா திமிறினாள். கிரிச்சிட்டாள். ஊஹூம் 'கார்வாலி' யிடம் அவளைக் குண்டுக் கட்டாகக் கொண்டு தள்ளும் வரை அந்த ராட்சசர்கள் விடவில்லை.

அந்தப் பழைய கால கட்டிட வாசலில் டாக்சி நின்றதும் அவளை அவர்கள் தர, தரவென இழுத்துச் சென்றதும் ஏதோ சினிமாக் காட்சியைப் பார்ப்பதைப் போல மற்றவர்கள் ரசித்தனர்.

அசிங்கமான உடை அழகிகள் அவளது திமிறலையும் கூச்சலையும் பார்த்து முகத்தைக் கோணியபடி சிரித்தனர்.

காலின் கீழ் தள்ளப்பட்ட சியாமளாவைப் பின்னலைப் பிடித்துத் தூக்கினாள் கார்வாலி!

எலிக் குஞ்சு போல சியாமளா வலியால் துடி துடித்துப் போனாள்.

''அச்சா! தப்பி ஓடுறியா? இரு... இரு...'' தமிழைக் குதறிய வேகத்தில் ஆத்திரத்தோடு அழுத்தமாக பட்டுக் கன்னங்களில் மாறி மாறி அறைந்தாள் 'கார்வாலி.'

''அம்மா! அம்மா!'' சிறு குழந்தைபோல் அலறினாள் சியாமளா.

''கபர்தார்!'' கண்களை உருட்டி விழித்த கார்வாலி சியாமளாவை பலவந்தமாக இழுத்துச் சென்று ஒரு அறைக்குள் தள்ளி வெளியே தாளிட்டாள்.

கூண்டுக்கிளியாகிவிட்டோம். இனி தப்ப வழியில்லை என்று விளங்கிக் கொண்ட சியாமளாவுக்கு திடீரென விழிப்பு ஏற்பட்டது.

சியாமளா போன்ற பெண்களுக்கு காலம் கடந்துதான் ஞானம் வரும்.... கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதைப் போன்று.

''காளியாத்தா! என்னைக் காப்பாத்து... என்னை எப்படியாவது காப்பாத்தும்மா. நான் செய்ததெல்லாம் பிசகுதான். எங்கப்பா கால்ல விழுந்து மன்னிப்பு கேக்கறேன். என்னைக் காப்பாத்து...'' ஓயாமல் அவள் காளிபுரத்தாளை வேண்டிக் கொள்ளத் துவங்கினாள்.

அழுது, அழுது சோர்ந்து கிடந்தவள், கதவு திறக்கப்படும் ஒலிகேட்டு திடுக்கிட்டு எழுந்தாள்.

முதன் முதலாக சந்தித்த அந்த மெலித்த பெண்....! கலவரக் குறியுடன் அவளிடம் வந்தாள். ''இந்த இடத்தை விட்டு ஓடு.



போலீஸ் வந்திருக்கு'' பரபரப்பாகக் கூறி விட்டு வெளியே ஓட்டம் பிடித்தாள்.

சியாமளிக்கு எதுவும் விளங்கவில்லை. தடதடவென மாடிப்படிகளில் பூட்ஸ் ஒலி கேட்டது.

சியாமளா அறையை விட்டு வெளியே வந்தாள். கார்வாலியும், வேறு சில பெண்களுமாக, பின் பக்கமாக உள்ள படிகளின் வழியே ஓடி மறைவதைக் கண்டாள்.

அவளைப் போல ஒருசில பெண்கள் ஓட வழியின்றி, படியேறி வரும் போலீஸாரிடமே மாட்டிக் கொள்வதையும் பார்த்து குழப்பமாக நின்றாள்.

''அச்சா! சலோ மேரி ராஸி'' ஒரு போலீஸ்காரன் கையிலிருந்த குறுந்தடியால், சியாமளாவின் முதுகைத் தொட்டான்.

துள்ளி விலகிய அவள், அவனை முறைத்துப் பார்த்தாள். ''எங்கே போகணும்?''

''க்யா?'' என்றான் போலீஸ்.

அவளைப் போல பிடிபட்ட மற்றொருத்தி 'கிரேசி' தமிழ் நாட்டைச் சேர்ந்தவள். சியாமளாவின் மொழிப் பிரச்சனை அவளுக்குப் புரிந்து விட்டது.

''நீ புதுசா? இப்படித்தான் நம்பளை புடுச்சி, போலீஸுக்குக் கூட்டிப் போவாங்க... புறப்படு'' என்றாள்.

''போலீஸா?'' சியாமளாவிற்கு துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டது.

''உன்னைப் பார்த்தா சின்னப் பொண்ணா இருக்கே, மைனர் வயசா. கோர்ட்டிலே, நீதிபதி உன்னை, பாதுகாப்பு இல்லத்திலே ரிமாண்டிலே வைக்கச் சொல்லுவார். பிறகு தீர்ப்பான பிறகு உன்னை அங்கேயே வச்சுடுவாங்க.''

அவமானத்தினால் உடல் குறுகிப் போனாள் சியாமளா.

அவளது குடும்பத்தின் கௌரவத்தையே குலைத்துவிட்டாளே அவள். 'அப்பா! காளிராஜபுரத்திலே நீங்கள் மதிப்பும், மரியாதையுமாக வாழ்வதை - குடும்பத்தையே கெடுக்க வந்த கோடாரிக் காம்பாக நான் ஆக்கிவிட்டேன்.'

கிரேசி அவளது கையைப் பற்றி நடத்தியபடி, ''கவலைப் படாதே. எப்படியாவது ஜாமீனில் நம்மை விடுவித்துக் கொண்டு போவார்கள்'' அடிக்குரலில் கிசுகிசுத்தாள்.

சியாமளா கண்ணீருடன் அவளை உற்றுப் பார்த்தாள். அந்தத் தொழிலில் ஊறி, காய்த்துப் போன முகபாவமும் முகத்தில் ஒரு அலட்சியமும் கிரேசியிடம் தெரிந்தன.

வழி முழுவதும் போலீஸ் வேனில், அருகே அமர்ந்திருந்த கிரேசி, சியாமளாவிற்கு, அவள் எதிர் நோக்க வேண்டிய நடை முறை விதிகளைப் பற்றி விவரமாகக் கூறி விட்டிருந்தாள்.

அனுபவசாலி போலும். சியாமளா பதில் கூறவில்லை. வெறுப்பும், கசப்பும் அவளை ஊமையாக்கி விட்டிருந்தன.

கோர்ட், ரிமாண்ட் இத்யாதி விவரங்களைத் தாண்டி, இந்த மகளிர் பாதுகாப்பு இல்லத்திற்கு அவள் அழைத்து வரப்பட்டபோது, பயங்கர ஓநாய் குகைக்குள்ளிருந்து தப்பி வெளியே வந்தவள் போல் மனமும், உடலும் சோர்ந்து போயிருந்தாள்.

கடுமையான காய்ச்சலும் அவளை வாட்டி எடுத்தது. சமூக சேவகி அம்மாள் ஒருத்தி அவளிடம் மிக்க அனுதாபத்துடன் அடிக்கடி வந்து பார்த்துப்பேசிப் போனாள்.

இல்லத்தின் டாக்டர், அவளுக்கு சிகிச்சை அளித்ததும், காய்ச்சலிலிருந்து எழுந்து நடமாடத் துவங்கியதும், தன்னைப் பற்றிய சுய சிந்தனையிலேயே அதிக நேரத்தை செலவிட்டாள்.

மீண்டும் கிராமத்திற்கு போகமுடியுமா? எந்த முகத்தை வைத்துக் கொண்டு போக முடியும்?

சமூக சேவகி மூலம் அவள் ஒரு சில விஷயங்களையும்



தெரிந்து வைத்துக் கொண்டிருந்தாள்.

மேஜரானப் பெண் சியாமளாவை பாதுகாப்பு இல்லத்தில் ஐந்து வருடம் வைத்துக் கொண்டு, அவளுக்கு மறுவாழ்வு அளிப்பார்கள். ஏதேனும் ஒரு கைத்தொழில் பயிற்சி பெற்று அங்கேயே வேலை தேடிக்கொள்ளலாம்.

பின்னர் பாதுகாப்பு இல்லத்து ஹாஸ்டலில் அவள் வேலை செய்யும் சமயம் தங்கி, ஒரு சிறுதொகையை செலுத்தி விட்டுத் தொடர்ந்து தங்கி, இருக்க முடியும்.

சியாமளாவினால் தீர்மானமாக செயல்பட இயலவில்லை. புரியாத வயதின் ஆசைகளால் உந்தப்பட்டு, வழி தவறிப்போக இருந்தவள் அவள். நல்ல வேளையாக, இந்த பாதுகாப்பு இல்லத்தில் அடைக்கலமாகி இருக்கிறாள்.

சமூக சேவகி, அவளிடம் பக்குவமாகப் பலமுறை அணுகி, பேச்சுக் கொடுத்தும், சியாமளா ஆரம்ப நாட்களில் பிடிவாதமாகத் தன்னைப் பற்றிய உண்மைகளைக் கூறாது மறைத்து விட்டிருந்தாள்

''எனக்கு உற்றார், உறவினர் எவரும் இல்லை'' என்று அடித்துச் சொல்லி விடலாமா, அவள் மனம் துடித்தது. ''வேண்டாம்'' உள் மனம் அவளைப் பிடித்து நிறுத்தியது.

''என்ன தனிமையில் ஆலோசனையா!'' தலைவியின் கம்பீரமான குரல் கேட்டுத் தூக்கி வாரிப் போட்டவளாய், எழுந்தாள் அவள்.

''உட்காரு. உன்னிடம் மனம் விட்டுப் பேச வேணும் என்றுதான் நானே வந்தேன்'' என்றபடி அறையிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்தார் தலைவி.

தடிமனான மூக்குக் கண்ணாடிக்குள்ளிருந்து அவளைக் கருணையுடன் பார்த்த விழிகள் - கஞ்சி முட முடப்பில் நூல் சேலை. எளிமையான தோற்றம்.

இலேசாக சிரித்தபடி, ''அப்பா அம்மா எல்லோரும்

இருக்காங்க இல்லையா? எதுக்காக மறைக்கிறே?''

சியாமளா விக்கித்துப் போனாள். ''மேடம் உங்களுக்கு... எப்படி தெரியும்?''

''மேடத்திற்கு மனோதத்துவம் தெரியும், உன் வாயிலிருந்தே உண்மையை வரவழைத்து விட்டேன் பாத்தியா!'' தலைவி சிரித்தபடி அவள் அருகில் வந்து, தலையைக் கோதினாள் அன்புடன்.

''பாவம்! தெரியாம, தவறு செய்தே. அதைத் திருத்தி கிட்டு வாழத் தெரிஞ்சு கொள். பேசாமல், உங்க மனுஷர்களை வரவழைக்கிறேன். அவங்க கூட, ஊர் போய் நல்லபடியா வாழக் கத்துக் கொள்ளு.''

சியாமளா அச்சத்துடன் நிமிர்ந்தாள்.

''ஏன் பயப்படறேம்மா, தைரியமா இரு. என்னை உன் அம்மா மாதிரி நினைச்சுக் கொள். சொந்த அம்மாகிட்டக் கூடவா பொய் சொல்லணும்?''

அதற்குமேல் சியாமளா உடைந்து போனாள். ''ஓ'' வென்று அழுதபடி, தலைவியின் கைகளைப் பற்றி முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

உடல் முழுதும் குலுங்க அழுது முடித்தாள்.

தலைவி பொறுமையாக, சியாமளாவின் உண்மைக் கதையை மிக்க அனுதாபத்துடன் கேட்டாள்.

பெருமூச்சு விட்டாள் தலைவி. ''நல்லது உன் அப்பாவிற்கு விவரம் எழுதி, உன்னை அவரிடம் சேர்ப்பிக்க ஏற்பாடு செய்கிறேன்.''

''எனக்கு ஒரே பயமா இருக்கு மேடம்'' நடுங்கும் கரங்களுடன், தலைவியின் கையைப் பற்றினாள் சியாமளா.

''பயப்படாதே. உன் கஷ்டங்கள் தீர்ந்து நல்வாழ்வு கிடைக்க, நாங்கள் வழி செய்வோம். ஆனால், சில மாதங்கள்



ஆகலாம். அதுவரை பொறுமையாக இரு.'' அவளைத் தட்டிக் கொடுத்தாள் தலைவி.

''சில மாதங்களாகுமா?'' சியாமளா கவலையுடன் வெளியே பார்த்தாள்.

## 15. கடிதம் வந்தது

மழை விட்டு, சிறிது வானம் வெளுத்திருந்தது. உமா இதுதான் சமயமென்று, டிபன் டப்பாவை, தோல்பைக்குள் கவனமாகத் திணித்தபடி, தெருவில் இறங்க ஆயத்தமானாள்.

பின்னாலேயே வந்த அலமேலு, ''சொன்னது கவனம் இருக்கட்டும், உனக்குத்தான் ஆபீஸுக்குப் போனா... எல்லாமே மறந்து போவுதே'' குத்தினாள் வார்த்தைகளால்.

கசப்பை விழுங்கியவளைப் போல, திரும்பிப் பார்த்தாள் உமா. ''ஒரு வாட்டி சொல்லியாயிட்டுது இல்லியா? பிரகாசம் பள்ளிக்கூடத்துல உல்லாசப் பயணம் போறாங்க - பணம் வேணும்னு கேட்டீங்க. வாங்கித் தரேன்னு சொல்லிட்டேன். சும்மா...'' வார்த்தைகளை முடிக்காமல் வெடித்தாள் அவள்.

''எல்லாம் எனக்குத் தெரியும். பூனை மாதிரி இருந்து கிட்டு, இப்ப ஏன் புலியா பாயறேன்னு.''

''தெரியுதில்ல. சும்மா இருங்க. எனக்கு ஆபீஸுக்கு நேரமாச்சு.'' வெடுக்கென்று பதிலிறுத்தவளாய் தெருவில் இறங்கினாள்.

''உன் தங்கச்சி போல, தாறுமாறா, நீயும் ஏதாச்சும் செய்திட்டே.... அவ்வளவுதான். அரளி விதையை அரைச்சு நானும் என் மகனும் குடிச்சிடறோம். தொல்லை இல்லாம, நீ சந்தோஷமா ஊரைச் சுத்து.''

451936/ 6221053
தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

அலமேலுவின் கட்டைக் குரல் எட்டுஸ்தாயி அளவிற்குக் கேட்டது. உமா, வேகமாகத் தெருவில் இறங்கி, பஸ் நிலையத்திற்கு வந்தாள்.

அப்போதுதான் வந்து நின்ற பஸ்சிற்குள், பாய்ந்து ஏறி, கூட்டத்திற்குள் நீந்தியபடி, மெல்ல ஒரு ஆசனத்தருகில் சாய்ந்தபடி நின்றாள். கவனமாக, ஏற்கெனவே கையினுள் வைத்திருந்த சில்லரையை கண்டக்டரிடம் கொடுத்து டிக்கெட்டை வாங்கியதும் ''அப்பாடா'' என்று இருந்தது அவளுக்கு.

அவளருகே இருந்த ஆசனத்தில் அமர்ந்திருந்த பெரியவர், அடுத்த 'ஸ்டாப்பிங்'கில் இறங்க வேண்டியவர் போலும்.

உமாவைக் கண்டதும், எழுந்து கொண்டவராய், ''நீங்க உக்காருங்கம்மா'' என்று உபசரித்தார்.

'தாங்க்ஸ்' உமா சட்டென அமர்ந்தவள், ஜன்னல் வழியே வெளியே நோக்கினாள். கண்டக்டர் விசிலைத் தொடர்ந்து, பஸ் உறுமிக் கொண்டு புறப்பட்டது.

உமாவிற்கு அன்று மழைநாள் சம்பவம் பளீரிட்டது. கொட்டும் மழையில், ஸ்கூட்டரில் வந்து இறங்கியவளை எரித்து விடுவது போல் பார்த்த சின்னம்மா... அவள் காப்பி கொடுத்து உபசரித்த பார்த்திபனை கண்களால் விரோதமாக வெட்டி விடுவது போல் பார்த்த சின்னம்மா...? பார்த்திபன் தலை மறையும் வரை, கோபத்தை அடக்கியபடி இருந்தாள்.

பிறகு... எரிமலை வெடித்து சிதறியது. என்ன மாதிரி வார்த்தைகள். அக்னிக் குழம்பைக் காட்டிலும் சூடாக கத்தி முனையைக் காட்டிலும் கூராக...

''ஏண்டி? எத்தனை நாளா இப்படி ஆட்டம் போட்டுக்கிட்டிருக்கே?''

''திடுக்கிட்ட உமா, ''ஆட்டமா? என்ன உளறுகிறீங்க?'' என்று அதட்டினாள்.



''ஆமாண்டி... நீ சம்பாதிக்கிற திமிரு... உங்கிட்ட நானும் என் பிள்ளையும், கையேந்தி நிக்கிறோம். அது, என் தலைவிதி'' அலமேலு ஓலமிட ஆரம்பித்தாள்.

''சின்னம்மா! இப்ப என்ன நடந்திச்சுன்னு இப்படிக் கத்தறீங்க'' பொறுமை இழந்தவளாய் கேட்டாள் உமா.

''இனிமே என்ன நடக்கணும்? அவன் பின்னால ஸ்கூட்டர்ல வந்து வீட்டு வாசல்ல எறங்கற அளவு துணிஞ்சிட்டே... இனிமே, நீ ஒழுங்கா இருப்பேன்னு என்ன நிச்சயம்...'' இதற்கு மேல் அலமேலு பேசிய கடூரமான வார்த்தைகளை எவராலும் ஜீரணம் செய்ய முடியாது.

உமாவின் .தேகமெங்கும் அனலாய் எரிந்தது. 'சீ! நீ பெண்ணல்ல. அரக்கி.' என்று ஓங்கிக் கூச்சலிட வேண்டும் போல மனம் புரட்சி செய்தது.

'அப்படித்தான் இருப்பேன். உனக்கு விருப்பம் இல்லாட்டி, வீட்டைவிட்டு ஒழிஞ்சு போயிடு' உரக்கக் கத்தி ரகளை செய்ய நாக்குத் துடித்தது.

ஆனால் அவளுக்கு வந்தது என்னவோ கண்ணீர்தான். துன்பங்களும் துயரங்களும் அவளைக் கோழையாக்கியதோடு மட்டுமல்ல, எதிர்த்துப் பேசும் திறனையும் குறைவாக்கி விட்டிருந்தது.

பதிலே பேசாமல் அன்றிரவு உண்ணவும் பிடியாதவளாய் பாயை விரித்துப் போட்டுப் படுத்துவிட்டாள்.

உறக்கமின்றி படுக்கையில் புரண்டவளுக்கு பலப் பல எண்ணங்கள்... அப்பாவின் சாந்தமான முகம், கனவில் தோன்றியது.

'உமா! இந்த அப்பா, இப்படி ஒரு பயங்கரச் சுமையை உன் தலையில் ஏற்றிவிட்டேன் என்று கோவிக்கிறியா?'

'இல்லவே இல்ல அப்பா. நீங்களும் என்கூட இல்லாம இருக்கீங்களே... அதுதான் என் கோவம்... ஏன்னா என்னோட

சுமையை உங்க மேலேயே தாங்கிக்கிட்டு, பரிவோடு என்னைப் பாத்துக் கொள்வீங்க இல்லையா?'

அலமேலு, தலை விரி கோலமாக, கண்களை உருட்டியபடி நின்றாள். ''நானும், என் பிள்ளையும் விஷத்தை சாப்பிட்டு செத்துப் போறோம். அரளி விதை, வேர்னு எதையாச்சம் அரைச்சு முழுங்கிடறோம். எங்க பொணம் விழுந்திட்டா நீ சுகம்மா வாழ்வே'' கத்திக் கூச்சலிட்டாள்.

தான் பெற்ற பெண்ணை அடக்கி ஆள முடியாத தாய்... எவளோ பெற்றவளின் உதவியால் வாழ்ந்து கொண்டு, அவளையே சாடிக் கொண்டு... சே! இது போன்ற வாழ்வு உமாவிற்குத் தேவைதானா?

வெறுப்பும், கசப்பும் நெஞ்சைப் பிடித்துக் கொண்டது போல் இருந்தது. எதிர் காலமே சூன்யமாகிவிட்டது போன்ற ஓர் அச்சம் அவளை அலைக்கழித்தது.

''பார்த்திபனை அவள் மனமார விரும்பினாள். அவனது துணை அவளுக்குத் தேவை. தியாகம் என்ற பெயரில் நன்றியே இல்லாத சின்னம்மாவிற்கு உழைத்துக் கொட்டுவதைவிட, அவளது மனதிற்கு உகந்தவனை, அவளை அவளுக்காகவே மதிக்கும் பார்த்திபனை கொள்ளத் தயார் என்று கூறிவிட்டால்...

பார்த்திபன் இதை எப்படி வரவேற்பான் என்ற அச்சமும், அவளுள் எழுந்தது. என்ன இருந்தாலும், ஒரு பெண் தானாக வலியச் சென்று ''உங்களை நேசிக்கிறேன். என்னை மணந்து கொள்வீர்களா?'' என்று கேட்கும் துணிச்சல் ஏற்படுவதுண்டா?

பார்த்திபன் பல முறைகள் அவளிடம் இதுபற்றிப் பேச முயன்ற போதெல்லாம், உமாவே அதைத் தவிர்த்து வந்திருக்கிறாளே!

முதல் காரணம், சியாமளா செய்துவிட்ட அவமான கரமான செயல், இரண்டாவது காரணம் உமாவின் சம்பளத்தை நம்பி வாழும் சின்னம்மா. தம்பி பிரகாசத்தின் எதிர்காலம்.



பார்த்திபனிடம் இன்று எப்படியாவது அவள் தங்கள் குடும்ப நிகழ்ச்சிகளை விவரித்தே ஆக வேண்டும்.

''ஸ்டாப்பிங் ஹோல்டன்'' கண்டக்டர் உரக்கக் கூறியபடி ஒரு விசிலும் அடித்து வைத்தான்.

உமா, பஸ்ஸின் அதிர்வில் சட்டென நினைவிற்கு வந்தாள். அவளது மனதில் புதியதொரு பலம், துணிச்சல், ஏன் ஒரு தீர்மானமே உருவாகி விட்டிருந்தது.

ஆபீசில், துவங்குவதற்கு பத்து நிமிடங்கள் முன்னதாகவே உட்காருபவர்கள் என்ற பெருமை, உமாவிற்கும் பார்த்திபனுக்கும் உண்டு.

அவள் தனது இடத்தில் மேஜை மீதுள்ள தூசிகளை அப்புறப்படுத்தியபடி, நின்றபோது பார்த்திபன் அவளருகே வேகமாக வந்தான்.

''குட்மார்னிங் உமா!''

''குட்மார்னிங்.''

அவனை நேராகப் பார்த்து முறுவலித்தாள்.

''இதையெல்லாம் நீ ஏன் செய்யறே? பியூன் கந்தசாமி வருவானே... பேசாம இரு...'' உரிமையாகக் கடிந்து கொண்டான்.

''அவன் வர்றவரை, இப்படியே நின்னுகிட்டு இருக்கணுமா?''

''ஏன் எங்கிட்ட பேசிக்கிட்டிருக்கக் கூடாதா?'' குறும்பாகக் கண்களைச் சிமிட்டினான்.

''இது ஆபீஸ். பொது இடம் இல்லே...''

''நான் சொன்னதை எங்கிட்டயே திருப்பறியா? நீ. சாமர்த்தியக்காரிதான்... இல்லாட்டி, இந்த பார்த்திபனை ஒரே பார்வையில் வீழ்த்தி இருப்பியா?''

குப்பென முகம் சிவந்தாள் உமா. ''நானும் உங்ககிட்ட

எங்க குடும்பத்தைப் பத்தின விவரம் எல்லாம் பேசியாகணும். அதுக்குப் பிறகு...''

யாரோ வரும் பூட்ஸ் ஒலி கேட்டது. ''சாயந்திரம் கடற்கரைப் பக்கம் பேசலாம். நீ பஸ் நிலையத்தில் காத்திரு. கூட்டிக்கிட்டுப் போறேன்'' அவசரமாகக் கூறியபடி அவ்விடத்தை விட்டு அகன்றான் அவன்.

மாலை எப்போது வரும் என்று உமாவின் மனம், தவித்துக் கொண்டிருந்தது. மேஜை மீதிருந்த ஃபைல்களைக் கூடத் தொட மனம் வராதவளாய், பார்த்திபனிடம், எப்படித் தங்கள் குடும்பப் பிரச்சனைகளை எடுத்துச் சொல்வது என்ற பிரமிப்பில் அமர்ந்திருந்தாள்.

''மேடம்! உங்க பேருக்கு ஒரு 'லெட்டர்' வந்திருக்குது'' பியூன் மேஜை மீது வைத்துச் சென்ற கடித உறையைக் கண்டு திகைத்துப் போனாள் அவள்.

கையில் எடுத்துப் பார்த்தவளின் திகைப்பு பின்னும் அதிகரித்தது.

முன்பின் தெரியாத கையெழுத்து, தபால் முத்திரையை உற்றுப் பார்த்தாள். விளங்காதவளாய் உறையை மறுபுறம் திருப்பிப் பார்த்தாள்.

'யாராக இருக்கும்...' உறையை மெல்லக் கிழித்தவளுக்கு வேறு ஒரு அதிசயம்... அதனுள் இரு கடிதங்கள் இருந்தன.

முதல் கடிதத்தில் காளிராஜபுரம், பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட் உமாவிற்கு ஆசிகளுடன் எழுதிய கடிதம் ரத்னச் சுருக்கமாக இருந்தது.

''உன்னை நான்தான் வேலைக்கு சிபாரிசு செய்து அனுப்பினபடியால் சுலபத்தில் உன் அலுவலக விலாசம் எனக்குக் கிடைத்தபடியால் இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

உன் தகப்பனார் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. அதை உடனடியாக உனக்கு அனுப்பி வைக்கிறேன். ஏதேனும் உதவி



தேவையானால் எழுதவும்.''

கேள்விக் குறியுடன் அந்த 'இன்லண்டு' உறையை எடுத்தாள். காளிராஜபுரத்திற்கு அவள் தகப்பனார் பெயருக்கு வந்த கடிதம். யார் எழுதி இருப்பார்கள். மறுபக்கம் விலாசத்தைப் பார்த்தவளுக்கு 'மகளிர் பாதுகாப்பு இல்லம் செம்பூர்' என்ற விலாசம் தெரிந்தது.

வியப்புடன் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள் உமா. இல்லத் தலைவியின் முத்திரையுடன் சியாமளாவைப் பற்றிய விவரங்கள் அடங்கிய கடிதம்.

''சமூக சேவகி மூலம் விவரமாக உங்கள் மகளிடமிருந்து உங்கள் வீட்டு விலாசத்தை அறிந்து கொண்டோம். சூழ்நிலைக் கோளாறினால் உங்கள் மகள் பொருந்தாத இடத்தில் சிறை வைக்கப்பட்டிருந்தாள். போலீசார் உதவியுடன் அவளை மீட்டு எங்கள் இல்லப் பாதுகாப்பில் வைத்திருக்கிறோம். அவள் உங்கள் மகள்தான் என்ற தக்க ஆதாரங்களுடன் இங்கு புறப்பட்டு வந்து அழைத்துச் செல்லவும்.''

உமாவின் உள்ளத்தில் அது சமயம் ஏற்பட்டது சந்தோஷமா, துயரமா என்பது அவளுக்கே தெரியவில்லை.

சியாமளா! உலகம் தெரியாத சிறு பெண் நீ... எங்கே போய் என்னவெல்லாம் அவஸ்தைப் பட்டாயோ?

உமாவின் மனம் பாகாய் கரைந்தது. 'ஐயோ! இப்போது எப்படி பம்பாய் புறப்பட்டுப் போவது? யாரிடம் உதவி கேட்பது?' மனம் புலம்பியது.

'நல்ல காலம்! இதை பிரசிடெண்ட் ஐயா பிரித்துப் படிக்கவில்லை' என்று ஒரு விநாடி நிம்மதி பெற்றாள்.

'பாவம் அப்பா! இப்போது உயிரோடு இருந்தால் இந்தக் கடிதம் கண்டவுடனேயே அவமானத்தால் சுக்கு நூறாக உள்ளம் வெடித்துப் போய் மரணமடைந்திருப்பார். தன்னால்தான் அப்பா இறந்து போனார் என்று சியாமளாவிற்குத் தெரிந்தால்

ஆமாம்! இத்தனை துன்பங்கள் பட்ட பிறகு அவள் மனம் மாறி இருப்பாளோ? இந்த விஷயத்தை கேள்விப்பட்டால் சின்னம்மா என்ன செய்வாள்? உயிரை விட்டுவிடுவாளா?' பயமாக இருந்தது அவளுக்கு.

ஆமாம்! அவளது சின்னஞ்சிறு முயற்சிகளையும், எதிர்பார்ப்புகளையும் கூட, பயங்கர வடிவாகப் பரிணமித்துக் கொண்ட இடையூறுகள்... ஏன் இப்படிப் பயமுறுத்துகின்றன?

கசப்பான அனுபவங்களால் அரண்டுபோயிருந்த மனதில் இனி நல்லதொரு எதிர்காலமே அவளுக்கு உருவாகாதா! கடவுளே! எதற்காக என்னை சோதிக்கிறாய்! தன்னந்தனியாக என்னால், சியாமளாவை எப்படி மீட்டுவர முடியும்...

''அப்பா! நீங்கள் ஏன் என்னை இப்படி விட்டுட்டு போனீங்க?'' திடீரென கோழையாகிவிட்ட மனநிலையில் கண்கள் கசிந்தன.

அன்று மாலை பஸ் நிலையத்திற்கு சற்று தூரத்திலேயே பார்த்திபனை சந்தித்துவிட்ட உமா, ''பார்த்திபன் தயவு செய்து எனக்கு உதவி செய்வீர்களா?'' என்றாள். அதற்கு மேல் தெரு என்றும் பாராது அழத் துவங்கினாள்.

''ஸ்! தெருவில் நின்னுகிட்டு என்னது ம்... ஏறு ஸ்கூட்டர்லே... எங்கேயாச்சும் போய் பேசுவோம்'' என்று அன்புடன் கடிந்து கொண்டான் அவன்.

## 16. அலமேலு அடங்கிப் போனாள்!

**வா**யிற்புறம் ஸ்கூட்டர் ஒலி கேட்டதும், வேகமாக ஓடிவந்து கதவைத் திறந்தாள் அலமேலு. பிரகாசம் கூடவே வந்தான்.



முதல் நாள்தான், பள்ளிக்கூட உல்லாசப் பயணத்திற்காக அக்காவிடம் சிபாரிசு கேட்டான் அவன்.

அம்மாவிற்கும் அக்காவிற்கும் நடக்கும் வாதப் பிரதிவாதங்களைப் பற்றி அணுவளவும் அவன் கவலைப் பட்டதில்லை.

''அக்கா! எங்க கிளாஸ்ல எல்லாருமே, இந்த உல்லாசப் பயணத்துக்குப் பணம் கட்டறாங்க, எப்பிடியாச்சும்... '' குழையடித்தான் அவன்.

உமாவிற்குத் தயக்கம்தான். ஒரு பெரியதுண்டு விழும் அளவிற்கு அவர்களது மாதாந்திர பட்ஜெட்டில், குழப்பம் வருமே... அவன் கேட்ட தொகையைக் கொடுத்து திருப்தி படுத்தவில்லை என்றால்... சின்னம்மா பேயாட்டம் ஆடிவிடுவாள்.

'போகட்டும் சிறு பையன் ஆசைப்படுகிறான்'. அவளது இயல்பான பாச உணர்வு தலை தூக்கியது.

''கட்டாயம், நாளை மாலைக்குள் பணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன். நீ கவலைப்படாமல், பள்ளிக்கூடம் போய்வா'' என்று கூறிவிட்டாள்.

அக்கா சொன்ன சொல் தவறாதவள் என்பது அவனுக்குத் தெரியும். அதனால், ஸ்கூட்டரிலிருந்து உமா இறங்கி, வாயிற்படி ஏறும் முன்பே, ''அக்கா! உல்லாசப் பயணம்...'' என்றான் கொஞ்சலாக.

உமா, உண்மையில் அதுபற்றி மறந்தே போய்விட்டிருந்தாள். சியாமளா பற்றிய கவலையில் அவள் நினைவில் வேறு எந்த எண்ணங்களும் பதிய மறுத்தன. பின்னாலேயே படியேறிவந்த பார்த்திபன், ''என்ன உமா? பிரகாசம் என்ன கேக்கிறான்?''

''உல்லாசப் பயணம் போகணும்னு பணம் கேட்டிருந்தான். ஆபிஸ்ல 'லோன்' கேட்டு வாங்கித் தரேன்னு

சொல்லி இருந்தேன்...''

''அ! ஆமாம், சொல்லிட்டிருந்தியே, எவ்வளவு.''

''ஐநூறு''

''மறந்திட்டுது. எங்கிட்டவே இருக்குது, நாளைக்கி கையெழுத்துப் போட்டு, 'லோன் பாரத்தை' மேனேஜர் மேஜை மேல வச்சிடு. என்ன?'' சொல்லியபடியே, பேண்ட் பையிலிருந்த பர்ஸை உருவி, ஐநூறு ரூபாய் நோட்டுக்களை உருவினான்.

கண்கள் விரிய அவனையே பார்த்தாள் உமா. அவள் மறந்துபோன விஷயத்தை அவன் சமாளிக்கப் பார்க்கிறான்.

''இந்தா பிரகாசம். நல்லபடியா, சந்தோஷமா சுத்திப் பாத்திட்டுவா... அம்மா, அக்கா எல்லோரும் என்ன சொல்றாங்களோ, அதுபோலக் கேட்டுக்கோ. அங்கே, ஏரியிலே நீச்சலடிக்கிறேன்னு ஏதாச்சும் செய்திடாதே... ஆமாம்... எங்கே எல்லாம் போகப் போறீங்க...?''

''மைசூர், ஊட்டி, கொடைக்கானல்'' பணத்தைப் பெற்றுக் கொண்ட மகிழ்ச்சி பிரகாசத்திற்கு.

''சரி. அம்மாகிட்ட பணத்தைக் குடுத்திட்டு விழுந்து கும்பிடு'' என்றபடி, உள்ளே வந்து அமர்ந்தான் அவன்.

'இதெல்லாம் என்ன நாடகம்? பணத்தைக் கொடுத்து எங்களை விலைக்கு வாங்கப் பாக்கறியா?' என்ற பாவனையில், அலமேலு ஒரு நொடிப்பு நொடித்து விட்டு உள்ளே சென்று மறைந்தாள்.

உமா அதிரவில்லை. பார்த்திபனுக்கு காப்பி கொண்டு வந்து கொடுத்துவிட்டு, உடை மாற்றிவர உள்ளே சென்று விட்டாள்.

பிரகாசம் உற்சாகம் பிடிபடாதவனாய், தன் தோழர்களுடன், அவனது சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ள வெளியே ஓடிவிட்டான்.



இடுப்பில் கை வைத்தபடி நின்றிருந்த அலமேலுவை பார்த்திபன் ஒருமுறை உற்றுப் பார்த்தான்.

'சியாமளா விவரத்தை சொல்லி விடலாமா!' அவன் மனம் தூண்டியது. ''வேண்டாம்... உமா வரட்டும்'' மனதை கட்டுப் படுத்தியவனாய்... காப்பியை ருசி பார்க்கத் துவங்கினான்.

உமாவை சமாதானப்படுத்தி, நேராக ஒரு பிரபலமான ஹோட்டலின், ''பேமிலிரூமி''ற்குள் அழைத்துச் சென்றான்.

''இங்கே எதுக்கு அழைச்சு வந்தீங்க?'' கண்களைத் துடைத்தபடி கேட்டாள் உமா.

''முதல்ல அந்த வாஷ் பேசின் கண்ணாடியில, உன் முகத்தைப் பாரு. அழுதழுது தக்காளிப் பழம்போல மூக்கும், கண்ணும் சிவந்திருக்கு. இந்த நிலையில், 'பீச்ல' போய் உக்காந்தா பாக்கறவங்க நான்தான் உன்னை ஏதோ செய்திட்டதா தப்பா நினைப்பாங்க.''

அவளுக்கு சிரிப்பு வந்தது. அந்த அறையில் அவர்கள் இருவர் மட்டும் இருந்தனர். உமா எழுந்து சென்று முகத்தை கழுவி சீராக்கிக் கொண்டு வந்தாள்.

அவள் வந்து உட்காருவதற்குள், பட்டர் மசாலா தோசையும், காப்பியும் 'ஆர்டர்' செய்து முடித்திருந்தான் அவன்.

''சரி இப்ப சொல்லு. எதுக்காக இப்படி 'ஆதிமூலமே...!' என்று தெருவில் நின்னு அலறினே...?''

''என்னை யானைன்னு சொல்றீங்க?''

''உருவத்திலே சொல்லலே... பயத்துக்கு... அவ்வளவு பெரிய பலசாலி யானை, சின்ன விஷயத்துக்கு பயந்துசாகுமாம். நீயும் அப்படித்தான். தன்னந்தனியா வேலைக்குப் போற பெண் நீ... இப்படி ஏன் இடிஞ்சுப் போயிடறேன்னு புரியவே இல்லை உமா.''

''இனிமே எதையும் நான் மறைக்க விரும்பலே

பார்த்திபன்.'' என்று கூறிவிட்டு தோள் பையிலிருந்து அன்று காலை வந்த கடிதத்தை அவனிடம் கொடுத்தாள்.

பட்டர் மசாலா தோசையுடன் விவரமாக விஷயங்களையும் பிட்டு வைத்தாள் உமா.

''கடிதத்தையும் படிச்சுப் பாருங்க பார்த்திபன். இனி நீங்க சொல்ற பதில்லதான் என் எதிர்காலமே இருக்கு'' அவள் குரல் உணர்ச்சி வசத்தால் தழுதழுத்தது. ஏக்கப் பெருமூச்சுடன் அவனையே பார்த்தாள் அவள்.

கடிதத்தைப் படித்துவிட்டு அவளிடமே கொடுத்தவன் புன்னகையுடன் தலையசைத்தான். அவனது கண்களில் பரிவு... ''உமா!'' கரகரப்பான குரலில் கூறியபடி, அவளது வலது கரத்தை தனது வலது கரத்தால் பற்றி மென்மையாக அழுத்தினான்.

''நான் இருக்கும்போது, கவலைப் படாதே'' என்றான்.

உமாவின் மனதை அழுத்திக் கொண்டிருந்த கவலைகள் ஒரே வினாடியில் லேசாகிப் போனது போல முகம் ஆனந்தமாக இருந்தது. அதே சமயம் பார்த்திபனைக் குறித்துப் பெருமையாகவும் இருந்திருக்க வேண்டும்.

முகமெல்லாம் மலர சிரித்தபடி ''இப்படியே என் உயிர் போயிட்டாக் கூட நான் கவலைப்பட மாட்டேன்'' என்றாள்.

''ஐயோ! இனிமேல்தானே நாம் சந்தோஷமாக சிக்கல்கள் நீங்கி திருமணம் செய்து கொண்டு வாழ வேணும்... என்னை விட்டு விட்டு நீ போனால் விட்டு விடுவனோ'' கேலி செய்தான் பார்த்திபன்.

அலமேலு அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''ஏம்பா! நான் சொல்றேன்னு மனசை புண்ணாக்கிக் கொள்ளாதே. ஆண்பிள்ளை இல்லாத வீட்ல, இப்படி நீ அடிக்கடி வரது நல்லாவா இருக்கு'' என்றாள் கோபமாக.

பார்த்திபன் சிரித்தான்.



அலமேலுவின் சினம் அதிகமாகியது. சீற்றமாக அவனை உறுத்துப் பார்த்தாள் அவள்.

''வெள்ளையும் சள்ளையுமாய், பகட்டா ஒரு ஸ்கூட்டர்ல வந்திட்டா மதிப்பு வந்திடுமோ... மரியாதையா இந்த வீட்டு வாசப்படி ஏறாம இரு... இல்லே...''

''சின்னம்மா!'' அலமேலு திரும்பினாள். ஆத்திரம் பொங்க, புயல்போல் அங்கு வந்த உமாவைக் கண்டதும், ''வாடியம்மா வா. நீ குடுக்கற எடம்தான் இந்த மனுஷன் கல்லுக் குண்டு மாதிரி அசையாம நிக்கறான். ஏண்டி குடும்ப கௌரவத்தைக் குலைச்சிட்டா ஒருத்தி... நீ எங்களையும் சாக அடிச்சிட்டு...''

''சின்னம்மா!'' அதட்டியபடி அவளருகில் வந்த உமா, ''கொஞ்சம் என்னைப் பேச விடறீங்களா?'' என்றாள் கடுமையாக.

''என்னடி மிரட்டறே?''

''போதும் சின்னம்மா! நம்ப குடும்ப கௌரவத்தை நிலை நிறுத்தத்தான் இவர் வந்திருக்காரு. புரிஞ்சு கொள்ளுங்கோ.''

''யாரு? இவனா?'' இகழ்ச்சியும், ஏளனமுமாகக் கேட்டாள் அவள்.

''ஆமாம்! இவரைத்தான் நான் கட்டிக்கப்போறேன்'' அழுத்தமாகக் கூறினாள் உமா.

''வீட்டுல பெரியவ ஒருத்தி நான் இருக்கேங்கறது நினைப்பிருக்கா?...''

''அதுக்குத்தான் உங்ககிட்ட வந்து ஆசீர்வாதம் வாங்கிகிட்டுப் போகணும்னு வந்தேன் சின்னம்மா'' பார்த்திபன் அலமேலு எதிர்பாராத சமயம் தடாலென விழுந்து வணங்கினான்.

சர் என நகர்ந்து கொண்ட அலமேலுவிற்கு எரிச்சல் வந்தது. ''என்னை அவமானப் படுத்தணும்னு திட்டம் போட்டுக்கிட்டு

வந்திங்களா ரெண்டு பேரும். கல்யாணம் கட்டிக்கிட்டு மகராசியா வாழட்டுமே. என் பிள்ளை நான் பெத்ததுதானே... எங்கேயோ கூலி வேலை செஞ்சு... பிச்சை எடுத்து...'' அலமேலு ஒப்பாரி வைக்கத் துவங்கினாள்.

உமாவின் கோபம் கட்டுமீறிப் போயிற்று. ஓடிச் சென்று கடிதத்தை எடுத்து வந்து சின்னம்மாவின் முன் வீசிப் போட்டாள்.

''முதல்ல உங்க ஒப்பாரியை நிறுத்திட்டு அந்தக் கடுதாசை படியுங்க'' உறுமினாள்.

பம்பாய் கடிதம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்ததால் உமா அதை மொழிபெயர்க்க வேண்டி வந்தது.

அலமேலுவின் சீற்றம் பட்டென அடங்கிப் போயிற்று. ''சியாமளா! என் தங்கமே... நீ என்னா அவதிப்பட்டியோ'' என்று அழ ஆரம்பித்தாள்.

''எதுக்காக அழறீங்க சின்னம்மா... சியாமளாவை உங்ககிட்ட கொண்டு சேர்க்க வேண்டியது என் பொறுப்பு'' பார்த்திபன் சமாதானப்படுத்தினான்.

சேலைத் தலைப்பால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்ட அலமேலுவின் முகத்தில் கடுமை குறைந்திருந்தது. பேய்க்குணம் படைத்தவள்தான். ஆனால் தாயல்லவா?

''இப்போ புரிஞ்சுக் கொண்டுங்களா சின்னம்மா. பார்த்திபன் உதவியில்லாம சியாமளாவை மீட்க நம்மால் முடியாது... அவர் இல்லாம எனக்கு வாழ்க்கையே கிடையாதுன்னு நானும் தீர்மானிச்சுக் கொண்டு விட்டேன்.''

அலமேலு புத்திரப் பாசத்தால் ஆடிப் போனாள். சதா கடுகடுக்கும் அவளது இயல்புகூட எதிர்பாராத அதிர்ச்சியால் மாறிப்போனது.

''என் குழந்தை எப்பிடி கஷ்டப்படுதோ.. உமா! எப்படியாச்சும் அவளை கொண்டு வந்துருங்க... உங்களுக்கு



புண்ணியமாகப் போகும்'' அரற்றினாள். வெகு நாட்களுக்குப் பிறகு அவளது கண்களில் கண்ணீர் பெருகியது.

அலமேலு அழுவதைக் காணச் சகியாது ''சின்னம்மா! அழாதீங்க. இவரும் நானும் பம்பாய் புறப்பட்டுப் போய் சியாமளாவைப் பாத்துக் கூட்டிக்கிட்டு வறோம்'' என்றாள்.

''உடனே அழைச்சிட்டு வாம்மா உமா! ஏதோ தெரியாத்தனமா உங்கிட்ட நடந்துகிட்டேன். மன்னிச்சுக்கோ உமா'' குழந்தைபோல அலமேலு அழுதாள்.

''கையோட அழைச்சிட்டு வர முடியாதம்மா. அவளை மீட்டு வர சில வழிமுறைகள் இருக்காம். அதன்படி தகுந்த அத்தாட்சி, ஆதாரங்களுடன் நாங்க போகவேணும். கொஞ்ச நாளாகும். நீங்க பொறுமையா இருக்கணும்'' என்றான் பார்த்திபன்.

''உங்க குடும்ப போட்டா இருக்கா?'' என்றான் தொடர்ந்து.

''இருக்குதே. எதுக்குத் தம்பி?'' ஆவலாகக் கேட்டாள் அலமேலு.

''பிறகு சொல்றேன்'' மர்மமாகப் புன்னகைத்தான் அவன்.

## 17. தங்கையைக் காண தமக்கை வந்தாள்!

காலை பிரார்த்தனை துவங்கி சிறிது நேரம் சென்றது. சியாமளா தனது தையல் வகுப்பிற்குள் நுழைந்தவள் அங்கு நின்றிருந்த சமூக சேவகியைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

நல்ல உயரம். ஆரோக்கியமான உடல். தீட்சண்யமான கண்கள். அமைதியான முகம். நடுத்தர வயதிருக்கலாம். பெயர் சுமதி ஆப்தே என்று சொன்னார்கள். சுமதிக்கு எல்லா

மொழிகளிலும் பரிச்சயம் இருந்தது குறித்து சியாமளாவிற்கு ஒரே வியப்பு.

''குட்மார்னிங் சியாமளா! எப்படி இருக்கே? சுகமா தூங்கினியா?'' மெதுவான குரலில் கனிவுடன் கேட்டாள் சுமதி.

''எஸ் மேடம். உண்மையில நேத்துத்தான் நான் நல்லா தூங்கினேன்.'' சிரித்தபடி சியாமளா தையல் மிசினருகில் அமர்ந்தாள்.

''நல்லது இனி உன் கஷ்டங்கள் தீர்ந்துவிட்டன என்று நினைச்சுக் கொள்ளு. தையல் வேலையில் நீ ரொம்ப நல்லா செய்யறதா உங்க தையல் டீச்சர் சொன்னாங்க.''

சியாமளா தலையை நன்றியுடன் அசைத்தாள். கடந்த சில மாதங்களில் அவள் வெகுவாக மாறிப் போயிருந்தாள்.

''கட்டாயம் தையல் டிப்ளமா பரிட்சையில் நீ தேர்ச்சி பெற்றுவிடுவே. உன் ஊர் திரும்பியதும் இந்தத் தொழிலை வச்சு நல்லபடியா பிழைச்சுக்கொள்ளு. மேற்கொண்டு படி.'' அவளருகில் நெருங்கி முதுகை அன்புடன் தட்டி வெளியேறினாள் சுமதி.

சியாமளா தையல் மிசினைத் துடைத்து சுத்தம் செய்தாள். நூலை எடுத்து சரிபார்த்து பாபின் நூலையும் இணைத்து பொருத்தி, முதல்நாள் வெட்டி வைத்திருந்த ரவிக்கை துணித் துண்டுகளைக் கவனமாக வெளியே எடுத்து, மிசினில் தைக்கத் துவங்கினாள். அடுத்த சில நொடிகளில் அந்த ஹால் முழுவதும் தையல் மிசின்களின் கடகட ஒலி நிறைந்து கேட்டது.

சியாமளா எதிரே தெரிந்த காலண்டரை ஒரு விநாடி உற்றுப் பார்த்தாள். காலும் கையும் இயந்திரமாக வேலை செய்ய, கருத்து மட்டும் தேதியில் லயித்திருந்தது.

அன்றைய மாலைக்குள் அவள் அக்கா உமாவும், அவளை மணந்து கொள்ளப்போகும் கணவரும் சியாமளாவைக் காண வருகிறார்கள்.



குடும்பத்தின் கோடாரிக் காம்பாக இருந்தவளை அவர்கள் எப்படி ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள்? கடந்த சில மாதங்களாகவே சியாமளாவைத் துளைத்துக் கொண்டிருந்த கேள்வி அதுதான்.

மகளிர் பாதுகாப்பு இல்லத்தின் தலைவி மிக்க கருணையும், கண்டிப்பும் நிறைந்தவர். ஆரம்ப நாட்களில் அவளுக்கு அந்த இல்லத்தின் கெடுபிடிகள் கஷ்டமாகவே இருந்தன.

அதிகாலையில் கண்விழிப்பது, பிரார்த்தனைக்குப் போவது, வகுப்பிற்குச் செல்வது, சமூக சேவகி சாந்தா ஆப்தேயின் குடைந்து குடைந்து கேட்கும் கேள்விகளுக்குப் பதில் அளிப்பது...

பலமுறை எரிந்து விழுந்திருக்கிறாள். சில சமயங்களில் ஓவென்று வாய்விட்டு அழுதிருக்கிறாள்.

அவளுடன், அவளைப் போல வந்து சேர்க்கப்பட்ட ஓரிரு இளம் பெண்கள் மிக முரட்டுத்தனமாக நடந்து கொண்டதையும் அவள் கண் கூடாகக் கண்டு, கதி கலங்கிப் போயிருக்கிறாள்.

காளிராஜபுரத்தில், உல்லாசமாக சிட்டுக்குருவியாகப் பறந்திருந்தவள் இப்போது கூட்டுப் பறவையாகி விட்டோமே என்ற திகில் சதா நெஞ்சைக் கலக்கியது.

அவளைப்போல வந்தவர்களில், குமுதினி என்ற பெண் இல்லத்தில் இருக்க விரும்பாதவளாய், என்ன அட்டகாசம் செய்து விட்டாள்!

''என்னை விட்டுடுங்க. நான் ஒண்ணும் இங்கே இருக்க மாட்டேன். வெளியே போகணும்'' இந்தியில் அவள் கூக்குரல் இட்டாள்.

சுமதி ஆப்தேயிடம், சியாமளா மெல்லக் கேட்டாள். ''அவள் என்ன கத்தறா?''

சுமதி சிரித்துவிட்டு, ''வெளி உலகத்து வஞ்சனைகள் அவளுக்குப் பழக்கமாயிட்டுது. சைத்தானின் அடிமையானவளை இனிமே தேவனின் பக்தையாக்க முடியுமா? சிரமம்தான். இந்த ஒழுங்கு, கட்டுப்பாடு எதுவும் அவளுக்குப் பிடிக்கலையாம்.''

''ஏன்? நமக்கு நல்ல எதிர்காலம் இருக்கணும்னு அவ ஆசைப்படலியா?''

''நல்ல எதிர்காலம்னு நீ நினைக்கிறே. ஆனா அவள், நினைக்கலியே. கட்டுப்பாடற்ற சுதந்திர வாழ்க்கைன்னு நினைச்சுட்டு, நரகத்துக்கே போகணும்னு பிடிவாதம் பிடிக்கறா. இவங்களைத் திருத்தறது ரொம்பவும் கஷ்டம் சியாமளா.''

சியாமளா பெருமூச்சு விட்டாள். ''திருந்திட்டோம்னு நாங்க சொன்னாலும், எங்களை ஏத்துக்க எங்க மனுஷாள் தயாரா இருப்பாங்களா மேடம்?''

''மன்னிக்கிறவர்களே, மன்னிக்கப்படுவாங்கன்னு நீ கேட்டதில்லையா சியாமளா. தனது தவறுக்காக, எப்போது நீ வருத்தப்படறியோ அப்போது, எல்லாமே சரியாகிடும்னு நம்பு.''

ஒரு நாள் இரவோடு இரவாக, குமுதினி, இல்லத்திலிருந்து சுவர் ஏறிக் குதித்து ஓடிவிட்டிருந்தாள்.

''ஐயோ! அவளை என்ன செய்வாங்க மேடம்!''

''போலீஸ் வலை வீசிப் பிடிப்பாங்க. கொஞ்சம் நாள் எடுக்கலாம். எப்படியும் எங்களால் ஆன முயற்சிசெய்து அவளைத் திருத்தப் பார்ப்போம்.''

''மிகக் கஷ்டமான வேலைதான். நிறைய பொறுப்பும் கூட'' வித்தையுடன், சுமதியைப் பார்த்தாள் சியாமளா.

''நாம் நல்லபடியா வாழவேண்டும்கிற முயற்சி, உன் மனசில தோன்றவேணும். அப்பத்தான் சுதந்திரம்னா என்ன அடிமைத்தனம்னா என்னன்னு உனக்குப் புரியும். சியாமளா!



கட்டுப்பாடில்லாம, தன்னிச்சையா திரியறது சுதந்திரமில்லே. சமூகப் பிரக்ஞையுடன் சமுதாயத்திலே ஒரு நல்ல பெண்ணா வளரணும் என்கிற சுயகட்டுப்பாடு, ஒரு பெண்ணுக்கு மிக மிகத் தேவை சியாமளா! அது அடிமைத்தனம் இல்லை. படிப்பு, பதவி எல்லாம் ஒரு பெண்ணுக்குத் தேவை. அத்தோடு, பண்பாடு ரொம்பவும் முக்கியம்.''

சியாமளாவிற்கு இப்போது எல்லாம் விளங்கியது. அன்று வசந்தன் பின்னால், பொய்யான எதிர்பார்ப்புகளுடன் கனவு கண்டு கொண்டு வந்த சிறுமி அல்ல அவள் இப்போது.

ஒரு சமயம், அவளது அப்பாவோ, அம்மாவோ அவளை ஏற்க மறுத்து விட்டாலும், அவளது பிறந்தமண்ணே அவளை உதறி விட்டாலும், தன் காலில் தானே நின்று, உழைத்து உயர்வாக வாழக் கற்றுக் கொண்டு விட்ட புதுமைப் பெண் அவள்.

''ஒரு வேளை எங்க வீட்ல என்னை சேத்துக்க மறுத்திட்டா...'' ஒருமுறை சியாமளா கலக்கத்துடன் கேட்டபோது, சுமதி முறுவலித்தாள்.

''கவலைப்படாதே. நீ மீண்டும் இங்கேயே தங்கலாம். உன் கையால உழைத்துச் சாப்பிடும் நிலை வந்ததும், நாங்களே உன்னை, ஹாஸ்டலில் வைத்துக் கொண்டு, ஏதோ ஒரு தொகை வசூலித்துக் கொண்டு, புகலிடம் அளிப்போம்... வாழ்நாள் முழுதும் இப்படியே கழிக்கணுமேன்னு பயப்படாதே... உன்னை விரும்பி, ஏத்துக் கொள்கிற ஒரு கண்ணியமான மனிதனுக்கு, கட்டாயம் கல்யாணமும் செய்து கொடுப்போம்?''

சியாமளாவின் கண்கள் நன்றியால் நிறைந்தன. எப்பேர்ப்பட்ட பயங்கரத்திலிருந்து அவள் தப்பி வந்திருக்கிறாள்? தாயினும் மேலான, கருணையுடன் அவளை நடத்தி, அவளுக்கு வழிகாட்ட, வாழ வழியும் செய்திருக்கிறார்களே!

சுமதி ஆப்தேயிடம், அதற்கு மேல் எதையும் சியாமளா ஒளித்து வைக்கவில்லை. உண்மையைக் கூறி முடித்த பிறகு தான், அவளது மனச்சுமை குறைந்தது போல, உற்சாகம் பெற்றவளானாள்.

இரண்டு நாட்களுக்கு முன்பு, இல்லத் தலைவி சியாமளாவைக் கூப்பிட்டனுப்பினாள்.

சியாமளாவிற்குப் பயத்தினால் உடல் நடுங்கியது. தலைவியின் அறைக்கதவை, லேசாகத் தட்டியவள், ''உள்ளே வரலாமா'' என்றாள் மெலிந்த குரலில்.

''கம் இன்'' கம்பீரமான தலைவியின் குரலைக் கேட்டு, மெல்லக் கதவைத் திறந்து உள்ளே சென்றாள்.

''குட்மார்னிங்! கூப்பிட்டீங்களாமே மேடம்'' முடிப்பதற்குள், அச்சத்தால் குறுகிப் போனாள் அவள். ஒருவேளை வசந்தனும், பாபுவும் அவளைப் பிடித்துப் போக வந்திருப்பார்களோ... ஏதாவது பொய்களைச் சொல்லி, இவர்கள் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, இழுத்துச் செல்வார்களோ!

''உனக்கு வேண்டியவங்க யாராவது இந்த ஊர்ல இருக்காங்களா!''

சியாமளா அரண்டு போனாள். ''இங்கே யாருமே இல்லீங்க மேடம். தயவு செஞ்சு அந்தப் பாவிங்க கையில என்னை ஒப்படைச்சிடாதீங்க மேடம். நான் போகவே மாட்டேன். ப்ளீஸ்!'' அழ ஆரம்பித்தாள் சியாமளா.

''நிறுத்து! அந்த 'ரௌடி'ங்களைப் போலீஸ் கவனிச்சுக்கும் கவலைப்படாதே. இப்ப நான் கேக்க வந்தது, இதோ இந்தப் போட்டோவில் இருக்கிறவங்க உங்க மனுஷாளாங்கறதுதான்'' சிறிது அதட்டலாகத் தலைவி கூறிவிட்டு ஒரு கடித உறையிலிருந்த அந்த போட்டோவை அவளிடம் நீட்டினாள்.



சியாமளா ஆவலுடன் அதைப் பார்த்தாள். கண்களில் நீர் பெருக பார்த்தபடியே நின்றாள். அது அவர்களது குடும்ப போட்டோ. அம்மா, அப்பா, அக்கா உமா, அவள் அருகில் சியாமளா, தம்பி பிரகாசம் தரையில் அமர்ந்திருந்தான்.

எத்தனை அழகான குடும்பம். இதைவிட்டு ஓடிவர எனக்கு எப்படி மனது வந்தது? தன்னையே சாடியபடி தலைவியைப் பார்த்தாள்.

''இந்த போட்டோவில் இருக்கிறது என் அப்பா, அம்மா, தம்பி, அக்கா உமா... இது எப்படி உங்க கைக்குக் கிடைச்சது!''

''பிறகு சொல்கிறேன். உன் அக்காவும், அவளைக் கல்யாணம் கட்டிக்கப் போற பார்த்திபன்கிறவரும், இங்கே பம்பாய்க்கு வந்திருக்காங்களாம்.''

சியாமளாவின் கண்கள் விரிந்தன. ''அக்காவா!''

''ஆமாம்! உன்கிட்ட, உன்னைப் பார்த்து பேசணுமாம். சம்மதம் கேட்டிருக்காங்க.''

சியாமளா அழ ஆரம்பித்தாள். ''எங்க அக்காவை உடனே பார்க்கணும் போல இருக்கு மேடம்.''

''அவசரப்பட்டுத்தான் உன் வாழ்வை இவ்வளவு தூரம் பாழடிச்சுகிட்டே, பொறுமையாக இரு. எங்கள் இல்லத்தின் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டுத்தான் அவங்க உன்னைப் பார்த்துப் பேசமுடியும். அப்படி அவங்க ஆசைப்பட்டாலும், உடனே உன்னை அழைச்சிட்டுப் போயிட முடியாது. சில நிபந்தனைகள் உண்டு. புரியுதா?''

சியாமளா பலமாகத் தலையை ஆட்டினாள். உமா அக்கா பம்பாய் வந்துவிட்டாள். துணையோடல்லாது தனி வழிபோகேல் என்றபடி, தக்க துணையோடுதான் தங்கையை அழைத்துப் போக வந்திருக்கிறாள்! அவள் மனம் இலேசாகியது. புதிய நம்பிக்கைகள் உதயமாயின.

மணி அடிக்கும் ஒலி கேட்டதும், அவரவர் இருப்பிடத்தை

விட்டு எழுந்தனர். மாலைவரை பொழுதைக் கழிப்பது சியாமளாவிற்கு யுகமாகத் தோன்றியது.

மாலை நான்கு மணியளவில் பொறுமையின்றி வாயிற் புறம் எட்டிப் பார்த்தபடி, வரவேற்பு அறையருகில் நின்றாள் சியாமளா.

நடைபாதையின் இரு மருங்கிலும், கொத்தாகப் பூத்து நின்ற சிவப்பு கொன்றை மலர்கள் அவளுக்கு என்றுமில்லாத உற்சாகத்தைக் கொடுத்தன. வாயிற்புற கேட்டருகில் ஓங்கி நின்ற அசோக மரத்தை உற்றுப் பார்த்தபடி நின்றாள்.

இல்லத்தின் ஆபீஸ் அறையில் தலைவியும் சுமதி ஆப்தேயும் பேசியபடி அமர்ந்திருந்தனர். வரவேற்பறை நாற்காலிகளில், யார் யாரோ முகம் தெரியாதவர்கள்.

திடீரென திறந்திருந்த கேட்டருகில் ஒரு டாக்சி வந்து நின்றது. சியாமளா நெஞ்சு படபடக்க, கண்கள் துடிக்க, உற்றுப் பார்த்தாள்.

உமா அக்கா! முன்னைவிட அழகாக, பொலிவாக நீல வாயில் சேலையில், அவளைக் காக்க வந்த வனதேவதை போல இறங்கி உள்ளே வந்தாள். அவள் பின்னால், கண்ணியமே உருவாகத் தொடர்ந்து வரும் மனிதர்தான் பார்த்திபனா?

''அக்கா நீ என்றைக்குமே பொறுமைசாலி. புத்திசாலி. உலகம் தெரிந்தவள். இந்த ஏமாளித் தங்கையைப் பார்க்க ஓடோடி வந்திருக்கிறாயா? என்னருமை அக்கா!''

சியாமளாவின் துயரம் கரை புரண்டு கொண்டது. நெடுநாள் பிரிந்த துன்பமும், துயரமும் அவளை வெகுவாகப் பாதித்திருந்தன.

''அக்கா!'' கதறியபடி, ஒரே ஓட்டமாக ஓடிச்சென்று, உமாவைக் கட்டியணைத்தவள் 'ஓ' வென்று அழத் துவங்கினாள்.



## 18. பார்த்திபன் பண்பால் உயர்ந்தான்

இரண்டு மாதங்கள் போல், பம்பாய்க்கும், சென்னைக்கும் மாறிமாறிப் பயணம் செய்து அலுத்துப் போயிருந்தாள் உமா.

சியாமளாவைப் பற்றிய தகவல் தெரிந்ததுமே அவள் உடனடியாக பார்த்திபனை நாடியது எவ்வளவு நல்லதாகப் போயிற்று! இல்லாவிட்டால், அவளை மீட்டு வரும் பொறுப்புக்குரிய சட்டதிட்ட நுட்பங்களை அறிந்து கொள்ளவோ அல்லது செயலாற்றவோ இத்தனை விரைவாக அவள் ஏற்பாடுகள் செய்திருக்க முடியுமா!

சின்னம்மா, அன்று, எப்படியோ தேடிக்கண்டு பிடித்த குடும்ப போட்டோ ஒன்றை, பார்த்திபனிடம் கொடுத்துவிட்டு ''தம்பி! என் மகளை எப்படியாச்சும் காப்பாத்துப்பா'' என்றாள் அழுகையுடன்.

''கவலைப்படாதீங்க... அதுக்கு முன்னால சில விஷயங்களை நாம், முன்னேற்பாடாக தயார் செய்ய வேண்டியது இருக்கு'' என்றான் பார்த்திபன்.

''நீங்க சொல்றது எதுவுமே விளங்கலையே'' என்றாள் உமா.

பார்த்திபன், அதற்குப் பிறகு அவளுக்கும், அலமேலு அம்மாளுக்கும், பொறுமையாக எடுத்து விளக்கினபோது, உமா பிரமித்தே போனாள்.

உண்மையிலேயே பார்த்திபன் மிக்க திறமைசாலிதான். இல்லாவிட்டால், சென்னையிலுள்ள மகளிர் பாதுகாப்பு இல்லத் தலைவியிடம் இத்தனை விஷயங்களையும்,

போன்மூலம் தெரிந்து கொண்டிருப்பாரா?

''அந்தத் தலைவி அம்மாளை, நேராகப் பார்த்துப்பேசி எல்லா விவரமும் சரிவரத் தெரிஞ்சு கொண்டு வரேன், பிறகு பேசுவோம்.'' என்றவன் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

அலமேலு திடீரென மனம் மாறியவளாய் ''தம்பி நல்லா இருக்கணும்.'' என்று சதா ஜபிக்கத் துவங்கினாள்!

இரண்டாம் நாள் வழக்கம் போல ஆபீஸ் துவங்குமுன், அவளை சந்தித்த பார்த்திபன், ''உமா, முதல் வேலையா பம்பாய் விலாசத்துக்குக் கடிதம் எழுது. இந்தக் குடும்ப போட்டோவையும், இணைச்சு அனுப்பிடு'' என்றான்.

''இதை அனுப்பிட்டா நமக்கு என்ன அத்தாட்சி.''

''உன் மூளை!'' செல்லமாக அவள் தலையைத் தட்டிவிட்டு, ''மூணுகாப்பி. இதை ''நெகடிவ்' போட்டு, எடுத்திட்டேன். ஒண்ணை வச்சு அனுப்பு. பிறகு சொல்கிறேன்.''

''மூணு காப்பி எதுக்கு?''

''ஒண்ணு உங்கம்மாவுக்கு. ஒண்ணு நமக்கு'' குறும்பாக சிரித்தான்.

''தீர்மானமே செய்தாகிவிட்டதா'' நாணத்தினால் முகம் சிவக்க அவனைப் பார்த்தாள் உமா.

''என்னருமை உமா. இப்போது உன்னுடன் பம்பாய்க்கு துணையாக மட்டும்தான் வரப்போகிறேன் என்று எண்ணினாயா? வாழ்க்கைத் துணையாக வரப்போகிறவன் என்கிற நற்சாட்சிப் பத்திரத்தையும், வாங்கிக் கொண்டுதான் வரப்போகிறேன்.'' அவளது வலது கரத்தை பற்றி லேசாக அழுத்தினான்.

ஒரு விநாடி மெய் சிலிர்த்துப் போனாள் உமா. அடுத்த கணம், சட்டென சமாளித்தவளாய், ''விடுங்க... யாராச்சும்



பார்க்கப் போறாங்க. இது ஆபீஸ்...'' என்றாள் சிறிது கடுமையாக.

''வீடாயிருந்தா, அனுமதி கிடைச்சிருக்குமோ.'' யாரோ வரும் பூட்ஸ் ஒலி வழக்கம் போல அவர்களைப் பிரித்து விட்டது.

பார்த்திபன் கூறியபடியே கடிதம் எழுதி, போட்டோவுடன், செம்பூர் இல்லத்திற்கு அனுப்பி விட்டாள் உமா.

மேனேஜரிடம் உமாவைப் பற்றியும் தன்னைப்பற்றியும் கூறி தேவையான சிபாரிசு கடிதங்களை வாங்கி வந்தான்.

வேலை நிர்வாகத்தில் அவன் திறமை மிக்கவனாக இருந்ததால் ஆபீசில் மேனேஜர் அவனுக்கு உதவ முன்வந்தார்.

பம்பாயில் உள்ள கிளைக் காரியாலயத்தில் பார்த்திபனை தற்காலிகமாக மூன்று மாத காலத்திற்கு 'தனிப்பட்ட வேலை' நிமித்தம் அனுப்பி வைத்தார்.

உமா அடிக்கடி லீவில் போவதற்கும் வசதி செய்யப்பட்டிருந்தது. பார்த்திபனின் சிநேகிதன் ஒருத்தன் செம்பூரில் தங்கி இருந்தான். அவனது மனைவி பிரசவத்திற்காக வெளியூர் சென்றிருந்தது இவர்களுக்கு வசதியாகப் போயிற்று.

பம்பாயை வந்தடைந்த போது உமா மெத்தவும் மனம் கலங்கிப் போயிருந்தாள். சென்னையைவிடப் பலமடங்கு பெரிய நகரம். பலமாடிக் கட்டிடங்கள், மனிதக்கும்பல், புரியாத மொழி... நிலை கலங்கிப் போனவள் மனதிற்கு பார்த்திபன் பெரும் துணையாக ஆறுதல் அளித்தான்.

செம்பூர் நண்பன் சேதுராமன் அவர்களை மிக்க பரிவுடன் உபசரித்தான். நானும், இந்தப்பயலும் சின்னவயசு முதல் கிளாஸ்மேட்ஸ். இதை உங்க வீடு மாதிரி நினைச்சுக்கோங்கோ. தனியா இருக்கணுமேன்னு பயப்படாதீங்க. உங்கள் பயத்தைப் போக்க எங்க அத்தையை கல்யாண்ல இருந்து

வரவழைச்சிருக்கேன். அவங்ககிட்ட தாறுமாறா எதுவும் சொல்லாமே நீங்க கல்யாணம் நிச்சயமான ஜோடிகள். இங்கே எவர்சில்வர் பாத்திரம் வாங்க வந்ததா சொல்லி வச்சிருக்கேன்'' ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வீடு வருவதற்குள் சொல்லி முடித்து விட்டான்.

''வேணுமோ, வேண்டாமோ இப்போது பாத்திரங்கள் வாங்கியாகணும்னு சொல்லு'' பார்த்திபன் கிண்டலாகக் கேட்டான்.

''வருங்கால மனைவிக்காக இது கூடவா செய்யக்கூடாது! என்னங்க உமா?''

அவள் உள்ளமெல்லாம் பூரிக்கச் சிரித்தாள்.

அவர்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த நேரப்படி மாலை நான்கு மணியளவில் அந்த இல்லத்தில் நுழைந்தபோது உமாவின் உள்ளம் வேகமாக அடித்துக்கொண்டது.

டாக்சியை விட்டிறங்கியவள் நிமிர்ந்து பார்த்தாள். துரும்பாகி கருத்து அழகெல்லாம் வற்றிய நிலையில்... சியாமளாவா இது...?

''அக்கா!'' என்றலறியபடி அவளைக் கட்டிக்கொண்டு அழுதபோது உமாவும் தேம்பித்தேம்பி அழுதாள்.

சகோதரிகள் இருவரும் சிறிது நேரம் உணர்ச்சி வசப்பட்டவர்களாக அணைப்பில் கட்டுண்டு இருந்தனர்.

''என்னை மன்னிச்சிடு அக்கா! மன்னிச்சிடு'' சியாமளா குழந்தை போல் அரற்றினாள்.

''முகத்தைத் துடைச்சிட்டு மேடத்தைப் பார்க்கப் போலாம் வாங்க'' பார்த்திபனின் குரலைக் கேட்டதும் உமா தங்கையை ஆதரவோடு அணைத்தபடி நடந்தாள்.

''இவருதான்''

''தெரியும். உன்னைக் கட்டிக்கப் போற அத்தான். எல்லாம்



மேடம் சொன்னாங்க...'' என்றவள் பார்த்திபன் பக்கம் திரும்பி ''ரொம்ப தேங்ஸ்'' என்றாள்.

''எதுக்கு?''

''அக்காவை நீங்க விரும்பிக் கல்யாணம் செய்து கொள்ளப் போறீங்க. ஆனா அதுக்காக இப்படிப்பட்ட கஷ்டங்களையெல்லாம் இழுத்துப் போட்டுக்கணும்னு இல்லியே... நீங்க முடியாதுன்னு மறுத்திருக்கலாமே.''

''உமாவோட கூடப் பிறந்தவங்க எனக்கு மட்டும் வேறயா? அவ கஷ்டம், சுகம் எல்லாத்திலயும் பங்கு உண்டுன்னு நினைக்கிறவன் நான்'' நிதானமாகக் கூறினான் அவன்.

'உமா அக்கா! நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி!' பெருமையுடன் மனதிற்குள் கூறியபடியே சியாமளா நடந்தாள்.

பார்த்திபன் உமா வேலை செய்யும் ஆபீஸ் மேனேஜரின் சான்றிதழ்கள், குடும்ப போட்டோ யாவற்றையும் தலைவியிடம் காட்டி, மேற்கொண்டு செயல்படத் துவங்கினார்கள் இருவரும்.

அன்றிரவு முழுவதும் சியாமளா கண்ணீர் பெருக்கியபடி இருந்தாள். அவளது செய்கையால் அப்பா மறைந்ததும், குடும்பம் சிதறியதும் அவளை சித்திரவதை செய்தன.

''அக்கா, நான் செய்த பாவத்திற்கு தகுந்த பரிகாரம் செய்வேன். நீ கல்யாணம் செய்துகிட்டு சுகமா இருந்து கொள்ளு. தம்பியையும் அம்மாவையும் நானே கவனிச்சுக் கொள்றேன்'' என்றாள் தீர்மானமான குரலில்.

தங்கையை மீட்டுச்செல்லும் வேலை அத்தனை எளிதல்ல என்பது உமாவிற்கு தெரிந்திருந்தது.

வக்கீல் மூலம் கோர்ட் வழியாக, முதலில் ஒரு அப்பீல் செய்து, கார்டியன்களாக அவர்களிடம் விடுதலை வாங்கக் கோரவேண்டும்.

பெண்களுக்காகவே, பெண்களாலேயே நடத்தப் பெறும் டோஸ்க்ரி கோர்ட்டில் தான், சியாமளாவின் கேஸ் நடத்தப் பெறும்.

கோர்ட்டார், உமாவின் சூழ்நிலை, பூர்வீகம் ஆகியவற்றைப் பற்றிய உண்மை நிலையைத் தெரிந்து கொண்ட பின்பே சியாமளாவிடம், அவளது மன நிலையை சரிவரத் தெரிந்து கொண்டே அவளை அனுப்பி வைக்க முடிவு செய்தனர்.

இரண்டு மூன்று மாதங்களுக்கு மேலாகி விட்டது.

அன்று காலை, இல்லத் தலைவியும் சுமதி ஆப்தேயும் சியாமளாவை ஆசி வழங்கி வழி அனுப்பி வைத்தார்கள்.

''சியாமளா! இனியாவது, நல்லபடியாக புத்தியுடன் பிழைத்துக் கொள்'' சுமதி சியாமளாவின் தோளை அன்புடன் தட்டிக்கொடுத்தாள்.

வெள்ளிக்கிழமை மெயிலில் சென்னைக்குப் புறப்படுமுன் மகாலட்சுமி கோவிலுக்குச் சென்று பிரார்த்தனையை செலுத்தி வரவிரும்பினாள் உமா.

அலைமகளின் ஆலயம், அலைகள் அடிக்கும் கரையோரமாக அமைந்திருந்தது. ஒருபுறம் பார்வதியும் மறுபுறம் சரஸ்வதியும் காட்சி தர, அன்னை மகாலட்சுமி அருளையும் செல்வத்தையும் வழங்கியபடி எழுந்தருளி இருந்தாள்.

''தாயே! இனியாகிலும் எங்கள் குடும்பத்தில் நிம்மதியையும், வசதியையும் கொடு'' மனமுருகப் பிரார்த்தித்துக் கொண்டாள் உமா. கண்களில் கசிந்த நீரை துடைத்தபடி சியாமளாவைப் பார்த்து புன்னகைத்தாள்.

''அக்கா! காளிராஜபுரம் காளி அம்மனின் கண்களைப்போல... இந்த மகாலட்சுமியும் என்னையே பாக்கறதுபோல இருக்கு.''



''காளிராஜபுரத்து ஆத்தாளும் - இந்த மகாலட்சுமியும் ஒன்னுதானே.... உலகத்து உயிர்களுக்கெல்லாம் தாயாச்சுதே. அதனால் நாம எல்லோரையும் அருளோடு பார்க்கிறாள்.''

''நான் எத்தனை பெரிய தப்பு செய்தேன் அக்கா... காளி மாதாவின் கண்களைத் திருடி....'' தாங்க முடியாது சியாமளா விசும்பி விட்டாள்.

''அந்த கண்கள் போலிக் கற்களாகப் போனதினால் நம் குடும்பம் பெரிய பழியினின்று பிழைச்சது. மேலும் காலாகாலமாக அப்பா ஆத்தாளையே பரிபூரண அன்போட வழிபட்டு வந்ததினால் அவர் மேல் கருணை கொண்டு உன்னை அவள் மன்னிச்சிட்டா... இல்லாட்டா இத்தனை பெரிய ஆபத்தில் சிக்கியும் அக்னிக்குள் புகுந்தும் காயமடையாது புத்தம் புது மலர் போல நீ வெளியே தப்பி வந்திட்டியே?... இது அவள் காட்டிய கருணை. அப்பா செய்த தர்மம்... நம்ப காளியாத்தா நமக்கு நடத்திக் காட்டிய அற்புதம்....'' உமாவின் உதடுகள் உணர்ச்சி வசத்தால் துடிக்க... கலங்கிப் போன கண்களினின்று நீர்த் துளிகள் கன்னங்களில் உருண்டன.

அருகில் நின்றபடி.... அம்பாளை வணங்கிக் கொண்டிருந்த பார்த்திபன் மனம் நெகிழ்ந்து போய்... உமாவின் தோளை மெல்லத் தட்டினான். ''வருத்தப்படாதே. இதற்கெல்லாம் கிராமத்துக்கு போய் காளியம்மனுக்கு மனம் குளிர பால் அபிஷேகம் செய்வோம்.' பிறகு அங்கேயே விமரிசையாக நம் கல்யாணத்தையும் நடத்திடுவோம். நாம் எல்லோரும் காளியின் நல்லருளால் ஒருங்கிணைந்து இருப்பதை ஊர் மக்கள் பார்க்கட்டும். உன் தந்தை மேல் அனாவசியமாக ஏற்பட்டுள்ள மாசு இதனால் மறையட்டும்.... என்ன சொல்றே.....'' கேட்டான்..... உமா மகாலட்சுமியை வணங்கியபடியே மகிழ்ச்சியுடன் தலையை அசைத்தாள்.

சென்னை திரும்பிய அன்று ஆபீஸ் விடுமுறை நாள். உமா நிம்மதியுடன் இறங்கியபோது அலமேலு வெளியே

ஓடிவந்தாள்.

''அம்மா?'' உதடுகள் துடிக்க உணர்ச்சியுடன் ஓடிச்சென்று தாயைத் தழுவிக் கொண்டாள் சியாமளா.... உல்லாசப் பயணத்திலிருந்து அப்பொழுதுதான் திரும்பி வந்த பிரகாசம் ஓடிச் சென்று கட்டிக் கொண்டான்.

பலநாட்கள் பிரிவிற்குப் பிறகு குடும்பத்தினர் ஒன்று கூடினர்.

அலமேலு முற்றிலும் புதியவளாய், மிக்க அன்புடன் ஓடியாடி வேலை செய்தாள்.

''தம்பி! இங்க இருந்து சாப்பிட்டுட்டுத்தான் போகணும்'' என்று பார்த்திபனை வற்புறுத்தினாள்.

பிற்பகல் பார்த்திபன் தன் இருப்பிடத்திற்கு கிளம்ப ஆயத்தம் ஆனான்.

''நான் புறப்படறேன். இனிமே நீங்க நிறைய பேசவேண்டியது இருக்கும். அந்த சமயத்தில் நான் இருக்கறது சரி இல்லே.''

''தம்பீ!'' அலமேலுவின் குரல் தழ தழத்தது.

''நியாயமா பாக்கப்போனா நானும் என் குழந்தைகளும் தான் புறப்பட்டுப் போகணும். இது நாளும் என் வயத்தில பிறக்காத குழந்தை உமா என்னையும் மகனையும் காப்பாத்தினா... நான் பாவி! அவளை என்னோட சுயநலத்துக்காகப் பாடுபடுத்தினேன். அவ மனசு சுத்தம். தங்கமான குணம். அதனால எதையும் பாராட்டாம என்னைக் காப்பாத்தினதுக்கு, நான் என் உடம்புத் தோலை செருப்பா தச்சுப் போட்டாலும் ஈடாகாது. தம்பி! அவளை சீக்கிரமா கல்யாணம் கட்டிக்கிட்டு, சுகம்மா இருப்பா'' குழந்தை போல குலுங்கினாள் துயரத்தில்.

உமா ஓடிவந்து சின்னம்மாளை ஆதரவுடன் பிடித்துக் கொண்டாள். ''அம்மா! எதுக்காக இப்படி பிரிச்சுப் பேசறீங்க... நீங்க எதுக்காகப் பிரிஞ்சு போகணும்.''



''இல்லேம்மா உமா! இனிமேல பாரமா இருக்க நாங்க விரும்பலே. இத்தனை நாளா உன்னைப் பாடாப் படுத்திட்டதுக்கு என்னை மன்னிச்சுக் கொள்ளும்மா'' அலமேலுவின் குரல் கம்மியது.

பார்த்திபன் அலமேலுவின் அருகில் வந்தான்.

''அம்மா! நானும் உமாவும் கல்யாணத்துக்குப் பிறகு இந்த வீட்ல இருக்கப் போறதில்லே''

''பார்த்திபன்!'' உமா திடுக்கிட்டாள்.

''ஆமாம் உமா! இவங்க நம்ம கூடத்தான் என் வீட்ல இருக்கப் போறாங்க. தம்பி பிரகாசத்தோட படிப்பு சியாமளாவோட படிப்பு எல்லாம் நல்லபடியாக முடிய வேணாமா? அம்மா வீட்டைக் கவனிக்கட்டும். அப்பத்தான் ஆபிசிற்கு நமக்கும் போக முடியும்...'' என்றான் பார்த்திபன்.

உமா உணர்ச்சி மிகுதியுடன் ''பார்த்திபன்! நீங்கள் தெய்வம்'' என்றாள். கண்கள் பனித்தன.

''அ! அவ்வளவு உயரத்தில் என்னை வச்சிடாதே. நான் வெறும் மனிதனாக வாழ விரும்பறேன். அப்பத்தான் என் உமா எனக்குக் கிடைப்பாள்'' கல கலவென்ற அவனது சிரிப்பில் அவர்கள் யாவரும் கலந்து கொண்டனர்.

# பாதையில் கிடந்த ஒரு பனிமலர்

## 1

அறையை விட்டு வெளியேறுமுன் சாந்தா ஆளுயரக் கண்ணாடி முன் வந்து நின்றாள்.

மிதமான ஒப்பனையில் நீல வண்ண பனாரஸ் பட்டில் கண்ணாடிக்குள் தெரிந்த அந்த அழகான பெண்ணுக்கு வயது இருபத்தேழு என்றால் யாருமே நம்ப மாட்டார்கள்.

இருபதைக்கூடத் தாண்டாத இளமையின் பொலிவு. தொட்டால் சிவந்து விடும் தங்க நிறம். மூக்கு, கண், முடி எதிலும் குறையில்லாத கச்சிதமான அழகு உருவம்.

தெருவில் சிறிது தூரம் நடந்தாலோ, அலுவலகத்திற்குள் புகுந்தாலோ யாரும் மறுபடியும் திரும்பிப் பார்க்கத் தூண்டும் கவர்ச்சியான தோற்றம்.

உதட்டைத் தாண்டி முகவாய் மீது பரவிக் கொண்டு விட்ட உதட்டுச் சாயத்தை டிஷ்யூ காகிதத்தால் மெல்ல ஒத்தி சரி செய்து கொண்டாள்.

இமைகளை - மூடி கண்களைத் திறந்து, மைக்கோட்டை சரி பார்த்துக் கொண்டாள். வாரி சுருட்டி உயரமாகப் போடப்பட்டிருந்த கொண்டை ஓரத்திலே ஒயிலாகச் சொருகப் பட்டிருந்த ஒத்தை ரோஜா முடியலங்காரத்திற்கு சிகரம் போல மிகவும் பொருத்தமாகத் தானிருந்தது.



அத்தை கற்பகம் ஜன்னல் கதவுகளை மூடும் சப்தம் கேட்டது. தொடர்ந்து அவள் தனக்குள்ளே பேசிக் கொண்டதும் கேட்டது. ''இன்னிக்கு முகூர்த்த நாள். ஊரில் ஒரு கல்யாண மண்டபமும் பாக்கியிருக்காது. சாமான்கள் விலை விஷமா ஏறிக்கிட்டு போவுதுன்னு புலம்பறாங்க. ஆனால் கல்யாணங்களுக்கு ஒண்ணும் குறைச்சலில்லை. விலைக்கு பயந்துகிட்டு எதை நிறுத்த முடிகிறது?...'' பெருமூச்சுடன் பின்பக்கத்து கதவை ஓங்கி சாத்தி பூட்டிக் கொண்டிருந்தாள் அத்தை. அவளது அலுவலகத்து மானேஜர் வேதகிரியின் கடைசி மகள் சர்மிளாவுக்கு அன்று திருமணம். நகரத்தில் புதிதாக உருவாகியிருந்த தேவகி மண்டபத்திலே கல்யாணம். ஞாயிற்றுக்கிழமை மெல்ல எழுந்து குளித்து, உடுத்திக் கொண்டு சாவகாசமாக வந்து கல்யாண சாப்பாட்டை ஒரு கை பார்த்து வர, சௌகர்யமாக அமைந்த காலை பத்தரை பனிரெண்டுக்குள் அமைந்த முகூர்த்தம்.

வார முழுவதும் வீட்டைக் கட்டிக் கொண்டு பாடுபடும் அத்தை கற்பகத்தை அவள் நாடகம், கச்சேரி, கல்யாணம் முதலியவற்றிற்கு கூட அழைத்துச் செல்வது வழக்கம்.

சின்ன வயதிலேயே விதவையாகி அண்ணன் வீட்டிற்குள் வந்து அண்டிக் கொண்டு விட்ட அத்தை கற்பகந்தான் அன்றிலிருந்து இன்றுவரை குடும்ப நிர்வாகப் பொறுப்பை சுமந்து கொண்டிருந்தாள். அவளுக்கு விபரம் தெரிந்த நாளிலிருந்து அவள் தாய் ஒரு நோயாளி. வருஷத்தின் பெரும்பகுதியை அவள் படுக்கையிலேயே கிடந்து ஓட்டி விட்டாள்.

நல்லவேளை - வீட்டுக்கு சாந்தா ஒரே பெண். அப்பாவின் சொத்துக்கு ஒரே வாரிசு.

அம்மாவுக்குப் பின் அத்தைதான் அவளைப் பாடுபட்டு வளர்த்தாள். அந்த ஒன்றுக்காக சில சமயம் கற்பகம் உறுத்தலாகப் பேசும் சொற்களைப் பொறுத்துக் கொள்ள

வேண்டித்தானிருந்தது.

பெயருக்கேற்றபடி சாந்தாவுக்கு அந்த குணம் சிறிதுமே கிடையாது என்பது உண்மை.

படபடவென்று பேசிவிடத் துடிக்கும் ஆத்திரக்காரிதான்.

ஆனாலும் அத்தையிடம் எதிர்த்து நின்று சண்டை போட விரும்பியதேயில்லை.

''வயதாகி விட்டது. என்னவோ உளறிக்கிட்டிருக்காங்க... போகட்டும்'' என்று ஒதுங்கிப் போவது அவள் வழக்கம்.

மேலும் அப்பாவுக்குப் பின் அவளுக்குத் துணையென்று அந்த வீட்டில் அத்தையைத் தவிர வேறு நெருங்கிய உறவினர் யாரும் கிடையாது.

சண்டை ஏற்பட்டு - மனத்தாங்கல் காரணமாக அத்தை கற்பகம் மூட்டையைக் கட்டிக் கொண்டு வெளிக் கிளம்பிவிட்டால்... அவள் எப்படி வீட்டு நிர்வாகத்தை சமாளிப்பாள். படித்தவள் தான் சாந்தா. அலுவலகத்தில் நல்ல பதவியில் இருப்பவள்தான். இளமை கொடுக்கும் துணிச்சலும் நிரம்பியவள்தான்.

முற்போக்கு.... என்று வாய்கிழியப் பேசினாலும் ஒரு இளம் பெண் தன்னந்தனியே வாழ்வதை நாகரீகமாகக் கருதும் நிலை நம்மிடையே பரவலாக இன்னும் வரவில்லையே?

அத்தை எனும் துணை - அவளது இளமைக்கு இப்போது பாதுகாப்பாகத் தேவைப்பட்டது.

வாயிற்படியில் நிழலாடியது - திரும்பிப் பார்த்தாள். கருப்பும், வெள்ளையுமாக இழை ஓடிய முடியை அழுத்திவாரி, கோடாலி முடிச்சிட்டுக் கொண்டு, அத்தை வெள்ளை ரவிக்கையுடன், இணைந்த மேக வர்ண காஞ்சிபுர பட்டுச் சேலையில் கம்பீரமாக நின்று கொண்டிருந்தாள்.

''பத்தடிக்கப் போவுது. இன்னும் என்ன



பண்ணிக்கிட்டிருக்கே?'' கற்பகம் அதட்டிக் கொண்டு தன் இடது கை மணிக்கட்டிலிருந்த கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டாள்.

நாடகம் - கல்யாணம் எதுவானாலும் சரி கற்பகத்திற்கு பத்து நிமிடங்களுக்கு முன்னதாகவே சபைக்குள் சென்று ஆசனத்தில் அமர்ந்திட வேண்டும். நிம்மதியாக முன்வரிசையில் உட்கார்ந்தபடி கண்களை ஓட விட்டு... யார் வந்திருக்கிறார்கள்? யார் வரவில்லை... என்ற பட்டியலை மனப்பாடம் செய்து கொள்ள வேண்டும். வீட்டுக்குத் திரும்பியதும் பேச விஷயங்கள் தேவைப்படுமே?

''இதோ கிளம்பிட்டேன் அத்தை.... காரில் போகப் போறோம். கல்யாண மண்டபம் கிட்டத்திலேதான் இருக்கு'' ....சிணுங்கியபடி பரிசுப் பொட்டலத்தையும், கைப்பையையும் தூக்கிக் கொண்டாள் சாந்தா.

கற்பகம் மீண்டும் ஒருமுறை சமையலறைக்குள் சென்று காஸ் சிலிண்டரின் திருகு சரியாக மூடியிருக்கிறதா என்று சோதித்துவிட்டு வேகமாகக் கதவை சாத்தினாள்.

அப்பாவுடைய வெள்ளை பியட் எட்டு வருஷத்துக்கு முந்திய மாடல். அப்பா அதைப் பத்திரமாகக் கையாண்டதின் பயன்.... தொல்லைகள் அதிகம் கொடுக்காத, நன்றியுள்ள நாய்க் குட்டியாக அவள் இழுத்த இழுப்பிற்கு அது ஓடிக்கொண்டிருந்தது.

கல்யாண மண்டபத்தின் வாயில் அருகே அத்தையை இறக்கி விட்டுவிட்டு கார்கள் நிறுத்தப்பட்டிருக்குமிடத்தில் முன் பக்கத்திலே ஒரு இடத்தைப் பிடிக்க அவசரப்பட்டாள் சாந்தா.

காரைப் பின்னால் நகர்த்தி வரிசையில் நிற்க வைத்து விட்டுக் கதவைத் திறக்க குனிந்தவள்.... அங்கு விரைவாக வந்து கொண்டிருந்த ஒரு நீல அம்பாசிடரை கவனித்து விட்டாள்.

அதை ஒட்டிக் கொண்டு வந்தவனையும் அவன் பக்கத்திலிருந்தவளையும் ஒரு கணம்தான் பார்த்தாள், திக்கென்ற உணர்வில் உடலும் உள்ளமும் பதைக்க அப்படியே ஆசனத்தில் சாய்ந்து கொண்டு விட்டாள்.

''ஹலோ கிரி! நீ எந்தப் பக்கம்.... பெண் வீட்டைச் சேர்ந்தவனா... பிள்ளை வீட்டைச் சேர்ந்தவனா?'' ஒரு ஆண்குரல் அவனுக்கு உற்சாகமான வரவேற்புக் கொடுத்தது.

''யாருக்கும் சொந்தமில்லை. நண்பர் வீட்டுக் கல்யாணம், வந்திருக்கேன். ஆமாம்.... நீ மட்டுமா வந்திருக்கே? வீட்டிலே அவங்க வரலையா?'' கேட்டபடி நண்பனுடன் கிரிதரன் தன் வீட்டுக்காரியை அழைத்துக் கொண்டு மண்டபத்தை நோக்கி விரைந்தான். குனிந்த நிலையில் குற்றம் புரிந்து விட்டவள் போல நெஞ்சு துடிதுடிக்க அவள் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தாள்.

காதோரம் விழித்த வியர்வையை துடைத்துக் கொண்டு மெல்ல காரிலிருந்து இறங்கினாள். உயிர்போய் உடம்பு சக்கையாகி விட்டது போன்றதொரு தள்ளாடலில் கால்கள் நடுங்குவதை உணர்ந்தாள்.

இதென்ன கொடுமை?... வருஷங்கள் ஐந்தாகியும் இன்னமும் கிரிதரன் அவளது உணர்வுகளை ஆட்டிப் படைக்கும் அளவுக்கு அவளிடம் ஒரு பாதிப்பை உண்டு பண்ணியிருக்கிறானே பாவி!

அதற்குப் பின்னர் அவள் மனதிலே ஒரு சலிப்பு. ஞாயிற்றுக்கிழமை வாரத்தில் ஒரு முழு ஓய்வுநாள். எண்ணை தேய்த்து ஸ்நானம் செய்து விட்டு - அத்தை தயாரிக்கும் மிளகு ரச சாதம் சாப்பிட்டு விட்டு நிம்மதியாக ஒரு கதைப் புத்தகத்துடன் கட்டிலில் படுத்துக் கிடக்கலாம். உடம்புக்கும், மனதிற்கும் இதமாக இருந்திருக்கும்.

அதை விட்டு காசைக் கொடுத்து தேளைக் கொட்டிக் கொண்டது போலப் பரிசுப் பொருளுக்காகக் கடைகளில்



அலைந்து தேடி வாங்கிக் கொண்டு அவசரமாகக் குளித்து விட்டு வியர்வையால் புழுங்க பட்டுச் சேலையைக் கட்டிக் கொண்டு கிளம்பி வந்து இங்கே அந்த பழைய கதையை நினைத்து துயரப்படவா வேண்டும்?

மண்டபத்தின் வாயிலில் கால் கடுக்க நின்று கொண்டிருந்த அத்தை முகத்திலே கடுமை தெரிந்தது.

''உனக்குப் பின்னால் எத்தனை பேர் கார்களை கொண்டாந்து நிறுத்திட்டு சீக்கிரம் வந்துட்டாங்க. நீ என்ன பண்ணிக்கிட்டு இருந்தே. பெரிய இடத்துக் கல்யாணம். கூட்டம் ஏராளமா இருக்கு உட்கார இடம் கிடைக்குமோ என்னவோ...'' முணுமுணுத்தாள்.

தன்னுள்ளே கொதித்துப் புரண்ட உணர்வுகளை வெளிக்காட்டாது சாந்தா புன்னகைத்தாள்.

''ஒரு சிரமமான இடத்திலே காரை வச்சிட்டு திரும்ப முடியாம கஷ்டப்பட்டுட்டேன் அத்தை. அதனால் நேரமாயிடுச்சு....'' மெல்ல சிரித்தாள்.

உண்மையும் அதுவே. காதலித்து கைவிட்ட கிராதகன் கிரிதரனையும் அவன் மனைவி சுவர்ணாவையும் பார்த்து விட்டதில் ஏற்பட்ட பதட்டத்தை அடக்கிக் கொண்டு வெளிவர அவள் எவ்வளவு சிரமப்பட்டாள்!

''பெரிய மனுஷங்க வீட்டு கல்யாணம்னாலே இப்படித் தான். வாங்கோன்னு வாய் நிறைய வாசலில் யாரோ கூப்பிடுவாங்க. பின்னாடி ஒரு நாற்காலியைப் பார்த்து உட்கார வைக்க மாட்டாங்க. அப்படி அந்தப் பக்கம் போங்கோன்னு கையைக் காட்டி விடுவாங்க. ஏன்னு கேட்க யாருமே இருக்க மாட்டாங்க. கொட்ட கொட்ட முழிச்சிட்டு உட்கார்ந்திருக்கணும். தலை யெழுத்து'' அத்தை அடிக்குரலில் கண்டனம் தெரிவித்தபடி கூட்டத்தின் பின்னால் எங்கேயோ இருந்த இடத்தில் அமர்ந்து கொண்டாள். அருகில் உட்கார்ந்திருந்த ஒரு பொடிப் பையனை விரட்டி விட்டு

நாற்காலியை எடுத்து சாந்தாவுக்குக் கொடுத்தாள்.

அவர்களிருந்த இடத்தின் நெரிசலில் கிரிதரனால் அவளைப் பார்க்க முடியாது. ஆனால் அவள் அங்கிருந்தபடியே அவனையும் அவன் மனைவியையும் நன்றாகப் பார்க்க முடிந்தது.

அந்த அதிர்ச்சியான சம்பவத்திற்குப் பின்னர் கிரிதரனை அவள் பார்ப்பது இது நான்காவது தடவை. நீண்ட இடைவெளிக்குப் பின்னரும் அவனைக் கண்டதும் மனதிலே குமுறிக் கொண்டு வந்த துக்கமும் வேதனையும் இன்னமும் அதே அளவில் பச்சைப் புண்ணாகத்தானிருந்தன.

மனைவியிடம் என்னவோ சொல்லி அவளை சிரிக்க வைத்துக் கொண்டு அழுத்தலாக கூட்டத்தைச் சுற்றிப் பார்வையை ஓட்டிக் கொண்டிருந்தான் கிரிதரன். அதைக் கண்ட சாந்தாவின் மனம் பதறியது.

பாவி! சண்டாளா! உன்னால் சிரிக்க முடிகிறதே!

ஆனால் என்னால்?.... அழத்தான் முடிகிறது. அதுவும் ரகசியமாக யாரும் பார்க்காதபோது.... இரவின் தனிமையில் தலையணை நனையும் அளவு அழுகிறேன்.

''முகூர்த்தப் புடவை ரொம்ப அழகா இருக்குப் பார்த்தியா? இப்ப இருக்கிற விலையில்....'' அத்தை தொணதொணத்தாள்.

நெஞ்சிற்குள் உருண்டையாக அடைத்துக் கொண்டு இறுக்கிய உணர்வில் சாந்தா தவித்துப் போனாள்.

மேலே வேகமாக சுழன்ற மின் விசிறி நெருப்பை வாரி தலை மீது கொட்டுவதைப் போன்றதொரு வேதனையால் அவள் துடித்துக் கொண்டிருந்தாள்.

புரோகிதர் மந்திரங்களை ஓத, கெட்டி மேளம் அதிர மணமகன் பெண்ணின் கழுத்தில் திருமாங்கல்யத்தைக் கட்டிக் கொண்டிருந்தான். புகைப்படக்காரர்களின் 'பளிச்'



வெளிச்சத்தைத் தாண்டிக் கொண்டு கையிலிருந்த அட்சதைகளை மணமக்கள் மீது தூவி விட்டு முதல் பந்திக்கு உட்கார அவசரப்பட்ட கூட்டம் திமுதிமுத்தது.

''நாமும் போயிடுவோம். இல்லாவிட்டால் அடுத்த பந்தியிலே ரசத்திலே தண்ணியை விட்டடிச்சுடுவானுக'' அத்தை கிசுகிசுக்கவே ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு எழுந்தாள் சாந்தா.

கையோட கொண்டு வந்த பரிசை பொறுப்பான பெண்வீட்டு ஆசாமி ஒருத்தரிடம் கொடுத்து விட்டு அத்தையுடன் சாப்பிடும் இடத்திற்கு விரைந்தாள்.

கிரிதரன் பெரிய மனித தோரணையில் அழைப்பு இல்லாது எழுந்திருக்கப் பிடிக்காது உட்கார்ந்திருந்தான்.

மீண்டும் அவனைச் சந்தித்து சங்கடப்பட வேண்டிய நிர்ப்பந்தம் அவளுக்கு ஏற்படவில்லை.

கைகளைக் கழுவிக் கொண்டதும் வெற்றிலை பாக்குடன் அங்கிருந்த கூட்டத்தில் அத்தையுடன் அவள் மறைந்து போனாள்.

வழக்கம் போல தெரிந்தவர்களைக் கண்டதும் ஊர்க் கதைகளைப் பேசிக் கொண்டு நிற்க கற்பகத்திற்கு இடம் கொடுக்காது நெட்டித் தள்ளிக் கொண்டு வந்து காரில் ஏற்றினாள்.

இரவு உணவுக்குப் பின்னர் டி.வி. பார்க்க முன்னறையில் வந்து இருவரும் உட்கார்ந்திருந்தனர்.

அத்தை தன் பேச்சுக் கச்சேரியைத் துவங்கி விட்டாள்.

''காலையிலேயே சொல்லணும்னு நினைச்சேன். அந்த நீல பனாரசிலே உன்னைப் பார்த்தபோது எனக்கு உங்கம்மா நினைப்பு வந்துட்டது. உங்கம்மா இந்த வீட்டுக்கு மருமகளா வரச்சே பதினேழு வயசிருக்கும். உன்னைப் போல ஒடிசலாதான் இருப்பா.''

சாந்தாவின் காது மடல்கள் சூடாகிப் போயின. முகமும், மூக்கும் ஜிவ்வென்றாகி... கோபத்திலே கொதித்துப் போனாள்.

''உன் அம்மாவுக்கு பதினேழு வயதிலேயே கல்யாணம் ஆயிடுச்சு. இருபது வயசிலே தாயாகிட்டா. முப்பது வயசிலே செத்துப் போயிட்டா.''

'உனக்கு இன்னமும் கல்யாணம் கூட ஆகித் தொலைக்கலைன்னு எல்லாத்தையும் வெளிப்படையா சொல்லி முடிக்கிறதுதானே?' ஓங்கிக் கத்த வேண்டும்போல ஆத்திரத்தில் பொ... ...ன்.

''சீக்கிரம் கல்... ...என்னவோ எங்க அம்மா சீக்கிரம் போயிட்டாங்க. அதைப்பத்தி இப்போ என்ன அத்தை?'' வேண்டுமென்றே வேடிக்கையாகக் கேட்டாள்.

கற்பகம் சட்டென்று பேச்சை மாற்றினாள். ''அந்த கல்யாண பொண்ணுக்குக் கூட சின்ன வயசுதான். இன்னும் இரண்டு வருஷம் கழிச்சுகூட கட்டிக் கொடுத்திருக்கலாம்.''

''அவள்தான் கடைசிப் பெண். அப்பா தன் கடமையை முடிக்க அவசரப்பட்டு கல்யாணத்தை முடிச்சுட்டார். அதுக்கு இப்போ என்ன?...''

கற்பகம் மறுபடியும் பேச்சை வேறு திசைக்கு மாற்றினாள். ''கூட்டம் எக்கச்சக்கமா இருந்துச்சு. இரண்டு பக்கத்திலும் உறவுக்காரங்க அதிகமாம். நீ கவனிச்சியோ என்னமோ.... அவன்... அதுதான் அந்த கிரிதரன், அவன் கூட கல்யாணத்துக்கு வந்திருந்தான். முன்னைவிட கொஞ்சம் உப்பியிருக்கான். இருக்காதா பின்னே. பெரிய புளியங்கொம்பைப் பிடிச்சிருக்கானே? வைர அட்டிகை போட்டுக் கொண்டிருந்தா அவன் மனைவி. ஆனால் துளிக்கூட அவளுக்குப் பொருத்தமா இருக்கலை. என்னமோ வேஷம் கட்டிக்கிட்டவளைப் போல இருந்தது. பணம் இருக்கு. ஆனால் பவிசு இல்லை.''

''அத்தை எனக்கு தூக்கம் வரது. நாளைக்கு ஆபிசிலே



எனக்கு ரொம்ப வேலை இருக்கு. நான் போய் படுத்துக்கிறேன்.'' பதிலுக்குக் காத்திராது விர் என எழுந்து தன் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

விளக்கை அணைத்து விட்டு கட்டிலின் மீது சாய்ந்து கொண்டவளால் அழுகையை அடக்க முடியவில்லை.

கிரிதரனை எத்தனை ஆழமாக அவள் நேசித்தாள்! அவளை உதறி விட்டு என்னத்தைக் கண்டு அவன் சுவர்ணாவை மணந்து கொண்டான்.

அவன் மேல் கொண்ட அந்த அன்பின் பாதிப்பு இன்னமும் அவளை ஆட்டிப் படைக்கிறதே. அவளால் அவனை மறக்க முடியாதா? ஏன்? ஏன்?

துக்கத்தின் இறுக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாது மெல்ல விசும்பிக் கண்ணீர் உகுத்தாள் வெகுநேரம்.

## 2

அன்று மாலை அவள் அலுவலகத்தினின்று மிகவும் களைப்புடன் வந்திருந்தாள்.

கோடை நாளின் புழுக்கத்திற்கு இதமாக.... குளியலறைக் குழாய் சில்லென்று கொட்டிய பச்சைத் தண்ணீரில் வெகுநேரம் குளித்துவிட்டு வேறு உடை உடுத்திக் கொண்டு மெல்லத்தான் அவள் முன்னறையில் வந்து அமர்ந்தாள்.

அத்தை கற்பகம் காப்பி டம்ளரைக் கொண்டு வந்து வைத்தவள், கூடவே மளிகைக் கடைக்காரர் அனுப்பி இருந்த பில்லையும் மேஜை மீது ஒரு பக்கமாக வைத்தாள்.

காப்பியை விழுங்கிக் கொண்டே பில்லை மேலெழுந்த வாரியாக நோட்டம் விட்டவள் திடுக்கிட்டாள். கடந்த

மாதத்தை விட கடை பில் இரட்டிப்பாகி இருந்தது.

அத்தை அருகில் நெருங்கியவள், சட்டென அதற்கு விளக்கமும் கூறிவிட்டாள்.

''போன மாசம் உங்கப்பாவின் சிநேகிதர் மகள்... தன் குழந்தையை ஸ்பெஷலிஸ்ட்கிட்டே காட்ட திண்டுக்கல்லிலிருந்து வந்திருந்தாள் இல்லையா? அப்போ வருவோரும் போவோருமாக ஏகப்பட்ட விருந்தாளிகள்—சாமான் கூட ஆகாமலா இருக்கும். அக விலை ஏறிக்கிட்டே போற சமயம்... கேட்கணுமா?''

கோபத்தை அடக்கிக் கொண்டு பில்லை மேஜை மேல் வைத்தாள். எழுந்து தன் அறைக்குச் சென்று பீரோவைத் திறந்து வீட்டு செலவிற்கு என்று வைத்திருந்த சிறு பணப்பெட்டியைத் திறந்து ஆராய்ந்தாள்.

மாதம் பிறந்து சில தினங்கள்தான் ஆகி இருந்தது. அதற்குள் அவள் சம்பளத்தில் பாதி தீர்ந்து விட்டிருந்தது.

அப்பா இறந்து போவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் ஒரு நல்ல காரியத்தை செய்துவிட்டுப் போயிருந்தார்.

''வடேகர் அண்டு பிரதர்ஸ்'' என்ற பிளாஸ்டிக் பொருள் விற்பனை நிறுவனத்திலே அவளை கணக்கு வழக்குப் பிரிவில் வேலை செய்ய வாய்ப்பு வாங்கித் தந்திருந்தார்.

அப்பா சாதாரண நிலையிலிருந்து சொந்த முயற்சியால் முன்னுக்கு வந்தவர்.

அவர்கள் குடும்பம் மத்திய தரத்தைச் சேர்ந்தது. பணக்காரனைப் போல மேலே ஏறிப்போகவும் முடியாது. ஏழைகளைப் போல கீழே இறங்கி அடிமட்ட நிலையில் வாழவும் முடியாது. திரிசங்கு சுவர்க்கத்தில் தவிக்கும் இடைப்பட்ட நடு வர்க்கத்தவர்கள்.

அப்பா விட்டுப்போன ரொக்கத்திலிருந்து வட்டி... அதன் சம்பளம் இரண்டையும் சேர்த்து அவள் ஒரு உயர் மட்டத்து



வாசி போல போலியாக வாழ்ந்து கொண்டிருந்தாள்.

திடீர் விருந்தாளிகள்... திடீர் செலவு என்றால் திணறிப் போவாள். அத்தை வசதியான குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டவள். விதவையான பின்னர் அங்கிருந்து பணத்தை அள்ளிக் கொண்டு வராவிடினும் அந்த வீட்டின் ஊதாரித்தனத்தைக் கணிசமாகத் தன்னுடனே வாரிக் கொண்டு வந்திருந்தாள்.

கட்டும் செட்டுமாகக் குடித்தனம் செய்யத் தெரியாது—பண்டங்களைப் பாழாக்கிக் கொண்டு.... வீட்டை நிர்வகித்த அத்தையை அப்பாவோ, அவளோ ஒதுக்க முடியவில்லை.

''இத்தனை ரசம் எதுக்கு வச்சிங்க? நாம ரெண்டு பேர்தானே? தினமும் மாலை டிபன் எதுக்கு? நான் வந்ததும் சாப்பிட்டு விடுகிறேனே?'' என்று எத்தனையோ முறை ஜாடையாக சொல்லிப் பார்த்தாள்.

''நாள் முச்சூடும் உழைக்கிற... எதுக்கு? இந்த சாண்வயித்துக்குத்தானே? அதுக்கு ஏன் வஞ்சனை செய்யணும்?'' அதட்டிவிட்டு தன் இஷ்டப்படியே சமைத்து ஜமாய்ப்பாள் அத்தை.

விருந்தாளிகளை வாய்நிறைய உபசரித்து, வயிறு கிழியசோறு படைத்து அனுப்பினாள்! வேலைக்காரி... கேட்கவே வேண்டாம். மூன்று வேளை பெரிய தம்ளர் நிறைய காப்பி உபசரிப்போடு நடக்கும்.

அத்தை சம்பாதிக்கவில்லை. அதனால் பணத்தை செலவழிக்கும்போது அதன் அருமையை உணரவில்லை.

பலமுறை அத்தை மீது சாந்தாவிற்குக் கோபம் பொத்துக் கொண்டுவரும். கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட வேண்டும் போன்ற ஆத்திரம், மனக்கொதிப்பு எல்லாமே ஏற்படும்.

வேளைக்கு சமைத்துப் போட்டு, வீட்டைக் கவனிக்கவும்

பேச்சுத் துணைக்கு ஒரு மனித உயிரின் தயவிற்காகவும், அவள் பற்களைக் கடித்துக் கொண்டு அத்தை என்ற தலை வலியைப் பொறுத்துக் கொண்டாள்.

வங்கி கணக்குப் புத்தகத்தின் இருப்பைப் பரிசோதித்து விட்டு, 'செக்' புத்தகத்தை எடுத்து மளிகைக் கடைக்காரரின் பில்லுக்கு ஒரு காசோலை எழுதிக் கிழித்து அத்தை கையில் கொடுத்தாள்.

''நாளைக்குக் காலை கடைக்காரப் பையன் வந்து நின்றால் குடுத்திடுங்கோ. நான் கொஞ்சம் அனுமார் கோவில்வரை போய்ட்டு வரேன்'' நடையிலிருந்த செருப்புக்களை வேகமாகக் காலில் திணித்துக் கொண்டு... மணிபர்ஸை இடுப்பில் செருகிக் கொண்டு கிளம்பினாள்.

கேட்டைத் தாண்டுமுன் அத்தை சிறு துணிப்பையுடன் பின்னாலேயே ஓடி வந்தாள்.

''பங்கனபல்லி மாம்பழம்... வண்டி வண்டியா கோவில் வாசல்லே வச்சிருக்காங்க. சொம்பு கணக்கா குண்டு குண்டா பெரியபழம்... விலை ரெண்டு ரூபாய்தான்.... மூணு பழம் வாங்கிட்டு வந்திடு. சீசன் சமயத்தில் சாப்பிடாட்டி... பிறகு எப்ப சாப்பிடறது?'' பையைக் கொடுத்தாள்.

எரிச்சல் அடிவயிற்றிலிருந்து புரண்டது. கஷ்டப்பட்டு அதை அடக்கியபடி கேட்டைத் திறந்து கொண்டு, தெருவில் இறங்கினாள்.

காலத்தோடு பழம் சாப்பிடவேண்டும்.... காலத்தோடு இளமை போகுமுன் அவள் கல்யாணம் செய்து கொண்டு, குடியும் குடித்தனமுமாக வாழ வேண்டாமா?

மானேஜர் மகள் கல்யாணத்திற்கு போய்வந்த பின்னர் கிரிதரனை அவன் மனைவியுடன் சந்தித்த பின்னர் சில நாட்களாக அவள் மனதில் கல்யாண நினைப்பு.... எழுந்து... சதா உறுத்திக் கொண்டே இருந்தது.



தெருவில் ஜோடியாக ஆணும் பெண்ணும் நடப்பதைக் கண்டால் அவளை அறியாது அந்தப் பெண்ணின் கழுத்தை ஆராயத் துவங்குவாள் கண்களால்!

தங்கத் தாலிச் சரடு அல்லது மஞ்சள் கயிறு... ஏதேனும் ரவிக்கை மீது கண்ணில் பட்டால் அவள் மனதில் வேதனை 'சுரீரென்'று பரவும்.

அப்பா உயிரோடு இருந்திருந்தால்... கட்டாயம் சிரமப்பட்டாவது இன்னொரு மணவாளனைத் தேடி அவளுக்கு முடித்து விட்டிருப்பாரே!

பரங்கிப்பாளையம் கிராமத்திலிருந்து பம்பாய் போக வேண்டிய உறவினர்கள்... நண்பர்கள்... எல்லோருக்கும் அவள் வீடு ஒரு இடைப்பட்ட தங்கும் மடம்! அவ்வளவே! அந்தத் தங்கும் மடத்தின் சொந்தக்காரி ஒரு தனிமரமாக நிற்கிறாளே என்று இதுவரை எவருமே அக்கரை காட்டவில்லை...

''கை நிறைய சம்பாதிக்கிறா.... வீடு.... வாசல், கார்..... எல்லா வசதியும் இருக்கு... கல்யாணம் செய்துகிட்டு வீணா திண்டாடுவானேன்னு பிரியமில்லை போல இருக்கு...!'' அவளைக் கேட்காமலே அபிப்பிராயங்களை உதிர்த்துவிட்டு நகர்ந்து கொண்டனர்.

ஒட்டொட்டாம் புல் போன்ற உறவுக் கும்பல் - நண்பர் பட்டாளம்... சாந்தா அவர்களை அறவே வெறுத்தாள்.

அவர்கள் வசித்த தெருவைத் தாண்டி சாலையில் புகுந்து சிறிது தூரம் நடந்தால்... அந்த ஹனுமார் கோவிலை அடைந்துவிட முடியும்.

அத்தையின் தொண தொணப்பு இன்றி சிறிது நேரம் நிம்மதியாக இருக்கலாமே! நடைபாதையில் விற்றுக் கொண்டிருந்த பூக்காரர்களின் தட்டிலிருந்து... மல்லிகை கதம்பங்களின் வாசனையை அள்ளிக் கொண்டு வந்த குளிர்ந்த காற்று முகத்தில் வீசுவதை மனம் விட்டு அனுபவித்தாள்.

மாலைவேளை கடைத் தெருவிற்குப் புறப்பட்டிருந்த கூட்டத்திற்குள் நீந்தி.... அவள் கோவிலை அடைவதற்குள் இருட்டத் துவங்கி இருந்தது. சாலை விளக்குகள் பளிச்சென்று எரிய ஆரம்பித்தன.

கோவிலில் அன்று கூட்டம் வழிந்து கொண்டிருந்தது. தீப ஆராதனை முடிந்ததும் துளசியும், தீர்த்தமும் வாங்கிக் கொண்டு பிரகாரத்தை ஒரு முறை சுற்றி வரக் கிளம்பினாள் சாந்தா.

பிரகாரத்தில் ஒரு பக்கத்தில் தரையில் இரு குழந்தைகளுக்கு இடையே அமர்ந்தபடி வடைகளை விநியோகம் செய்து கொண்டிருந்த மீனாவைக் கண்டு திடுக்கிட்டாள் சாந்தா. அவளது கல்லூரி தோழி. அவள் கோவிலில் என்ன செய்கிறாள்?

''சாந்தாவா?.... அடடே! பாத்து ரொம்ப நாளாச்சு... இப்படி உட்காரு... உங்கிட்ட பேசணும் போல இருக்கு...'' உரிமையுடன் கையைப் பிடித்து இழுத்து அருகில் தரையில் சுவர் ஓரமாக உட்கார வைத்துக் கொண்டாள்.

சாந்தாவிற்கு நடக்கவிருந்த கல்யாணம் நின்றுபோய் வீடு துக்கத்திலே மூழ்கி விட்டிருந்த சமயம்.... தோழி மீனாவின் கல்யாணம் தடபுடலாக ஆபட்ஸ்பரியில் நடந்தேறியது. அப்பாவும், அத்தையும் போயிருந்தார்கள். ஆனால் அவளுக்கு அது சமயம் யார் முகத்திலும் விழிக்கவே, துணிவிருக்கவில்லை. வீட்டினுள்ளேயே அடைந்து கிடந்தாள்.

ஐந்து ஆண்டுகளில் மீனா, இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகி.... முன்னைவிட உடல் பருத்து, முகத்திலே தனியான ஒரு பொலிவுடன் காணப்பட்டாள்.

''நம்ம காலேஜ் மேட் ரஞ்சனியைத் தெரியுமில்லியா?''

''யாரு?'' புருவத்தை உயர்த்தினாள் சாந்தா.

''அதாண்டி... கொக்கு மாதிரி உயரமா இருப்பாளே.... 'நெட்டைக் காலின்னு' கூப்பிடுவோமே... டென்னிஸ்



சாம்பியன்...''

''அவளா?''

''அவளேதான். அவ அப்பா அவளுக்காக வரன் தேடிகாலே ஓஞ்சு போயிட்டாராம்...''

''பாவம்! அவளை விட உயரமான மாப்பிள்ளை கிடைக்கக் கஷ்டப்பட்டிருப்பாரு'' சாந்தா முறுவலித்தாள்.

''அவளை இன்னைக்கு இங்க சந்திச்சேன். ஹனுமாருக்கு வடைமாலை சாத்துவதற்காக வந்தாளாம்.''

''வேண்டுதலையா?''

''ஆமாம்! என்கிட்ட ஒரு பத்து வடைகளை எடுத்துக் குடுத்து சந்தோஷமா சாப்பிடுன்னு குடுத்திட்டுப்போனாள்.''

''என்ன வேண்டுதலையாம்?''

''ரொம்ப முக்கியமானது. இது தெரியாதா? ஹனுமார் கோவிலை சுத்தி வந்தால், மனதிலே நினைக்கின்ற விஷயம் பலிதமாகும்னு யாரோ பக்கத்து வீட்டு அம்மாள் சொன்னாளாம். ஒரு மண்டலம் ஹனுமாரைப் பலமாகப் பிடித்துக் கிட்டாள்...''

''பிறகு?'' ஆவலுடன் கேட்டாள் அவள்.

''பத்தே நாள்... அவ நினைச்ச காரியம் வெற்றியாயிடுச்சாம்.''

''விளக்கமா சொல்லேன்.'''

''முதல் வடையை வாயிலே போட்டுகிட்டு நீயும் ஏதானும் காரிய சித்திக்கு வேண்டிக் கொள்ளு. இந்தா! இல்லாட்டி இந்த ரெட்டை வாலுகள் அத்தனை வடையையும் ஒரே முழுங்கில் சுபளீகரம் செய்திடுவாங்க'' சிரித்தாள் மீனா.

வடையை பிட்டு வாயில் போட்டுக் கொண்ட சாந்தா சிணுங்கினாள்.

''சரியா சொல்லேன்'' என்றாள்.

''அமெரிக்காவில் இன்ஜினியர் வேலை பாக்கிறவர் ஒருத்தர். வீடு, கார், டி.வி.ன்னு அமர்க்களமாக வாழறவர். லீவில இந்தியாவுக்கு வந்திருந்தாராம். தன் மனதுக்குப் பிடிச்ச பெண்ணாத்தான் கல்யாணம் செய்துப்பேன்னு அவர் இங்கே வந்து கோவிலைச் சுத்தினாராம். அவ்வளவுதான் ஆஞ்சநேயர் இந்த சுற்றுப்புற சூழ்நிலையிலேயே ஒரே பார்வை.... கல்யாணம் நிச்சயம் செய்துட்டாராம்.'' சிரித்தாள் மீனா குறும்பாக.

''கண்டதும் காதலா?''

''எப்படி வேணுமினாலும் வச்சுக்க... தான் பிரம்மச்சாரியாக இருந்தும்.... மத்தவங்களுக்கு இல்லற வாழ்க்கையில் அருள் வழங்கிட்டார் ஆஞ்சநேயர்! அந்த இன்ஜினியர் வேற எந்தப் பெண்ணையும் பார்க்க விரும்பாமல் நேரே ரஞ்சனி வீட்டுக்குப் போய் அவங்கப்பாவைக் கண்டு பேசி முடிவு செய்துட்டார். வர வாரம் முதல் முகூர்த்தத்திலேயே பத்மாவதி மண்டபத்திலே கல்யாணம்.... உனக்கும் அழைப்பு வரும்... பாத்தியா.... எங்கேயோ கிடந்தவளுக்கு எப்படி யோகம் அடிச்சதுன்னு?''

தொண்டைக்குள்ளேயே வடை அடைத்துக் கொண்டு விட்டது போன்று திணறியது சாந்தாவிற்கு.

''வரதட்சிணை - சீர் - நகை - நட்டு எதுவுமே வேண்டாம்னுட்டாராம் மாப்பிள்ளை. தன் செலவிலேயே கல்யாணத்தை நடத்திக்கப் போறாராம். மாப்பிள்ளை பாக்க ஜம்முனு உயரமா இருக்காராம். எப்படி? அதிர்ஷ்டம் அடிச்சாலும் இப்படி புயலாட்டம் அடிக்க வேணாமான்னு அசந்து போனேன்'' மீனா கொட்டினாள் உற்சாகமாக வார்த்தைகளை.

பொறாமை உணர்வு சாந்தாவின் உள்ளத்தில் மெல்ல மெல்ல சூடேறியது. ஒட்டடைக் கொம்புபோல பிரம்மன் அழகைத் தொட்ட கையால் தொடாத... ரஞ்சனிக்குக் கூட



கல்யாண யோகம்... பெரிய இன்ஜினியர் மாப்பிள்ளை.... அமெரிக்காவிலிருந்து பறந்து வந்து... அனுமார் சாட்சியாகக் கல்யாணம் செய்து கொள்ளத் தீர்மானித்து விட்டான்.

அவளுக்கு...!

ஆமாம்! நான் கேட்கிறேன்னு சங்கடப்பட்டுக்காதே. அந்த கிரிதரன் போனா உலகமே அஸ்தமிச்சா போயிட்டுது? இந்தப் பரந்த பாரத நாட்டிலே உன்னை உன் படிப்புக்கும் அழகுக்கும் விரும்பி ஏற்க வேறு எவனுமே இருக்கமாட்டான்னு நினைக்கிறியா? அல்லது நீ மனசு வச்சா கிடைக்காமப் போயிடுவானா...? நீதான் பிடிவாதமா கல்யாணமே வேண்டாம்னு தனியா வாழ ஆசைப்படறேன்னு கேள்விப் பட்டேன்.''

சாந்தா பதில் சொல்ல முயன்றாள்.

''சாந்தா ஒண்ணு சொல்றேன் கேட்டுக்க. 'கல்யாணம் செஞ்சுக் கொண்டவர்களும், செய்து கொள்ளாதவர்களும், முடிவில் வருத்தப்படுறாங்கன்னு ஆங்கிலக் கவி ஒருத்தர் சொல்லி இருக்காரே நினைவிருக்கா? ஏன்தான் இத்தனை பெரிய குடும்பச் சுமையில் மாட்டிக் கொண்டோமோ என்று திருமணமானவன் வருத்தப்படறான். கட்டைப்பிரம்மச்சாரி காலத்தை ஓட்டிவிட்டு ''கடைசிக் காலத்தில் ஒருவாய் தண்ணிகூடக் குடுக்க மனைவியோ, குழந்தையோ இல்லையே'' என்று அங்கலாய்ப்பானாம். எல்லாம் தூரத்துப்பச்சை என்று வேடிக்கையாகக் கூறுவார்கள் சாந்தா!

''கடந்து போனதை நினைச்சு.... காலத்தைத் தள்ளிப்போடாதே! இளமை மீண்டும் வராது. தெரிஞ்சு கொள்ளு. மணவாழ்க்கையில் ஒரு பெண்ணுக்கு எத்தனையோ குறைகள் இடர்கள் இருக்கலாம். ஆனால் அது ஒரு இனிய அனுபவம்... என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேணும்.

''கணவர் - குழந்தைகள், தன் வீடு என்று ஆனதும் ஒரு பெண்ணின் மனதிலே ஒரு புதுதெம்பு உண்டாகி விடுகிறது.

உன் அலுவலகத்தில் உன் மனதுக்குப் பிடிச்ச யாரும் இல்லை.... இந்த ஐந்து வருஷத்தில் நீ இன்னமும் யாரையும் சந்திக்கலியா?

''காதலிச்சாத்தான் கல்யாணம் செய்துக்கணும்னு கட்டாயம் இல்லே.. என் அப்பா எனக்கு அவரா பார்த்து செய்து வச்ச கல்யாணம்தான். இப்ப என்ன குறைஞ்சு போய்ட்டேன் நான். நல்லாவே இருக்கேன். திருமணம் ஆனதுமே நான் பாத்துக் கொண்டிருந்த வேலையை உடனே ராஜினாமா செய்யணும்னார் என் கணவர். அப்பாடான்னு உடனே வேலையை உதறிட்டேன். வீட்டை நிர்வகிப்பதும், ஒரு பெரிய வேலையாச்சே? என்னைக்கேட்டால் கல்யாணமானதும் சமாளிக்க முடிந்தால் பெண்கள் வேலையை விட்டு வீட்டைக் கவனிக்கத் தொடங்க வேணும் என்பேன். குழந்தைகளை வேலைக்காரியிடம் ஒப்படைத்திட்டு.... வேலையில் மனம் ஒட்டாம ஏன் தவிக்கணும்? நம்ம குழந்தையை நாமே வளர்த்தோம்கற பெருமையோட வாழணும். என் கணவர் அப்படி ஒண்ணும் ஓஹோன்னு சம்பாதிக்கலை. ஆனாலும் நாங்கள் வசதியாகவே பற்றாக்குறையில்லாமல் வாழறோம். சாந்தா! எல்லாம் மனசைப் பொறுத்ததுதான்னு புரிஞ்சுக்க. கார் வச்சிருக்கறவங்களைப் பார்த்து காலற நடக்க நம்மால முடியுதேன்னு திருப்திப் பட்டால்தான் நாம அமைதியா வாழ முடியும். எதுக்கும் நீ நல்லா யோசிச்சு ஒரு முடிவுக்கு வா... சீக்கிரமா முடிவு எடு... நல்ல முடிவா இருக்கட்டும்... நானும் எனக்குத் தெரிஞ்ச இடத்தில் நல்ல மாப்பிள்ளைகளாப் பார்த்துத் தெரிவிக்கிறேன். பத்திரிகையில் விளம்பரம் செய்து பார்க்கலாமே.... அ...! இப்ப எல்லாம் ஞாயிற்று கிழமை விளம்பரப் பகுதியிலே தினசரிப் பத்திரிகையில் ஒரு பக்கம் முழுசும் இதே மணமகள் தேவை விளம்பரம் வருது. நீ பார்க்கறதில்லே' பட படவெனப் பேசி முடித்தாள் மீனா.

கண் இமைகளை நீர் சுட்டது போல திடுக்கிட்டு எழுந்தாள் சாந்தா.



கல்யாணம் செய்து கொண்டு எல்லோர் போலும் குழந்தை கணவன் - வீடு என்ற வட்டத்தில் வாழ அவளுந்தான் விரும்பினாள்.

கிரிதரன் முன்னால் சிறப்பாக வாழ்ந்து காட்ட மிகவும் ஆசைப்பட்டாள். அவள் இதயத்தை சுக்கலாக்கி விட்டுப் போன கயவன் முன் தலை நிமிர்ந்து அவளும் ஒரு குடும்பத் தலைவியாக வாழத் துடிப்போடுதான் இருந்தாள். ஆனால்.... மாலையைத் தூக்கிக் கொண்டு யாரும் இவளை நோக்கி வந்து விடவில்லை.

என்னைத் திருமணம் செய்து கொள்வீர்களா என்று யாசித்து அந்த அந்தஸ்த்தைப் பெற அவளது கௌரவம் இடம் தரவில்லை.

''யோசிக்கிறேன்...'' சிரித்தபடி விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தாள். கோவிலுக்குப் போகு முன்னைவிட இப்போது மனம் கல்லாக கனத்தது. ரஞ்சனியின் யோகத்தை நினைத்து சுமையாக துன்பம் நெஞ்சை அழுத்தியது.

## 3

எதையெல்லாம் அவள் வேண்டாம் என்று ஒதுக்க விரும்புகிறாளோ அவை-பழி தீர்த்துக் கொள்வது போல முன்வந்து நிற்கும்.

அப்படி அவளுக்கு ஒரு ராசி.

இன்று எக்கச்சக்கமான ஜலதோஷம், மண்டைக் குடைச்சல், அத்தையிடம் சொல்லி மருந்துக் குழம்பு வைக்கச் சொல்லி சாப்பிட்டுவிட்டு... சீக்கிரம் படுத்துத் தூங்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டு அவள் வீட்டிற்குள் நுழைவாள்.

''எலுமிச்ச பழரசம் வச்சிருக்கிறேன். தலைக்கு குளிர்ச்சி, ஒரு டம்ளர் முதலில் சாப்பிடு. இன்னைக்கு நம்ம சபாவிலே டிராமா... அதனால் சீக்கிரமா கிளம்பு....'' அத்தை வாயிற்படியருகே வரவேற்கும்போது, தலையில் அடித்துக் கொண்டு அழமாட்டாத குறையில் அவள் குமுறிப் போவாள்.

ஜலதோஷத்திற்கு மருந்தாக - அத்தை குறிப்பிட்டபடி எலுமிச்சம் பழரசத்தைக் குடித்துவிட்டு தலைவலியை அதிகரிக்க அந்த அறுவை நாடகத்திற்கும் விதியே என்று போய் வருவாள்.

அன்று காலை அவள் சற்று முன்னதாகவே அலுவலகம் கிளம்ப விரும்பினாள். சில நாட்களாக மன உளைச்சல் காரணமாக அவளது மேஜை மீது மலைபோல் பார்வையிடப் படாத ஃபைல்கள் குவிந்து கிடந்தன. மானேஜர் தமது சுற்றுப் பயணத்திற்குப் பின்னர் அன்று அலுவலகம் வரப்போகிறார் என்று கேள்விப்பட்டிருந்தாள்.

மனிதன் பெரிய சிடுமூஞ்சி. அந்தந்த ஃபைல்களை அவ்வப்போது பட்டுவாடா செய்யவில்லை என்றால்... ஆபீஸ் இரண்டு படக்கத்துவார். எல்லார் எதிரிலும் தூக்கி எறிந்து பேசி விடுவார். வெட்கக்கேடு! கௌரவம் பறிபோய் விட்டதே என்று ஆத்திரப்பட்டுக் கொண்டு வேலையை விட்டு வெளியேற முடியுமா?

''வீட்டுக் கவலையை ஆபிசிலே எதுக்காக சுமந்துகிட்டு வந்து, குழப்பறீங்க?'' மானேஜர் உறுமினால் அவள் அவமானத்தில் சுருங்கிப் போய் விடுவாள்.

அப்பா தேடிக் கொடுத்த வேலையைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு அதன் தயவால் வாழ நினைக்கும் சாந்தாவால் வேலையைப் புறக்கணிக்கவோ, உதறித் தள்ளவோ முடியாதே!

மானேஜர் வருவதற்குள் அலுவலகத்திற்கு விரைந்து ஃபைல் குவியலை வேகமாகக் குறைத்து ஒழுங்குபடுத்தி விடவேண்டும். அநேகமாக பயணக் களைப்பு தீர்ந்த பிறகு



மானேஜர் ஆபீஸ்வர நடுப்பகலாகிவிடும். சற்று முன்னதாகப் போய் ஒரே மூச்சில் வேலையில் இறங்கி விட்டால்.... முடித்து விட முடியும்.

பலவாறு எண்ணியபடி அத்தை டிபன் கட்டிக் கொடுக்கும் வரைக் காத்திராது காரைக் கிளம்பிக் கொண்டு புறப்பட்டாள்.

நெடுஞ்சாலைக்குள் விர்ரென்று சென்ற கார், சோதனையாக மேலே நகர மறுத்து இடக்கு செய்ய ஆரம்பித்தது. கர், புர் என்ற சப்தங்களை எழுப்பியது. முடிவில் இன்ஜின் செத்துவிட்டது போல நின்று விட்டது.

இத்தனை நாட்களாகத் தொல்லை கொடாமல் ஓடியது என்று அவள் சந்தோஷப்பட்ட கார்.... இப்போது... தொல்லை கொடுக்கத் துவங்கி விட்டதே! அதற்கு என்று அந்த நாளைப் பார்த்தா இப்படித் தொல்லை கொடுக்க வேண்டும்? அட கடவுளே, என்ன செய்யலாம்?

காரை ஓட்டத்தான் அவளுக்குத் தெரிந்திருந்ததேயொழிய, வேறு எந்தவிதமான ரிப்பேர் விஷயங்களும் புரியாத விஷயமாகவே இருந்தது. ஒரு டயர் ''பஞ்சராகி'' விட்டாலும், ''ஸ்டெப்னி'' மாற்றத் தெரியாது. கார் பானெட்டைத் திறந்து, என்ன விதமான கோளாறு ஏற்பட்டிருக்க வேணும்? என்று ஊகிக்கத் தெரியாது.

அது கிடக்கட்டும். வீட்டிலேயே சாதாரணமாக, விளக்குகள் அணைந்தால், 'ஃபியூஸ்' ஒயர் புதுப்பிக்கவோ, சரி பார்க்கவோ தெரியாது. 'மிக்ஸி' கோளாறு என்றால் எதனால் என்று தெரிந்து கொள்ள முயலமாட்டாள். இதெல்லாம் அவள் மண்டையில் ஏறாத விஷயம் என்றே அவள் அசட்டையாக இருந்து விட்டிருந்தாள். அப்படியிருக்க கார் ''மெக்கானிஸம்'' அவளைப் பொறுத்தவரை ஒரு மாபெரும் விஷயம்.

நல்லவேளை! ஓரமாக ஓடிக்கொண்டிருந்த வண்டி அப்போதுதான் நின்று வைத்தது. இறங்கி கதவை மூடிப்பூட்டிவிட்டு, அருகில் நின்ற ரிக்ஷா ஒன்றைப் பிடித்து

அதில் ஏறி அமர்ந்தாள்.

சற்று தொலைவிலிருந்த ''கார் ஒர்க்ஷாப்''பிற்கு விரைந்தாள். சிறிது நேரத்தில் மோட்டார் சைக்கிளில் இரு மெக்கானிக்குகளுடன் அவளும் ரிக்ஷா சவாரியாக கார் நின்ற இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

சாந்தா கைகடிகாரத்தைப் பார்த்தாள். இன்னும் அரை மணி நேரம்தான் இருந்தது. ஆபீஸ் நேரத்திற்கு இரண்டு பஸ் பிடித்து அவள் போய் சேருவதற்குள் சிடுமூஞ்சி மானேஜர் நரசிம்ம அவதாரத்துடன் தமது சிம்மாசனத்தில் ஏறிக் கொண்டிருப்பாரே!

மெக்கானிக் மாணிக்கம் காரை மும்முறை சுற்றி வலம் வந்தான். பானெட்டைத் திறந்து சிங்கத்தின் வாயில் தலையை விட்டுக் கொண்ட ''ரிங் மாஸ்டர்'' போல் சிறிது நேரம் தலையைப் புதைத்துக் கொண்டான். பிறகு, தலையைத் தூக்கி அவள் பக்கமாகத் திரும்பி பெரிய ''ஸ்பெஷலிஸ்டு'' பாணியில் தோள்களைக் குலுக்கினான்.

''ரொம்ப பெரிய வேலையை வச்சுடுச்சு. இதை இப்படியே ரிப்பேர் செய்ய முடியாதும்மா. முதல்ல ''டோ'' பண்ணி இழுத்திட்டுப் போகனும். நல்லா கவனிக்கனும். என்ஜினைக் கழற்றித்தான்...'' அடுக்கிக் கொண்டே போனான்.

சாந்தாவின் மனமும் கழண்டு கொண்டே போனதுபோல் ஆகிவிட்டது. கார் இல்லாவிட்டால் போக்குவரத்து வசதி திண்டாட்டம். பிறகு ரிப்பேர் செலவு... எத்தனை நாட்கள் இழுக்கடிப்பானோ அதுவரை, ஆட்டோ, பஸ், டாக்ஸி என்ற செலவு வேறு!

''எத்தனை நாள் பிடிக்கும்....?'' கேட்டாள்.

''நாலு நாளாச்சும் ஆகலாம். நீங்க வண்டியை உட்டுட்டு போங்க... எத்தனை வேகமாக முடியுமோ ரிப்பேர் செய்துடறோம்... நீங்க வீட்டு அட்ரஸ் இல்லாட்டி ஆபீஸ்



போன் நம்ப்ராச்சும் குடுத்திட்டுப் போங்க....'' என்றான் அசட்டையாக.

''என்ன செலவு ஆகும்னு சொல்லலையே'' மென்று விழுங்கியபடி கேட்டாள் சாந்தா.

''இப்ப எப்படியம்மா சொல்ல முடியும்? ரொம்ப நாளா வண்டியை ''டச்'' பண்ணாம இருந்திருக்கீங்க போல் தெரியுது. ஏகப்பட்ட வேலை வாங்கும் போலத் தோணுது.''

சாந்தாவிற்கு உதறல் எடுத்தது. அத்தை கொடுத்த கடைக்காரன் பில் போக வங்கியில் இருப்பு நிதி, நிலைமை மிகவும் குறைவாகவே இருந்தது. இவன் வேற கார் ரிப்பேர் கணக்கில் ஒரு நீண்ட பில்லை நீட்டிவிட்டால்... ஐயய்யோ! தனக்குள்ளே அலறியபடி அவசரமாக விலாசத்தையும், போன் நம்பரையும் கிறுக்கி அவனிடம் நீட்டினாள்!

எதிர்ப்புறம், கோழி கிளம்பி ஓடி வருவது போல், ஓடி ஆட்டோ ஒன்றை நிறுத்தி பாய்ந்து ஏறினாள்.

அலுவலகத்து மாடிப்படிகளை ஒரே தாவலில் ஏறி மூச்சிறைக்கத் தன் ஆசனத்தில் அமரவும், அலுவலகம் துவங்கவும் சரியாக இருந்தது. தன்னைச் சுற்றிலும், திரும்பிப் பார்க்கக் கூட நேரமின்றிப் பரபரவென்று ஃபைல்களைப் புரட்டி வேலையைக் கவனிக்கத் துவங்கினாள்.

''சனியன் புடிச்ச வண்டி! இன்னிக்குன்னு பார்த்து இடக்கு செய்யணுமா?'' மனம் கோபத்துடன் முணு முணுத்தது.

அதே கோபத்தின் அழுத்தத்துடன் செய்த வேலையால் மேஜை மேலிருந்த ஃபைல் மலை மறைந்தது. அலுவலகப் பையனை அழைத்து அவசரமாகப் பார்வையிட்ட ஃபைல்களை அவனிடம் கொடுத்தாள்.

''மானேஜர் ஐயா அறையில் கொண்டு வச்சிடு'' அனுப்பிய பிறகுதான் அவளுக்கு நிம்மதியான மூச்சு வந்தது.

நெற்றி மீது பொடித்து நின்ற வியர்வைத் துளிகளைத்

துடைத்துக் கொண்டு ''அப்பாடா'' என்று நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''வந்ததிலிருந்து அம்மாவுக்கு இன்னைக்கு நிறைய வேலை'' அலுவலகப் பையன் சிரித்தபடி தேநீர் கோப்பையை அவள் மேஜை மீது வைத்தான்.

தேநீர் இடைவேளை வந்தது கூடத் தெரியாமல் அவள் வேலையில் மூழ்கி விட்டிருக்கிறாள்.

அன்று காலை புறப்படும் அவசரத்தில் பலகாரமும் சரிவர சாப்பிடவில்லை. அத்துடன், அத்தை கல்போல செய்து வைத்திருந்த இட்டிலிகளும், ஞாபக மறதியாக இரண்டு முறை உப்பை வாரிப்போட்டுக் கரைத்திருந்த சட்னியுமாக, அவளுக்கு எதையுமே வாயில் வைக்க முடியவில்லை. அத்தை காப்பி கலக்க சமயலறைக்குள் மறைந்த சமயம், சட்டென புழக்கடைக் குப்பைத் தொட்டியில் பலகாரத்தை வீசி விட்டு, தட்டைக் கழுவி வைத்து விட்டாள். காப்பியை மட்டும் ஒரே விழுங்கில் குடித்து விட்டு வேலைக்குக் கிளம்பி விட்டாள். வழியில் ஏற்பட்ட கஷ்டமும், ஆபீஸ் நெருக்கடியுமாக இப்போது பசி வயிற்றில் தீவிரப்பட்டுக் கொண்டிருந்தது.

தேநீர் தேவாமிர்தமாகவே தோன்றியது அவளுக்கு. பரக்க பரக்க அதைப் பருகியபடி, மேஜையின் மீது குப்பைகள் குறைந்த நிம்மதியில் தன்னைச் சுற்றிப் பெருமிதமாக நோட்டம் விட்டவள் திடுக்கிட்டுப் போனாள்.

ஆபீஸ் பையன் தேநீர் கோப்பை நிறைந்த மரத்தட்டை இங்குமங்கும் தூக்கிக் கொண்டு ஓடிய அவசரத்தில் அவள் தினசரி வாசிக்கும் தமிழ் நாளேட்டை மேஜையின் ஒரு மூலையில் வைத்து விட்டுப் போயிருந்தான்.

முகத்தில் அடித்தாற்போல், அவள் கண்களில் மட்டுமே படவேண்டும் என்பது போல, அந்தப் படம்... அவள் நெஞ்சை உறுத்தியது... படபடவெனத் துடிக்கச் செய்தது.



மீதமுள்ள தேநீரை ஒரே வாயாகப் பருகி விட்டு கோப்பையை வைத்தாள்.

பத்திரிகையை கையில் எடுத்து அந்தப் படம் வந்த முதல் பக்கத்தை நன்கு பிரித்துப் பார்த்தாள்.

மை ஊறிப் போயிருந்த போதிலும் - அவனது முகமும், அவனது அன்பு மனைவியின் முகமும் தெரியத்தான் செய்தது. மார்பளவு புகைப்படம் அச்சாகி இருந்தது. கிரிதரனும் அவனது மனைவியும் முன் பக்க செய்தியுடன் சிரித்தபடி இருந்தனர்.

''சுவர்ணா எண்டர்பிரைசஸ்'' நிறுவனத்தின் அதிபதி திரு. கிரிதரனும், அவரது மனைவி திருமதி. சுவர்ணா கிரிதரனும் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகளுக்கும், ஜப்பான் போன்ற கீழை 'நாடுகளுக்கும் வியாபார சம்பந்தமான நுணுக்கங்களை ஆராய சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள செய்தியை விளம்பரப் படுத்தி இருந்தது.

தம்பதியர் வெற்றியுடன் திரும்பிவர வாழ்த்தும் சுவர்ணா எண்டர்பிரைஸின் ஊழியர், செயலாளர், நண்பர், உறவினர்கள்....

அச்சகத்து மை சுவர்ணாவின் பக்கம்தான் அதிகமாகப் பரவி இருந்தது. கிரிதரன் முகம் பளிச்சென்று நன்றாகவே இருந்தது. அடர்த்தியான புருவங்களின் கீழ் சிரிப்பு நிழலாடிய அதே கண்கள், அதே முகவாய்.... புன்முறுவலிக்கும் உதடுகள் - முன்னைவிட அத்தை சொன்னபடி உப்பியிருக்கும் கன்னக் கதுப்புகள் - எல்லாவற்றிற்கும் மேலே, முகத்திலே ஜொலித்த அந்தப் பணக்காரக் களை.

இருக்காதா பின்னே....? பல லட்சங்களின் அதிபதி -பெரிய நிறுவனத்தின் தலைவர் - பங்களா - படகுக் கார் - ஒரு கழுதையிடம் கூட பணம் கூடிவிட்டால் தனிக்களை முகத்தில் வந்துவிடும் என்பார்களே. ஏற்கனவே பார்க்க லட்சணமானவன் -பணமும், பதவியும் சேர்ந்து கொண்டதும் - கம்பீரமாக படத்திலே முறுவலித்துக் கொண்டிருந்தான்.

பற்களை நறநறவென ஆத்திரத்துடன் கடித்துக் கொண்டாள் சாந்தா. அந்தக் கம்பீரமான தோற்றத்திற்கு பின்னால் எப்பேர்ப்பட்ட நயவஞ்சகன் ஒளிந்து கொண்டிருக்கிறான்....! இது பார்ப்பவர்களுக்குத் தெரியுமா?

அடிமட்ட நிலையிலிருந்தவன். படிப்படியாக ஏறி முன்னுக்கு வந்துவிட்டான். இப்போது பெரிய நிறுவனத்தின் முதலாளி. இவன் கீழ் பல ஊழியர்கள். இவனுக்கு வெளிநாடுகளுக்குப் பறந்து செல்ல வாய்ப்பு! ஏறி மேலே வந்தவுடன் ஏற உதவிய ஏணியையே எட்டி உதைத்துவிட்ட கொடுமைக்காரன் என்பது அவளுக்கு மட்டும்தானே தெரியும்.

முதல் முதலாக அவனை அவள் சந்தித்ததை அவளால் மறக்கவே முடியாது.

நாள் முழுவதும் கதை படிப்பது - இல்லாவிட்டால் பழைய கல்லூரித் தோழிகளுடன் சினிமாவிற்குப் போவது, அப்பாவை அரித்துப் பணம் வாங்கிப் புதிய 'பாப்' சங்கீத இசைத் தட்டுக்களை வாங்கி வந்து ஸ்டீரியோவில் போட்டு அடுப்பங்கரையிலிருக்கும் அத்தை காதைப் பொத்திக் கொண்டு அலறிக்கொண்டு ஓடிவரும் வரை பெரிய ஓசையாக இசையைக் கேட்டு மகிழ்வது என்று அவளது காலம் உல்லாசமாகக் கவலைகளின்றி போய்க் கொண்டிருந்த சமயம்.

ஒரு நாள் மாலை அப்பா வீட்டிற்கு வரும்போது தம்முடன் அலுவலகத்திலிருந்து காரிலேயே அவனை அழைத்து வந்திருந்தார்.

''சாந்தா'' அப்பா உற்சாகமாகக் கத்திக் கொண்டு உள்ளே நுழையுமுன்பே பார்த்து விட்டாள்.

களையான தோற்றமுடைய அந்த வாலிபன். யார்? மனதிலே ஒரு இன்ப எழுச்சி.

''அத்தை, அப்பா யாரையோ அழைச்சிட்டு வந்திருக்கார்...:. சாப்பாட்டிற்கு...'' சமையலறைக்குள் ஓடித்



தெரிவித்தபோது அத்தை கோபத்தில் வெடித்தாள்.

''உங்கப்பனுக்கு வேலையில்லே உனக்கும் வேலையில்லே.... விருந்துக்கு யாரையாச்சும் கூட்டிக்கிட்டு வந்தா முன்னாலயே தெரிவிக்க வேணாமா? மந்திரத்தாலே மாங்காய் விழுமா? மறுபடியும் நான் இப்ப சமைச்சாகணும். நமக்குத் தானேன்னிட்டு, ராத்திரிக்கு வெறும் பீர்க்கைத் துவையலும் கக்கா ரொட்டியும் செய்திருக்கேன்'' கோபத்துடன் கூறிக்கொண்டு, பிரஷர் குக்கரைத் தேடினாள்.

''நான் வேணுமானால் காய்கறி நறுக்கிக் கொடுக்கிறேன் அத்தை! அப்பாவைத் திட்டாதீங்க'' கொஞ்சிக் கொண்டே பார்வையை முன் அறையில் ஓட்டினாள்.

வெளிர் நீல சட்டையும் - பழுப்பு வண்ணப் பாண்டும் அவனுக்கு மிகப் பொருத்தமாகத் தெரிந்தது.

அப்பாவிடம் எத்தனை மரியாதை?

அவர் உட்கார்ந்தபின்.... அவர் உத்தரவிட்ட பின்னர் மிகவும் அமெரிக்கையாக எதிரில் ஒரு மோடா மீது உட்கார்ந்து கொண்டான்.

''இந்த பிள்ளையாண்டான் யார் தெரியுமா கற்பகம்? நம்ப அழகர் நத்தத்திலே கணக்குப் பிள்ளை கந்தசாமி இருக்கலையா? அவருக்கு தூரத்து உறவு. எம்.பி.ஏ. படிச்சிருக்கான். என் சிநேகிதன் நமச்சிவாயத்தின் கம்பெனி 'சுவர்ணா எண்டர்பிரைஸ்'ல இவனுக்கு இண்டர்வியூ இருந்திச்சு. நமச்சிவாயம் என்னோட ரொம்ப நெருங்கிய சிநேகிதன்னு யாரோ இவன்கிட்ட சொல்லி இருக்காங்க. பாவம் பையன் என்னைத் தேடிக்கிட்டு வந்துட்டான். நமச்சிவாயத்துக்கிட்ட ஒரு வார்த்தை சொல்லணும்னு கேட்டுக்கிட்டான். நம்ப பையனாச்சே... விட முடியுமா? சரின்னுட்டேன்.''

''அதெப்படி முடியும். ஒரு ஊர் ஒரு தேசம்னாக்கவே

தானே உறவும் வந்து ஒட்டிக்குமே? நம்பளவங்கிற ஒரு பாசமும் வந்துடுமே? டெலிபோன்ல ஒரு வார்த்தை சொல்லிட்டிருந்தா, ஒரு கூட்டு, கறின்னு செய்து வச்சிருப்பேன். அவசரத்திலே கையும் ஓடல. காலும் ஓடலே.... ஏதோ செஞ்சிருக்கேன்'' என்று ஒத்துப்பாடின அத்தை, ''ஏம்பா உம்பேர் என்ன?'' என்று பரிவுடன் கேட்டாள்.

தன்னுடைய பிறந்த மண்ணைச் சேர்ந்தவன் என்றதும் அத்தையின் மனமே மாறிவிட்டது. உணவைப் பரிமாறியபடி அவனை ஆதரவாகப் பார்த்தாள்.

''சாம்பார் - ரசம் - அப்பளம்னு ஜமாய்ச்சிருக்கீங்களே? ஒரு பத்து நாளா ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டு நாக்கே செத்துப் போச்சு.... அ! என் பேரு கிரிதரன்'' என்று முடித்தான் சிரிப்புடன்.

தண்ணீர் டம்ளர்களை அத்தைக்கு உதவியாக அவர்களது அருகில் கொண்டு வந்து மேஜை மீது வைத்தபோது அவளை அவன் நிமிர்ந்து பார்த்தான்.

சிரிப்பு அலை பாய்ந்த அந்தக் கண்களின் காந்த சக்தியால் அவள் அப்பொழுது இழுக்கப்பட்டு விட்டாள்.

''இவதான் என் ஒரே மகள் சாந்தா.... பி.காம். படிச்சிட்டு மேலே என்ன செய்யறதின்னு தெரியாம வீட்டிலே உட்காந்திருக்கா....'' அப்பா அறிமுகம் செய்தார்.

''அப்படியா? மேலே படிக்கிறது. இல்லாட்டி எல்லா பெண்களும் செய்யறதை செய்வது...?'' என்று குறும்பாகச் சொல்லிச் சிரித்தான்.

குங்குமமாகச் சிவந்த முகத்துடன் இன்பப் பரவசத்திலே அவள் சட்டென்று உள்ளே போய் விட்டாள்.

அன்று இரவு வெகு நேரம் அவன் அப்பாவுடன் பேசிக் கொண்டிருந்தான். விடை பெற்றுக் கொண்டு போகும்போது அத்தை சொன்னாள்.



''நீ நம்ம ஊர்ப் பையன். அடிக்கடி நீ வந்துகிட்டுப் போய்க்கிட்டு இரு. உன் வீடு மாதிரின்னு நினைச்சுக் கொள்ளு'' உபசாரமாகச் சொன்னாள்.

வந்து போய்க் கொண்டு இருக்க வேண்டுமே என சாந்தாவின் உள்ளமும் ஏங்கியது.

''பையன் வந்து கொண்டிருப்பான். என்னால அவனுக்கு ஒரு காரியம் ஆகணுமே'' அப்பா சவால் விட்டார்.

அப்பா அதேசமயம் உண்மையாகவே பாடுபட்டார். நமச்சிவாயத்தை நேரே சென்று பார்த்தார். கிரிதரனைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்து சிபாரிசு செய்தார்.

அவரது முயற்சி வீண் போகவில்லை.

''கற்பகம். இன்னைக்கு வடை பாயசத்தோடு சமைச்சிடு, கிரிதரனைக் கூட்டிக்கிட்டு வரப்போறேன், அவனுக்கு 'சுவர்ணா எண்டர்பிரைசில்' மார்க்கெட்டிங் மானேஜர் வேலை கிடைச்சிட்டது. என்ன சம்பளம் தெரியுமா? இரண்டாயிரத்து ஐநூறு. படிப்படியா உயர்ந்து ஐயாயிரத்தைப் பிடிச்சிடுவான். பயல் ரொம்ப கெட்டிக்காரன்'' போனில் படபடவென்று பொழிந்தார் உற்சாகமாக.

அத்தைக்கு வாயெல்லாம் பல். ''காவிரி தண்ணி குடிச்சு வளந்த பிள்ளையாண்டானாச்சே! புத்திசாலித்தனத்துக்குக் கேட்கணுமா?'' பெருமைப்பட்டுக் கொண்டாள்.

அதற்குப் பின்னர் கிரிதரன் அத்தையின் அழைப்பைத் தட்டாதவன் போல் அடிக்கடி வர ஆரம்பித்தான்.

கிராமத்திலிருந்து பெற்றோர்களை அழைத்து வந்து நகரத்தில் ஒரு வீடு பார்த்து வைக்கும் வரை அவன் தனியே ஒரு லாட்ஜில் தவிப்பதைத் தாளாத அப்பா அடிக்கடி வீட்டில் சாப்பிடும்படி அழைத்து வந்தார்.

# 4

சில மாதங்கள் ஓடிச் சென்றன. கிரிதரன் மிகவும் பழகி விட்டதொரு நண்பனாகிப் போனான்.

ஒரு நாள் மாலை அப்பா மிகவும் சந்தோஷமாக வீடு திரும்பினார்.

''கற்பகம்! ஒரு நல்ல சங்கதி சொல்லப் போகிறேன். டிபனுக்கு இனிப்பு ஏதாச்சும் செய்திருக்கியா?'' வேடிக்கையாகக் கேட்டார்.

''மைசூர் போண்டாவும்—ரவா லாடும் செய்து வச்சிருக்கேன். ஏன் கேட்கறிங்க அண்ணா?'' தங்கை வியப்புடன் கேட்டாள்.

''அடி சக்கை! முதல்ல காபி டிபனை எடுத்துக்கிட்டு வா... அப்படியே சாந்தாவையும் கூப்பிடு''... உற்சாகமாக உத்தரவிட்டார்.

அன்று வீட்டில் ஒரே கலகலப்பு... ''ரவாலாடு ஏ ஒன்'' என்று அப்படியே ஒரு முழு லாடையும் வாயில் போட்டுக் கொண்டு விழுங்கவும் முடியாது துப்பவும் முடியாது அப்பா திண்டாடியதை நினைத்து சாந்தா—சிரித்தாள்—சிரித்தாள் வயிறு வலிக்கும் அளவ்வு விழுந்து விழுந்து சிரித்தாள்—எல்லோரும் சிரித்து மகிழும்படியானதொரு நற்செய்தியை சொல்லத்தான் அப்பா இல்லாத கோமாளித் தனமெல்லாம் செய்தார்.

''ஏய் சாந்தா! இப்படி வா... உனக்குக் கிரிதரனைப் பிடிச்சிருக்கா'' அப்பா செல்லமாக அதட்டியபோது அவள் முகம் சிவந்து போனாள். மார்பு படபடக்க, உதடுகள் துடிக்கப்



பேசத் தோன்றாமல் ஆனந்தத்தில் மௌனம் ஆனாள்.

''அவனுக்கு உன்னை ரொம்ப பிடிச்சிட்டுதாம்—உனக்கும் பிடிச்சிருக்கும்னு நினைச்சு... உங்க ரெண்டு பேர் ஜாதகத்தையும்—கனியூர்காரர்கிட்ட காட்டினேன். ரொம்ப விசேஷமான பொருத்தம் இருக்குன்னு சொல்லிட்டாரு.''

''கிரிதரன் அவங்க அப்பா அம்மாவுக்கு கடிதம் எழுதிப் போடப் போறான். எனக்கு ஒரே பெண். என் சொத்தெல்லாம் அவளுக்குத் தானேன்னதும் வரதட்சிணை அது, இதுன்னு வாயைத் திறக்கலை. அவன் அக்காக்காரி இறந்து ஆறு மாசம் ஆகலையாம். அதனாலே ஒரு வருஷம் முடிஞ்சதும் சுபகாரியத்தை வச்சுக்கலாம்னு ஒப்புதல் கொடுத்துட்டான். என்ன சொல்றே?'' அப்பா வழக்கமான உற்சாகக் குரலில் உரக்கக் கேட்டார்.

''உங்க இஷ்டம் அப்பா'' ஆனந்தம் தாங்கமாட்டாமல் எழுந்து உள்ளே சென்று விட்டாள்.

அதற்குப்பின் கிரிதரன் நித்தமும் இரவுவேளை சாப்பாட்டிற்கு அவர்கள் வீட்டிற்கு வரத் துவங்கினான். ஓய்வு நாளில் முழு வேளையும் அவர்கள் வீட்டிலேயே தங்க ஆரம்பித்தான். அப்பா, அத்தை, சாந்தா மூவருமாக அவனுடன் சினிமாவிற்கும், நாடகத்திற்கும் சென்று வந்தனர்.

நாளடைவில் ''ஒருவரையொருவர் அவங்க தெரிஞ்சு கொள்ளட்டும். நடுவில் நாம ஏன் கரடிகள் போல...'' அப்பா, அத்தையிடம் கூறிவிட்டு மெல்ல ஒதுங்கி விட்டார். அத்தைக்கு அந்த ஏற்பாடு பிடிக்கவே இல்லை. அவள் பழைய காலத்துப் பெண்மணி—பட்டிக்காட்டில் பிறந்து வளர்ந்தவள் - புகுந்த இடமும் ஒரு கிராமம்.

''வயசுப் பெண்ணும் - பிள்ளையும் ஜோடியாகக் காரில் ஊர் சுற்றினால் - பின்னால் ஏதேனும் தப்புத்தண்டாவாகி விட்டால்...'' பயந்து போனாள்.

''மேலை நாடுகளில் பெண்களும் பிள்ளைகளும் முதலில் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வெளியே தனியே செல்கிறார்கள். பிக்னிக், நடனம் என்று வெளியே தனிமையில் ஒருவருக்கொருவர் நெருக்கமாகப் பழகி... நன்றாகப் புரிந்து கொள்கிறார்கள்.''

''அண்ணா அது மேற்கத்திய நாகரீகம் - ரொம்பப் பழகிட்டுப் பிறகு பிடிக்கலைன்னாகூட அவர்கள் உதறிவிட முடியும், ஊர் ஒண்ணும் சொல்லாது. ஆனால் நம்ம நாட்டிலே அப்படி- இல்லியே. பெத்தவங்க பார்த்து நிச்சயித்த வரன் தட்டிப்போனாக் கூடப் பெண் மேலே ஏதோ பிசகுன்னு கதை கட்டி விடற கெட்ட பழக்கமான சமுதாயத்தில் வாழ்கிறோம். எனக்கு என்னவோ இதெல்லாம் பிடிக்கலேண்ணா! சினிமா போய்ட்டு கொஞ்ச நேரமாயிட்டு சாந்தா வந்தாள்னா நான் வயித்திலே நெருப்பைக் கட்டிக்கிட்டு வாசல்லியே நிற்பேன்'' அத்தை ஆரம்பத்திலேயே அவலம் பாடிவிட்டாள்.

''என் மகள் கெட்டிக்காரி. படிச்சவ. பட்டுக்கத்தரிச்சாப்பல பழகத் தெரிஞ்சவ - எத்தனை தூரம் நெருங்கலாம். எங்கே ஆபத்து என்பது எல்லாம் தெரிஞ்சவ. அவள் என்ன பச்சைக் குழந்தையா? வயசு இருபத்திரண்டு முடியப் போகிறதே... அவனும் கண்ணியமான பையன் - வரம்பு மீறி நடக்கவே மாட்டான்'' - அப்பா அவர்கள் பழகுவதை ஆட்சேபிக்கவில்லை. சொல்லப்போனால் மாப்பிள்ளையை கையில் இறுக்கமாகப் பிடித்துக்கொள்ளும் வழியே அதுதான் என்று கூட பாவம்... நம்பிவிட்டார் மனிதர்.

''சாந்தா! ஏ சாந்தா... இன்னிக்கு நாம சினிமாவுக்குப் போறோம். படத்தோட பேரு என்ன தெரியுமா?''

''நெவர் லீவ் மீ அலோன்.''

''இன்னைக்கு சபாவில் ''காதல் கல்யாணம்'' என்கிற நாடகம். நம்ப ரெண்டு பேர் மட்டும் போகப் போறோம். என்ன சொல்றே?''



''சாந்தா! இந்தப் புடவையில் நீ எத்தனை அழகா இருக்கே தெரியுமா? இன்னும் ஆறு மாசம் காத்திருக்கணுமே இவள் கையை உரிமையோட பிடிக்கன்னு மனம் அடிக்கக்கிறது...''

''சாந்தா! ஏய் சாந்திக்குட்டி... இங்கே பாரு... கொஞ்ச நேரம் கழிச்சு வந்ததுக்கு இத்தனை கோவமா? அட கோவத்திலே கூட நீ நல்லாவே இருக்கே தெரியுமா?''

கொஞ்சி, குழைந்து, புகழ்ந்து அடிபணிந்தவன் போல் நடித்து எப்படியெல்லாம் அவளை மயக்கினான்?

கிரிதரனே உலகம் - அவனில்லாவிட்டால் வாழ்வே இல்லை... என்ற அளவிற்கு அவளது எண்ணம், பேச்சு மூச்சு எல்லாவற்றிலும் ஒருங்கே வியாபித்திருந்தவன் - உள்ளத்திலே ஒன்றி விட்டவன்...

இப்படிப்பட்ட அழகான படித்த இளைஞனைக் காதலித்து கல்யாணம் செய்து கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த அப்பாவை அவள் ஒவ்வொரு கணமும் நன்றிப் பெருக்கோடு நினைத்துக் கொள்வாள்.

நாட்களை ஆசையோடு எண்ணிக் கொண்டிருந்தாள். கிரிதரனோடு அவள் சுற்றாத இடங்களே இல்லை என்ற அளவிற்கு கடற்கரை, சினிமா, டிராமா, பார்க் என்று வளைய வந்தது அத்தைக்குப் பிடிக்கவே இல்லை.

''சுபஸ்ய சீக்கிரம்னு சொல்வாங்க. சூட்டோடு முடிச்சிடணும். ஆறின கஞ்சி பழங்கஞ்சியாகிடும் என்பாங்க'' அண்ணனிடம் ஜாடையாகத் தெரிவித்துப் பார்த்தாள்.

''வருஷம் முடியணுமே - பிறகுதானே கல்யாணத் தேதியைப் பத்தி அவங்கப்பாகிட்ட பேசமுடியும்'' அப்பா மறுத்து விட்டார்.

ஒரு நாள் இரவு சினிமா காட்சிக்குப் போய்விட்டு வெகு நேரங்கழித்து வீடு திரும்பியவளை ஏற இறங்கச் சந்தேகத்துடன் பார்த்தாள் அத்தை.

''இதபாரு சாந்தா! நீ செய்யறது கொஞ்சங்கூட எனக்குப் பிடிக்கலே. என்னதான் அவன் உன்னைக்கட்டிக்கப் போறவன்னாகூட இப்படி ஒரேயடியா... நாள் முச்சூடும் அவனோடு திரிஞ்சிகிட்டிருக்கக் கூடாது. ஊர் சிரிச்சுப் போகும். 'மெட்டல் பைப்ஸ்' ராமமூர்த்தி மகள் சங்கதி தெரியுமில்லையா?

''ஐ. ஏ. எஸ். மாப்பிள்ளையைப் பிடுச்சிட்டோம்னு கல்யாணத்திற்கு முந்தியே, வருங்கால மாப்பிள்ளையோட மகளையும் ஜோடி போட்டுக்கிட்டுத் திரிய விட்டாரு. பிறகு என்ன ஆச்சு? திடீர்னு பையன், 'எனக்கு இந்தப் பெண்ணை கட்டிக்க இஷ்டமில்லைன்னு' கல்யாண தேதி வைக்கறதுக்கு முன்னே ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான்.

''அவனும்வேற ஒரு பெரிய மனுஷர் வீட்டு பெண்ணை நிறைய வரதட்சிணை வாங்கிட்டு கட்டிக்கிட்டுப் போனான். ராமமூர்த்தி தானும் சளைச்சவரில்லைன்னு காட்டிக்க விரும்பினாரு—தம் மகளுக்கு வேற இடம் நிச்சயம் செய்தாரு. கல்யாணத்தன்னைக்குப் பந்தல்ல பெண்ணோட கையை மாப்பிள்ளை பிடிச்சி அழைச்சிட்டு மண்டபத்தில உட்காரும்போது விஷயம் தெரிந்திட்டது'' அத்தை பெருமூச்செறிந்தாள்.

''என்ன விஷயம் அத்தை?''

''பெண் கையில கர்ப்பநாடி ஓடிச்சு... பையன் டாக்டருக்குப் படிச்சவன்... அவ்வளவுதான் மணவறையை விட்டு பையன் வெளியே வந்திட்டான். இப்படித் தாயாகி விட்ட பெண்ணை எவன் கட்டுவான்?''

''அத்தை! போதுமே இந்தப் பேத்தல்!''

''என் சிநேகிதி காந்தாமணி ஒரு டாக்டர். அவசொல்லியிருக்கா. ஒரு பெண் கர்ப்பமா இருக்கிறதை வெறும் கையைப் பிடிச்சு வெறும் நாடி மூலம் எந்த டாக்டரும் பார்த்து கண்டு பிடிக்கமுடியாதாம். ரொம்பக்காலமா, நாம்



ஊர்ல சினிமாவிலயும் கதையிலயும் இப்படி ஒரு காட்சியைப் பாத்து பழகிட்டோம். கர்ப்பநாடின்னு கையில தனியா ஒரு நாடி ஓடறதா, உங்களைப்போல பத்தாம் பசலிங்கதான் நம்புவாங்க... இந்தக் காலத்துல இதை ஒப்புக்க மாட்டாங்க'' எரிச்சலுடன் கூறினாள் சாந்தா.

''நான் சொல்ல வந்தது என்ன?''

''புரிஞ்சு கொண்டேன் அத்தே! கவலைப்படாதீங்க. நான் உங்க மருமகள். உங்க அண்ணனோட மகள். அப்படியெல்லாம் என்னையே அழிச்சுக் கொள்ள மாட்டேன் அத்தை! எனக்கு சுயகௌரவம் கொஞ்சம் அதிகமாகவே உண்டு'' பதிலுக்குக் கத்திக் கூச்சலிட்டு விட்டாள்.

ஆனால் அன்று அத்தை அவளை எச்சரித்தது எவ்வளவு நல்லதாகப் போயிற்று.

மழை கொட்டிக் கொண்டிருந்த ஒருநாள் இரவு, கிரிதரன் அவளைத் தன்னுடன் சிறிது நேரம் மழைக்கு ஒதுங்க தான் தங்கியிருந்த லாட்ஜுக்கு அழைத்த போது அவள் பிடிவாதமாக மறுத்து விட்டாள். அந்தப் பிடிவாதமும், மன உறுதியும் அவளுக்கு இருந்தது எவ்வளவு நல்லதாகப் போயிற்று!

இல்லாவிட்டால், ஒரு சமயம் அத்தை சொன்ன அந்தக் கதைபோல அவளது வாழ்வும் அலங்கோலமாகி விட்டிருக்கலாம். காதலித்து கல்யாணம் செய்து கொள்வதாகப் பெரியவர்களிடம் வாக்குக் கொடுத்து விட்டுத் திடீரென வாக்குத் தவறியவன், நடத்தையில் நல்லவனாக இருப்பான் என்பது என்ன நிச்சயம்?

''வருங்காலத்தில் மனைவியாகப் போகிறாய்? உன்னைத் தொட்டுத் தாலிகட்டப் போகிறவன் நான். எதற்காகப் பயப்படுகிறாய்?'' என வற்புறுத்தி அவளை அழித்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

திடீரென உடம்பெல்லாம் நடுங்குவதை உணர்ந்த சாந்தா

எழுந்து நிமிர்ந்து சமாளித்தபடி அமர்ந்தாள்.

தேநீர் வேளை நேரம் இன்னும் முடிவு பெறவில்லை. பையன் மரத்தட்டோடு இங்குமங்குமாய்ப் பறந்து கொண்டிருந்தான்.

மை கசிந்த முகத்துடன் சுவர்ணா கிரிதரன் பத்திரிகையின் முன்பக்கத்திலிருந்த படத்தில் அவளைப் பார்த்து சிரிப்பது போல் ஒரு பிரமிப்பு... மீண்டும் பழைய சிந்தனை...

ஓராண்டுகாலம் ஓடிவிட்டது. இனிமேல் பெரியவர்களைக் கலந்து ஆலோசித்து முஹூர்த்தத் தேதி வைக்க வேண்டும் என்று அப்பா ஆரம்பித்தார்.

என்ன காரணமோ...? கிரிதரன் ஊருக்குப் போவதைத் தள்ளிப்போட்டுக் கொண்டிருந்தான். வீடு தேடி பெற்றோரைக் கொண்டுவந்து குடிவைக்கப் போகும் திட்டத்தையும் கைவிட்டிருந்தான்.

முன்போல் அடிக்கடி சாப்பிட வருவதும் மெல்லக்குறையத் துவங்கியது. அதேபோல, நாடகம், சினிமா என்று ஜோடியாக அவளை அழைத்துப் போவதையும் நிறுத்திக் கொண்டிருந்தான்.

''கிரி! 'நள்ளிரவில் ஒரு கொலை'ன்னு ஒரு ஆங்கிலப் படம் வந்திருக்கு. ரொம்பப் பிரமாதமா இருக்காம். போய் வரலாமா?'' அவளாக வெட்கத்தை விட்டுக் கேட்டாள்.

''ஊரில் பலர் பலவிதமாகப் பேசறாங்க. இனி அப்படி போறது நல்லதில்லை சாந்தா'' மழுப்பி விட்டான்.

உண்மைதான். ஆரம்பத்தில் அவனுக்குத் தெரிந்தவர்கள்... கிரிதரனையும் சாந்தாவையும் தனியே ஜோடியாக ஊரைச் சுற்றி வருவதைப் பற்றி சற்றுக் கேவலமாகத்தான் பேசினார்கள். என்னதான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறவர்கள் என்றாலும் இப்படியா அலைவார்கள்? விமர்சித்தனர். பின்னர் அவர்களே பேச்சை மாற்றிக் கொண்டனர்.



''அவனுக்கு அவள்னு நிச்சயம் செய்திட்டாங்க. இந்த காலத்துப் பசங்கள் அப்படித்தான் 'சோஷலா' இருப்பாங்க. ''சூள்'' கொட்டினார்கள். அதற்குப் பிறகு அவர்களைப் பற்றி மறந்து போனார்கள்.

அந்த மாதிரியான நிலை வந்தபோதுதான் அந்த அதிர்ச்சியான செய்தியைச் சொன்னான் கிரிதரன்.

அவனை அத்தனை உயரத்திற்குக் கொண்டு வரப் பாடுபட்ட அவள் அப்பாவிடமே துணிச்சலுடன் சொல்லி விட்டான்; ஏணியை எட்டி உதைத்த உத்தமன்.

அன்று மாலை அலுவலகத்திலிருந்து திரும்பிய அப்பா பேயறைந்தது போல் காணப்பட்டார்.

''கற்பகம்! சாந்தா! இங்க வாங்க... எனக்குக் காப்பிடிபன் எதுவும் வேண்டாம்...'' கிரிதரன் கொடுத்த அதிர்ச்சியில் வயிறு நிரம்பிப் போயிருக்கும் அப்பாவின் குரல் தழுதழுத்தது.

''சாந்தா! என்னை மன்னிச்சுக்கோம்மா; உன்னை வாழ வைக்கணும்னு நான் எடுத்துக்கொண்ட முயற்சி இப்படி மண்ணாகிப் போகும்னு நினைக்கலைம்மா.''

''அண்ணா! என்ன சொல்றீங்க?'' அத்தை பதறினாள்.

''என் சிநேகிதன் நமச்சிவாயத்தின் மகள் சுவர்ணாவுக்கும்...''

''சுவர்ணா எண்டர்பிரைசஸ் முதலாளி...''

''ஆமாம். அவன் மகளுக்கும், கிரிதரனுக்கும் கல்யாணம் நிச்சயமாகிட்டுதாம்.'' அப்பா கண்களில் நீர் முட்டியது.

''நீ வேலை பார்த்து வச்சியே அந்த கம்பெனி முதலாளி மகளா...?''

''ஆமாம்.''

ஆயிரம் சம்மட்டியால் அடித்துப்போட்டுவிட்ட வேதனையால் துடித்துப் போனாள் சாந்தா. அதற்குப் பின்னர்

அவனுக்குக் காய்ச்சல் வந்தது. ஜன்னி கண்டு பிதற்றினான். பிழைப்பதே அரிது என்னும் அளவிற்குத் துவண்டு போனான். ஒருமாத காலம் தனியார் மருத்துவ மனையில் கிடந்தான்.

மறுபடியும் அவர்களுக்கு வேண்டியவர்கள் —தெரிந்தவர்கள் — உறவினர்கள் யாவருமே கசமுசவென்று பேசினார்கள். நினைக்க முடியாத அசிங்கமான கற்பனைக் கதைகளையெல்லாம் கட்டி அவள் பெயரை மாசுபடுத்தினார்கள்.

''அதோ போறாளே... அவதான்... அந்த சாந்தா!''

''கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்ச மாப்பிள்ளைக்குத் திடீர்னு சந்தேகம் வந்திட்டது. முடிவில் வேண்டான்னுட்டானாமே!''

''அழகான மாப்பிள்ளை. ஆயிரக்கணக்கா சம்பாதிக்கறான் — பெரிய புளியங்கொம்பைப் பிடிச்சுட்டோம்னு —ரொம்பத்திமிரா இருந்தா... அது வெறும் முருங்கைக் கொம்புன்னு இப்பத்தான் புரிஞ்சுகொண்டா...''

அப்பப்பா! அந்த வார்த்தைகளைக் கேட்டு அவள் துடியாய்த் துடித்துப் போனாள்.

அவளது மனக் கொதிப்பை — அதிர்ச்சியை அவள்பட்ட மனவேதனையை — அவளது குடும்பத்திற்கு ஏற்பட்ட அவமானத்தை கிரிதரன் கண்டு கொள்ளவே இல்லை.

குறித்த காலத்தில் அவனுக்கும் — நமச்சிவாயத்தின் மகள் சுவர்ணாவிற்கும் திருமணம் இனிதே நடந்தேறியது.

சிநேகிதன் மகள் கல்யாணமாயிற்றே, அப்பாவும், அத்தையும் போய் வந்தார்கள்.

அவள் வீட்டோடு துக்கம் கொண்டாடிக் கொண்டு படுக்கை மீது சுருண்டு கிடந்தாள்.

நமச்சிவாயத்திற்கு சுவர்ணா ஒரே மகள். அத்தனை திரண்ட செல்வத்திற்கும் ஒரே வாரிசு. அதனால் மாப்பிள்ளைக்குத் தனியாகக் கீழ்பாக்கத்தில் ஒரு பங்களா, கார், கணிசமான வரதட்சணை என்று வாரிவழங்கி விட்டிருந்தார். அத்துடன் தமது தொழிலில் ஒரு பங்குதாரராக ஏற்றுக் கொண்டிருந்தார்.



அத்தை அடிக்கடி அங்கலாய்த்து அழுது புலம்பினாள். ''அப்பவே சொன்னேனே கேட்டியா? கிரிதரன் எப்படிப்பட்ட வஞ்சகன்னு கடைசியில் புரிஞ்சு போயிட்டுதே. எங்கேயோ, பட்டிக் காட்டுப் புழுதியில் புரண்டு கிடந்த பயல்... இப்ப என்னடான்னா பங்களாவும், ஆள் படையுமா, அப்பப்பா அவனுக்கு வந்த யோகம்...'' மாய்ந்து மருகிப் போனாள்.

''என் அண்ணனை ஏமாத்திட்டதா இப்பநினைக்கலாம். ஆனால் காலம் பதில் சொல்லும்'' கையை சொடுக்கிப் பல முறை சபித்துக் கொட்டினாள்.

கிரிதரனுக்கு எந்த விதமான சுகக்கேடும் ஏற்படவில்லை. முன்னைவிட ஆள் 'ஜம்மென்று' பருத்துப் போயிருந்தான் —குஷியாகத் திரிந்தான். படகுக் காரில் பவனி வந்து கொண்டிருந்தான். அதற்கு மாறாக அவர்களது வாழ்க்கைதான் முன்னைவிட சரிந்து போக ஆரம்பித்தது.

அப்பாவின் பொலிவிழந்த முகத்தையும் — அத்தையின் முணுமுணுப்பையும் சகிக்க முடியாதவளாய் ஒரு நாள் அவளே ஒரு முடிவிற்கு வந்துவிட்டாள்.

அவள் சிநேகிதி டாக்டர் காந்தாமணியிடம் நடந்ததை சொல்லி தூக்கம் வராது தத்தளிக்கும் தனக்குத் தூக்க மாத்திரைகளை எழுதித் தருமாறு கேட்டுக் கொண்டாள்.

டாக்டரும் தேவைக்கு மேல் அவளுக்கு எழுதிக்கொடுத்து விடவில்லை. ஆனால், சாந்தா பொறுத்துக் கொண்டு தனது திட்டத்தை மெல்ல நிறைவேற்ற விரும்பினாள்.

ஒவ்வொரு முறையும் கிடைத்த தூக்க மாத்திரைகளை உபயோகிக்காது சேர்த்து வைத்துக் கொண்டாள். மூன்று மாத காலம் பொறுமையோடு சேர்த்து வைத்த மாத்திரைகளை

எண்ணிப்பார்த்தாள். அத்தனையையும் விழுங்கினால், நிச்சயமாக, நிரந்தரமான நித்திரையைப் பெற்றுவிடுவாள்.

அன்று மாலை அப்பா — வெளியே போயிருந்தார். இப்பொழுதெல்லாம் வேலையிலிருந்து வந்ததும் அப்பா வீட்டிலே இருப்புக் கொள்ளாது கடற்கரை வரை உலாத்திவிட்டு வரக் கிளம்பி விடுவது வழக்கமாகி விட்டிருந்தது. வீட்டிலே இருந்து கொண்டு மகளின் வெறிச்சோடிய முகத்தைப் பார்க்க அவருக்கு சகிக்கவில்லை.

சட்டென்று மகளுக்கு உடனடியாக வேறு இடத்தில் திருமணம் செய்து முடித்து வைத்துவிட்டு ''என் மகளையும் வாழவைத்துவிட்டேன்'' என்று அந்தக் கிராதகன் கிரிதரன் கண்முன் நிமிர்ந்து நிற்க ஆசைப்பட்டார். ஆனால் அவர் மனதுக்குப் பிடித்தமான வரன் எதுவும் அமையவில்லை.

எல்லாம் ஒன்றுகூடி அருகில் நெருங்கும் சமயம் வரன் வீட்டவர்களுக்கு எப்படியோ சாந்தா கிரிதரன் காதல் சங்கதி காதில் விழுந்துவிடும்.

''ஜாதகம் பொருந்தவில்லை. இந்த ஆண்டு என் மகனுக்கு திருமணம் செய்துகொள்ள உத்தேசமில்லை.'' இப்படி ஏதேனும் சாக்குப்போக்குகளுடன் மெல்ல நழுவி விடுவார்கள்.

தனது ஒரே மகளின் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க முடியவில்லையே என்ற ஏக்கமே புழுவாக அவர் மனதைத் துளைத்துக் கொண்டிருந்தது. உடல் தளர்ந்து... உற்சாகம் குறைந்து... மிகவும் ஓய்ந்து மெலிந்து போய்க் கொண்டிருந்தார்.

அன்று மாலை அவர் வீட்டிற்கு வந்ததும் முகத்தைக் கழுவிக்கொண்டு அவசரமாக வேட்டியும் பனியனும் தரித்துக் கொண்டு வெளியே கிளம்பிவிட்டார்.

கிரிதரனை நேருக்கு நேர் கடைத்தெருவில் சந்தித்து விட்டதில் மெத்தவும் அதிர்ந்து விட்டிருந்தார் அவர்.



தங்கை கற்பகத்திடம் அதைப்பற்றி ரகசியமாகச் சொல்லி, அவர் வேதனைப் பட்டதை அரைகுறையாகத் தன் அறையிலிருந்தே கேட்டுவிட்டாள் சாந்தா...

''விட்டுத்தள்ளு! கொஞ்ச நேரம் காத்தாட வெளியே போய் உட்கார்ந்திட்டுவா. நான் சித்தி விநாயகரைத் தரிசிச்சுட்டு வரேன். அவராவது கொஞ்சம் கண்ணைத் திறந்து நம்ம சாந்தாவைப் பாக்கட்டும்—'' அலுத்துக் கொண்டு அத்தை கோவிலுக்குப் புறப்பட்டாள்.

அப்பா மேல் துண்டை உதறிப் போட்டுக்கொண்டு உள்ளே பார்த்தும் பாராததுமாக, ''கதவை சாத்திக்கம்மா சாந்தா! நான் கொஞ்சம் வெளியே போய்ட்டு வரேன்'' கத்திவிட்டுக் கிளம்பிவிட்டார்.

கதவை மூடினாள் சாந்தா. ஒரேயடியா இன்னும் சற்று நேரத்தில் அவளது உலகின் கதவே மூடிவிடவேண்டும் என்ற ஆத்திரமான ஆவேசம் மனசினுள் விஸ்வரூபம் எடுத்தது. ஒரு தம்ளர் குளிர்ந்த நீருடன் மாடிக்குப் போனாள்.

மாடியில் அத்தையும் அவளும் உறங்கும் அறைக்குள் சென்று நாற்காலியில் அமர்ந்தாள். சின்ன வட்டமேஜையை அருகே இழுத்துப் போட்டுக்கொண்டு பரபரப்பாக ஒரு கடிதம் எழுதினாள்.

''எத்தனையோ சொல்ல வேண்டும் என்று துடிக்கிறேன். சொல்லத்தான் நேரமில்லை. சொல்லி உங்கள் மனதை நோக வைக்கவும் பிரியமில்லை. என்னை செல்லமாக அன்பாக வளர்த்ததற்கு மிக்க நன்றி. நீங்கள் ஒரு நல்ல தந்தை என்ற உண்மையான உணர்வுடன்தான் உங்களிடமிருந்து பிரிகிறேன். மறுபிறவி என்பது உண்மையாயிருக்குமாயின் உங்கள் மகளாகவே பிறக்கவிரும்புகிறேன்.

''உங்களது ஏமாற்றத்தை, துயரத்தை வெளியே காட்டிக் கொள்ளாது எத்தனையோ என் மனவருத்தத்தைப் போக்க பாடுபடுகிறீர்கள் என்பதை நான் அறிவேன்... உங்களுக்கு நான்

வெறும் பாரமாக... சுமையாக தொடர்ந்து வாழ விரும்பவில்லை.

''கிரிதரன் கொடுத்த அதிர்ச்சியை இனியும் என்னால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. நரக வேதனையை நித்தமும் அனுபவித்துக் கொண்டு வாழ வேண்டும் என்ற நிர்பந்தமில்லாததால் நான் என் உயிரை முடித்துக் கொள்ளத் திட்டமிட்டுவிட்டேன்.

''உங்களுக்கு நானும் ஒரு மாபெரும் அதிர்ச்சியைத் தரப்போகிறேன் அப்பா! என்னை மன்னித்து விடுங்கள்.''

''என்னுடைய இந்த முடிவிற்கு நான்தான் பொறுப்பு —வேறு யாரும் காரணமல்ல — இந்தக் கடிதத்தை நீங்கள் போலீசில் காட்டலாம். அத்தைக்கு என் வணக்கம் — அன்புடன் தங்களை எந்தப் பிறவியிலும் மறவாமல் இருக்க விரும்பும் தங்கள் மகளின் கடைசி வணக்கம்''...

சாந்தா.

கடிதத்தை முடிக்குமுன், கண்களிலிருந்து ஓடிய கண்ணீர்... கன்னங்களைத் தாண்டி கழுத்தை நனைப்பதை உணர்ந்தாள்.

ஜன்னலருகே வந்து தோட்டத்தை எட்டிப் பார்த்தபடி முந்தானையால் கண்களையும் முகத்தையும் துடைத்துக் கொண்டாள்.

கராஜின் ஓரத்தில் சுவரின் மீது தாவிப் படர்ந்திருந்த நித்ய மல்லிகைக் கொடியில் கொத்துக் கொத்தாக வெள்ளை மொக்குகள் விரியத் துடித்துக் காற்றில் அலைபாய்ந்தன.

மூலையில் நின்ற வேப்ப மரத்துக் கிளைகள் காற்றில் சலசலத்தபோது, கீழே பொல பொலவென்று கொட்டிய பூக்கள் போக... கிளையில் ஒட்டிக்கொண்டிருந்த சின்னஞ்சிறு பூக்களினின்று கிளம்பிய வாசம்... மெல்லியதாக... முகத்தில் வந்து மோதியபோது, அந்தக் காற்றுக்கே ஒரு தனி சுகமிருப்பதைப்போல உணர்ந்தாள்.



குழந்தைப் பருவத்திலிருந்து வளர்ந்த அந்த வீடு அந்த அழகிய தோட்டம் — மரம், செடி, கொடிகள் யாவற்றிற்கும் மேலாக, சுகமாக அவளை வருடித் தாலாட்டுப் பாடும் அந்த பூங்காற்று... தினமும் மாலை வேளையில் மகிழ்ந்தபடி பார்த்த அந்த மஞ்சள் வெய்யில்... இவ்வளவையும் விட்டு விட்டு அவள் இன்னும் கொஞ்ச நேரத்திலே இறந்து போகப் போகிறாள்.

விரக்தியுடன் ஜன்னலருகிலிருந்து திரும்பி... வந்து மேஜை முன் உட்கார்ந்தாள். இழுப்பறையில் அந்த ஒரு பக்கம் சேகரித்து வைத்திருந்த மாத்திரைத் தகடுகளை எடுத்துச் சுற்றியிருந்த வெள்ளைக் காகிதத்தை உரித்து... ஒண்ணு —இரண்டு என்று எண்ணியபடி ஒரு கிண்ணத்திலே போட்டாள்.

உரித்த வெள்ளிக் காகிதங்களைப் பொட்டலமாகக் கட்டி சுருட்டி மறு பக்கத்து ஜன்னல் வழியே தெரு ஓரமாக ஓங்கி வீசினாள். கிண்ணம் வழிய மாத்திரைகள் — கூட விழுங்க தம்ளரில் தண்ணீர்.

சுவரில் தொங்கிய அம்மாவின் படத்தை ஆசையுடன் ஒருமுறை பார்த்தாள்.

''அம்மா! நானும் உன்கிட்டே வந்திடப் போறேன். உதவி செய்யம்மா, எனக்கு இதை சாப்பிடத் துணிச்சலைக் குடு...'' தனக்குள்ளே பேசியபடி கிண்ணத்தைக் கையில் எடுத்தாள். ஒரே தடவை — அத்தனையையும் வாயில் கொட்டிக் கொண்டு மடக் மடக்கென்று தண்ணீரைக் குடித்து விடவேண்டும். இல்லாவிட்டால் நடுவே... மனது மாறிப்போய்... சாவதா, இருப்பதா என்று தடுமாற்றம் ஏற்பட்டு விட்டால்... நினைத்தபடி மாத்திரைகளைக் கையில் எடுத்தாள்.

வாயில் அழைப்பு மணி, பயங்கரமாக... அலறியது. இதென்ன? இந்த சமயத்தில்... யாராக இருக்கும்? மிக அவசரமாக அழைப்பு மணியை அழுத்துகிறார்களே

எண்ணியவளாய், சட்டென கிண்ணத்தை மேஜைமீது வைத்தாள்.

மெல்ல வராந்தா பக்கம் வந்து கீழே எட்டிப் பார்த்தாள். அப்பா கீழே நின்று கொண்டிருந்தார்.

'அப்பாவுக்கு என்ன? ஏன் இப்படித் தடுமாறுகிறார்?' எல்லாமே மறந்து விட்டது அவளுக்கு. ஒரே நொடியில் பாசம் அவளைக் கீழே இழுக்க ஓடிவந்து, கதவைத் திறந்தாள்.

''சாந்தா! தயவு செஞ்சு டாக்டருக்கு... டாக்டருக்கு போன் செய்... தா...

''தாங்க முடியாத நெஞ்சு... வலிம்மா...'' அரற்றியபடி அப்பா முன்னறை சோபாவில் சுருண்டு விழுந்தார். அவரது நெற்றியிலும், முகத்திலும் வியர்வைத் துளிகள். மூச்சுத் திணறலுடன் முனகுவதைக் கண்டதும் அவள் திடுக்கிட்டுப் போனாள்.

''என்னப்பா உங்களுக்கு?'' அருகில் ஓடிவந்து நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.

''மாரடைப்புன்னு... நினைக்கிறேன்... வலி... வலி தாளலை... டாக்டர்...'' அதற்கு மேல் பேச முடியாமல் மயங்கிப்போய் விட்டார்.

பரபரப்புடன் டாக்டரை போனில் கூப்பிட்டாள் அவள். கோவிலுக்குப் போன அத்தையும் திரும்பினாள். வந்ததும், வீடே அமளி, துமளிப்பட்டது.

''ஆஸ்பத்திரியில் அனுமதிக்க வேண்டும். மாரடைப்பு'' என்று டாக்டர் கைவிரித்து விட்டார்.

அதற்குப் பின்னர் சாந்தாவிற்குத் தன்னைப் பற்றிக் கவலைப்பட நேரம் இல்லாமல் போய்விட்டது. மாடிக்குச் சென்று கிண்ணத்திலே சேமித்து வைத்திருந்த மாத்திரைகளைக் கழிவறை சாக்கடைக்குள் போட்டு, தண்ணீரை இழுத்துவிட்டாள்.



எழுதி வைத்திருந்த கடிதத்தை சுக்குநூறாகக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் தூக்கி எறிந்தாள்.

அப்பாவிற்கு உடம்புக்கு முடியாது போய் விட்டபோது அவள் உயிருடன் இருந்து அவருக்கு பணிவிடை செய்தாக வேண்டியது அவளது கடமை அல்லவா?

அந்த நினைப்பில் இரவில் அப்பாவுடன் ஆஸ்பத்திரியில் கூடவே தங்கியிருந்தாள். பகல்பொழுதும், ஆஸ்பத்திரி, வீடு என்று நடையாக நடந்தாள்.

அந்தப் பூட்டுக்கு அப்பா பிழைத்துக் கொண்டு விட்டார் என்று அத்தை ஊரிலிருக்கும் தெய்வங்களுக்கெல்லாம் நன்றி செலுத்தினாள். சாந்தாவும் தன்னைத் தேடி வந்த மரண தேவன், தனது தந்தையின் நிழலைக்கூட அண்டாமல் போய்ச் சேர்ந்தானே என்று பெருமூச்சு விட்டாள்.

ஆனால் அப்பா...? மிகவும் மாறுபட்ட மனிதராக வீட்டிற்கு வந்தார். வேலையினின்று ஓய்வு பெறுமுன் தமது நண்பரான வடேகரிடம் தமது மகளுக்கு ஒரு வேலை வேண்டும் என்று யாசித்து விட்டிருந்தார்.

வடேகர் அண்ட் பிரதர்ஸ் நிறுவனத்தில் அது சமயம் கணக்கு வழக்குப் பகுதியில் ஒரு வேலை காலியாக இருந்தது.

நண்பருக்கு ஏற்பட்ட பல துன்பங்களைப் பற்றி வடேகர் அறிவார். மறுப்பு சொல்லாது அவளுக்கு உடனடியாக இந்த வேலையை மனமுவந்து கொடுத்து உதவினார்.

வேலைக்குப் போய்வரத் துவங்கியதும் சாந்தாவின் மனதில் சிறிதளவு நிம்மதி ஏற்பட்டது. அப்பா வேலையிலிருந்து உடல்நிலை காரணமாக ஓய்வு எடுத்துக் கொண்டு விட்டார். நீண்ட நாட்கள் அதன் பிறகு அவர் வாழவில்லை. அடுத்தபடியாக வந்த மாரடைப்பு மிகவும் பலமானதாக இருக்கவே, ஆஸ்பத்திரிக்கு அவரை எடுத்துச் செல்லுமுன்னே அவர் உயிர் பிரிந்து விட்டது.

அண்ணனது உடலை மயானத்திற்கு எடுத்துச் செல்லுமுன் அத்தை கற்பகம், துயரம் தாளாமல் வெடித்தாள். வீடு இரண்டு படக் கதறியது இன்றுபோல் அத்தனை பசுமையாக, ஆழமாக அவள் மனதில் தைத்துவிட்டிருந்தது.

''அண்ணா! உங்களை நம்பி நான் ஒண்ட வந்தேனே... இனி யார் எனக்கு இருக்காங்க... அண்ணா! நான் பாவி... நான் பாவி...'' என்று ஓலமிட்டு உரக்க அழுதபோது சாந்தாவால் தாங்கவே முடியவில்லை.

''அத்தை! அழாதீங்க... நானிருக்கேன். ஆண்பிள்ளை போல சம்பாதிச்சுப் போட்டு உங்களைக் கால முச்சூடும் வச்சுக் காப்பாத்த நானிருக்கேன் அத்தை'' சொல்லிக் கொண்டே ஆதரவுடன் அவளை அணைத்துக் கொண்டு அழுகையில் குலுங்கினாள்.

கண் ஓரத்தில் திரண்டு நின்ற கண்ணீரை சமாளித்தபடி நிமிர்ந்து உட்கார்ந்தாள் சாந்தா. சுற்றும் முற்றும் பார்த்த போது... அடுத்தடுத்த மேஜைகளில் அமர்ந்திருந்த ஊழியர்கள் தேநீரைச் சுவைத்தபடி, மெல்லிய குரலில் பேசி சிரித்துக் கொண்டிருந்தனர்.

நல்லவேளை... அந்த அலுவலகத்தில் உள்ள அநேகருக்கு அவளைப் பற்றிய முந்தைய விவரங்கள் எதுவும் தெரிய நியாயமில்லை!

அதில் வேலை பார்த்த முக்கால்வாசிப் பேர்கள் பம்பாய் தலைமை அலுவலகத்திலிருந்து கிளை அலுவலகமான சென்னைக்கு மாற்றப்பட்டு வந்தவர்கள். ஒரு சிலர் வடேகரின் தூரத்து உறவுக்காரர்கள். தமிழ் வட்டாரத்திற்கே அந்நியர்கள்.

எனவே அவளது பழைய விவகாரம் யாருக்குமே அங்கே தெரியாமல் போய் விட்டிருந்தது அவள்வரை நிம்மதி.

மறுபடியும் அவளது பார்வை — பத்திரிகையின் பக்கம் காணப்பட்ட படத்தின் மீதே நிலை குத்தி நின்றது — குமுறிக்



கொண்டு எழுந்த ஆத்திரத்தை அடக்கமாட்டாது அந்தத்தாளைக் கையில் எடுத்தாள்.

அவளது தந்தையின் அகால மரணத்திற்கு ஆளான எமன், அவளது நிரந்தரமான துயரத்திற்குக் காரணபூதமான நயவஞ்சகன் — அவளும் அத்தையும் அனுபவிக்கும் கொடூரமான தனிமையின் துயரை அளித்த கயவன், கிரிதரன்... உடல் எல்லாம் தகிக்க, உணர்வுகள் கொப்பளிக்க, சாந்தா, அந்தத் தாளை உற்றுப் பார்த்தாள்.

''இவனைக் கண்டதுண்டமாகக் கூறுபோட வேண்டும்'' என்று உள் மனம் அலறியது. பற்களைக் கடித்தபடி, ஆவேசமாக அந்தத் தாளைக் கிழித்து சுக்கல் சுக்கலாக்கிப் பரபரவென்று காலடியில் இருந்த குப்பைக் கூடைக்குள் போட்டாள். அதன் பிறகும் ஆத்திரம் அடங்கவில்லை.

சிறிது பொழுதில் ''டீ சாப்பிட்டாச்சாம்மா'' என்று கேட்டபடி வந்த ஆபீஸ் பையன், ''அடே! நான் இங்கே வச்சிட்டுப் போன தமிழ் பத்திரிகையை காணோமே?'' என்று திடுக்கிட்டுப் போனான்.

''அடபாவமே! அது உன் பத்திரிகையா? மன்னிச்சுக் கொள்ளுப்பா... டீ கொஞ்சம் அதன் மேலே கைதவறி விழுந்தது. துடச்சுப் போட்டுட்டேன். இந்தா வேறு புதுசா ஒண்ணு வாங்கிக்க... என்ன விலை...'' என்று கேட்டபடி சில்லரையை எடுத்து மேஜை மீது வைத்தாள் சமாளித்தவளாய்.

''வேண்டாங்க...'' என்று நாணிக் கோணிக் கொண்டு வெகு நேரம் 'பிகு' செய்த பின்னர் சில்லரையை வாங்கிக் கால் சட்டையில் போட்டுக் கொண்டான் அவன். சாந்தாவும், அந்த சம்பவத்தை அதே கால் சட்டைக்குள் போட்டு விட்டதாக நினைத்தாள்.

# 5

ஒரு வார காலமாகியும் கார் ரிப்பேர் ஆகி வீடு வந்து சேரவில்லை. தினமும் இரண்டு பஸ்கள் பிடித்து அலுவலகத்திற்கு நேரத்திற்குள்ளே போய் சேர்வது பெரும்பாடாகத்தான் இருந்தது. சொந்தக் கார் வைத்துக் கொண்டு சுகமனுபவித்தவளுக்கு பஸ் நிலையத்தில் காத்திருப்பது தலைவேதனையாகத் தானிருந்தது. ஆட்டோவுக்கும் டாக்ஸிகளுக்கும் அள்ளிக் கொடுக்க பொருளாதாரம் இடக்கு செய்யவே பற்களைக் கடித்துக் கொண்டு பஸ்ஸில் போய் வந்து கொண்டிருந்தாள் சாந்தா.

மெக்கானிக் மாணிக்கத்தைப் பற்றி அவள் அப்பா காலத்தில் இருந்தே அறிவாள்.

ஆள் இழுபறி ஆசாமி.

பலமுறை அலுவலகத்திலிருந்து அவனது தொழிற் பட்டறைக்குப் போன் செய்து அலுத்துப் போனாள்.

கார்பரேட்டரை சுத்தம் செய்கிற வேலை பாக்கி இருக்கு நாளைக்கு கார் கிடைக்கும்.

இன்னும் கொஞ்சம் சில்லரை வேலை பாக்கி. பல சாக்கு போக்குகள் கூறி நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தான்.

ஒரு சமயம் காரை எடுத்துக் கொண்டு சொந்த சவாரிக்கு எங்கேனும் கிளம்பி விட்டானோ?

சந்தேகம் தாங்க முடியாது ஒரு நாள் மாலை அவள் ஆட்டோ ஒன்றில் நேரே அவனது தொழிற்பட்டறைக்கே சென்றாள்.

ஒரு சிறு தோட்டமும், அதற்குள் சுவற்றை யொட்டிய ஒரு



சிறு ஓட்டு கட்டிடமுமாக இருந்த அவனது தொழிற்பட்டறையின் கேட்டுகள் மூடப்பட்டிருந்தன —மெல்லத் திறந்து கொண்டு உள்ளே புகுந்தாள்.

அவளுடைய கார், கட்டின பசு போல சிவனேயென்று ஒரு வேப்ப மரத்தடியில் தனியே நின்று கொண்டிருந்தது.

ஒரு வார தூசியும் — மரத்திலிருந்து விழுந்த காக்காய்களின் எச்சமுமாக... கார் கையால் தொடப்படவில்லை என்று நிருபித்துக் கொண்டிருந்தது.

எண்ணைத் திட்டுகளும் — தண்ணீர் தேங்கிய குண்டும் குழியுமான தரையைத் தாண்டி, சுவர் ஓரமாக இன்னும் இரண்டு கார்கள் நின்று கொண்டிருந்தன.

இழுபறி மாணிக்கத்தை நம்பி யார் புத்தம் புதிய பென்சை பழுது பார்க்கக் கொடுத்திருக்கிறார்கள்?

வியப்பினால் விரிந்த கண்களால்... ஒரு பக்கமாக நின்று கொண்டிருந்த அந்த படகுகாரை திகைப்புடன் பார்த்தாள்.

யாருமே இல்லாதது போல சூன்யமாகத் தென்பட்ட பட்டறையைச் சுற்றிபார்வையிட்டு விட்டு... மிஸ்டர் மாணிக்கம்... ஓங்கிக் குரல் கொடுத்தாள்.

ஓட்டுக் கட்டிடத்தின் முகப்பில் தொங்கிய கிழிந்த சாக்குத் திரையைத் தள்ளிக்கொண்டு ஒரு பரட்டைத்தலைப் பையன் வெளிப்பட்டான். முழங்கை — கன்னம் முதலிய இடங்களில் கார் கிரீசின் அடையாளம். காக்கி நிறம் மாறி கருத்துப் போயிருந்த ஓரம் நைந்த சீருடையில் வெளி வந்த பொடிப் பையன்தான் மாணிக்கத்தின் உதவி மெக்கானிக்கில் ஒருத்தன் போலும்.

''ஐயாவைக் கூப்பிடு - என் காரைப்பற்றி விசாரிக்கணும். சாந்தாம்மா வந்திருக்காங்கன்னு சொல்லு.'' உத்தரவிட்டாள்.

கையில் பிடித்திருந்த ஸ்பானரைத் தரையில் போட்டு விட்டு சீருடைப் பையிலிருந்து ஒரு பீடியை எடுத்து

சாவதானமாகப் பல்லிடுக்கில் வைத்துக் கொண்டு பற்ற வைத்தான் அந்த சிறு பையன். புகையை ஒரு இழுப்பு இழுத்துவிட்டு...

''ஐயாவுடைய பெரியப்பா காலமாகி விட்டாரில்லையா? இன்னிக்கு கருமாதி — வில்லிவாக்கம் போயிருக்கார்.'' என்றான் இருமிக் கொண்டு...

மாணிக்கத்திற்கே கருமாதியாயிருந்தாலும் எனக்கென்ன? எனக்கு வேண்டியது என் கார். எரிச்சலுடன் கத்த வேண்டும் போலிருந்தது அவளுக்கு. அடக்கிக் கொண்டாள்.

அப்பா காலத்தில் கூட இப்படித்தான் இழுத்தடிப்பான் மாணிக்கம். அப்பா ஆகாயத்திற்கும் பூமிக்குமாகக் குதித்துக் கூத்தாடிக் கூச்சலிட்ட பின்னர்தான் மெல்லக் காரைப் பழுது பார்த்துத் தருவான்.

அப்பாவுக்கே பெப்பப்பே என்பவன் அவளுக்கா பயப்படப் போகிறான்?

பெண் பிள்ளைதானே? என்ன செஞ்சுடுவாங்க? என்கிற அசட்டை. அவளுக்குக் கணவன் என்ற ஒரு துணைவன் இருந்திருந்தால், இத்தனை நேரம் மாணிக்கத்திடம் அதட்டி —உருட்டி — மிரட்டிக் காரியத்தை கழற்றியிருக்க மாட்டானா!

அவள் தான் யாருமற்ற அனாதையாக... நினைக்குமுன் தனிமையின் துயர் அவள் நெஞ்சை இறுக்கமாக அடைத்துக் கொண்டது. ஓ... வென்று அழவேண்டும் போன்றதொரு ஆற்றாமையில் தவிப்புடன் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

''எப்ப வருவார்னு தெரியுமா?'' பரட்டைத் தலைப்பையனிடம் கேட்டாள்.

''நாளைக்கு வருவார்... நீங்க வந்ததைச் சொல்றேன் அம்மா...'' என்றான். மிகவும் அலட்சியமாக கொஞ்சமும் அச்சமில்லாது, அவள் எதிரில் பீடி பிடிக்கும் பொடியனிடம் அதட்டலாகப் பேசினால் அவமானமடைய நேரும் என்று



உள்ளுணர்வு எச்சரிக்கவே...

''அதோ நிக்குதே அதுதான் என் கார்... அதை சீக்கிரம் பழுதுபார்த்துத் தரச்சொல் அப்பா...'' குழைவாகக் கேட்டுக் கொண்டாள்.

பீடியைக் கையில் எடுத்துக் கொண்டு தலையைச் சிலிப்பிக் கொண்ட பையன் புகையை ஊதிவிட்டு உரக்க சிரித்தான்.

''அந்த பென்ஸ் கார் வந்து பத்து நாளாகுது. அதன் சொந்தக்காரர் நடையா நடக்கிறார்... துடைச்சு வையுன்னு துட்டு கொடுத்துட்டுப் போனார். ஒரு சின்ன ரிப்பேர்தான் —அதுக்கு எங்க மாஸ்டருக்கு நேரம் இல்லே.''

''யாருடைய கார் அது... யாராவது சினிமாக்காரங்களுடையதா? புது மாடலா தெரியுதே?''

ஆட்டோமாட்டிக் பென்ஸ் — போன வருஷத்து மாடல் — பாரத் என்ஜினியரிங் கன்ஸர்ன்னு கேள்விப்பட்டிருப்பீங்களே. அண்ணாசாலையிலே கூட பெரிய ஆபிஸ் இருக்கே. அம்பத்தூரிலே தொழிற்சாலை வச்சிருக்காரே அவருடையது.

''ஒரு வெள்ளை பியட்டு கார் வச்சுக்கிட்டிருக்கார். சில சமயம் ஒரு கறுப்பு அம்பாசிடரிலே கூட வந்துட்டு போவார்... நந்த கோபால்னு பேர். ரொம்ப தமாஷா பேசுவார். கொஞ்சங்கூட கோவிச்சுக்கவே மாட்டார். நம்ப மாஸ்டர் கையிலேதான் அவர் கார்களை யெல்லாம் ரிப்பேருக்கு அனுப்புவார். அத்தனை நம்பிக்கை இல்லாட்டா லட்சக் கணக்கிலே பணம் போட்டு வாங்கின பென்சை இங்கே அம்போன்னு உட்டுட்டு போவாரா?... சொல்லி விட்டு அவளது பழைய மாடல் பியட்டை அசட்டையாகப் பார்த்தான். வாயில் ஊறிக் கொண்டிருந்த எச்சிலைத் தூரத் துப்பினான்.

''அப்படியா?... நான் வரேன்... உங்க மாஸ்டர் கிட்ட மறக்காம சொல்லுப்பா...'' என்று கூறிவிட்டு பர்சைத் திறந்து

ஒரு ரூபாய் நாணயத்தை லஞ்சமாக அவனிடம் நீட்டிவிட்டு வெளியே வந்தாள்.

நந்தகோபால்! பெயர் தலையிலடித்த மாதிரி அடிமன நிலையில் அமுங்கிப்போய் சமாதியாகி விட்டிருந்த அந்த நாள் நினைவுகளை — மேலே எழுப்பிக் கொண்டுவர — அவைகளை உதற விரும்புகிறவள் போல வேகமாக பஸ் நிலையத்தை நோக்கி விரைந்தாள்.

ஆனாலும் அன்று இரவு உறங்கும் போது... நந்தகோபால் என்ற அந்த பெயர் அவளது சிந்தனையில் ரயில் வண்டிபோல மேலும் கீழுமாக ஊர்ந்து கொண்டுதானிருந்தது.

நந்தகோபால்! அவள் கல்லூரியில் படிக்கும்போது... அப்பாவுக்குத் தெரியாது பழகிய ஒரு நண்பன்... அவனைப் பற்றி இப்பொழுது என்னத்திற்கு நினைக்க வேண்டும்?

அதுதான் மிகவும் பழைய கதையாயிற்றே? பல வருஷங்களுக்கு முன்னர் நடந்த மிகப் பழையதொரு சங்கதி... சிந்தனையில் ஊர்ந்த அந்தப் பெயரை உதறித் தள்ளிவிட விரும்புகிறவள் போல படுக்கை மீது பலமுறை புரண்டு புரண்டு படுத்தாள்.

ஞாயிற்றுக் கிழமை காலை — மாணிக்கம் காரைக் கொண்டு வந்து அவர்கள் வீட்டு காரேஜில் நிறுத்தினான். அத்துடன் தனது பில்லை அவள் முன் நீட்டினான்.

இரண்டு வாரம் பஸ் பிடித்து அலைந்து ஓய்ந்து விட்டிருந்தாள். எண்ணை தேய்த்து முழுகிவிட்டு வராந்தாவில் நிம்மதியாக காலை பத்திரிகையுடன்... கூந்தலை விரித்துக் காயப் போட்டபடி சாய்வு நாற்காலியில் கிடந்தவள் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

அவள் எதிர்பார்த்தபடி பில் நூற்றுக்கணக்கில் ஓடி விட்டிருந்தது.

அயிட்டம் வாரியாக — கணக்கெழுதியிருந்தான்



மாணிக்கம். அவளுக்கு அந்த சிக்கல்கள் எல்லாம் புரியவில்லை. மொத்தம் எழுநூற்றி எட்டு ரூபாய் பத்து பைசா என்று பில் மிகவும் நாணயத்துடன் கணக்கைக் காட்டியது.

மறுபடியும் வங்கி இருப்பை ஆராய்ந்து விட்டு — அந்த தொகைக்கு ஒரு காசோலை எழுதி அவன் கையில் கொடுத்து விட்டு பெருமூச்சுடன் தன் காரைப் பார்த்தாள்.

எழுநூறு ரூபாயை ஏப்பம் விட்டும்... காக்கா எச்சத்தைக் கூட சரியாக கழுவாத நிலையில் காரைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டுப் போயிருந்தான் மாணிக்கம். அவளுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டுதான் வந்தது — அப்பா உயிருடன் இருந்தால் இப்படி செய்வானா மாணிக்கம்...

அவளுக்குக் கணவன் என்ற ஒரு துணைவன் ஒருத்தன் இருந்தால் இரண்டு பேருடைய சம்பாத்தியத்தின் வலிமையினால், இப்படிப்பட்ட எதிர்பாராத செலவினங்களைக் கண்டு அவள் அதிர்ந்துபோக மாட்டாளே. விஷயம் தெரிந்த ஆண்பிள்ளை ஒருத்தன் வீட்டில் இருக்கிறான் என்று மெக்கானிக் மாணிக்கம் இப்படி அநியாய பில்லை... கொடுக்க துணிஞ்சிருக்க மாட்டான். பெண்கள் படித்தும் வேலைக்குப் போகும் தகுதி பெற்றும்... இன்னமும் ஆணுக்கு சமமாகக் கருதும்... ஒரு நிலை... சமுதாயத்தில் வழக்கத்தில் வரவில்லையே...

தனிமரமாக நிற்பதால் தானே எல்லாவற்றையும் அவளே தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கு?...

மாணிக்கம் கும்பிடு போட்டு விட்டு விடை பெற்றுக் கொண்டது கூடத் தெரியாது... ஏக்கத்திலே குமைந்தபடி வராந்தாவில் வெகு நேரம் நின்று கொண்டிருந்தாள்.

அன்று காலை அத்தை மாங்காடு போய் விட்டு வந்திருந்தாள். அந்த தெருக் கோடியிலிருந்த சரசாவுடன் காரில் தொத்திக் கொண்டு கிளம்பியிருந்தாள். வந்து சமைப்பதற்கு சிறிது நேரம் ஆகிவிட்டது. அதைப்பற்றி சாந்தா

கவலைப்படவில்லை.

கோவிலுக்குப் போன அத்தை மூட்டையாகக் கட்டிக் கொண்டு வந்திருக்கும் வம்புகளை சாப்பாட்டு நேரத்தில் அவிழ்த்துக் கொட்டி தொண தொணப்பாளே என்ற அலுப்பு.

அவள் எதிர்பார்த்தபடி உணவைத் தட்டுகளில் பரிமாறி விட்டு பாத்திரங்களை மேஜை நடுவே கையருகே வைத்துக் கொண்டு அத்தையும் சாப்பிட எதிரே உட்கார்ந்து கொண்டாள்.

''இந்த ஒரு பிடி சோத்துக்குத்தானே மனுசங்க ராப்பகலா அல்லாடறோம்... வெளியிலே போய் பார்க்கிறப்போ தான் உலகம் எத்தனை பொல்லாததுங்கிறது புரிகிறது...'' பேசிக் கொண்டே கற்பகம் பருப்பை சோற்றுடன் கலந்து உருண்டை பிடித்துக் கொண்டிருந்தாள்.

ஓய்வு நாட்களில் சாந்தா மெல்ல நிதானமாக உணவைச் சுவைத்து சாப்பிட விரும்புகிறவள் — வேலைக்குப் போகும் நாட்களில்தான் தினமும் வெந்தது பாதி வேகாதது பாதி என்று வாயில் அள்ளிப் போட்டுக் கொண்டு ஓட வேணும், ஞாயிற்றுக் கிழமைகளில் நிம்மதியாக சாப்பிட்டு பின்னர் ஒரு குட்டித் தூக்கம் போட அவளுக்கு மிகவும் ஆசை.

சாப்பாட்டு வேளையில் நிம்மதியைக் குலைக்க அத்தை கதை ஆரம்பித்தது அவளுக்கு எரிச்சலாகத் தானிருந்தது.

ஆனால், அத்தையின் வாயை அவளால் அடக்கவே முடியாது. பதிலளிக்காது புன்னகையுடன் ரசத்தை ஊற்றி சாதத்தைக் கலந்து கொண்டிருந்தாள் சாந்தா.

அத்தை நீண்ட கதை அளக்குமுன் சாப்பாட்டை முடித்துக் கொண்டு தன் அறைக்குள் முடங்கிக் கொள்ள வேண்டுமென்பது அவள் திட்டம். ஆனால், அத்தை கற்பகம் விடவில்லை.

''நம்ப டீச்சர் சுபத்திராவை உனக்குத் தெரியுமில்லையா? உயரமா — சிவப்பா — அழகா இருப்பாளே — சாரதா



பெண்கள் பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியையாக இருந்தாளே...''

சாந்தாவுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது. அவள் சிறு பெண்ணாகப் பள்ளியில் படிக்கும் காலத்தில் சுபத்திரா டீச்சர் பெயரைக் கேட்டு நடுநடுங்காத மாணவிகளே கிடையாது. அத்தனை ஒரு கண்டிப்புக்காரி... கருப்பு பிரேம் கண்ணாடி வழியே கண்களை உருட்டி அவள் பார்த்தால் போதும் மாணவிகள் சப்த நாடியும் ஒடுங்கிப் போகும். அப்படிப்பட்ட அட்டகாசமான, ஆர்ப்பாட்டமான ஆசிரியை சுபத்திரா. ''அவளுக்கு இப்ப என்ன வந்துட்டுதாம்?'' முணங்கினாள் சாந்தா.

''மாங்காட்டு கோயிலில் வரிசையில் எனக்கு முன்னாடி அவள் நின்னுகிட்டிருந்தாள். இப்ப நீ பார்த்தா அடையாளமே கண்டுக்கமாட்டே. தலை தும்பப் பூவாக நரைச்சு, உடல் ஒடுங்கி குச்சிபோல... படுகிழவியாகிட்டாங்க...''

''ம்! தெரியும்!''

'நானே அந்த நிலைக்கு விரைந்து கொண்டிருக்கும் போது நான் சின்னப் பெண்ணாக இருந்தப்போவே முதுமையை எட்டிக் கொண்டிருந்த சுபத்திரா இப்போது படுகிழவியாகி விட்டதில் ஆச்சர்யமென்ன?'' — கேட்கத் துடித்தாள் சாந்தா...

ஆனால், ''அப்படியா? பாவம். அவங்களுக்கு இப்ப என்னவாம்?'' முணுமுணுத்தபடி வேகமாக சாப்பாட்டை விழுங்கினாள்.

''ஒன்பது வாரம் வரதாக மாங்காட்டு அம்மனை வேண்டி கிட்டாளாம். இடம் கிடைச்சுட்டுதாம். இதுதான் கடைசி வாரம். உன்னைக் கூட ரொம்ப விசாரிச்சாங்க.''

''யாருக்காக காலேஜில் இடங்கிடைக்க வேண்டி கிட்டாங்களாம்!''

''அட நீ ஒண்ணு. அவங்களுக்கு இப்போ யாருமே

இல்லை. சின்ன வயசிலே சம்பாதிச்சுப் போட்டுக் கொண்டு தெம்பா ஓடியாடிக்கிட்டிருந்தப்போ தம்பி, தங்கை —அண்ணன் குழந்தைகள்னு ஒரு கூட்டமே அவங்களைச் சுத்திக்கிட்டு இருந்திச்சு. வயதானதும் கையில் காசு அதிகமில்லாம... தள்ளாமையும் வந்து பென்ஷன் பணத்திலே திண்டாடி கிட்டிருக்கறப்போ அந்தக் கூட்டம் மறைஞ்சு போயிடுச்சு. தம்பி வீட்டிலே போய் இருக்கலாம்னா — தம்பி மனைவி ஒத்துக்க மாட்டேங்கிறாளாம். தங்கை வீட்டிலே தங்கலாம்னு நினைச்சால் பணம் கொடுத்தா போதுமா — கிழம் கட்டைகளை கட்டிக் கொண்டு யார் அழுகிறதுன்னு தங்கச்சி புருஷன் திட்டுகிறாராம். அந்தக் காலத்திலே இந்த குடும்பத்துக்கு ஓடாக உழைச்சுப் போட்டாங்க — காலா காலத்திலே கல்யாணம் செஞ்சுக்காம வாழ்க்கையையும் இளமையையும் பிறருக்காக பலி கொடுத்தாங்க... இப்போ யாருக்கும் வேண்டாத பூசணிக்காயாக... திண்டாடித் தெருவில் நிக்கறாங்க... நல்லவேளை, மாதர் நல சங்கம் நடத்திட்டு வர ஜோதி இல்லம் என்கிற முதியோர்கள் தங்குமிடத்தில் இவங்களுக்கு இடம் கிடைச்சுடுத்தாம்.

''அனாதையாகிவிட்ட வயதான பெண்களை கடைசி வரை ஆதரிக்கிற இடந்தான் ஜோதி இல்லம் என்பது. புதுசா தாம்பரத்திலே முடிச்சூர் சாலையிலே ஆரம்பிச்சிருக்காங்க. முதலில் இடம் இல்லைன்னு அதன் தலைவி கையை விரிச்சுட்டாங்களாம். விண்ணப்பத்தை கொடுத்துட்டு எங்கே போவோம்னு தெரியாம... பாவம் சுபத்திரா அம்மா... திண்டாடிப் போய்... ஒரு காலத்திலே அவங்க வீட்டிலே வேலை செய்து கிட்டிருந்த வேலைக்காரம்மாவின் குடிசையிலே போய் கூட தங்கிட்டிருந்தாங்களாம்...'' அத்தை பேசமுடியாது தழுதழுத்தாள். சாந்தாவிற்கும் சுபத்தராவின் நிலை, மனதை உறுத்தியது.

''மாங்காட்டுத் தாயை நினைச்சு பிரார்த்திச்சுக்கோங்க.



காரியம் கைகூடும்னு வேலைக்காரி உற்சாகப்படுத்தியதும்... ஒன்பது வாரம் கோவிலுக்கு வரதாக வேண்டிக்கிட்டாகளாம்... தப்பாம வாரா வாரம் வந்து தரிசிக்க பலன் கைமேலே கிடைச்சுட்டதாம்... நேத்தே சுபத்திரா அம்மாளுக்கு ஜோதி இல்லத்திலிருந்து கடிதம் வந்ததாம். இடம் இருக்கு உடனே வரவும்னு தலைவி எழுதியிருந்தாங்களாம். இன்னிக்கு கடைசி வாரமாம் — அதை முடிச்சிட்டு சாயங்காலம் அந்த இல்லத்துக்கு கிளம்பிப் போகப் போறாங்களாம்... எப்படி இருந்தவங்க அனாதையாகி... அனாதைகளோட போய் தங்கிக்கப் போறாங்களேன்னு நினைச்சேன். எனக்கு அழுகை வந்திருச்சு...'' அத்தை கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''சாந்தா கண்ணு! நீ மட்டும் இல்லாட்டி என் கதியும் இப்படித்தான் ஆகியிருக்கும்னு நினைச்சேன். வெலவெலத்துப் போனேன். ஆனால், அதே சமயம் என் மனதிலே ஒரு நினைப்பு வந்தது உண்மை.

''என் காலம்வரை நீ என்னை வைச்சு காப்பாத்திடுவே, கைவிடமாட்டே தெரியும் — எனக்குப் பிறகு... உனக்கு நாதியார்? இந்த இளமையும், தெம்பும் எப்பவுமே இருக்குமா?... காலகாலத்திலே சுபத்திரா கல்யாணம் செய்து கொண்டிருந்தா இப்போ குழந்தை — குட்டி — பேரன்னு கிட்டத்து உறவுகள் இருக்குமில்லையா?''

''அத்தை! வயது காலத்தில் பெத்த குழந்தைகள் பெரியவங்களை வச்சுக் காப்பாத்துவாங்கன்னு என்ன நிச்சயம்? காலம் மாறிகிட்டு வரது. முன்போல கடமை உணர்ச்சி பிள்ளை —பெண்களுக்கு கிடையாது.''

''தெரியும். ஆனாலும் ரத்தபாசம் பொல்லாதது. தன்னைப் பெத்த தாய் அனாதை ஆசிரமத்திலே அடைக்கலமா இருக்கான்னு கேட்டா மகன் தான் ஆடாட்டாலும் அவன் சதை ஆடும்... உன் அப்பனோட ரத்தம் நான் என்கிறதாலே அந்த பாசத்தினாலேதானே என்னை வச்சு நீ காப்பாத்திகிட்டு

இருக்கே?''

தனது வருங்கால வாழ்க்கையைப் பற்றியதொரு பயங்கர நினைவால் கவலையில் துவண்டு போனாள் சாந்தா. பதில் பேசாது வேகமாக சாப்பிட்டு விட்டு எழுந்தாள்.

காலைப் பத்திரிகைகளை வாரிக்கொண்டு முன்னறையில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

அத்தை சமையலறை வேலைகளை சடுதியில் முடித்து விட்டு வெற்றிலை பாக்குப் பெட்டியுடன் அங்கே வந்து விட்டாள்.

''சொல்றேன்னு கோவிச்சுக்காதே சாந்தா... ஒவ்வொரு வாரமும் ஞாயிற்று கிழமைகளில் ஒரு பக்க முழுதும் மணமக்கள் தேவைன்னு விளம்பரம் வருதே... பத்திரிகையை எடுத்து அதைக் கொஞ்சம் பார்க்கக் கூடாதா? இன்னிக்கு காலையிலே கோவிலிலிருந்து வந்ததும் பார்த்தேன்.

''ஒரு வரன்ரொம்ப வேடிக்கையாக இருந்தது.'' அத்தை கற்பகத்திற்கு தட்டுத்தடுமாறி ஆங்கிலம் படிக்கத் தெரியும்.

தலைக்கும் — தவலைக்கும் வேற்றுமை தெரியாத அளவுக்கு புரிந்து கொள்ளும் திறமை உண்டு.

''பதினாறு வயசு பையனுக்கு பெண் வேண்டுமாம். போட்டிருக்கான். இத்தனை சின்ன வயசில் அவனுக்கு எதுக்குக் கல்யாணம்?'' வெற்றிலையைச் சுருட்டி வாயில் திணித்த படியே கேட்டாள்.

அவள் சொன்ன தகவலைப் படித்துப் பார்த்த சாந்தாவுக்கு எரிச்சலுடன் சிரிப்பும் சேர்ந்து கொண்டது.

''சிக்ஸ்டீன் இல்லை சிக்ஸ்டி. அதாவது அறுபது வயது ஆண் மகனுக்கு மணமகள் தேவை. முழுக்க நீங்க அதைப் படிக்கலை. அவர் மனைவியை இழந்தவர். முப்பத்தெட்டு வயதிற்குள் விதவையோ அல்லது விவகாரத்து ஆன பெண்ணாக இருந்தாலும் பரவாயில்லைன்னு



கேட்டிருக்கார்...''

''அறுபது வயதிற்கு மேல் கல்யாணம் எதற்காம்?'' அத்தை அதிர்ந்து போனாள்.

''இன்னும் சில வரன்களைப்பத்தி படிச்சேன். நீயும் படிச்சுப் பார் பிறகு உன் இஷ்டம்.'' அத்தை பெருமூச்செறிந்தாள்.

தோழி மீனாவும் அன்று அனுமார் கோவிலில் இதைத்தான் உபதேசித்தாள்.

அத்தையும் அதையேதான் சொல்கிறாள்.

மணமகள் தேவை பகுதியைப் படித்துவிட்டு — கடிதம் எழுதி அந்த வரன் வீட்டார்களுடன் தொடர்பு கொண்டு... பின்னர் நேரில் சந்தித்து பேசவேண்டும். ஒத்து வந்தால்...

மேலே சிந்திக்க பிடிக்காது பத்திரிகை கட்டுகளுடன் மாடிப்பக்கம் விரைந்து விட்டாள் சாந்தா.

கதவைத் தாளிட்டுக் கொண்டு மணமகள் தேவை பக்கத்தைப் படுக்கை மீது விரித்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து உன்னிப்பாகக் கவனிக்கலானாள்.

ஒரு பெண்ணுக்கு வரன் தேடி திருமணம் முடிப்பது என்பது அப்படி ஒரு சுலபமான காரியம் அல்லவே. கல்யாணம் என்பது பெண்ணுக்கு ஒரு பெரும் பிரச்சனையாகி... நாளடைவில்... நாகரீகம் வளர்ந்து வந்துள்ள இந்த காலத்திலும் ஒரு பூதாகர வடிவில் பெற்றவர்களையும், மற்றவர்களையும் பயமுறுத்தும் பிரச்சனையாகி விட்டிருக்கிறதே... விளம்பரமும் அதைத்தான் பளிச்சிட்டது.

சில வரன்கள் ஒரு குறிப்பிட்ட ஜாதிக்குள் அடங்கிய அந்த வகுப்புப் பெண்களைத்தான் தேடின.

சில... பெண், டாக்டருக்குப் படித்தவளாக இருப்பது நலம் என்று கண்டிப்பாக எடுத்துரைத்தன.

இன்னும் சில —நிறம், உயரம் இவைகளைப்பற்றி ஆணித்தரமான அபிப்பிராயங்களை வெளியிட்டிருந்தன. இந்த விளம்பரச் சந்தையின் பின்னால் ஈடுகொடுக்க முடியாது என்று ஆயாசத்துடன் பத்திரிகைத்தாளை மடித்து அப்பால் போட்டு விட்டு படுக்கை மீது சாய்ந்து கொண்டாள். ஜாதகப் பொருத்தமிருந்தது மனப் பொருத்தமிருந்தது என்று நெருங்கிப் பழகியவனே... முடிவில் பணத்திற்கும், பதவிக்கும் ஆசைப்பட்டுக்கொண்டு அவளை உதறிவிட்டு ஓடிவிட்டான். அப்படியிருக்கையில் முன் பின் தெரியாத ஒரு மனிதனை விளம்பர மூலம் தேர்ந்தெடுத்து...

ஊகும், வேண்டாம்... வேண்டாம், துயரத்துடன் முனகினாள்.

ஆற்றாமை தாளாது அவளது கண்களில் நீர் முட்டிக் கொண்டு வந்தது. ஒரு பெண்ணின் வாழ்க்கையில் — தனிமை — இப்படி ஒரு பயங்கர பிரச்சனையா?... ஏக்கமாகவா போய்விடும். அட கடவுளே!... திடீரென்று அப்பாவின் நினைப்பு வந்தது. அதைக் காரணமாக வைத்துக் கொண்டு இத்தனை நாளாக அடக்கிக் கொண்டிருந்த ஏக்கத்தின் சுமையை கண்ணீராகக் கொட்டி விம்மி அழுது தீர்த்தாள்.

## 6

திங்கட்கிழமை காலையில் எப்பொழுதும் அவளது அலுவலகம் அதிகமானதொரு சுறுசுறுப்புடன் இயங்குவது வழக்கம்.

வாரத்தின் முதல் நாள் — எல்லோரிடமும் உற்சாகம் மேலோங்கி நிற்கும். கார் கைக்குக் கிடைத்து விட்ட நிம்மதியில்



— டிபன் டப்பாவை மறக்காது எடுத்துக் கொண்டு குறித்த நேரத்திற்கு வேலைக்குப் புறப்பட்டாள் சாந்தா.

இருக்கையில் அமர்ந்த சில நொடிகளில் அவளுக்கு மானேஜரிடமிருந்து அழைப்பு வந்தது. ஏ.சி. அறையின் குளுமையில் சுழல் நாற்காலியில் மெத்தென்று சாய்ந்து கொண்டிருந்த மானேஜர் வடேகர் ஸீனியர் அன்று நல்ல மன நிலையில் காணப்பட்டார். சதா கடுமை தெரிக்கும் முகத்தில் லேசான முறுவல் நிழலாடியது.

''உங்க பகுதியிலே ஒரு டைப்பிஸ்ட் குறைவாக இருந்ததினால் ரொம்ப கஷ்டப்பட்டீங்க இல்லையா! அந்த இடத்திற்கு ஒரு வாலிபனை வரச் சொல்லியிருக்கிறேன் —டைப் வேகம், திறமை எல்லாம் எப்படின்னு கொஞ்சம் நீங்க கவனிச்சிட்டு உள்ளே அனுப்புங்கோ.''

''ஓ.கே.'' என்றாள்.

இருபது வயதிருக்கும், ஒல்லியான மாநிறத்தில் ஒரு வாலிபன் சில நிமிஷங்களுக்குப் பின்னர் ஆபீஸ்பையன் வழிகாட்ட அவள் மேஜை எதிரே வந்து தயக்கமாக நின்றான்.

கையோடு கொண்டு வந்த சான்றிதழ்களை மேஜை மேல் வைத்துவிட்டு பணிவாக அவளைப் பார்த்தான்.

''உட்காருங்கோ'' என்றாள் உத்தியோகத் தோரணையில். சான்றிதழ்களை மேலெழுந்தவாரியாகப் படித்துவிட்டு...

''இதற்கு முன்னர் எங்கே வேலை பார்த்தீங்க மிஸ்டர் ராஜேஷ்?'' கொஞ்சம் அதட்டலாகவே கேட்டாள். தலையைச் சொறிந்து கொண்டான் அந்த வாலிபன்.

''இரண்டு இடத்தில் வேலை பார்த்தேன். சரிப்பட்டு வரலை விட்டுட்டேன்.''

''ஏன் சரிப்பட்டு வரலை?''

''முதலில் சுகுணா டிரான்ஸ்போர்ட்ங்கிற கம்பெனியில் வேலை பார்த்தேன். எனக்கு மேல் அதிகாரியா ஒரு பெண்

இருந்தாங்க...''

''பெண் அதிகாரிகள் கீழே வேலை செய்ய உங்களுக்குப் பிடிக்காதோ?'' லேசாக சிரித்து விட்டாள்.

தடுமாறிப் போனான் அந்த வாலிபன். ''அதுக்கில்லை, அந்தம்மா ஒரே நெருப்பு. ஊழியர்களை வார்த்தைகளால் பொசுக்கிட்டு இருந்தாங்க... அவங்க அட்டகாசமும் அனாவசிய அதிகாரமும் எனக்குப் பிடிக்கலை. பேசாம வேலையை விட்டுட்டேன்.''

''இங்கே உங்களுக்கு வேலை கிடைச்சா ஒரு பெண் அதிகாரி கிட்டத்தான் வேலை பார்க்க வேண்டியிருக்கும்... நான் தான் இந்த பகுதிக்கு மேற்பார்வையாளர்'' புன்முறுவலித்தாள் சாந்தா.

''உங்களைப் பார்த்தால்... ஒரு சகோதரியைப் பார்க்கிற மதிப்பும், மரியாதையும், தெம்பும் ஏற்படுகிறது. வேலை கிடைச்சால் சந்தோஷமா ஏத்துக்கிட்டு உங்களுக்குத் திருப்தி ஏற்படறாப்போல வேலை செய்வேன்''... சாமர்த்தியமாக ராஜேஷ் பதிலளித்தான்.

''அடுத்தபடியாக வேலை பார்த்த இடத்திலிருந்து ஏன் விட்டுட்டு வந்தீங்க மிஸ்டர் ராஜேஷ்...'' சாந்தா அவனை மடக்கினாள்.

''அடுத்தபடியாக நான் ஒரு என்ஜினியரிங் கன்ஸர்னில் வேலை பார்த்தேன். அதன் முதலாளி ரொம்ப கண்டிப்பானவர். ஒரு சின்ன தவறு கூட பொறுக்கமாட்டார். ஊழியர்கள் நேரத்துக்கு வரணும், ஒழுங்காக வேலை செய்யணும்னு ரொம்பவே எதிர்பார்ப்பவர்... அந்த கம்பெனியின் சட்ட திட்டங்கள் எனக்கு ஒத்து வரலை...''

''கண்டிப்பும் கறாருமாக இருந்தால்தானே ஊழியர்களிடம் ஒழுங்காக வேலை வாங்க முடியும்?''

''ஆனாலும் ரொம்ப அளவுக்கு மீறின கண்டிப்பு



கூடாதுன்னு என் அபிப்பிராயம். அவராலே நேரத்துக்கு டாண்ணு ஆபிசுக்கு வர முடியும். அவர் மூணு கார் வச்சுக்கிட்டிருக்கிற முதலாளி. தமது வெள்ளை பென்சிலே பத்து மணிக்கு முன்னால் பறந்து வந்திடுவார். ஏழைத் தொழிலாளிகள் பஸ் பிடிச்சு நிலையத்திலிருந்து நடந்துதானே வரணும்? ஒரு மழை நாள் போது பஸ்ஸை தவற விட்டுட்டேன். பத்து நிமிஷம் தாமதமாகப் போனேன் — அதுக்கு என்னை அவர் ரொம்ப குடைஞ்சு எடுத்திட்டார்.''

''அடபாவமே... அவர் அப்படிப்பட்டவரா?''

''ஆமாம் மேடம். பாரத் என்ஜினியரிங் கன்சர்ன் மிஸ்டர் நந்தகோபால் ரொம்ப கண்டிப்பான ஆசாமி...''

திடீரென்று ஏற்பட்ட திகைப்பில் ஒரு கணம் பேச முடியாது சாந்தா அயர்ந்து போனாள்.

நந்தகோபால் என்ற பெயர்... கொடி கொடியாகப் பல நினைவு அலைகளை எழுப்பவே...

அவள் நெஞ்சு படபடத்தது.

''மிஸ்டர் ராஜேஷ்! வெள்ளை பென்ஸ் கார் வச்சிருக்கிற மிஸ்டர் நந்தகோபாலைத் தானே சொல்றீங்க...''

''ஆமாம்! அவரை உங்களுக்குத் தெரியுமா மேடம்!...'' தொண்டையை அடைத்த உணர்வுகளை வேகமாக விழுங்கிக் கொண்டாள்.

''இந்த நிறுவனத்து முதலாளிக்குத் தெரிஞ்சவர் —அதனால் கேட்டேன்... சரி — நீங்க அப்படி கொஞ்சம் வெளிவராந்தாவிலிருக்கிற பெஞ்சியில் உட்கார்ந்திருங்க... பையன் வந்து கூப்பிடும் போது மானேஜர் அறைக்குப் போகலாம் —'' தலையை நிமிராது பதிலளித்தாள்.

மானேஜருக்கு அனுப்ப வேண்டிய குறிப்பில் ராஜேஷுக்கு சாதகமாகவே சுருக்கமாக எழுதி பையனிடம் கொடுத்து விட்டு நாற்காலி மீது சாய்ந்து கொண்டாள்.

மெக்கானிக் மாணிக்கத்தின் உதவியாளன் சொன்ன நந்தகோபாலும்... ராஜேஷ் குறிப்பிடும் நந்தகோபாலும் ஒரே மனிதர்தானா? பரட்டைத் தலைப் பையன் அவரைப் புகழ்ந்தானே. தமாஷாகப் பேசுகிறவர் — தாராளமாகப் பணம் கொடுப்பார் என்றானே.

இவன்... கண்டிப்பும் கறாருமான கல் நெஞ்சர் என்கிறானே?

இதில் எது உண்மை!... ஆமாம் இந்த நந்தகோபாலுக்கும் அவள் நண்பன் நந்தகோபாலுக்கும்... என்ன சம்மந்தம்... நந்தகோபால்... என்று மந்திரம் போல் வாய் முணுமுணுத்த அந்த பெயர் எழுப்பிய உணர்ச்சிக் கொந்தளிப்பில் படபடத்த அவள் இருதயத் துடிப்பு அடங்கி சீராக சில வினாடிகள் சென்றன.

ராஜேஷிற்கு அந்த வேலை கிடைத்து விட்டது.

''முதல் தேதியிலிருந்து வந்து சேரச் சொன்னார் மானேஜர்... மிக்க நன்றி...'' புன்முறுவலித்து வணங்கிவிட்டு அவன் வெளியேறினான்.

அவன் போன பின்பு வெகு நேரம் அவளுக்கு வேலை ஓடவேயில்லை. பகல் உணவு நேரம் எப்பொழுது வரும் என்று என்றுமில்லாத ஆவலும் துடிப்புமாக அவள் காத்திருந்தாள்.

அலுவலக ஊழியர்கள் சாப்பிடும் சாப்பாட்டறைக்கு அவள் போவதில்லை. தன் இருக்கையிலிருந்தபடியே அலுவலக அறையிலேயே பகல் உணவை முடித்துக் கொள்ளும் வழக்கம். அத்தை கட்டிக் கொடுத்த டிபன் டப்பாவை எடுத்து மேஜை மேல் வைத்துக் கொண்டாள்.

அவளுக்குப் பசியே இருக்கவில்லை. காலையிலிருந்து மனதைக் குழப்பிக் கொண்டிருந்த கலவை உணர்வுகள் கனமாக நெஞ்சை அழுத்துவதை உணர்ந்தாள். ஆபீஸ் பையன்



வைத்துப்போன தண்ணீர் டம்ளரை எடுத்து ஒரே மூச்சாக நீர் முழுவதையும் பருகினாள்.

மேஜையின் ஒரு புறமிருந்த டெலிபோன் டைரக்டரியை எடுத்து பரபரப்புடன் புரட்டினாள். பாரத் என்ஜினியரிங் கன்ஸர்னின் அலுவலகத்து எண்களை அவசரமாக ஒரு தாளில் குறித்துக் கொண்டாள். சுற்று முற்றும் பார்த்தாள். அறையில் அது சமயம் அவளைத் தவிர யாரும் இருக்கவில்லை. நிம்மதியாக எண்களை சுழற்றினாள்.

பாரத் என்ஜினியரிங் கன்ஸர்ன்ஸ்... பெண்ணொருத்தியின் இனிய குரல் மறுபக்கத்தில் கேட்டது.

''மிஸ்டர் நந்தகோபாலுடன் பேசவேண்டும்''... தயக்கமாகக் கேட்டாள் சாந்தா. குற்ற உணர்வால் மார்பு படபடப்பதை உணர்ந்தாள். ''மிஸ்டர் நந்தகோபால்... இங்கில்லை... இன்று முழுதும் அவர் அம்பத்தூர் தொழிற்சாலை அலுவலகத்தில் தானிருப்பார். தொலைபேசி எண்கள் தருகிறேன்... எடுத்துக்கோங்க...'' காய்ந்துபோன உதடுகளை நாவால் ஈரமாக்கிக் கொண்டு சாந்தா அந்த பெண் கொடுத்த தொழிற்சாலை அலுவலகத்து எண்களை சுழற்றினாள்.

கன கம்பீரமான கரகரப்பான... ஆணின் குரல்... பட்டுத் துணி போன்ற மென்மையுடன் அவளது காதுகளைத் தழுவியது.

''நந்தகோபால்... பேசறேன்...''

படீர் என்று இருதயம் இரண்டாக வெடித்து விடும் போன்றதொரு பரபரப்பில்... கைகள் நடுங்க டெலிபோனை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டாள்.

''மிஸ்டர் நந்தகோபால்!... உங்களுடன் சில நிமிஷங்கள் பேசவேண்டும். உங்கள் அலுவலகத்தில் ராஜேஷ் என்ற ஒரு டைப்பிஸ்ட் வேலை செய்தது நினைவிருக்கிறதா!...''

''ஓ? நன்றாக நினைவிருக்கு — தினமும் ஆபிசிற்கு லேட்டாக வருவான்... அதிகப் பிரசங்கி... அது சரி. நீங்க யார்னு சொல்லலையே?...''

''வடேகர் அண்ட் பிரதர்ஸிலிருந்து பேசறேன். எங்கள் கம்பெனியில் ராஜேஷை வேலைக்கமர்த்திக் கொண்டிருக்கிறோம். எதுக்கும் ஒரு வார்த்தை உங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டால் நல்லது என்று... சிரமத்துக்கு மன்னிக்கவும்.''

''சிரமம் ஒண்ணுமில்லை. நீங்க யார்னு இன்னமும் சொல்லலையே?''

''இங்கு அக்கௌண்ட் செக்ஷனில் வேலை பார்க்கும் மிஸ் சாந்தா மகாலிங்கம்.''

''யார்? நேஷனல் மிர்ரர் வொர்க்ஸில், வேலை பார்த்துக் கொண்டிருந்த... சீப் அக்கௌண்டெண்ட் மிஸ்டர் மகாலிங்கத்தின் மகள் சாந்தாவா?...''

''நன்றாக நினைப்பு வச்சுக் கொண்டிருக்கீங்களே... அதே சாந்தாதான்...'' நெஞ்சு படபடவென்று துடிக்க முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டாள் அவசரமாக.

''நீங்க... வந்து...'' அவள் முடிக்கு முன்... மறு பக்கத்தில் நந்தகோபால் பகபகவென்று மகிழ்ச்சி நிறைந்த உற்சாகமான குரலில் சிரிப்பது... காதில் வேகமாக விழுந்தது. ''திருவல்லிக்கேணி சுப்ரமணியன் தெருவில் குடியிருந்த அதே நந்தகோபால்தான்... என்ன ஆச்சரியம். பல வருஷங்களாகியும் உன் குரலை என்னால் மறக்க முடியலை... அதனால்தான் நீங்க யார்னு சொல்ல முடியுமான்னு வற்புறுத்திக் கேட்டேன்...'' மெல்ல சிரித்தான் மறுபக்கத்தில் நந்தகோபால்... காதும் மூக்கும் கபகபவென்று சூடாகிப் போவதை உணர்ந்தாள் சாந்தா...



''உண்மையாகவா நந்து?''

''எனக்கும் இது உண்மையான்னுதான் ஆச்சர்யமா இருக்கு. நீ என்னைக் கூப்பிட்டு பேசுவேன்னு நான் கனவில் கூட எதிர்பார்க்கலை... என்ன விந்தையான நிகழ்ச்சி...''

''நந்து! இப்ப நீங்க எங்கே இருக்கீங்க!''

''அண்ணாநகர்லே வீடு... என் மனதுக்கு பிடிச்சபடி நான் இடம் வாங்கி கட்டின வீடு...''

''அப்படியா? உங்களுக்கு தோட்டம்னா ரொம்ப ஆசையாச்சே. பெரிய தோட்டம் வச்சுக் கொண்டிருக்கீங்களா?''

''ஒரு நாள் நீ வந்து பார்க்கணும்... அழகான தோட்டம் போகன் வில்லாவிலேயே ஏழு வண்ணம் வச்சு பயிராக்கியிருக்கேன்...''

''பாவம் உங்க அம்மா, வீட்டை நிர்வகிக்க சிரமப்படுவாங்க.''

''அவங்க போய் நாலு வருஷமாகிறதே...''

''மருமகளையும் பேரன் பேத்திகளையும் பாத்துட்டுத் தானே போனாங்க...''

''அதுதான் இல்லை... இன்னமும் இந்த நந்து ஒண்டிக் கட்டைதான்.''

''நந்து... நான் ரொம்ப வருத்தப்படறேன்...''

''வருத்தம் எதுக்கு... நான் மனசு ஒப்பி மேற்கொண்ட வாழ்க்கை... அவ்வளவுதான். சாந்தா உன் குரலைக் கேட்ட பிறகு உன்னைப் பார்க்கணும் போல இருக்கு...''

''நந்து! நான் இப்ப சொல்றது நூற்றுக்கு நூறு உண்மை... எனக்கும் உங்களைப் பார்க்கணும்போல... பேசணும்போல ஆசையா இருக்கு...''

''அப்ப ஒண்ணு செய்யலாமா. இந்த ஞாயிற்றுக் கிழமை உனக்கு ஓய்வு நாள் தானே...''

''ஆமாம்... எங்க வீட்டு முகவரி உங்களுக்குத் தெரியுமே. அதனாலே நீங்க எங்களோட சாப்பிட இந்த ஞாயிற்றுக் கிழமை எங்க வீட்டுக்கு வாங்கோ நந்து... அத்தை உங்களை சந்திக்க ரொம்ப விரும்புவா. அப்பா காலமாயிட்டார் தெரியு மில்லையா?''

''கேள்விப்பட்டேன். நான் அப்போ கம்பெனி வியாபார விஷயமா சில மாதங்கள் ஸ்டேட்ஸில் பயணம் பண்ணிக் கொண்டிருந்தேன். வந்ததும் உன்னை நேரில் பார்த்து அனுதாபம் சொல்ல நினைச்சேன் — கடைசியா நமது சந்திப்பின் ஒப்பந்தம் ஞாபகத்துக்கு வரவே நேரில் வர மனம் இடந்தரலை. ஆனால், உனக்காக நான் ரொம்ப அனுதாபப்பட்டேன்.''

துக்க உணர்வின் அழுத்தத்தினால் தன் கண்களில் நீர் படர்வதை சாந்தா உணர்ந்தாள். சிரமப்பட்டு சமாளித்துக் கொண்டாள்.

''நமது கடைசி சந்திப்புக்குப் பிறகு இடையே கடந்த பல வருஷங்களில் பல விஷயங்கள் நடந்து விட்டன. நேரில் பேசணும். நந்து... உங்ககிட்ட என் மனதைத் திறந்து எல்லாத்தையும் கொட்டணும் போல இருக்கு... நந்து... உங்களைத் தவிர எனக்கு உண்மையான சிநேகிதர் யாரும் இந்த உலகில் கிடையாது.''

''எப்பவும் நான் உனது உண்மையான தோழன் — அதை நீ மறக்க வேண்டாம்... எந்த உதவியும் செய்ய எப்பவும் நான் தயார். அதையும் மறக்க வேண்டாம். அப்போ இந்த ஞாயிற்றுக் கிழமை பத்து மணிக்கு என்னை உன் வீட்டில் எதிர்பார்க்கலாம். வச்சுடட்டுமா... குட்பை... சாந்தா.''

டெலிபோனை வைத்து விட்டு ஆனந்த அதிர்ச்சியில் அப்படியே அயர்ந்து போய் உட்கார்ந்து விட்டாள்.

உண்மையில் அவளுடன் நீண்ட நேரம் தொலைபேசியில் பேசியவன்... நந்தகோபாலா?... அதே பழைய நந்துவா?...



பாரத் என்ஜினியரிங் கம்பெனியின் அதிபர்... படகுக் காரில் பவனிவரும் மிஸ்டர் நந்தகோபாலும், அவளுக்குத் தெரிந்த திருவல்லிக்கேணி, சுப்பிரமணியத் தெரு நந்துவும் ஒரே மனிதன் தானா?

ஒண்டு குடித்தனத்தில் பற்றாக்குறை பட்ஜெட்டில் உழன்ற நந்துவுக்கு எப்படி இப்படி ஒரு யோகம்?

தொழிலதிபர்... பென்ஸ் காரில் பறக்கும் முதலாளி —கண்டிப்பும் கறாருமான மனிதர்... அண்ணாநகரில் பங்களா... ஒரு சில வருஷங்களில் இப்படி ஒரு உயர்வா?... எப்படி சாத்யமானது... வியப்பும் மகிழ்ச்சியுமாக அவள் பிரமை பிடித்தவள் போல் அலுவலகம் ஆரம்பித்து... அசையாது தன் இருக்கையிலே... பைல் ஒன்றைப் பார்க்கும் சாக்கில்... தலையைக் குனிந்து கொண்டு சிந்தனையில் மூழ்கி விட்டிருந்தாள்.

4 5 936
622105 3
தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

## 7

அன்று இரவு அவள் வெகு நேரம் உறங்கவில்லை. நந்தகோபாலைப் பற்றிய நினைவு அவளது நெஞ்சுக்குள்ளே மீண்டும், மீண்டும் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது.

அந்த முதல் சந்திப்பிலிருந்து முடிவுவரை சங்கிலித் தொடராக நீண்டு எழுந்த எண்ணக் குவியல்களில் அவள் தன்னை மறந்து ஆழ்ந்து போய் விட்டிருந்தாள்.

பச்சாதாபம், மகிழ்ச்சி என்ற பல்வேறு உணர்ச்சிகளின் அலை மோதல்களில் புரண்டு புரண்டு படுத்தாள்.

பல ஆண்டுகள் கழிந்து விட்டன. எனினும் அந்த முதல் சந்திப்பு நன்றாக நினைவிருந்தது. அப்போது அவள்

கல்லூரியில் இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள்.

சின்ன வயதிலிருந்தே அவளுக்கு ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. பள்ளிக்கூடத்திலும் — கல்லூரியிலும் அவள் ஏழையாகத் தெரிந்த பெண்களுடன் நெருங்கிப் பழக விரும்பியதில்லை. காரில் வந்து இறங்கி... கஞ்சி மொட மொடப்பு சீருடையில் சிங்காரமாகத் திரிந்த பணக்காரப் பெண்கள் மீதுதான் அவளுக்கு அதிகப்படியான பற்றுதல்.

பள்ளிக்கூடம் போக அவளுக்கு என்று அப்பா தனியாக ரிக்ஷா ஏற்பாடு செய்திருந்தார். சில நாட்களில் தமது அலுவலகக் காரில் அவளைக் கொண்டு விடுவதும் உண்டு.

மத்தியத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள்தான் என்றாலும், பணக்காரப் பெண்கள் சகவாசத்தால் தானும் பெரிய மனிதர் வீட்டிலிருந்து வருவது போல பாவித்துக் கொள்வாள்.

அட்டைக் கிழிந்த புத்தகங்கள் — அழுக்காகிவிட்ட புத்தகப் பை இவைகளைக் கையால் கூட தொடமாட்டாள். இவற்றை மகா அசிங்கமாக நினைக்கும் ஒருவித பலவீனம் அவள் மனதில் ஊறிப்போய் விட்டிருந்தது.

அவளுக்கு பள்ளியில் படிக்கும் காலத்திலிருந்து கல்லூரி படிப்பு வரை, இந்திராதான் மிகவும் நெருக்கமான தோழி.

இந்திராவின் தந்தை ஒரு பிரபலமான தொழிலதிபர் —அடையாரில் பங்களா — பூந்தமல்லி நெடுஞ்சாலையில் ஒரு பழத் தோட்டத்து நடுவே ஓய்வு இல்லம் — நான்கு கார்கள். ஏகப்பட்ட ஆட்படைகள் என்று அட்டகாசமாக வாழ்ந்த உயர்மட்டத்து வாசி.

இந்திரா தன் தோழியை அடிக்கடி விடுமுறைகள் போது தங்களது பங்களாவிற்கு அழைத்துப் போவதுண்டு.

அம்மா இல்லாது வளர்ந்த பெண்... அந்த ஏக்கம் தெரியாது மகிழ்ச்சியாக இருக்கட்டும் என்று அப்பாவும் அத்தையும்... இந்தத் தோழமை நெருக்கத்தை வரவேற்றார்கள்.



''இந்திரா வீட்டிலிருந்து கார் வந்திருக்கு அப்பா... இன்னைக்கு முச்சூடும் அவங்க வீட்ல இருந்து படிச்சிட்டு கொஞ்சம் விளையாடிட்டு வரேன் அப்பா'' குழைவாள் சாந்தா.

''இந்திரா வீட்டிலே டென்னிஸ் விளையாட புதுசா ''கோர்ட்'' போட்டிருக்காங்க. அவளோட டென்னிஸ் விளையாடக் கத்துக்கறதுக்காக என்னையும் கூப்பிட்டிருக்கா அப்பா... எனக்கும் ஆசையா இருக்கப்பா'' என்று. வேண்டுகோள் விடுப்பாள்.

'இந்திராவோட பங்களாவிலே நீச்சல் குளம் கட்டியிருக்காங்க அப்பா. பெண்கள் மட்டும் தனியா குளிக்கலாம்னு அவங்க அப்பா சொல்லிட்டாராம். நீச்சல் கத்து கொடுக்க மிஸ் நதீராங்கிற அம்மாளை ஏற்பாடு செய்திருக்காங்க. நானும் போயிட்டு வரட்டுமா?'' உத்திரவு கேட்டாள்.

இந்திராவின் பங்களா புல்தரை மீது பல வண்ணத்தில் விரிந்து நிழல் தந்த குடையின் கீழே போட்டிருந்த சலவைக்கல் ஆசனத்தில் அமர்ந்தபடி... சமையல்காரர் சுடச்சுட கொணர்ந்து பரிமாறிய பக்கவடாத்தைச் சுவைத்துக் கொண்டு, குளிர்பானங்களைக் குடித்து மகிழ்ந்தபடி, தோழியுடன் எத்தனை நாட்கள் அவள் பொழுது போக்கி இருக்கிறாள்?

இந்திராவின் அண்ணனும், அவனது தோழர்களும் டென்னிஸ் விளையாடுவதைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறார்கள்?

கல்லூரியின் இறுதி ஆண்டு சமயம்... கோடை விடுமுறையின் போது இந்திராவின் வேண்டுதலை மறுக்க முடியாது அத்தை அப்பாவின் அனுமதியோடு பூந்தமல்லியிலிருந்த அவர்களின் ஓய்வு இல்லத்தில் தங்கப் போயிருந்தாள்.

பல ஏக்கர் பரவிக் கிடந்த மாந்தோப்பின் நடுவே அழகாகக் கட்டப்பட்டதொரு வீடு அது.

நகரத்தின் வசதிகள் எல்லாம் கொண்டு — தனிமையாக எங்கேயோ ஒரு கிராமத்திலிருப்பது போன்றதொரு பிரமிப்பைக் கொடுத்தது.

இந்திராவின் தாய், தங்கைகள், அண்ணன் எல்லோருமே கூட்டமாக அங்கே தங்க வந்திருந்தனர்.

வேளைக்கு அவர்களுக்கு சமைத்துப் போடவும், மற்ற வசதிகளைச் செய்து கொடுக்கவும் அடையார் பங்களாவிலிருந்து சில ஆட்கள் வந்திருந்தனர்.

எங்கேயோ 'பிக்னிக்' போய் உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கும் உணர்வில் சிநேகிதிகள் இருவரும் மிகவும் சந்தோஷத்துடன் மாந்தோப்பு முழுவதையும் சுற்றிக் கொண்டிருந்தனர்.

வீட்டிற்கு சற்றுத் தொலைவிலிருந்த மாமரத்திலிருந்த பிஞ்சுகளைப் பறிக்கும் உற்சாகத்திலே — ஆளுக்கு ஒரு மூலையாகப் பிரிந்து விட்டனர்.

மாலை வெய்யில் மங்கத் தொடங்கியதும் பிளாஸ்டிக் பையில் மூட்டையாகக் கட்டிக் கொண்ட மாங்காய் கையை கனக்க, அப்போதுதான் சுற்றும் முற்றும் பார்த்தாள் சாந்தா.

மரங்களடர்ந்து காடு போலக் காணப்பட்ட அந்தப் பகுதியில் இருட்டாகக் காணப்படவே அவளுக்குத் திடீரென பயம் ஏற்பட்டு விட்டது.

''இந்திரா? இந்திரா?'' அச்சத்துடன் குரல் கொடுத்தாள். பதில் இல்லை.

''இந்திரா? எங்கே இருக்கே?'' என்று கூவியபடி இங்குமங்கும் மரங்களிடையே புகுந்து தேட ஆரம்பித்தாள்.

சிறு வயதிலேயே தனிமை - இருட்டு இவைகளைக் கண்டால் அவளுக்குத் தாங்க முடியாத பயம். அதனால் இருட்ட ஆரம்பித்து விட்ட வேளையில் சற்றுத்தொலைவில் தென்பட்ட வீட்டை நோக்கி ஓடத் தலைப்பட்டாள்.



கையைக் கனத்த பையைத் தூக்கிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக விரைந்தவள் வழியில் புளிய மரத்தின் வேர் தடுக்கி ''ஐயோ! பாம்பு!'' என அலறியபடி குப்புற விழுந்தாள்!

பையிலிருந்த மாங்காய் சிதறி நாலா புறமும் ஓட மெல்ல, சுதாரித்தபடி எழுந்து நின்றாள்.

கால் கட்டை விரல் நகம் பெயர்ந்து கொண்டு ரத்தம், பெருகி வலிப்பதைத் தாள முடியாமல் தவித்தாள்.

பையிலிருந்த மாங்காய்கள் சிதறியதையும் கவனியாமல் முழங்கை மீது ஏற்பட்ட சிராய்ப்பைத்தடவிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

பின்னால் காய்ந்த இலைச்சருகுகள் மிதிபடும் ஓசையைக் கேட்டு அரண்டு போனாள்.

பொழுது மங்கிய வெளிச்சத்தில் அருகில் வந்து கொண்டிருந்த அந்த வாலிபன் இந்திராவின் அண்ணன் அல்ல.

''அடடா! விழுந்திட்டீங்களா? மாங்காய்கள் எல்லாம் விழுந்திட்டுதே...'' அனுதாபத்துடன் கூறியபடி அவைகளைப் பொறுக்கிப் பையில் போட்டான்.

''தாங்க்யூ!'' என்றாள் சாந்தா.

அவள் கீழே விழுந்ததை அவன் பார்த்து விட்டிருக்கிறானே! அவளுக்கு வெட்கமாக இருந்தது.

பையை வாங்கக் கையை நீட்டியபோது பணிவாக மறுத்தபடி அவன் கூறினான். ''நானும் வீட்டுக்குத்தான் போகிறேன். நீங்கள் அங்கேதானே வருகிறீர்கள்... நானே தூக்கிட்டு வரேனே.''

அவளால் மறுக்க முடியவில்லை. சேலையில் படிந்திருந்த மண்ணைத் தட்டியபடி அவன் பின்னால் நடந்தாள்.

திடீரென்று ஆபத் சகாயமாக முளைத்த இவன் யார்? மங்கிவரும் ஒளியில் அவனை உற்றுப்பார்க்க முயன்றாள்

ஆவலுடன்.

அவளது மனதை ஊகித்தவன் போல் தானாகவே அவன் அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''ரமணி என் தோழன் - ரெண்டு பேரும் என்ஜினியர் படிப்புக்கு ஒண்ணா சேர்ந்துதான் படிச்சோம். அவன் தன் அப்பாவோட கம்பெனியிலேயே வேலைக்கமர்ந்துட்டான். நான் அண்ணாசாலையில் ஒரு என்ஜினியரிங் அலுவலகத்தில் போன மாசந்தான் வேலையில் சேர்ந்தேன் - என் பேரு நந்தகோபால்'' என்றான்.

''என் பேரு சாந்தா.''

''நீங்களும் இந்திராவின் தோழியா?''

''ஆமாம். சனி, ஞாயிறு விடுமுறை நாட்களைக் கழிக்கும்படி, இங்கே தங்கும்படி என் தோழி மிகவும் கேட்டுக் கொண்டாள்.''

''ரமணியும் என்னை வந்து தங்களோட, அதேபோலத் தங்கும்படி வற்புறுத்தினான். எனக்கும் தோட்டம்னா ரொம்பப் பிடிக்கும். சாயங்காலம் டிபனுக்குப் பிறகு தோட்டத்தைச் சுத்திப் பார்க்கலாம்னு கிளம்பினேன். காலே ஓஞ்சு போயிட்டுது. பல ஏக்கர் நிலம். நிறைய மாமரம் - புளியமரம் - பூச்செடிகள் எல்லாம் இருக்கு. பின்னால் ஒரு ஓரத்திலே மனோரஞ்சித மரத்தைப் பார்த்தேன். இதில் பாருங்க இந்த மனோரஞ்சித பூவில் இது ஒரு வகையான பூ. இதைக் காயவச்சுப் பொடி செய்து உடம்பு தேய்க்கும் வாசனைப் பொடிக் கலவையில் சேர்த்துக்குவாங்க'' பேசியபடியே தனது சட்டைப் பையிலிருந்த ஒரு மனோரஞ்சிதப் பூவை அவளிடம் நீட்டினான்.

''தப்பா நினைக்காட்டி - உங்களுக்குப் பிடிக்கும்னா இதை வாங்கித் தலையில வைச்சுக் கொள்ளுங்க'' என்றான் தொடர்ந்து.



''ரொம்ப நன்றி'' கூறிக்கொண்டே அவள் பூவை வாங்கி முகர்ந்தபடி அவன் பின்னால் நடந்தாள்.

பேச்சு சுவாரஸ்யத்திலே வீடு அருகாமையிலிருப்பது போலத் தோன்றியது.

வீட்டின் முன்வாயிலில் தெரிந்த வெளிச்சத்தில் அவனை ஊன்றிப் பார்த்தாள் சாந்தா. ஒடிசலாக - உயரமாக - சற்று மாநிறமாக இருந்தான்.

''உன்னை எங்கெல்லாம் தேடினேன் தெரியுமா? பயந்தே போய்ட்டேன்'' கீச்சுக் குரலில் கத்திக்கொண்டு வெளியே ஓடிவந்த இந்திரா தோழியைக் கட்டிக் கொண்டாள்.

''உங்க தோழி புளிய மரத்து வேரைக்கண்டு, 'பாம்பு, பாம்பு'ன்னு ஒரேயடியா பயந்து கத்திட்டாங்க. நல்லவேளை நானும் தோட்டத்தை சுத்தி பார்த்துக்கிட்டு அந்தப்பக்கமா வந்தேனா -மாங்காயை போட்டுக்கிட்டு தடுக்கி விழுந்துட்டாங்க... அவைகளை பொறுக்க கூடவே உதவி செய்து அழைச்சு வந்துட்டேன். உள்ளே கூட்டிகிட்டுப் போய் அடிகிடி பட்டிருக்கான்னு பாத்து மருந்து போடுங்க...'' அனுதாபமாகப் பேசினான்.

''எங்க வீட்டுத் தோட்டத்தை விழுந்தடிச்சுக்கிட்டா பாத்தீங்க'' ரமணி வேடிக்கையாகக் கேட்டான். குழந்தைகள் உட்பட யாவரும் 'குபீ' ரென சிரிக்க அவளும் சிரித்து மழுப்பியபடியே திரும்பிப் பார்த்தாள்.

வாயிலில் இப்போது பளிச்சென்று தெரிந்த குழல் விளக்கின் ஒளியில் அவனும் சிரித்துக் கொண்டிருந்த காட்சி தெரிந்தது.

''கிளியோபாட்ராவின் மூக்கு மட்டும் சிறிது குட்டையாக இருந்திருந்தால் எகிப்தின் சரித்திரமே வேறாகி இருக்கும்'' என்று எங்கோ படித்த நினைவு வந்தது.

இந்த நந்தகோபாலுக்கு மூக்கு மட்டும் கொஞ்சம்

குட்டையாக இருந்தால் முகமே களையாக இருக்குமே! சிரித்தால் முக முழுவதும் மூக்காக... குடமிளகாய் போல அவனது தோற்றத்தை அவள் உள்ளம் கணித்து விட்டிருந்தது.

அன்று இரவு அவர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்ட போதும் கவனித்தாள்.

உயரமும் பருமனுமாக இருந்த இந்திராவின் அண்ணன் ரமணியைப் போல கம்பீரமாக அவன் காணப்படவில்லை. என்றாலும் நந்தகோபாலிடம் ஒரு விசேஷ குணம் இருந்தது.

எல்லோரையும் கவர்ந்து கொள்ளக்கூடிய வகையில் சிரிக்க சிரிக்கப் பேசத் தெரிந்தவன். நந்தகோபால் ஏதோ வேடிக்கையாகச் சொல்ல இந்திராவின் பெற்றோர்கள் உள்பட எல்லோரும் சிரித்து விட்டனர்.

இந்திராவிற்கு புரையேறிவிட்டது. தன் கையால் தலையைப் பலமாகத் தட்டியபடி இரு கண்களிலும் நீர் தளும்ப மேலும் சிரிக்க ஆரம்பித்தாள்.

''இதுக்காகவே அண்ணா இங்கே வரும்போதெல்லாம் தன் சிநேகிதரையும் கூட்டிகிட்டு வர வழக்கம். அப்பப்பா! மிஸ்டர் நந்தகோபால் இருக்காரே... அவர் ஒரு நகைச்சுவைக் கதைக் களஞ்சியம். சிரித்து சிரித்து வயிறு புண்ணாயிடும்'' சிரிப்பிற்கிடையே கூறினாள்.

இந்திராதான் பேசினாள். ஆனால் நந்தகோபாலின் கண்கள் பரிவுடன் சாந்தாவைப் பலமுறை பார்த்தன. தனது நகைச்சுவைக் கதைகளைக் கேட்டு அவளும் சிரிக்கிறாளா என்பது போல சாப்பிடும்போது அவன் அவளை எத்தனை தடவை ஏறிட்டு பார்த்தான்?

பின்னர் அடிக்கடி இந்திராவின் அடையார் பங்களாவில் அவனை அவள் சந்திக்க நேர்ந்தது.

ஒருமுறை அடையார் பங்களா தோட்டத்தில் புதிதாக நட்டிருந்த ஒட்டு ரோஜாக்களை பார்வையிட்டபடி அவள்



நின்று கொண்டிருந்தாள்.

அவளுக்கும் அழகான பங்களா - பெரிய தோட்டம் வசதியான வாழ்க்கை எல்லாவற்றிலும் அதிக ஆசைதான்.

இந்திராவைப் போல பிற்காலத்திலாவது தனக்கு ஏகபோகமானதொரு வாழ்க்கை கிட்டவேண்டும் என்றதொரு ஆவல் நிறைந்த கனவுகள் அவளுக்கு நிறைய உண்டு.

''அந்த ரோஜாவுக்கு 'ஸ்னோ டிராப்'புன்னு பேரு. வெள்ளை வெளேரென்று எத்தனை அழகா இருக்கு பார்த்தீங்களா?''

திடுக்கிட்டுத் திரும்பினாள். நந்தகோபால் ரோஜா பாத்திகளை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

''இன்னைக்கி ரமணியோட பிறந்தநாள்னு சாப்பிட வரச்சொல்லியிருந்தான். நீங்களும் அதுக்குத்தானே வந்திருக்கீங்க?'' அவன் விசாரித்தான்.

அவள் தலையை ஆட்டினாள்.

இந்த சில சந்திப்புகளின் பயனாக அவர்கள் இருவரும் தாராளமாகப் பேசினார்கள் - பழகினார்கள். அவன் சொன்ன நகைச்சுவைகளுக்கு உரத்துக் கொஞ்சம் அதிகமாகவே சிரித்தாள். அவள் சிரிப்பதைக் கேட்டு அவனும் மகிழ்ந்தான்.

ஆனால் அவளுக்கு ஏனோ - அவனது அந்த மூக்கு முள்ளாக மனதை உறுத்தியது. இத்தனை வேடிக்கையாகப் புத்திசாலித்தனமாகப் பேசுகிற மனிதனுக்கு இப்படி ஒரு விநோதமான மூக்கா?

முகத்திற்கு சிறிதுகூடப் பொருத்தமில்லாமல் அந்த மூக்குக் காணப்பட்டது போலவும், அதுவே அவனது தோற்றத்திற்கு ஒரு குறை போலவும் அவள் மனதில்பட்டது.

மூக்கு எப்படி இருந்தால் என்ன? மூர்க்கக் குணமில்லாது - ஒழுக்கமுடையவனாக - நல்லவனாக ஒருத்தன் இருந்தால் போதுமே என்றெல்லாம் சிந்திக்கும் விவேகம் இல்லாத இளம்

வயதின் வேகம் அப்போது அவளிடம் இருந்தது. வெளித்தோற்றத்தின் கவர்ச்சிக்கும், பணக்காரப் பகட்டுக்கும் மயங்கிப் போகும் இளம்பருவம். உலக அறிவில்லாத கல்லூரி மாணவி.

''உங்களுக்கு ரோஜாக்களைப் பற்றி அதிகமாகத் தெரியும் போலிருக்கே'' கேட்டாள் அவள்.

''மலர்களைப் பத்தி பொதுவா, படித்து, பார்த்து தெரிஞ்சு வச்சிருக்கிற அறிவுதான். எனக்குத் தோட்டக்கலை மேல ரொம்ப ஆர்வம்.''

''உங்க வீட்ல பெரிய தோட்டம் இருக்கா?'' வியப்புடன் கேட்டாள்.

''கற்பனையில்தான் நான் பெரிய தோட்டம் போட்டுக் கிட்டிருக்கேன்'' அவன் பெரிதாகச் சிரித்தான்.

அதற்குமேல் அவனை வற்புறுத்தி விசாரிக்க விரும்பவில்லை அவள். இந்திரா வீட்டில் பெரிய தோட்டத்திலே பயிராகியிருந்த அத்தனை மலர் செடிகளின் பெயர்களும் அவனுக்குத் தெரிந்திருந்தது.

''இதன்பேரு 'இக்ஸோரா' - தமிழில் 'விருட்சிப்பூ'ன்னு சொல்லுவோம். இதில் மூனுக்கும் மேற்பட்ட வண்ணங்கள் இருக்கு.

''இதுக்குப்பேரு சொல்வியா... இதில ஒத்தை இதழ் -இரட்டை இதழ்னு பல பிரிவுகள் உண்டு. இதோ இந்தச் சின்னச் செடிக்குப் பேரு என்ன தெரியுமா? 'மேமேசா பூடிகா...' அதாவது தொட்டால் சுருங்கி.'' சொல்லியபடியே அதன் இலைகளைத் தொட்டுக் காட்டினான்.

சட்டென அது இலைகளைச் சுருட்டிக் கொண்டதும் அவள் 'க்ளுக்'கென்று சிரித்து விட்டாள்.

அவளை வியப்போடு கண் கொட்டாது சிறிதுநேரம் பார்த்தான் நந்தகோபால்.



''ஒண்ணு சொல்லப் போறேன் கோவிச்சுக்க மாட்டீங்களே?''

''கோவிச்சிக்கறாப்பல இதுவரை நீங்க எதுவுமே பேசினதில்லையே.''

''அப்படியா ரொம்ப சந்தோஷம். இப்ப நீங்க சிரிச்சபோது ரொம்ப அழகா இருந்தீங்க.''

நெஞ்சு படபடக்க முகம் சிவந்து போனாள் அவள் -ஆண்மகன் ஒருத்தனின் புகழ்ச்சியான வார்த்தைகளைக் கேட்டு பரவசமடையும் பேதைப்பருவம் அது.

அவளுக்கு அந்த புகழ்ச்சி பிடித்திருந்தது. மௌனமாக அவனைப் பார்த்து முறுவலித்தாள்.

''உங்களை சதா சிரிக்க வச்சுகிட்டே இருக்கணும் போல எனக்கு ஆசையா இருக்கு.''

மறுபடியும் நெஞ்சு ஆவலுடன் துடித்தது. நந்தகோபால் என்ன சொல்ல இப்படி சுற்றி வளைக்கிறார்? குழப்பமாகவும் இருந்தது. ஆனால் அவனுடன் பேசிக் கொண்டிருப்பதை வெறுப்பாக நினைக்கத் தோன்றவில்லை.

அதற்குள் இந்திராவும் ரமணியும் வந்து அங்கே கலந்து கொண்டுவிடவே, பேச்சுத் திசைமாறி விட்டது.

''ரோஜாக்களைப் பத்தி இவனுக்கு ரொம்பத் தெரியும் -நன்றாக உங்களை அறுத்திருப்பானே... வசம்மா மாட்டிக்கிட்டீங்களா?'' ரமணி சிரித்தான்.

இந்திராவும் சிரிக்க பரிவோடு அவளும் சிரித்தாள். அவளையே பார்த்தபடி நின்றிருந்த நந்தகோபால் மட்டும் அந்த சிரிப்பில் கலந்து கொள்ளவில்லை.

அன்றுமாலை நடந்த ரமணியின் பிறந்தநாள் தேநீர் விருந்திற்குப் பின்னர் அவர்கள் எல்லோரும் கடற்கரைக்குக் காரில் புறப்பட்டனர்.

''கொஞ்சம் திருவல்லிக்கேணி வழியாக காரை விடச்சொல் ரமணி... அம்மாகிட்டே ராத்திரி சாப்பாட்டுக்கு வரலைன்னு சொல்லிட்டு வந்திடறேன். இல்லாட்டி வீணா கவலைப்பட்டுக் காத்திருப்பாங்க பாவம்.'' நந்தகோபால் கேட்டுக்கொண்டதை ஒட்டி காரை, சுப்பிரமணியம் தெருவிற்கு ஓட்டச்செய்தான் ரமணி.

சந்து போன்றதொரு சிறியதொரு '- நெருக்கமாக அடுத்தடுத்து ஓட்டுவீடுகள் - இடையே இங்கும் அங்குமாகத் தெரிந்த மாடிக்கட்டிடங்கள்.

ஒரு சிறு ஓட்டு வீட்டின் முன்னால் காரை நிறுத்தினான் டிரைவர். வண்டியிலிருந்து இறங்கி திறந்திருந்த வாயிற் கதவு வழியே இருட்டாகத் தெரிந்த நடைக்குள் மறைந்து போனான் நந்தகோபால்.

சிறிது பொழுதில் அவன் வெளிப்பட்ட பொழுது, கூடவே அவனைத் தொடர்ந்து வந்த பெண்மணி வாசலில் வந்து நின்றாள்.

விளக்குக் கம்பத்திலிருந்து வீசிய விளக்கு வெளிச்சத்திலே அந்தம்மாளை கவனித்தாள் சாந்தா.

அத்தையின் வயதிருக்கலாம். ஆனால் தோற்றத்திலேதான் எத்தனை வித்தியாசம்?

முன் நெற்றி ஓரம் பட்டையாக வெளுத்துப் போய்விட்ட கூந்தலை வாரி முடிக்கக்கூட நேரம் இல்லாமல் அள்ளிச் செருகி இருந்தாள்.

கழுத்தோரம் நைந்துபோன வெள்ளை ரவிக்கை இடையே தலைப்பில் கிழிசல் தெரிந்த கசங்கிப்போன சுங்கடி சேலை. காதுகளில் சிவப்புக்கல் தோடு.

வெறுமையான கழுத்தும் - கையும் - எல்லாமே றுமைக்கோலம்.



''ரமணி! உனக்குப் பிறந்த நாளாமே! மகராசனா இருப்பா'' காரின் அருகில் வந்து வாழ்த்தியவள் சாந்தாவின் பக்கம் திரும்பி வியப்புடன் பார்த்தாள்.

''இந்திரா! யாரும்மா இந்தப் பொண்ணு. இத்தனை நாளா பார்த்ததே இல்லையே'' என்றாள் கனிவுடன்.

''இந்திராவோட காலேஜிலே படிக்குது. சாந்தான்னு பேரு'' அறிமுகத்தை நந்தகோபாலே முடித்துவிட்டு அம்மாவிடம் விடை பெற்றுக் கொண்டான்.

''மன்னிச்சுக்கணும் - உங்களையெல்லாம் காக்க வச்சுட்டேன். விட்டுக்குப் பின் பக்கமா குடி இருக்கிறதாலே. அம்மாவைத் தேடிகிட்டுப் போக வேண்டி வந்திட்டுது. ஒண்டிக்குடித்தனம். மாவரைச்சுட்டு இருந்தாங்க பின்கட்டில... ரமணி பிறந்த நாள்னு சொன்னியே அவனைப் பார்த்து ஒரு வாழ்த்தாவது சொல்றேனப்பான்னு கையைக் கழுவிக்கிட்டு வர நேரமாயிட்டுது'' மன்னிப்புக் கோரும் பாணியில் முடித்தான் அவன்.

''அதனால என்னப்பா... உங்கம்மா போல நல்லவங்களோட ஆசி கிடைக்க எத்தனை நேரமானாலும் காத்திருக்கலாமே... அவங்களுக்கு என் மேலே ரொம்ப ஆசை'' மகிழ்ச்சியுடன் சொன்னான் ரமணி.

''பட்டுபட்டா எப்படி தோசை வாக்கறாங்க. போனவாட்டி நான் வந்தப்போ அவுங்க வார்த்து போட்ட தோசையை நான் பாட்டில தின்னுக்கிட்டே இருந்தேனே! அதை மறக்க முடியுமா?'' உற்சாகமாகக் கூறினாள் இந்திரா.

''அடிநாளிலே அம்மா தோசை சுட்டு வியாபாரம் செய்தவங்க'' என்றான் நந்தகோபால். அன்னைக்கு தோட்டத்திலே காட்டினானே தொட்டால் சுருங்கிச்செடி, அதுபோல சாந்தாவின் உள்ளத்தில் அது நாளும் கொஞ்சம் கொஞ்சமாகக் குமிழியிட்டுக் கொண்டு, மேலே எழும்பி வர முயன்று கொண்டிருந்த உற்சாகமும், உணர்வுகளும் ஒரே

நொடியில் சுருங்கி ஒடுங்கிப் போயின.

''நந்தகோபால் மிக அடிமட்டவாசிதானா? பணக்காரப் பையனான ரமணிக்குச் சரியாகப் பழகுகிறாரே?'' ஆச்சர்யப் பட்டாள் சாந்தா. தனக்கேற்பட்ட அதிர்ச்சியை அவள் வெளிக்காட்டிக் கொள்ளாமல் மிக சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டாள்.

ஒரு வருடகாலம் ஓடிச்சென்றது. இதற்குள் பலமுறை அவள் நந்தகோபாலை இந்திராவின் வீட்டில் சந்தித்து விட்டாள்.

அவன் சொன்ன கதைகளைக் கேட்டு அவள் சிரித்து மகிழ்ந்தாள். அவனிடம் பேசினாள். அவ்வளவே. தன் உணர்வுகளை அதற்கு மேல் நகரவிடாமல், கடிவாளம் போட்ட குதிரை போல இறுக்கிப் பிடித்துக் கொண்டு விட்டாள்.

## 8

அந்த ஆண்டு தோழிகள் இருவரும் இறுதித் தேர்வு எழுதி முடித்து விட்டனர். அன்று இந்திரா அழைத்ததின் பேரில் அத்தை சம்மதத்துடன் ஒரு அரைநாளைக் கழிக்க அவள் அடையார் பங்களாவிற்குப் போயிருந்தாள்.

ரமணியும், இந்திராவும் டென்னிஸ் விளையாடுவதை வேடிக்கை பார்த்தபடி, வண்ணக்குடை நிழலில் குளிர்பானத்தைக் குடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் சாந்தா.

''ஹலோ சாந்தா!''

தூக்கிவாரிப் போட்டவளாய்த் திரும்பினாள். லக்னோ குர்த்தாவும், தோளில் தொங்கும் பையுமாக அவள் எதிரே வந்து



அமர்ந்தான் நந்தகோபால்.

''இங்கே நாம் இன்னிக்கு சந்திக்க முடியும்னு தெரிஞ்சு தான் நான் வந்திருக்கேன்'' சொல்லிக் கொண்டே பையைத் திறந்து ஒரு பார்சலை வெளியே எடுத்தான்.

''நான் இதை நேத்து அண்ணா சாலையில் வாங்கினேன். நான் சொல்ல விரும்பறதை ஒரு சிறு பரிசோட இனிப்பா சொல்லலாம்னு ஒரு சின்ன ஆசை.''

சாந்தா திகைப்புடன் அவனைப் பார்த்தாள். ''சாந்தா! இத்தனை நாளைக்குள்ள நீ என்னைப் புரிஞ்சு கொண்டிருப்பாய்னு நினைக்கிறேன். உன்னைப் பாத்த நாளிலேயிருந்து எனக்கு உன்னை ரொம்ப பிடிச்சிட்டுது. உன்னை நான் காதலிக்கிறேன். ஏன்? என் உயிருக்கும் மேலாக நேசிக்கிறேன். என்னைக் கல்யாணம் செய்து கொள்ள உனக்கு விருப்பமான்னு முதல்ல உங்கிட்ட கேட்டுட்டு, பிறகு உன் தந்தையிடம் கேட்கலாம்னு நினைக்கிறேன்...'' நிதானமாகத் தயக்கமின்றிப் பேசினான் அவன்.

சாந்தாவின் முகம் சிவக்க, அனலாகிப் போனது போன்ற எரிச்சல்... 'தோசை சுட்டு விற்றவள் மகன்... அவளைக் கல்யாணம் செய்து கொள்வானாமே. என்ன துணிச்சல்?' அடிவயிற்றிலிருந்து புரண்டெழுந்த ஆத்திரத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

''மிஸ்டர் நந்தகோபால்! நீங்க என்னைத் தவறா புரிஞ்சு கொண்டிருக்கீங்க. நான் ''ஷோஷலா'' பழகறதை வச்சுக்கிட்டு நீங்க கல்யாணம் வரை வந்திட்டீங்க. சொந்த வீடு - கார் போன்ற வசதியில் வளர்ந்தவள் நான்... என் தந்தை ஒரு நாளும் என்னை திருவல்லிக்கேணி சந்து வீட்டுல ஒண்டிக் குடித்தனத்தில் கொண்டு தள்ள விரும்பமாட்டார்... தயவுசெஞ்சு இந்த எண்ணத்தை மறந்திடுங்க'' துச்சமாக - முகத்தில் அடித்தாற்போல் ஆணவமாகக் கூறிவிட்டு எழுந்து அப்பால் சென்று விட்டாள் அவள். அதே சமயம் பேயறைந்தது போன்ற

தோற்றத்துடன் அவன் அவளை பரிதாபமாகப் பார்த்ததை அவள் பார்க்காதது போல முகத்தைத் திருப்பிக் கொண்டு விட்டாள்.

அதற்குப் பின்னர் அவள் இந்திரா வீட்டிற்கு அடிக்கடி போவதையே நிறுத்திக் கொண்டு விட்டிருந்தாள். சில மாதங்களுக்குப் பின்னர் இந்திராவின் கல்யாணம் நடந்தது. தன் உயிர்த்தோழி என்பதால், சாந்தா அங்கு கட்டாயம் இருக்க வேண்டியவளானாள்.

வரவேற்பின் போது அவள் அமர்ந்திருந்த இரண்டாவது வரிசை நாற்காலியில் பக்கத்தில் வந்து அமர்ந்து விட்ட நந்த கோபாலை எரிச்சலுடன் திரும்பிப் பார்க்காமல் விரைப்பாக மேடையையே பார்த்தபடி அமர்ந்திருந்தாள் அவள்.

''மிஸ் சாந்தா!''

சட்டென்று திரும்பி அவனை முறைத்துப் பார்த்தாள். ''இரண்டாவது தடவையாக நான் கேட்கிறேன். மனதை மாத்திக்க மாட்டாயா? உன் சிநேகிதிக்குக் கல்யாணமாகி விட்டது. உனக்கு ஆகணும்னு தோணாதா? உனக்காக எத்தனை காலம் வேணுமானாலும் காத்திருக்கேன் சாந்தா.''

''முன் சொன்ன அதே பதில்தான், தயவு செய்து என்னை தொந்தரவு செய்யாதீங்க'' சீறி விழுந்தாள் அவள். அவன் சட்டென்று எழுந்து அப்பால் சென்று கூட்டத்தில் மறைந்தே போனான்.

பின் ஒருமுறை, தாய்மையடைந்திருந்த தோழியைப் பார்க்க வந்தவள்... நந்தகோபால் அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் அந்த ரோஜா செடியருகில் நிற்பதைக் கண்டு வெதறிப் போனாள்.

எப்படியாவது அவனைக் காணாததுபோல் ஓடிவிட வேண்டும் என்று எண்ணிய அவளது எண்ணத்தில் மண்!

''ஹலோ! மிஸ் சாந்தா!'' என்றான் அவன். தோட்டக்



காரன் டிரைவர் இவர்கள் முன்னிலையில் அவனை அவமானப்படுத்த விழையவில்லை அவள். மரியாதையை உத்தேசித்து ''ஹலோ! மிஸ்டர் நந்தகோபால்! சௌக்கியமா இருக்கீங்களா?'' விசாரித்து வைத்தாள்.

''இந்த ஒட்டு ரோஜாக்கள் முன்னைவிட செழிப்பா வளர்ந்திருக்கு இல்லையா?'' கேட்டபடி அவளுடன் ஜோடியாக வந்து நடைபாதையில் கலந்து கொண்டான்.

சற்று நடந்து சென்றதும், தாழ்ந்த குரலில், ''சாந்தா! மூன்றாம் முறையாக வெட்கத்தை விட்டுக் கேட்கிறேன், இன்னமும் உன் மனம் என் விஷயத்துல கல்லாவா இருக்குது... என்னால் உன்னை மறக்கவே முடியலையே!... இப்போதாவது சரின்னு சொல்ல மாட்டியான்னு மனசு கிடந்து அடிச்சுக்குது'' என்றான்.

சட்டென்று நிமிர்ந்து அவனைக் கோபத்துடன் வெறித்தாள் சாந்தா.

''தண்ணீர் மூணுபிழை பொறுக்கும்பாங்க. அதுபோல நானும் மூணு தடவை நீங்க செய்கிற தவறைப் பொறுக்கறேன். எனக்கு உங்க மேல் அப்படி ஒரு எண்ணம் இல்லைன்னு பளிச்சின்னு சொன்ன பிறகும் ஏன் வற்புறுத்தறீங்க?''

''சாந்தா! இதுதான் உன் முடிவான பதிலா?'' கெஞ்சினான் அவன்.

''எனக்கு ஒரு உதவி செய்யறீங்களா?''

''சொல்! தடையில்லாமல் செய்கிறேன்'' நந்தகோபாலின் முகம் மலர்ந்தது.

''இனி மறுபடியும் இந்த அசட்டுத்தனமான கேள்வியை எங்கிட்ட கேட்காதீங்க. நீங்க என்னை நேசிக்கிறது உண்மையானால்... நான் எங்கேயாவது சுகமாக வாழட்டும்னு ஒதுங்கிப் போயிடணும். என் அப்பாவை சந்தித்து ஏடாகூடமாக ஏதாவது பேசி வீணாக மனவருத்தத்துக்கு ஆளாக்கி - என்னைத்

துன்பப்படுத்தக் கூடாது... என்னை மறந்துடணும் -அவ்வளவுதான். இந்தப் பெரிய உதவியைச் செய்வீங்களா?''

நந்தகோபாலின் முகம் மாறியது. சட்டென சமாளித்தவனாய், ''கவலைப்படாதே சாந்தா! உன்னை நான் எவ்வளவு நேசிக்கிறேன் என்பதை என் நடத்தையிலிருந்தே காலப்போக்கில் தெரிஞ்சு கொள்வாய்... இனி உன் வழிக்கு நான் வரமாட்டேன். சாந்தா'' பங்களாவிற்குள் போகாமல் அப்படியே வந்த வழியே அவன் திரும்பிவிட்டான். அதன் பிறகு நந்தகோபாலைப் பற்றிய விவரமே இல்லை.

இந்திராவின் கணவனுக்கு கல்கத்தாவில் வேலை என்பதால் அவள் அங்கே புறப்பட்டுப் போய்விட்டாள். ரமணியும் திருமணமாகி மனைவியுடன் வெளிநாடு போனவன் ஒரு விபத்தில் காலமாகிப் போனான். அதற்குப் பின்னர் அவன் தந்தை தமது வியாபாரத்தையே விற்றுவிட்டுப் பம்பாயில் குடியேறி விட்டதாகக் கேள்வி.

பல வருடங்களாக அறுபட்டுப் போன தொடர்பு, ஆளுக்கு ஒரு மூலையாகப் பிரிந்து போய் விட்டதில் அதற்குப் பின்னர் நந்தகோபாலைப் பற்றி அறிய... அவளுக்கு வாய்ப்பு ஏற்படவில்லை. அதில் அவளுக்கு விருப்பமும் இல்லை.

இந்த அதிசயமான சந்திப்பினூடே இழையோடிய காதல் விவகாரம் யாருக்குமே தெரியாதே. அப்பாவிடமோ அத்தையிடமோ அவள் மூச்சுக் காட்டவில்லை. ஏன் ரமணிக்கோ, இந்திராவிற்கோ கூட தெரியாத விஷயமாகப் போய் விட்டிருந்தது. அதே போல அவனும் தான் கொடுத்த வாக்கை இதுகாறும் மீறவில்லை. மாறாக அதைக்காப்பாற்றி இருந்தானே!

நல்லதொரு பண்பான மனிதன், அதனால் தான் தனது ஒருதலைக் காதலை மனதினுள் போட்டுப் புதைத்து விட்டிருந்தான் போலும். அப்படிப்பட்டவனை சரிவரப்புரிந்து கொள்ளாமல் மனம் போன போக்கெல்லாம், வாயில் வந்த



படியெல்லாம் பேசி விட்டோமே! அவன் எப்படி மனம் இடிந்து போயிருப்பான்? என்ன பாடு பட்டிருப்பான்?

கிரிதரன் தனக்கு வஞ்சம் இழைத்த போது துடிதுடித்துப் போனது போல், ஏமாற்றத்தால் அவனும் நொந்து, அவமானத்தால் கூசிப் போயிருப்பானல்லவா?

திடீரென எழுந்து உட்கார்ந்தாள். தலையணை முழுவதும் கண்ணீரால் நனைந்திருப்பதை அப்போதுதான் உணர்ந்தாள். பச்சாதாபத்தில் உகுத்து விட்டிருந்த கண்ணீரால் தொப்பலாகி விட்டிருந்தது!

மனம் லேசாகி விட்டது போன்ற உணர்வு. செய்த தவறுகளுக்காக மனம் வருந்தியதில் ஈடு செய்து விட்ட நினைப்பில் தலையணையைத் திருப்பிப்போட்டாள். ஆழ்ந்து உறங்கிப் போனாள்.

# 9

சனிக்கிழமை வேலைக்குப் புறப்படுமுன்பே அத்தையிடம் சொல்லி வைத்திருந்தாள்.

''அத்தே! நாளைக்கு நம்ம வீட்டில் பாரத் என்ஜினியரிங் முதலாளிக்கு விருந்து.''

அத்தையின் கண்கள் வியப்பில் விரிந்தன. விருந்து கொடுப்பது என்பது அவளுக்கு மெத்த பிடித்த விஷயமாயிற்றே!

''எத்தனை பேர் வரப்போறாங்கன்னு சொன்னா சமைக்கத் திட்டம் தெரியும்.''

''அவரு மட்டுந்தான் வரப்போறாரு.''

''ஏன்? அவங்க மனைவி, குழந்தைன்னு கூப்பிட்டுக்கறது தானே? அவங்க மட்டும் வீட்டிலே தனியாக சாப்பிடணுமா!''

''அவருக்கு இன்னமும் கல்யாணமே ஆகலை அத்தே!''

''என்னது?'' பிரமித்தாள் அத்தை.

''ஆமாம் அத்தை! அவர் மட்டும்தான் நமக்கு விருந்தாளி.''

''அதெப்படி உனக்குத் தெரியும்?'' தொடர்ந்து அத்தை குறுக்குக் கேள்வி கேட்டாள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பத்திரிகை விளம்பரங்களை பார்க்கச் சொல்லி உபதேசித்ததின் விளைவாக இது இருக்குமா? இதைச் சொல்ல இந்தப் பெண் ஏன் மூடி மறைக்கிறாள்? அத்தை ஆச்சர்யத்துடன் சாந்தாவைப் பார்த்தாள்.

''எங்கள் அலுவலகம் மூலம் பரிச்சயமானவர் - நீங்க நல்லா சமைப்பீங்கன்னு தெரியாமல் அவர்கிட்ட பேச்சு வாக்கில் சொல்லிட்டேன். அப்படியான்னு கேட்ட மாதிரியைப் பார்த்ததும் பாவமா இருந்துச்சு.''

''பாவம்! ஓட்டல் சாப்பாட்டுல நாக்கு செத்துப் போயிருக்கும்.'' அத்தை அனுதாபப்பட்டாள்.

''அதுக்கென்ன. எங்க வீட்டுக்கு விருந்து சாப்பிட வாங்களேன்னு அழைச்சி வச்சேன். அவ்வளவுதான் சரின்னுட்டார்'' என்று மெல்லியதாகச் சிரித்துவிட்டுக் கிளம்பி விட்டாள்.

அத்தையின் மனதிற்குள் ஆயிரம் எண்ணங்கள் பளிச்சிட்டன. சாந்தா சாதாரணமா எந்த ஆணையும் வீட்டிற்கு சாப்பிடக் கூப்பிடமாட்டாள். அதுவரை அப்படி நடந்ததுமில்லை.

இப்போது அப்படி ஒரு ஆண்மகனை, அதிலும் திருமணம் ஆகாத கட்டை பிரம்மச்சாரி ஒருத்தனை விருந்து சாப்பிட அழைப்பதன் மர்மம் என்ன? எந்த அளவிற்கு அவர்களுக்குள் சிநேகிதம். ஒரு சமயம் ரகசியமாக வளர்ந்து விட்டிருக்கிறதோ!



எப்படியோ? நல்லபடியாக முடிந்தால் சரி. ஜாதி, சமய சங்கடங்கள் இல்லாமல் வருகிறவன் நல்லவனாக இருந்து... இருவரும் மனம் ஒப்பினால் எத்தனை நிம்மதி?

வாயிலைத் தாண்டுமுன் அத்தை பின்னாலேயே பெருமூச்சுடன் ஓடிவந்தாள். ''பாயாசத்திற்குக் கொஞ்சம் முந்திரிப்பருப்பும் - ஃப்ரூட்சாலட் செய்ய கொஞ்சம் பழமும் வாங்கிட்டு வந்திடு.''

''இன்னும் ஏதாவது தேவைன்னா இப்பவே சொல்லிடுங்க. நினைச்சு நினைச்சு கேட்டா என்னால வாங்கிண்டுவர முடியாது'' சிணுங்கினாள் சாந்தா.

''வரும் வழியிலேயே காய்கறி கடையில பச்சையா முட்டைகோஸ் வாங்கிட்டு வந்திடு. வெள்ளையா வாங்காதே. 'காஸ்டிரபுள்' வந்திடும். அப்புறமா... ஒரு காலிபிளவர் நல்ல அடர்த்தியா கொண்டையாட்டமா இருக்கிற பூவா, பூச்சி, புழு இல்லாம வாங்கிட்டுவா... ம்! அப்புறமா கொஞ்சம் பீட்ரூட்...''

''அத்தே! நீங்க சொன்ன இங்கிலீஷ் காய்கறிங்க இப்ப பவுன் விலை விக்குது!''

''பெரிய மனுஷர் நம்ம வீட்டுக்கு சாப்பிட வரப்போறாரு. நல்லா சொன்னே போ... விலையைப் பாத்தா முடியுமா?'' அத்தை கேட்டாள்.

''பெரிய மனுஷர் தான். ஆனால் அவர் நம்ம ஊர் மனுஷர் தான் இங்கிலீஷ்காரர் இல்லே...'' சிரித்தபடி வெளியே இறங்கினாள் அவள்.

சாந்தா மட்டும் அத்தைக்கு சளைத்தவளா! அன்று மாலை கடைத்தெருவில் தன் காரை ஓட்டிச் சென்றாள்.

முதல் முதலாக நந்தகோபால் அவள் வீட்டில் சாப்பிட வரப்போகிறார். மிகுந்த அக்கறையுடன் காய்கறிகளைப் பார்த்துப் பார்த்து வாங்கினாள்.

அத்தை சொன்னபடி பணச்செலவைப் பற்றி யோசித்தால்

முடியுமா என்ன?

நல்ல வேளையாக சம்பளம் வந்து அதிக நாட்கள் ஆகியிருக்கவில்லை. கையில் கொஞ்சம் பணப்புழக்கம் அதிகமாகவே இருந்தது. மணிபர்ஸிலுள்ள நோட்டுக் கற்றைகளின் கனம் தந்த மனத்தெம்பில் பல எதிர்பார்ப்புகளுடன் ஆசை ஆசையாக, காய்கறிகளை வாங்கிக் குவித்தாள்.

பாயசத்திற்கும் அத்தையின் 'லிஸ்டை'ப் பூர்த்தி செய்து வாங்கி விட்டிருந்தாள்... ஃப்ரூட் ஸாலட் விஷயத்தையும் மறக்கவில்லை.

ஞாயிற்றுக் கிழமை காலை - அத்தை சமையலறையில் ஆட்சி பண்ணிக் கொண்டிருந்தாள். வசதி . கிடைத்தால், சமையலில் புகுந்து விளையாடி விடுவாள் அத்தை.

''அண்டை வீட்டு நெய்'' கதைதான்! எனவே ரசத்திற்குத் தாளிதம் செய்வதிலிருந்து வீடு முழுவதும் நெய் மணத்துக் கொண்டிருந்தது! இடையிடையே மசாலா நெடி... அம்மிக்குழவிக் கல் உருளும் ஓசை எல்லாமாக ஒரு யுத்த பூமி போல் சமையலறை ஒலித்துக் கொண்டிருந்தது.

சாந்தா முன்னறையை சீர் செய்வதில் ஈடுபட்டிருந்தாள்.

ரேடியோ கிராம் மீது நடனமாடிக் கொண்டிருந்த வெண்கல நடராஜர் ''பிராஸோ'' வில் துள்ளிக் கொண்டிருந்தார்.

தூசி தட்டப்பட்டு தரை மீது விரிக்கப்பட்டிருந்த பாரசீகக் கம்பளம் புத்தம்புதிது போலப் பொலிவுடன் காணப்பட்டது.

காப்பி மேஜை மேல் அழகான ஜெய்ப்பூர் பூச்சட்டிக்குள்ளே தோட்டத்தில் மலர்ந்த ரோஜா மலர்களைக் கொத்தாகதண்ணீரில் செருகி, மிகநேர்த்தியாகஅலங்கரித்தாள்.

சோபாக்களைத் தட்டிப்போட்டு, அதில் சொகுசாக சாய்ந்து கொள்ள திண்டுகளை ஒழுங்காக சாய்த்து வைத்தாள்.



முன்னறையில் யாவும் சரிவர செய்யப்பட்டிருக்கிறதா என ஆராய்ந்து விட்டு, பிறகு திருப்தியுடன் குளியலறைப் பக்கம் ஓடினாள்.

குளித்து முடித்தவள், தனக்குப் பிடித்தமான பச்சை வண்ணப் பிரிண்டட் பட்டுப் புடவையை உடுத்திக் கொண்டாள் -கண்ணாடி முன் உட்கார்ந்து, நிதானமாக தலையை வாரி முடித்தாள். அதிக கவனத்தோடு ஒப்பனையை முடித்தவள், கண்ணாடியில் தன் உருவத்தை ஒப்பிட்டுப் பார்த்தாள்.

மனதில் ஏற்பட்ட மகிழ்ச்சி... கண்களில் பளபளத்தது. உற்சாகமான எதிர்பார்ப்பின் பலனோ என்னவோ... அவளது உருவத்தின் பிரதி பிம்பமே... மிக இளமையாக... அவளுக்கே வியப்பூட்டும் வகையில், மிகமிக அழகாகத் தெரிந்தது!

நந்து எப்பொழுதும் வெகுளித்தனமாக வெளிப்படையாகப் பேசும் மனிதர்... கட்டாயம் அவளைப் புகழ்வார்...

கன்னங்கள் சிவப்பாகி... காது மடல்கள் சூடேறி... நெஞ்சிலே இன்பச்சிலிர்ப்பு ஏற்படுவதை உணர்ந்து அவள் பரபரப்புடன் கீழே இறங்கி வந்தாள்.

பூஜையறையில் ஒரு கத்தை கஸ்தூரி ஊதுவத்தியை ஏற்றி வைத்து விட்டு அவள் வெளியே வருவதற்கும் தோட்டத்திற்குள் அந்த வெள்ளைநிற 'பென்ஸ்' கார் கப்பல் போலத் தவழ்ந்தோடி வருவதற்கும் சரியாக இருந்தது.

சாந்தாவின் மகிழ்ச்சி கரை கடந்து போயிற்று. பரபரப்பாக அவள் ''அத்தை! அவர் வரார்...'' 'பராக்கு' கொடுத்தபடி உள்ளே திரும்பினாள். பிறகு மீண்டும் வாயில் வராந்தாவிற்கு வந்தாள்.

பென்ஸை நிறுத்திவிட்டு இறங்கிய மனிதனைப் பார்த்த அவளுக்கு ஆனந்தம் மிக்க அதிர்ச்சி.

ஒடிசலாக மாநிறமாக இருந்த நந்து... நந்தகோபால்... இந்த சில வருடங்களில் வாழ்க்கையில் ஏற்பட்ட வேகமான முன்னேற்றத்தில் எப்படி மாறிப்போயிருக்கிறார்?

பூசினாற்போல தடித்த உடம்பில் அந்த ஒடிசல் மறைந்தே போயிருந்தது. கன்னக் கதுப்புக்களிடையே மறைந்து போன அந்த மூக்குக்கூட இப்போது முகத்திற்கே மெருகூட்டுவது போல... அத்தனை பொருத்தமாகத் தெரிவது போலத் தோன்றியது எதனால்...? வெறும் பிரமையாக இருக்குமோ?

வெளிர்நிற ரோஜா ஷர்ட்டும் - பட்டுக்கரை வேட்டியுமாக... இந்த நந்தகோபால்... எத்தனை அழகாக கம்பீரமாக நடந்து வராந்தாவிற்கு வருகிறார்.

நந்தகோபால் அருகில் வருகிறார் எனக் கட்டியம் கூறுவதுபோல் அந்த வெளிநாட்டு ''ஷேவிங் லோஷன்'' வாசனை கும்மென்று முகத்தில் அடிப்பதை உணர்த்தியது.

முகத்திலும், தோற்றத்திலும், உடை, நடை, பாவனைகளிலும் நந்தகோபாலின் பணக்காரத்தனம் சுடர்விட்டுக் கொண்டிருந்ததை, அவள் கவனிக்கத் தவறவில்லை.

அவள் உதாசீனப்படுத்திய நந்து! இத்தனை காலத்திற்குப் பிறகு உழைப்பால் உயர் மட்டத்தை எட்டிவிட்ட நந்த கோபால்... இத்தனை உயர்த்தப்பட்ட பின்னரும் அவளையே நினைத்துக் கொண்டு... இன்னமும் மறக்காது... அதே நந்துவாக... பூரித்துப் போனாள்.

''வாங்க! வாங்க! உட்காருங்க...!'' முன்னறையிலிருந்த சோபா ஒன்றைக் காட்டி உபசரித்தாள்.

''நல்ல வாசனை'' முகர்ந்தபடி, சோபாவில் உட்கார்ந்தான் நந்தகோபால்... ''ஊதுபத்தியா? நல்லா இருக்கு'' என்றபடியே சுற்றும் முற்றும் பார்த்தான்.

பிறகு, ''முதன்முதலா உங்க வீட்டுக்கு வெறும்



கையோடவா வரதுன்னு... இதைக் கொண்டு வந்தேன்'' சொன்னபடியே தன் கையோடு கொணர்ந்திருந்த சாக்லேட் பெட்டியை அருகிலிருந்த காப்பி மேஜை மீது வைத்தான்.

''உனக்கு, சாக்லெட்னா ரொம்ப பிடிக்குமே. போனவாரம் என் சிநேகிதன் ஒருத்தன் யுஎஸ்சேயிலிருந்து வந்தவன் கொண்டு வந்து கொடுத்தான். வெளிநாட்டு, சாக்லெட்... உனக்கு உயிர்னு எடுத்திட்டு வந்தேன்'' சிரித்தான் அவன்.

லேசாகக் கன்னங்கள் சிவக்க - நெஞ்சு உவகையாலும், கர்வத்தாலும் நிரம்பி வழிய - கண்கள் பளபளக்க, அவனை நன்றியுடன் பார்த்தாள்.

''தேங்க்ஸ்! எல்லாம் நல்லா ஞாபகம் வச்சிருக்கீங்களே மறக்கவே இல்லியே'' புன்னகைத்தாள்.

''நீ கொஞ்சம் கூட மாறவேயில்லை சாந்தா.''

''அப்படியா? சும்மா சொல்றீங்க.''

''ஊஹூம், நிசம்மாகவேதான்... இந்தப்பச்சை புடவை உனக்கு ரொம்ப பொருத்தமா இருக்கு சாந்தா!'' ஏற இறங்கப் பார்த்தபடி அந்த சாக்லெட் பெட்டியை அவள் கையில் கொடுத்தான்.

''எங்க அத்தையைக் கூப்பிட்டு அறிமுகம் செய்து வைக்கறேன். அப்பாவுக்குப் பிறகு அவங்கதான் எனக்கு எல்லாமே...'' என்றபடி, தன் உணர்வுகளை சமாளித்தபடி உள்ளே விரைந்தாள்.

அத்தை கைகளைக் கழுவித் துடைத்துக் கொண்டு சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்தியபடி மெல்ல சாந்தா பின் தொடர வந்தாள்.

சோபாவை நிறைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த மனிதனை அவளுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது.

''பார்க்க நன்றாகத் தானிருந்தான் - அந்தக்கார் ஏயம்மா... எவ்வளவு பெரிசு! அவனுடையதா...? ரொம்ப வசதியான

பிள்ளையாண்டான் போலிருக்கு... பரவாயில்லை... சாந்தா முடிவில் நல்ல இடமாத்தான் தேர்ந்தெடுத்திருக்கா... சித்திவிநாயகனே... உனக்கு நூற்றெட்டு தேங்காய் உடைக்கிறேன். எல்லாம் நல்லபடியாக முடியணும்ப்பா'' பலவும் எண்ணியபடியே... புன்னகையுடன் ''வாங்கோ... நீங்க சாப்பிட வரப்போறதாக சாந்தா சொன்னாள்... எனக்கு ரொம்ப சந்தோஷம்... ஏதோ எனக்கு தெரிஞ்ச மட்டில் சமைத்திருக்கேன்...'' பற்களைக் காட்டி மெல்ல சிரித்தாள்.

''மகாலிங்கம் அவர்கள் மறைவிற்குப் பின்னர் நீங்கதான் சாந்தாவுக்குத் துணையாக இருக்கீங்கன்னு கேள்விப்பட்டேன். மனசுக்கு அது பெரிய ஆறுதலாக இருந்தது. என்ன ஆனாலும் ஒரு பெரியவங்க துணை இருக்கறதுக்குக் குடுத்து வைக்கணுமே...'' என்றான் புகழ்ந்தபடி.

அத்தை உச்சி குளிர்ந்து போனாள். ''எத்தனை நாளைக்கு நான் துணையாக இருக்க முடியும் சொல்லுங்க. காலாகாலத்துல அவளுக்கு ஒரு துணையைத் தேடிவச்சிட்டா நல்லது. அதுதான் என் ஆசை'' மறைமுகமாக அத்தை தன் மனதில் உள்ளதைக் கொட்டினாள்.

''தாகத்துக்குக் கொஞ்சம் சூடா ஏதாச்சும் சாப்பிடறீங்களா?'' உபசாரமாகக் கேட்டாள் தொடர்ந்து.

''ஒண்ணும் வேணாம்மா. உங்களையெல்லாம் சந்திச்சதே மனசில் நிறைஞ்சிருக்கு'' நந்தகோபால் புன்னகைத்தான்.

'நல்ல பிள்ளையா இருக்கான். இந்த இடத்தை விடாமல் சாந்தா கெட்டியா பிடிச்சுக் கொண்டாளோ பிழைச்சுக்கிட்டாள்.' அத்தை கற்பகம் தனக்குள் கணக்கிட்டபடி சமையலறைக்குள் விரைந்தாள்.

வழக்கம்போல் நந்தகோபால் சில நகைச்சுவையான சம்பவங்களைப் பேசத் தொடங்கினான்.

சாந்தா அதிகமாகவே சிரித்தாள். பல இடங்களில் வெறும்



அறுவையான நகைச்சுவைகள். கேட்டுக் கேட்டு அலுத்துப்போன பழங்கதைகள் எல்லாவற்றிற்கும் விழுந்து விழுந்து சிரித்தாள்.

''நந்து! நீங்க மட்டும் என்ன மாறியா போயிட்டீங்க... இல்லவே இல்லே... தமாஷாவே பேசுறீங்க. அப்படி இருக்க அந்த ராஜேஷ் பையன் எப்படி உங்களைக் கண்டிப்புக்கார மனிதர்னு ரொம்ப பயமுறுத்தலா பேசினான்னு நினைச்சால் நம்பவே முடியலை!''

''நண்பர்கிட்ட மட்டும்தான் நான் மனம்விட்டு சிரித்துப் பேசுவேன். வேலைன்னு வந்திட்டால் ரொம்பக் கறார்... கண்டிப்புக்காரன்... சோம்பல் இல்லாமல் உழைக்கணும்னு ஆசைப்படறவன். சாந்தா! அன்னைக்கி நீ பாத்த நந்துவுக்கும் -இன்னைக்கி நீ பாக்கற நந்துவுக்கும் உள்ள வித்தியாசம் எதனால் ஏற்பட்டதுன்னு நினைக்கிறே?'' என்றான் கனிவுடன்.

பதில் பேசாத் தோன்றாது... தடுமாற்றத்துடன் விழித்தாள் சாந்தா.

''கடும் உழைப்பினால் நான் என்னை உயர்த்திக்கிட்டேன் - திருவல்லிக்கேணி ஒண்டு குடித்தனத்திலிருந்து அண்ணாநகர் பங்களாவுக்கு சொந்தக்காரனானதும்... கைகட்டி வேறு ஒருத்தருக்கு வேலை செய்தவன் - இப்ப சொந்தமாக தொழிற்சாலை வெச்சு நடத்தணும் என்கிற அளவுக்கு வளரணும்னா, சாதாரண விஷயம் இல்லே சாந்தா!''

''உண்மைதான்... உங்க உழைப்போட பெருமையை உணர்கிறேன் நந்து!''

''வினாடிகூட ஓய்வில்லாமல் உழைத்தேன் - உழைப்பின் பலனை அனுபவிக்கிறேன்.''

''உங்களை இப்படி ஒரு உயர்ந்த நிலையில் பார்க்கும் போது ரொம்ப சந்தோஷமா இருக்கு நந்து!''

அதற்குமேல் பேச முடியாமல் குழப்பத்துடன்

மௌனமானாள் அவள்.

அத்தையின் விருந்தை வெளிப்படையாகப் புகழ்ந்தான் அவன். ஒவ்வொரு தயாரிப்பையும் ரசித்து ருசித்துப் புசித்தான்.

அத்தையைக் கேட்க வேணுமா?

''இன்னும் கொஞ்சம் அவியல் வைக்கறேன். சாப்பிடுங்கோ! மாங்காய் பச்சடி போடவா? என்ன இது 'காரட்' ஊறுகாய்... இவ்வளவுதான் சாப்பிடறதா? கண்ணுக்கு நல்லது... காரமில்லாம இருக்கும்... சாப்பிடுங்கோ...'' அதிகப்படியாகவே உபசரித்தாள்.

வருங்காலத்தில் அவளுக்கு வசதியாக இருக்கலாமே என்ற அடிப்படை நோக்கம் வேறு...! இப்பொழுதே அவனை நன்றாகக் கவனித்துக் கொண்டு விட்டால், நாளைக்கு மருமகப்பிள்ளையாகி விட்டால், ஏதோ ஒரு மூலையில் இருந்துவிட்டுப் போகட்டும், என்று அவளுக்கும், அவர்களுடன் ஒரு மூலையில் தங்க இடம் கொடுத்து விடுவானல்லவா? அதே எண்ணத்தில் ஓடிஓடி உணவு வகைகளை ஓயாது பரிமாறினாள். அன்பாக உபசரித்தாள்.

சாப்பாட்டிற்குப் பிறகு வெகுநேரம் முன்னறையில் உட்கார்ந்து இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். நெடுநாள் கழித்து சந்தித்துக் கொண்ட இரு நண்பர்கள் தமது பழங்கதைகளைப் பேசிக் களிப்பது போன்று, அவர்களது இளம் பருவத்து நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்தனர்.

''மறுபடியும் சந்திப்போமா?'' என்று கூறிவிட்டு அவன் சிறிதுபொழுதில் விடைபெற்றுக் கொண்டு போய்விட்டான்.

மறுபடியும் சந்திப்பு எப்போது... என்று சாந்தாவின் மனம் ஏங்கியது.



# 10

சில வாரங்களுக்குப் பின்னர் அவளது அலுவலகத்திற்கு அவன் டெலிபோன் செய்தான்.

''சாந்தா! நந்து பேசறேன், உன்னை இந்த ஞாயிறு சந்திக்க முடியுமா?''

அவளுக்கு தாங்கொணாத மகிழ்ச்சி... ''வாங்களேன். சாப்பிடவே வந்துடுங்களேன்'' ஆவலுடன் சொன்னாள்.

''இல்லே! தேநீர் சாப்பிட வருகிறேன்... அப்படியே நீ இஷ்டப்பட்டா உன்னை அழைச்சிட்டு வந்து என் வீட்டைக்காட்ட ஆசைப்படறேன்.''

''சரி'' என்று போனை வைத்தவள் மனது ''திக் திக்''கென்று துடித்தது. மூன்று முறை அவளிடம் காதல் பிச்சை கேட்டு அவமானப்பட்டு விட்டதால் நந்து இந்தமுறை அவசரப்படாமல் நிதானமாக நடந்து கொண்டு முடிவில்தான் தன் விருப்பத்தை வெளியிடப் போகிறார் போலும்.

இல்லாவிட்டால் அவரது வீட்டை அவளுக்குக் காட்ட அவர் ஏன் ஆசைப்பட வேண்டும்? திருவல்லிக்கேணி ஒண்டுக் குடித்தனத்தில் உன்னை ஒடுக்க மாட்டேன். இப்போது இந்த பெரிய பங்களாவிற்கு எஜமானியாக, ராணிபோல் நீ வாழலாம் என்று சொல்லத்தானே?

அன்று வேலையே ஓடவில்லை அவளுக்கு. பல்தரை மீது ஜமுக்காளத்தை விரித்துத் தயாராக வைத்திருந்தாள். நந்துவின் பென்ஸ் வண்டி குறித்த நேரத்தில் உள்ளே வந்ததும் ஓடிச்சென்று அவனை வரவேற்றாள்.

பூப்போட்ட ஸ்லாக்கில் அவன் கல்லூரி மாணவன் போல

இளமையோடு அவள் கண்களில் தெரிந்தான்.

மல்மல் வாயில் சேலையில், கச்சிதமான ஒப்பனையில் அவள் நின்றிருந்தாள்.

தானே தயாரித்த தேநீரைக் கெட்டிலில் நிரப்பி பால் சர்க்கரை கிண்ணங்களுடன், கோப்பைகளையும், தட்டில் சுமந்தபடி ஜமக்காளத்தின் மேல் வைத்தாள். சில நொடிகளில் சிற்றுண்டித் தட்டுக்களையும் கொண்டுவந்து வைத்தபடி,

''தேநீருக்கு சர்க்கரை போட்டுக் கொள்வீங்க இல்லையா?'' கேட்டாள்.

''பாதாம்பர்பியும், பஜ்ஜியும் செய்திருக்கீங்க. சர்க்கரை அதிகம் தேவைப்படும்...'' சிரித்தபடி அவள் அளவோடு பாலை விட்டுக் கலந்து தந்த கோப்பையை வாங்கிக் கொண்டான்.

''ஆபீஸ் போகிறேனே சமைக்கத் தெரியாதென்று பயந்துடாதீங்க. எனக்கு நல்லாவே சமைக்கத் தெரியும். இதெல்லாம் நானே செய்ததாக்கும்.''

''என் வீட்ல சமையற்காரர் இருக்கார். நல்ல மனசு வந்தா நல்லாவே சமைப்பார். ஆனால் இப்படி உபசரிக்கத் தெரியாது. என்ன இருந்தாலும் ஒரு பெண் இருந்தால் அந்த வீட்டோட களையே மாறிவிடும்னு அம்மா அடிக்கடி சொல்வாங்க...'' மூக்கும் முகமும் சிவக்க ஆவலுடன் அவனையே பார்த்தாள்.

பர்பியைச் சுவைத்தவன், ''உனக்கு நல்லா சமைக்கத் தெரியும்னு ஒப்புக்கறேன். பர்பி ரொம்ப ஜோர்... தேநீர் மட்டும் என்ன... எனக்குப் பிடிச்சமாதிரி, 'ஸ்ட்ராங்கா' இல்லாம... அளவோடு நல்ல சூடா தயாரிச்சிருக்கே'' தேநீரை உறிஞ்சிவிட்டு கூறி முடித்தான்.

அந்தப் புகழ்ச்சியின் போதையில் அவள் மனம் புளகித்துக் போனாள். ''நந்து! இத்தனை ஒரு கண்ணியமான மனிதர்னு இத்தனை நாளும் நான் புரிஞ்சு கொள்ளாம போயிட்டேன்...



ஒரு காலத்திலே நான் உங்களை நான் ரொம்பவும்... அவமரியாதை செய்து...'' தடுமாறினாள் அவள்.

''எப்பவோ அதை நான் மறந்துட்டேனே சாந்தா. இப்ப எதுக்காக அதை நீ நினைச்சு வேதனைப்படணும்?''

''இல்லே நந்து. உங்களை அவமானப்படுத்தினதுக்கு தண்டனையை நான் அனுபவிச்சிட்டேன்'' கண்கள் கசிய அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''கிரிதரன் சங்கதிதானே... எனக்கு எல்லாம் தெரியும்.''

''அப்பத்தான் எனக்குப் புரிஞ்சது ஒருத்தர் மனதை நோகச் செய்யும்படி பேசிட்டா அந்த மனம் என்ன பாடுபடும்னு... நானே அனுபவிச்ச பிறகுதான் உண்மை சுட்டுது. உங்களுக்கு எல்லாம் தெரியும்கிறீங்க. நந்து நான் வெளிப்படையா மனம் திறந்து சொல்கிறேன். கிரிதரனை நான் ரொம்ப நேசிச்சேன். அவரைக் கல்யாணம் செய்துக்க வேணும்னு ரொம்ப ஆசையில் வாழ்ந்தேன். ஆனா என்னை உதறிவிட்டு அவர் சுவர்ணாவைக் கல்யாணம் செய்து கொண்ட போது அந்த அதிர்ச்சியை என்னால தாங்க முடியலே... நந்து! நீங்க நம்புவீங்களோ மாட்டீங்களோ... ஒரு நாள் தூக்க மாத்திரையை சாப்பிட்டுத் தற்கொலை செய்துக்கறதா முடிவு செய்துட்டேன். ஆனால் அன்னிக்கு பாத்து அப்பாவுக்கு மாரடைப்பு வந்து... என் தீர்மானத்தை மாத்திட்டது. இப்ப அப்பாவும் போய்விட்டார் நானும் அத்தையும் யாரும் இல்லாத அனாதையா...'' பேச முடியாமல் விம்மினாள் அவள்.

''சாந்தா! கண்ணைத் துடைச்சிக்க. நீ கண்ணீர் விட்டால் என்னால பொறுக்க முடியாது... ம்! கிளம்பு அத்தை கிட்ட சொல்லிட்டு... என் வீட்டைப் பார்க்கப் போகலாம்.'' சமாதானமாகப் பேசினான் நந்தகோபால்.

அத்தை உத்திரவு தர மறுப்பாளா என்ன? பெரிய அந்தஸ்துக்காரன் - சட்டென ஒப்புதல் தருவானா? மெள்ளத் தான் வழிக்கு வருவான். விட்டுப் பிடிப்போம் என

முணுமுணுத்தபடி உத்திரவு அளித்தாள் உற்சாகமாக.

அந்த பென்ஸ் வண்டியில் நந்தகோபாலின் அருகில் அமர்ந்தபடி அண்ணாநகர் பங்களாவிற்குட் போனது, சாந்தாவிற்கு ஒரு இன்பமான அனுபவமாகப்பட்டது.

வீட்டின் கேட்டைத் தாண்டி உள்ளே நுழைந்த வண்டியின் கதவைத் திறந்து அவளை இறங்கச் சொல்லி உள்ளே அழைத்துச் சென்ற நந்தகோபாலின் பண்பும், மரியாதையும் அவள் மனதைத் தொட்டன.

இத்தனை நல்லவனை வேண்டாம் என்று ஒதுக்கியது எத்தனை முட்டாள் தனம்! தன்னையே பலமுறை சாடிக் கொண்டாள்.

தோட்டத்தையே பார்த்து பிரமித்தபடி நின்று விட்டாள்.

''என்ன சாந்தா? அப்படியே மலைச்சுப் போயிட்டே'' கேட்டபடி அருகில் வந்தான் நந்தகோபால்.

''என்ன அழகான தோட்டம்! இது போல தோட்டத்தை நான் எங்கேயும் பார்த்ததில்லே.''

''ஒவ்வொரு செடியையும் குழந்தையைப் போல கவனிக்கணும். ஒரு இலை வாடிச்சின்னு தெரிஞ்சா தோட்டக்காரன் தான் கவனிக்கணும்னு காத்திருக்க மாட்டேன்... நானே தண்ணீர் ஊத்துவேன். கருத்தான கவனிப்புதான், செழுமைக்குக் காரணம்.'' பெருமையுடன் சிரித்தான்.

ஒரு இலைகூட வாட அனுமதிக்காத இரக்க குணம் இந்த நந்துவிற்கு...!

பெருமையுடன் எண்ணியபடி அவனுடன் உள்ளே சென்றாள்.

வீட்டின் முன்னறையையும் - சாப்பாட்டறையையும் இடையே தடுத்த அலமாரி போன்ற அமைப்பில் வைக்கப்பட்டிருந்த அலங்காரப் பொருட்களையும் கண்



கொட்டாமல் பார்த்தாள்.

''உட்கார் சாந்தா! என்ன சாப்பிடறே... ஏதாச்சும் குளிர் பானம் கொண்டு வரச் சொல்லவா?''

அப்போதுதான் அவள் கவனித்தாள். ரேடியோ கிராமின் மீது சாய்ந்தவாக்கில் வைக்கப்பட்டிருந்த வெள்ளி பிரேமிட்ட படத்தினுள்ளே ஒரு வாலிபன் சிரித்துக் கொண்டிருந்தான்.

குளிர்பானத்தை வேலையாள் எடுத்துவந்து வைத்துப் போனதும் அவள் எதிரே உட்கார்ந்து கொண்டான் அவன்.

பைன் ஆப்பிள் ரசத்தைச் சுவைத்துக் கொண்டே அவள் ஆவலை அடக்கமாட்டாது கேட்டாள்.

''யாரது அந்த வாலிபன் - உங்களுக்கு உறவா?''

நந்தகோபாலின் முகத்தில் பிரகாசம் தெரிந்தது. பிறகு மங்கியது.

''அவன் என் தோழன்... துரைராஜன் என்று பெயர் -இப்போ நானிருக்கும் இந்த தகுதிக்கே அவன் தான் காரணகர்த்தா - இன்னும் சொல்லப்போனால் இந்த உலகத்தில் நான் இப்போது உயிரோடிருக்கிறதே அவனுடைய உதவியால்தான். அவனுக்கு, நான் எப்படிப் பார்த்தாலும் கடமைப்பட்டவன். மூனு வருஷத்துக்கு முந்தி அவன் கடுமையான காமாலை நோயினால் எதிர்பாராத விதமாக இறந்து போனான். அவன் குடும்பம் ரொம்ப உயர்ந்த நிலையில் இருந்து மிகவும் சரிந்து போயிட்டது. என்னால முடிஞ்சதை அவன் குடும்பத்துக்குச் செய்துக் கிட்டிருக்கேன்...'' அவனது குரல் துயரத்தில் தேய்ந்தது.

''அடபாவமே! சின்ன வயசா தெரியறார்.''

''என்னை ஆபத்திலிருந்து காப்பாத்தினான். ஆனால் என்னால் தான் அவனைக் காப்பாத்த முடியாமப் போயிட்டுது. சாந்தா! நீ மனம் விட்டு பேசினாப்போல மனம் விட்டு ஒரு விஷயத்தைப் பேச விரும்புகிறேன்.''

சாந்தா படபடக்கும் இதயத்துடன் அவனையே பார்த்தாள்.

''மூணுதடவை நீ என்னை மணந்து கொள்ள மறுத்திட்டே அந்தத் துயரை என்னால் தாங்கிக்கவே முடியவில்லை. உன்னை மறந்துடணும்னு தீவிரமா முயற்சி செய்தேன். முடியலை. கிரிதரனை நீ மணந்து கொள்ளப் போகிற செய்தியைக் கேட்டதும் நான் பொடிப் பொடியாகிப் போனது போல உணர்ந்தேன். எங்கம்மா கிராமத்துக்குப் போன சமயம், 'என்னைத் தேடவேண்டாம்ன்னு' ஒரு கடிதம் எழுதி வச்சிட்டு விட்டைப் பூட்டிக்கிட்டு இருட்டும் சமயம் கால் வந்த வழியே போனேன். கடற்கரையில் வந்து பித்து பிடித்தவன் போல உட்கார்ந்திருந்தேன் - சந்தடி அடங்கியதும் கடலுக்குள் இறங்கிவிட வேண்டுமென்றதொரு பயித்தியக்கார யோசனை... திடீரென யாரோ தோளைத் தொட்டதும் நடுங்கிப் போனேன்.

''என்னடா இங்கேயே இருட்டுல உட்கார்ந்து கிட்டிருக்கே'' அதட்டியபடி துரைராஜன் நின்றான்.

''கொஞ்ச நாளாகவே உன்னைக் கவனிச்சிட்டு வரேன். உன் முகமே சரியா இல்லே. இப்படி பித்துப் பிடிச்சாப்போல இங்கே வந்து... ம்! உன்னைத் தனியா விடறது தப்பு. என்னோட கிளம்பு'' வலுக்கட்டாயமாக கரகரவென்று கையைப் பிடித்து இழுத்துப் போகாத குறையாகப் போய் தன் காரில் திணித்தான். வீட்டுக் கதவைத் திறக்கச் சொல்லி பின்னாலேயே வந்தவன் நான் எழுதி வைத்த கடிதத் துண்டைப் பார்த்துப் பதறிப் போனான்.

கோபத்துடன் அதைக் கிழித்துப் போட்டு விட்டு, ''நீயெல்லாம் ஆண் பிள்ளையாடா? படிச்சவனாடா? காதல் இல்லையேல் சாதலா? முட்டாள்... வாழ்க்கை வாழ்வதற்குன்னு உனக்கு ஏண்டா புரியாமப் போயிட்டுது? உன்னை இனிமே நான் தனியா விடப்போறதில்லை'' என்று கூறிவிட்டு கூடவே தங்கிவிட்டான். அதுமட்டுமில்லே.



வாழ்க்கையிலே முன்னேறணும்னு என்கிட்ட ஒரு வேகத்தை ஏற்படுத்தி, தன் நண்பர்கிட்ட பெருந்தொகை கடனாக வாங்கிக் கொள்ள உதவினான். இரவும் பகலும் என்னைக் கட்டிக் காத்து... இமை கண்ணைக் காக்கிறது போல... என்னை உற்சாகப் படுத்தி ஊக்குவித்தான்.

''நாளடைவில் என் மனப்புண் ஆறியது. நானும் மனிதனாக மாறி தலை நிமிர்ந்து நின்றேன். சலியாத உழைப்பு என்னை முன்னேற்றியது. அதனால் அவன் எனக்கு தெய்வம் போல. அவன் படத்தை பெரிய அளவில் என் பூஜையறையில் வச்சிருக்கேன். சின்ன அளவில் சாப்பாட்டறையிலேயும், இங்கே வெள்ளி பிரேமுக்குள்ளயும் வச்சிருக்கிறேன். எல்லாத்தையும் விட சதா என் மனதுக்குள்ளேயே அவனை வச்சு தெய்வமா கும்புடறேன்.''

சாந்தா கண்கலங்கிப் போனாள்.

''நந்து! நீங்க கட்டாயம் என்னை மன்னிச்சேன்னு சொல்லுங்க. என்னால நீங்க ரொம்ப நொந்து போய் விட்டீங்க.''

''சாந்தா! வருத்தப்படாதே. அதையெல்லாம் பழங்கதையா நான் மறந்து போய்ட்டேனே... அது போகட்டும். வீட்டுக்கு வரவழச்சிட்டுப் பழைய வருத்தமான சங்கதிகளையே நான் பேசிட்டிருந்திட்டேனே. எழுந்திரு... வீட்டை சுற்றிப் பார். உனக்கு எனது ரசனை பிடிக்கிறதான்னு சொல்லு...'' எழுந்திருந்தான்.

ஒவ்வொரு அறையும் விதவிதமாக அலங்கரிக்கப் பட்டிருப்பதை வியப்போடு பார்த்தாள்.

சமையலறையா அது? - அத்தை பார்த்தால் அதை விட்டு அசையவே மாட்டார்களே! அத்தனை வசதிகளோடு தாராளமாக காற்றோட்டமாக வெளிச்சமாக இருந்தது.

''ஒரு குறை இருக்கு'' மெல்ல சிரித்தாள்.

சாந்தா படபடக்கும் இதயத்துடன் அவனையே பார்த்தாள்.

''மூணுதடவை நீ என்னை மணந்து கொள்ள மறுத்திட்டே. அந்தத் துயரை என்னால் தாங்கிக்கவே முடியவில்லை. உன்னை மறந்துடணும்னு தீவிரமா முயற்சி செய்தேன். முடியலை. கிரிதரனை நீ மணந்து கொள்ளப் போகிற செய்தியைக் கேட்டதும் நான் பொடிப் பொடியாகிப் போனது போல உணர்ந்தேன். எங்கம்மா கிராமத்துக்குப் போன சமயம், 'என்னைத் தேடவேண்டாம்ன்னு' ஒரு கடிதம் எழுதி வச்சிட்டு விட்டைப் பூட்டிக்கிட்டு இருட்டும் சமயம் கால் வந்த வழியே போனேன். கடற்கரையில் வந்து பித்து பிடித்தவன் போல உட்கார்ந்திருந்தேன் - சந்தடி அடங்கியதும் கடலுக்குள் இறங்கிவிட வேண்டுமென்றதொரு பயித்தியக்கார யோசனை... திடீரென யாரோ தோளைத் தொட்டதும் நடுங்கிப் போனேன்.

''என்னடா இங்கேயே இருட்டுல உட்கார்ந்து கிட்டிருக்கே'' அதட்டியபடி துரைராஜன் நின்றான்.

''கொஞ்ச நாளாகவே உன்னைக் கவனிச்சிட்டு வரேன். உன் முகமே சரியா இல்லே. இப்படி பித்துப் பிடிச்சாப்போல இங்கே வந்து... ம்! உன்னைத் தனியா விடறது தப்பு. என்னோட கிளம்பு'' வலுக்கட்டாயமாக கரகரவென்று கையைப் பிடித்து இழுத்துப் போகாத குறையாகப் போய் தன் காரில் திணித்தான். வீட்டுக் கதவைத் திறக்கச் சொல்லி பின்னாலேயே வந்தவன் நான் எழுதி வைத்த கடிதத் துண்டைப் பார்த்துப் பதறிப் போனான்.

கோபத்துடன் அதைக் கிழித்துப் போட்டு விட்டு, ''நீயெல்லாம் ஆண் பிள்ளையாடா? படிச்சவனாடா? காதல் இல்லையேல் சாதலா? முட்டாள்... வாழ்க்கை வாழ்வதற்குன்னு உனக்கு ஏன்டா புரியாமப் போயிட்டுது? உன்னை இனிமே நான் தனியா விடப்போறதில்லை'' என்று கூறிவிட்டு கூடவே தங்கிவிட்டான். அதுமட்டுமில்லே.



வாழ்க்கையிலே முன்னேறணும்னு என்கிட்ட ஒரு வேகத்தை ஏற்படுத்தி, தன் நண்பர்கிட்ட பெருந்தொகை கடனாக வாங்கிக் கொள்ள உதவினான். இரவும் பகலும் என்னைக் கட்டிக் காத்து... இமை கண்ணைக் காக்கிறது போல... என்னை உற்சாகப் படுத்தி ஊக்குவித்தான்.

''நாளடைவில் என் மனப்புண் ஆறியது. நானும் மனிதனாக மாறி தலை நிமிர்ந்து நின்றேன். சலியாத உழைப்பு என்னை முன்னேற்றியது. அதனால் அவன் எனக்கு தெய்வம் போல. அவன் படத்தை பெரிய அளவில் என் பூஜையறையில் வச்சிருக்கேன். சின்ன அளவில் சாப்பாட்டறையிலேயும், இங்கே வெள்ளி பிரேமுக்குள்ளயும் வச்சிருக்கிறேன். எல்லாத்தையும் விட சதா என் மனதுக்குள்ளேயே அவனை வச்சு தெய்வமா கும்புடறேன்.''

சாந்தா கண்கலங்கிப் போனாள்.

''நந்து! நீங்க கட்டாயம் என்னை மன்னிச்சேன்னு சொல்லுங்க. என்னால நீங்க ரொம்ப நொந்து போய் விட்டீங்க.''

''சாந்தா! வருத்தப்படாதே. அதையெல்லாம் பழங்கதையா நான் மறந்து போய்ட்டேனே... அது போகட்டும். விட்டுக்கு வரவழைச்சிட்டுப் பழைய வருத்தமான சங்கதிகளையே நான் பேசிட்டிருந்திட்டேனே. எழுந்திரு... விட்டை சுற்றிப் பார். உனக்கு எனது ரசனை பிடிக்கிறதான்னு சொல்லு...'' எழுந்திருந்தான்.

ஒவ்வொரு அறையும் விதவிதமாக அலங்கரிக்கப் பட்டிருப்பதை வியப்போடு பார்த்தாள்.

சமையலறையா அது? - அத்தை பார்த்தால் அதை விட்டு அசையவே மாட்டார்களே! அத்தனை வசதிகளோடு தாராளமாக காற்றோட்டமாக வெளிச்சமாக இருந்தது.

''ஒரு குறை இருக்கு'' மெல்ல சிரித்தாள்.

''எது? சுவர் வண்ணங்கள், திரைச்சீலை நிறத்தோடு பொருந்தலையா?''

''அதெல்லாம் ரொம்பப் பொருத்தம். ரஸனையோடு கட்டின இத்தனை பெரிய வீட்ல உங்களுக்குத் துணையா, உங்கள் வாழ்வைப் பகிர்ந்து கொள்ள ஒருத்தி இல்லாதது குறையாகத் தெரிஞ்சது.'' சொல்லிவிட்டு அவள் முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டாள் வெட்கத்தோடு.

''அந்தக் குறையை விரைவில் நிவர்த்திக்கப் போகிறேனே! உனக்கும் அதில சந்தோஷம்தானே?'' கேட்டான் அவன்.

சாந்தாவிற்கு மகிழ்ச்சி நிலைகொள்ளாமல் போயிற்று. ஆனந்தத்தில் தலையை அசைத்தாள்.

அதற்குப் பின்னர்... தொலைபேசியில் பலமுறை நந்து அவளிடம் பேசினான்.

பலமுறை அவளது வீட்டிற்கு விஜயம் செய்தான். காலை காப்பி பலகாரம் சாப்பிட்டான். சில நாட்கள் பகல் உணவிற்கு வந்து கலந்து கொண்டான். சில தினங்கள் இரவு சாப்பாட்டிற்கு வந்தான்.

''சாந்தா! இப்படியே கிணத்துல போட்ட கல்லா இருக்காதே. தும்பை விட்டு வாலைப்பிடிக்கிற கதையாப் போயிடப் போவுது. நீயே மனசை விட்டுக் கேட்டுப்பிடு. விஷயத்தை சீக்கிரமாக முடிச்சிட்டா நமக்கு நல்லது...'' அத்தை சொன்ன போதுதான் அவளுக்கும் அந்த யோசனை வந்தது.



# 11

அன்று பூர்ணிமை. கடற்கரையில் மணல் தரையில் அமர்ந்தபடி அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர். தங்கக் குடமாகக் கடலினின்றும் எழுந்த நிலவு மேலே எழும்பி வெள்ளித் தட்டாக, முத்தொளியைப் பரப்பிக் கொண்டிருந்தது. குளிர் காற்றும் இதமாக வீசியது.

இந்த நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்துவது உத்தமம் என்று அவள் வெட்கத்தை உதறிவிட்டு தானே ஆரம்பித்தாள்.

''நந்து! நாமிருவரும் பரஸ்பரம் மனம் உடைந்த வேதனையை அனுபவித்தவங்க. நம்மால் தான் அன்பு என்ற உணர்வை புரிந்து கொள்ள முடியும். நந்து! என்னை நீங்க மணக்க விரும்பி கேட்டபோது, நான் உலகம் புரியாத மட்டிப் பெண்ணாக இருந்தேன். வீண் ஆடம்பரத்துக்கும், பகட்டிற்கும் மயங்கி உண்மையான லட்சியத்துக்கு மதிப்புக் கொடுக்கத் தெரியாதவளாக இருந்திட்டேன். இப்பகாலம் கத்துக்குடுத்த பாடத்தில் என் மனம் பண்படைஞ்சிட்டது நந்து! உங்களை நான் நேசிக்கிறேன். என்னை ஏத்துக்கிட்டு எனக்கு வாழ்வு தாங்கன்னு கேட்டுக்கறேன்'' சொல்லி முடிப்பதற்குள் அவளுக்கு அழுகையே வந்துவிட்டது.

தொண்டையைக் கனைத்துக் கொண்டான் நந்தகோபால். ''சாந்தா! உன் மேல எனக்குத் துளியளவு வெறுப்புக் கூட கிடையாது. உனது உண்மையான தோழன் நான் என்கிறதை மறவாதே. உனக்கு எந்த சமயமும் எந்த உதவி தேவைன்னாலும் நீ தாராளமாக் கேட்கலாம். ஆனால் திருமணம் ஒன்றினால் மட்டும் நாம் ஒரு போதும் இணைய முடியாது சாந்தா!

''என் சிநேகிதன் துரைராஜனைப் பத்தி சொன்னேன் இல்லியா... அவனுக்கு ஒரு சகோதரி... கல்யாண வயசில் இருக்கா - பணம், அந்தஸ்து இருந்த காலத்தில் அவளை யாராவது கல்யாணம் செய்துண்டிருப்பாங்க. ஆனால் இப்ப யாரும் அவளோட சரிந்து போன நிலையில், திருமணம் செஞ்சுக்க முன்வர மாட்டாங்க. ஏன்னா... அவளுக்கு சின்ன வயசில இளம்பிள்ளை வாதம் வந்து இடது கால் ஊனமாகி விட்டது. அழகும், பணமும், அந்தஸ்தும் இருந்தாலே நம்ம சமுதாயத்தில் பெண்களுக்கு வரன் கிடைப்பது சிரமமான காரியம். இப்படி கால் ஊனமுற்ற பெண்ணை மணக்க எவன் வருவான்? எனக்கு உயிர் கொடுத்து வாழ்க்கையைக் கொடுத்த நண்பனது தங்கைக்கு நான் வாழ்வளிக்க வேண்டியது கடமையல்லவா? அதை அவளிடமே சொல்லி விட்டேன். அதனால் அந்தக் குடும்பமே, இப்போது மகிழ்ச்சி வெள்ளத்தாலே திகைச்சிட்டிருக்கு. அவளுடைய தாயார் இறந்து ஒரு வருஷம் ஆக இரண்டு மாசங்கள் இருக்கு... வருஷ திதி முடிஞ்ச பிறகு எங்க கல்யாணம்னு பெரியவங்க பேசியாச்சு. ...காதல்ல தோல்வி அடைஞ்சவன் நான் -கடமையிலாச்சும் தோல்வியடையாமல் இருக்க விரும்பறேன்... சாந்தா! தயவு செஞ்சு என்னை மன்னிச்சுடு... உன்னை மறுபடியும் சந்திச்சுப் பேசியது மனசுக்கு இதமாக இருந்தது. நாம் நல்ல நண்பர்களாகப் பிரிவது தான் உனக்கும் நல்லது... எனக்கும் நல்லது... சாந்தா என்ன சொல்றே?''

பூமியும், கடலும், வானும் சுழன்று கொண்டு வந்து அவளையே 'ஆ'வென்று விழுங்கிவிட்டது போல சாந்தா அதிர்ந்து போனாள். என்ன கொடுமை!

'வாழ்வில் அவள் விரும்பிப் போனதெல்லாம் விலகிப்போய் விட்டதே! அவள் என்ன வரம் வாங்கி வந்திருக்கிறாள்.'

''எனக்குத் தலைவலிக்குது போல இருக்குது. என்னை



வீட்ல கொண்டு விட்டுடறீங்களா?'' பேச்சைக் கத்தரித்து விட்டவளாய், மணலையும், மனதையும் உதறியபடி எழுந்தாள் சாந்தா.

சில நாட்களாகின. அத்தையின் மண்டை ஆவலில் வெடித்தது. ''அந்தப் பையன் நந்து வந்து கொண்டிருந்தவனைத் திடீர்னு காணலையே? ஊர்ல இல்லையா சாந்தா...?'' கேட்டாள் முடிவில்.

''அவர் இனி வரமாட்டார் - அவருக்குக் கல்யாணம் நிச்சயமாகி இருக்கு.''

''என்ன சொல்றே?'' அலறினாள் அத்தை. ''அத்தை! இத்தனை நாள் ஒரு உண்மையை, அப்பாகிட்டயும், உங்ககிட்டேயும் ஒளிச்சு வச்சிட்டேன். இந்த நந்தகோபாலை எனக்குப் பல வருஷங்களுக்கு முன்பே தெரியும்.''

அத்தை அதிசயத்துடன் விழித்தாள். ''இந்திராவோட வீட்டிலே இவரைச் சந்திச்சிருக்கேன். அப்பவே தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லி என்னை மூணுமுறை வற்புறுத்தினாரு...!

''பாவிப் பெண்ணே! ஏன் மறுத்தே?''

''அப்ப இவர்கிட்ட கார், பதவி, பணம் எதுவுமே இருக்கலை. இப்ப இருக்கிற அதே பதவி அப்ப அவர்கிட்ட இருந்திருந்தா ஒரு சமயம் சம்மதிச்சிருப்பேன். அல்லது, இப்பபோல் இவர் மனசைப் புரிஞ்சு கொள்கிற பக்குவமான மனசாவது இருந்திருந்தா அப்ப சரின்னு சொல்லி இருப்பேன். ஆனால் அப்ப அறியாத வயசு. மறுத்திட்டேன். இப்ப அவர் நல்ல பண்பை புரிஞ்சு கொண்ட வயசு.''

''பின்ன ஏன் உன்னை மணந்துக்க நினைக்கலை'' அத்தை புலம்பினாள்.

''அவருக்கு கடமை பெரிசா இருக்குது. என்னை மறுத்திட்டார். தனக்கு உதவி செஞ்ச நண்பரோட தங்கைக்கு

வாழ்வு குடுக்கணும்னு தீர்மானிச்சிட்டார்.''

கண்களில் நீர் பெருகியது சாந்தாவிற்கு. அத்தை கற்பகம் ஏமாற்றத்துடன் அழுதபடி ''அம்மாடி! இப்போ... இதுவும் போச்சு இனிமேலே சாந்தா! நல்லா சிந்திச்சுப்பாரு...'' அத்தை அழ ஆரம்பித்தாள்.

''அத்தே! சின்ன வயசிலேயே நீங்க விதவையாகிப் போனீங்க... ஏன் மறுமணம் செஞ்சுக்கல?''

''ஏன் இப்படியெல்லாம் பேசறே? எனக்கு அப்படிப்பட்ட எண்ணமே தோணலையேம்மா.''

''உங்களாலே மட்டும்தான் அப்படி வைராக்கியமா இளமையை கழிக்க முடியுமா? என்னால் முடியாதா? நான் காதல்ல தோற்றுப் போனவள். அது கூட ஒரு முறையில் விதவை போலன்னு நினைச்சுகிட்டு வாழத் தீர்மானிச்சுட்டேன்.''

''சாந்தா! உனக்கு எனக்குப் பின்னால யாரும்மா... ஆதரவா இருப்பாங்க'' அத்தை விசும்பினாள்.

''பெண்ணுன்னு பிறந்துட்டால் கட்டாயமா கல்யாணம் செய்துகிட்டுத்தான் வாழணுமா? புருஷன் நிழல்லே பாதுகாப்பா வாழணும்னு நினைச்ச காலம் மாறிட்டு வருது. அத்தே! ஒரு பெண் என்னதான் படிச்சு பதவி வகிச்சாலும் அவளை அவளது ஆசைக்காக சமூகம் எப்படி பலிவாங்கிடுது பாத்தீங்களா? இதுவே ஒரு ஆண் என்றால் நிலைமை வேறு.

''ஒரு முறை ஆசைப்பட்டு பணக்கார மனைவியைப் பிடிக்கத் தவறி விட்டாலும், மறுபடியும் அவனுக்கு சம அந்தஸ்து கொடுத்து இன்னொரு பெண்ணை அவன் தலையில கட்டத் தயாரா சமூகம் காத்து இருக்குது. ஆனால் என்னைப் போல காதல்லே தோல்வியுற்ற பெண், வெறும் புழுதியில் புரண்ட மலராத்தான் கருதப்படறா... ஏன்னா பெண்களை மலரோடு மென்மையா ஒப்பிடற அதே சமூகம், அதை கடவுள்



பூஜைக்கும் சூடிக்கொள்ளவுமே உபயோகிக்கிறதா நினைக்கிறது. இடையிலே, கீழே விழுந்து விட்ட பனிமலரை புழுதியிலேயே புரட்டி தள்ளி ஒதுக்கி விட்டுடுது. அதனால அத்தை! இனி நான் சமூகத்திலே, காதல் தோல்வியாலே ஒதுக்கப்பட்ட, புழுதியில் விழுந்த ஒரு பனிமலர்."

"வேண்டாம் சாந்தா! அப்படிச் சொல்லாதே."

"அத்தே! கல்யாணமாகாமல், சமூகப்பணியிலயும் நல்ல காரியத்திலயும் நாம வாழ்க்கையை அமைச்சுக் கொள்ளலாம் இல்லியா? கல்யாணம் மட்டும் தான் ஒரு பெண்ணுக்கு நிறைவைத் தரும்னு ஏன் எதிர்பார்க்கணும்? ஜோதி இல்லம் போல வயசான காலத்தில வச்சுக் காப்பாத்தறதுக்கு இன்னும் பல இல்லங்கள் நம் சமூகத்துலே தோன்றப் போகுது அத்தை! வருங்காலத்தைப் பத்தி இனி நான் கவலைப்படமாட்டேன். உங்களைக் கவனிச்சுக்கிட்டு, என் வேலையிலேயே பொழுதைக் கழிப்பேன். எஞ்சிய, நேரத்தை சமூக சேவைக்கு அர்ப்பணிச்சுக் கொள்வேன். அப்படி ஒரு வைராக்கித்தை ஏற்படுத்திக் கொள்ளப் போகிறேன். கவலைப்படாதீங்க அத்தை" என்றாள் திடமாக.

"சாந்தா! எனக்கு என்ன சொல்றதுன்னே புரியலைம்மா!" அத்தை கலங்கினாள்.

"சகோதரி சுப்புலக்ஷ்மியைத் தெரியுமில்லையா? பருவத்திலே விதவையானவங்க . . . விதவைகளின் துயர் துடைக்கவே தன் வாழ்க்கையை அர்ப்பணிச்சுக் கொண்டு அற்புதமாக வாழலையா? அவங்களைப் போல நல்ல பெண்மணிகளின் அடிச் சுவட்டைப் பின்பத்தி நான் ஏன் வாழக்கூடாது? ஆடுகள் போல, மந்தை, மந்தையாகக் கல்யாணச் சந்தையில, தங்களையே விலை பேசிக் கொள்ளும் பெண்கள் கூட்டத்தில் போய் நானும் இனி விழத் தயாராக இல்லை. அத்தே! நந்தகோபாலனுக்கு நான் நன்றி சொல்றேன். எனக்கு இந்த மன மாற்றத்தைக் குடுத்தவர். இனி கல்யாணம்

என்கிற பேச்சையே என்கிட்டே பேசப்படாது அத்தே!" தீர்மானமாக கூறி முடித்தாள் சாந்தா. அவள் கண்களில் நீர் வரண்டு போய் விட்டிருந்தது!

அத்தை மட்டும் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

(முற்றும்)

CHN
CHN451936
6221053
CHN451936
451936
6221053
தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002